# தவ முனிவனின் தமிழ் மந்திரம்



சிவத்தமிழ் வித்தகர், திருமந்திர வாரிதி, கலாபூஷணம்

**சிவ. மகாலிங்கம்** - B.A., Dip-in-Edu., S.L.E.A.S., M.A.

அன்பளிப்பு

சிவ. மகாலிங்கம்

சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்
"சிவஜோதி"
பொற்பதி வீதி
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

# தவ முனிவனின் தமிழ் மந்திரம்

சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்
"சிவஜோதி"
பொற்பதி வீதி
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

ஆக்கம்:

**சிவத்தமிழ் வித்தகர், திருமந்திர வாரிதி, கலாபூஷணம்**

## சிவ. மகாலிங்கம்

B.A., Dip-in-Edu., S.L.E.A.S., M.A.

முன்னைநாள் விரிவுரையாளர் - பலாலி ஆசிரிய கலாசாலை

முன்னைநாள் உதவிப் பணிப்பாளர் - இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

**வெளியீடு:**

"சிவஜோதி"

பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்,
யாழ்ப்பாணம், இலங்கை.

நூல் தலைப்பு : **தவ முனிவனின் தமிழ் மந்திரம்**

ஆசிரியர் : சிவத்தமிழ் வித்தகர், திருமந்திர வாரிதி, கலாபூஷணம்
**சிவ. மகாலிங்கம்** B.A. Dip-in-Edu., S.L.E.A.S., M.A.

முதற் பதிப்பு : யூலை - 2013

உரிமை : ஆசிரியருக்கு

பக்கங்கள் : xvi+232=248

அச்சுப் பதிப்பு : **கரிகணன் (பிறைவேட்) லிமிட்டெட்**
681, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விலை : Rs. 490/=

வெளியீடு : "சிவஜோதி"
பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

ISBN No.: 978-955-44645-0-6

# சமர்ப்பணம்

இந்துப் பண்பாட்டினைப் பேணி வாழும் பெண்கள் மனையறம் காத்த மங்கைகளாகவே திகழ்கின்றார்கள். தன்னைக் கரம் பிடித்த கணவன், பெற்றெடுத்த பிள்ளைகள் ஆகியோரின் உயர்விற்கும் சிறப்பிற்கும் இல்லத்தின் தலைவியே மூல காரணமாக அமைகின்றாள். எங்கள் குடும்ப உயர்விற்கும், எனது பணிகளுக்கும் வேராகவும், விழுதாகவும் இருந்து தனது வாழ்வையே பரித்தியாகம் செய்து வரும் எனது துணைவியார் திருமதி சாந்தா சிவ. மகாலிங்கத்திற்கு இந் நூலினை அன்புரிமையோடு சமர்ப்பிக்கின்றேன்.

சிவத்தமிழ் வித்தகர், திருமந்திர வாரிதி, கலாபூஷணம்

**சிவ. மகாலிங்கம்**

## வணக்கத்திற்குரிய உயர்திரு க. வைத்தீஸ்வரக் குருக்கள் வழங்கும்

# ஆசிச்செய்தி

### நம்பிரான் எம்பிரான்

சுந்தரமூர்த்தி, சுவாமிகள், தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில் திருமூலரை 'நம்பிரான்' என்றும் திருஞான சம்பந்தரை எம்பிரான் என்றும் குறிப்பிடுகின்றார்.

பிரான் என்பதற்குத் தலைவன் என்பது பொருள். சைவத்திற்குத் தலைவராவார் இவ்விருவருமே என்ற கருத்தைச் சுந்தரர் நமக்குத் தெளிவுபடுத்திக் கூறியிருக்கிறார் என்றே தோன்றுகின்றது.

திருஞானசம்பந்தர் நம்முடைய சைவநெறியை நிலை நிறுத்திய பெருமைக்குரியவராதலால் இவரை எம்பிரான் என்று கூறினார்.

திருமூலநாயனார் வேதாகமக் கருத்துக்களை மக்கள் மனங்கொள்ளுமாறு தமிழால் மூவாயிரம் பாடல்களாலே நமக்கு அறிவித்து நிலைநிறுத்தினார். அத்தகு சிறப்புக்குரியவர் திருமூலர். அது மட்டுமல்லாமல் திருக்கைலாசத்தில் இருக்கின்ற பரமேசுவரனிடத்தில் உபதேசம் பெற்ற நந்தியெம் பெருமானிடம் நேரிடையாக உபதேசம் பெற்ற சிறப்புக்குரியவர் திருமூலர். ஆதலால் இவரையும் பிரான் என்றார்.

### சிவயோகியார் திருமூலராதல்

திருக்கைலாசத்திலே சிவயோகியார் திருமூலராதல் நந்திதேவருடைய மாணாக்கர்களாகிய சிவயோகிகளுள் ஒருவர் அகத்திய முனிவருடன் சிலகாலம் தங்கியிருக்க விரும்பிப் பூவுலகுக்கு வந்தார் என்பதும், ஒருநாள், அவர் பசுக்களை மேய்க்கும் இடையன் ஒருவன் இறந்து கிடப்பதையும் பசுக்கள் கதறிக் கொண்டு நிற்பதையும் கண்டு, அப்பசுக்களின் துக்கத்தை நீக்க வேண்டுமென்று ஆலோசித்துத் தம்முடைய உடம்பை மிகவும் பாதுகாப்பான இடத்தில் வைத்து விட்டுத் தமக்கு வாய்த்திருந்த சித்தியால் அவ்விடையனுடைய உடம்பிற் புகுந்து (பரகாயப் பிரவேசம்) எழுந்தார் ஒன்பதும். அவர்தான் திருமூலர் என்பதும். பசுக்கள் களிப்படைந்தன என்பதும் வரலாறு. பின்னர் அவர் திருவாவடுதுறையில் அரசமரத்தின் அடியில் சிவயோகத்தில் இருந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களுள்ள திருமந்திரத்தை அருளிச் செய்தார்.

சிவயோகியார் மூலன் உடம்பிற்புகுந்து எழுந்ததனால் அன்று முதல் திருமூலர் என்ற பெயர் பெற்றார் என்பதே சைவ சமயத்தின் தொல்லாசிரியர் முடிபு.

**திருமந்திரம்**

திருமுறைகள் அனைத்தும் தோத்திரம் என்று பொதுவாகச் சொல்லப்படுகின்றன. என்றாலும் பத்தாம் திருமுறையாகி திருமந்திரம் சாத்திரமாகவே அமைந்துள்ளது. இந்த நூலுக்குத் திருமூலர் இட்ட பெயர் திருமந்திர மாலை என்பதாகும். திரு என்பது மங்கலச் சொல். மந்திரம் என்பது பொதுவாக எங்கும் இருப்பினும், அது சிறப்பாக இருப்பது வேத சிவாகமங்களிலே தான். மந்திரம் என்ற சொல்லுக்கு 'நினைப்பவரைக் காப்பது' என்பது பொருளாகக் கொள்ளப்படுகிறது. 'மந்திரம் என்பது திரண்டு வடிவமெடுத்த கருத்து எனப் பொருள்படும் என்பர் பேரறிஞராகிய டாக்டர் வை.வே. இரமணசாஸ்திரிகள்.

திருமூலர் இந்த நூலை ஒன்பது ஆகமமாகப் பிரித்து, ஒவ்வொரு ஆகமத்திற்கும் தந்திரம் எனப் பெயரிட்டார். தந்திரம் என்பது நூலுக்குப்பெயர். அஃது ஆகமத்துக்குச் சிறப்பு பெயராய் வழங்கும்.

வேதமும் ஆகமும் இறைவனால் அருளிச் செய்யப்பட்ட பொதுவுஞ் சிறப்புமாகிய நூல்கள். இந்தச் சிவாகமப் பொருளையே தமிழிற் கூறுவது திருமந்திரம்.

திருமந்திரம் ஞானம் முதலிய நான்கையும் கூறும். "ஞானம் முதல் நான்கும் மலர் நூல் திருமந்திரமாலை" என்பது சேக்கிழார் வாக்கு. இவற்றுடன் யாக்கை நிலையாமை, கொல்லாமை, அட்டமாசித்தி, திருநீற்றின் சிறப்பு, சிவபூசை முதலான பல விஷயங்களையும் இந்த நூலில் அருளிச் செய்துள்ளார். அன்றியும் எல்லோரையும் சமாதிவைப்பது கூடாது என்றும், யோகிகள் ஞானிகளையே சமாதி வைக்க வேண்டுமென்றும், மற்றவர்களை எரிக்க வேண்டுமென்றும் ஞானிகளை எரித்தால் பெருங்கெடுதி உண்டாகுமென்றும் ஞானிகளை அடக்கம் செய்து அந்த இடத்திலே கோயில் எடுத்து வழிபாடு நித்திய பூசைகள் நிகழ்த்த வேண்டுமென்றும் அறுதியிட்டுக் கூறுகிறார். எனவே திருமந்திரம் முற்ற முடிந்த ஒரு நிறைவான நூல் என்பது விளங்கும்.

தமிழ் மொழியில் பெருஞ் சிறப்புக்குரிய முதன்மையான நூல்களைத் தொகுத்து உரைக்கும்.

**தேவர் குறளும் திருநான் மறைவு முடிவும்**
**மூவர் தமிழும் முனி மொழியும் - கோவை**

திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர்.

என்ற பாடலில் திருமந்திரமும் இணைக்கப்பெற்றிருப்பது இதன் சிறப்பிற்குச் சான்று கூறி நிற்கிறது. இந்த நூலைத் தமிழில் எழுந்த சைவ சமயச் சார்ந்த ஒரு கலைக்களஞ்சியம் என்று கூறலாம்.

திருமந்திரத்தில் அருமையான கருத்துக்கள் உடையனவும், மேல் நோக்காகப் பார்க்கும் போது எளிமையான பொருள் உடையனவுமாகத் தோன்றுகின்ற பாடல்கள் பல இருக்கின்றன. பாடற் கருத்துக்களை எல்லோரும் அறிய வேண்டும் என்ற பெரு நோக்குடன் பேரறிஞர், சித்தாந்த வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள் "தவ முனிவனின் தமிழ் மந்திரம்" என்னும் நூலை எழுதி உலகுக்கு வழங்குகின்றமை ஒரு பெரிய சிவத்தொண்டாகும்.

அவருக்கு என் ஆசியையும் பாராட்டையும் தெரிவித்து அவர் மேன் மேலும் இது போன்ற நூல்களை எழுதி வெளியிட வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டு. இந்த நூல் வாடாமாலை போல விளங்கி நறுமணம் வீசி என்றும் நின்று நிலவ வேண்டுமெனக் கூத்தப்பிரானைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**க. வைத்தீஸ்வரக் குருக்கள்**
ஈழத்துச் சிதம்பரம்
காரைநகர்.

# வாழ்த்துரை

திருமந்திரம் சைவசமயக் கருவூலமாகத் திகழ்கின்றது. ஓர் அனுபவ நூலாக விளங்கும் திரு மந்திரம், சைவசித்தாந்த சாஸ்திர நூலாகவும், தோத்திரநூலாகவும், யோகநூலாகவும் வாழ்வியல் நூலாகவும் மறைஞானப் பெருநூலாகவும், விளங்குகின்றது.

இலங்கையில் திருமந்திரக் கருத்துக்களைப் பரப்புரை செய்வதில் தனக்கென ஓர் இடத்தினைப் பிடித்திருக்கும் சிவத்தமிழ் வித்தகர் சிவத்திரு சிவமகாலிங்கம், M.A. அவர்கள் "தவமுனிவனின் தமிழ்மந்திரம்" எனும் தலைப்பில் ஓர் அனுபவநூல் வெளி யிடுவதுகண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்ற எங்கள் அன்பு மாணவர் சுமார் ஐந்து ஆண்டுகளாக சந்நிதியான் ஆசிரமத்தால் வெளி யிடுகின்ற "ஞானச்சுடர்" மலருக்கு தொடர்ந்தேர்ச்சியாக எழுதிய திருமந்திரம் பற்றிய கட்டுரைகளைத் தொகுத்து ஓர் அரியநூலாக வெளியிடுவது பாராட்டுதலுக்குரியது.

யாழ் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரை யாளராகவும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளராகவும் விளங்கிய காலங்களிலும் நூலாசிரியர் சைவசித்தாந்தம், இந்து நாகரிகம் போன்ற தலைப்புக்களில் பல நூல்களை எழுதியபெருமைக் குரியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதுகலை மாணவர்களின் வருகைதரு விரிவுரையாளராகப் பணிபுரியும் இந்நூலாசிரியர், இதுபோன்ற பயன் உள்ள நூல்களை மென்மேலும் எழுதி வெளியிட நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் நாமங்களால் வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன்,
தலைவர், இந்து நாகரிகத்துறை,
**இணைப்பாளர், சைவசித்தாந்தம், எம். ஏ.,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# அணிந்துரை

இறைவன் புகழ்பாடும் பன்னிரு திருமுறைகளின் வரிசையில் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது திருமூலரது திருமந்திரமாகும். சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களுக்குக் கருவூலமாகத் திகழும் இந்நூல் எண்ணற்ற ஞானிகளையும் ஆன்மீகச் செல்வர்களையும் உருவாக்கியும் அவர்களுக்கு வழிகாட்டியும் வந்த பெருமைக்குரியது. பல்லாயிரக்கணக்கான சைவப்பெருமக்களது ஆன்மீக வாழ்க்கையை இன்றளவும் வளம்படுத்தி வருகின்றது. திருமந்திரம் உன்னத அறநெறி சார்ந்த சிந்தனைகளையும் ஒழுக்க நெறிகளையும் உபதேசிப்பதோடு ஆன்மிக மற்றும் பக்தி நெறிசார்ந்த வாழ்க்கைக்கு ஏற்ற சாதனைகளையும் எடுத்துக் கூறும் நூலாகவும் மிளிர்கின்றது. எனவே ஞானநெறிக்குரிய உன்னதமான ஞானநூல் எனப் பாரோர் போற்றும் பெருமைக்குரியது. இந்நூலைக் கற்குந்தோறும் புதுப்புது சிந்தனைகள் பலவற்றை நல்க வல்லது. எனவேதான் ஆன்மீகச் செல்வர்களும் அறிஞர்களும் இந்நூலுக்குத் தத்தமது அனுபவத் திறனுக்கும் புலமைக்கும் ஏற்ப பல்வேறு விளக்க நூல்களை எழுதி அவ்வப்போது வெளியிட்டு தாம்பெற்ற இன்பத்தை இவ்வையகம் பெறவேண்டுமென்ற உன்னத லட்சியத்துடன் அளப்பரிய ஆன்மீகப்பணியாற்றி வருகின்றனர். இந்நூலுக்கு எழுந்த பல விளக்க நூல்களுக்கு மத்தியில், இந்நூல் ஆங்கிலத்தில் டாக்டர் பி. நடராஜன் அவர்களால் அருமையாக மொழிபெயர்க்கப்பட்டு டாக்டர் என். மகாலிங்கம் அவர்கள் பதிப்பாசிரியராக விளங்கி, மயிலாப்பூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் மூலம் 1991 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டமை இந்நூலின் மகிமைக்கு மற்றுமொரு சான்றாகும். இப்பணியினால் இந்நூலை, பாரோர் அறிந்து பயன்பெறக் கூடிய வாய்ப்பேற்படலாயிற்று.

இம்மரபை அடியொற்றி சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள் 'தவமுனிவனின் தமிழ் மந்திரம்' என்ற தலைப்பில் திருமந்திரம் தொடர்பான தமது சிந்தனைகளை நூல் வடிவில் வெளியிட முன்வந்துள்ள முயற்சி பாராட்டப்படத் தக்கதாகும். அவருக்கு முதற்கண் எனது நல்லாசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

இந்நூலில் நாற்பத்தைந்து கட்டுரைகள் திருமந்திரம் தொடர்பான பல்வேறு சிந்தனைகளை விளக்கி நிற்கின்றன. இவை தொண்ட

மானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினரின் ஞானச் சுடர் என்ற ஆன்மீக மலரில் தொடர்ந்து வெளிவந்தவை.

திரு. சிவமகாலிங்கம் ஒரு சிறந்த சிந்தனையாளர். நீண்ட காலம் திருமந்திரம் தொடர்பாகப் பேசியும் எழுதியும் வருபவர். சைவசமயஞ்சார்ந்த பல்வேறு விடயங்களில் தமது கருத்துக்களை கட்டுரைகள் வாயிலாக வெளியிட்டு வருபவர். சிறந்த சொற்பொழிவாளர். சைவநெறியில் நின்று தம் ஆன்மீகப் பணிகளை ஆலயந்தோறும் முன்னெடுத்து வருபவர். இவர் பட்டதாரியானதன்பின்னர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றிய அனுபவமிக்கவர். மேலும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் நடாத்தப்பட்ட சைவ சித்தாந்த முதுகலைமாணிப் பட்டத்திற்கான பயிற்சிநெறியைப் பயின்ற காலத்தில் எனது மாணவனாகக் கல்வி பயின்றவர். என்மீது குருபக்தி மிக்கவர். முதுகலைமாணிப் பட்டம் பெற்றதன்பின்னர் அப்பயிற்சி நெறியின் வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிந்து வருபவர். தமது ஆன்மீகப் பணிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருபவர். யாவரையும் ஈர்க்கும் வகையில் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைபவர். இத்தகைய பல்துறை அனுபவங்கள் அவரது இந்நூல் உருவாக்கத்திற்குப் பெரிதும் உதவியுள்ளன.

திருமந்திரம் சைவசித்தாந்த விளக்க நூலாக, கீதையைப் போன்று ஒரு யோக நூலாக, மருத்துவ சிந்தனைகளை உள்ளடக்கிய வைத்திய நூலாக, இறைவன் பெருமை பேசும் நூலாக, சைவ வாழ்வுக்குரிய நெறிகளை வகுத்துக் கூறும் வழிகாட்டி நூலாக சாத்திர நூலாக விளங்கும் காரணத்தால் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் இவை தொடர்பான பல்வேறு சிந்தனைகளைத் தமது நூலில் நன்கு விளக்கியுள்ளார். சைவ உலகம் இவரது இந்நூலை மனமுவந்து வரவேற்றுப் பயன்பெறும் என்பதில் ஐயமில்லை.

திருமந்திரம் ஒரு பெரும் சமுத்திரம். மறைஞானியாகிய திருமூலரின் சிந்தனைகள் மிக ஆழமானவை. திருமந்திரத்திற்கு உரை வகுக்க முயன்ற அறிஞர்கள் தமது அறிவுத் திறனுக்கேற்பவே

உரை வகுத்துள்ளனர். அந்நூலின் ஆழம் அளவிடற்கரியது. இத்தகைய பெருமைமிக்க திருமந்திர ஞான நூலில் உள்ள பலவிடயங்களை திரு. சிவமகாலிங்கம் எடுத்துக்காட்ட முன்வந்துள்ளதை சைவ உலகம் பெரிதும் பாராட்டும் என்பதே எமது நம்பிக்கை. அவரது இச் சைவப் பணி மென்மேலும் தொடரவும் சிறக்கவும் அவருக்கு உடல் நலமும் சகல வளங்களும் பெருக தில்லை நடராஜப் பெருமானினதும் சந்நிதி வேலவனினதும் திருவருள் என்றென்றும் துணை நிற்பதாகுக என வாழ்த்துகின்றேன். நடுநிலை தவறாது நிற்பதே உயர்ந்த ஞானமார்க்கம். திருமந்திர உபதேசமும் அதுவே. அது ஆசிரியருக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளதை இந்நூலைக் கற்பவர் எளிதில் உணர்வர்.

நடுவு நின்றார்க்கு அன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார் நல்ல தேவரும் ஆவர்
நடுவு நின்றார் வழிநானும் நின்றேனே.

(திருமந்திரம் - 320ஆம் பாடல்)

அன்பே சிவம்!

பேராசிரியர் இலக்கிய கலாநிதி
**ப. கோபால கிருஷ்ண ஐயர்,**
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணம்.
10-05-2013

# முன்னுரை

சித்த புருஷர்களில் மூலவராகிய திருமூலநாயனார் அருளிய திருமந்திரம் சைவ சமயத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவது திருமுறையாக வைத்துப் போற்றப்படுகின்ற ஞானப்பெரு நூலாகும். இந்நூல் ஒழுக்கத்தை உபதேசிப்பதோடு, ஆன்ம நாட்டத்துக்கும், ஞானத்தோடு கூடிய பக்தி வாழ்க்கைக்கும் வேண்டிய பயிற்சியைத் தருகின்றது. திருமூலர் தாமே அனுபவித்து உணர்ந்த உண்மைகளை இந்நூலின் பொருளாக அமைத்துள்ளார். இதனால் திருமூலரின் திருமந்திரத்தை "அனுபவ ஞானத் திரு நூல் என ஆன்மீக நாட்டம் கொண்ட அனைவரும் போற்றுகின்றார்கள். "தோத்திரத்திற்கு திருவாசகம் சாத்திரத்திற்குத் திருமந்திரம்" என்பது அன்றோர் வாக்காகும். திருமந்திரம் தமிழில் உள்ள ஒப்பற்ற சாத்திர நூலாக இருப்பதோடு முத்திக்கு வழிகாட்டும் ஞானக் களஞ்சியமாகவும் உள்ளது. வெளிமுகமாகச் செல்லும் ஆன்மாவை உள்முகப்படுத்தி அங்கே இன்ப ஊற்றைக் காண்பதற்கும் இறையின்பத்தை உணர்வதற்கும் திருமந்திரம் வழிகாட்டுகிறது.

திருமூலர் அட்டமாசித்திகள் கைவரப் பெற்ற ஒரு தவயோகி. இவர் பாடிய பாடல்கள் எளிமையானவை, இனிமையானவை, படிக்கச் சுவையானவை, பயன் தருபவை, இம்மைக்கும் மறுமைக்கும் உதவுபவை. இவருடைய உள்ளம் தூய்மையானதாக இருந்ததால் அவருடைய சிந்தனையில் தெளிந்த ஞானம் இருந்தது. பரந்த நோக்கம் காணப்பட்டது. அவருடைய நாவால் நவிலப் பெற்ற பாடல்கள் யாவும் மந்திர சக்தி உடையன. தெய்வத் தன்மை உடைய திருமந்திரத்தைப் படிப்பவர்கள் யாவரும் அருள் மனிதர்களாக மாறி விடுவார்கள்.

திருமந்திரம் ஒரு யோக நூலாக, வைத்திய நூலாக தத்துவ நூலாக, வாழ்க்கை நூலாக எல்லாம் பரிமளிக்கின்ற ஞான நூலாகத் திகழ்கின்றது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய வாழ்வியல்க் கருத்துக்கள் பல திருமந்திரத்திலே காணப்படுகின்றன.

சைவத் தமிழர்களாகிய நமக்குரிய ஆதார நூலாக சைவத்தோடு தொடர்புடைய அனைத்தையும் விளக்கும் கருவூலமாக, சிவ பரத்துவத்தைப் போற்றும் திரு நூலாக, சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்தும் தத்துவ நூலாகத் திருமந்திரம் காணப்படுகிறது.

அருளாளர்கள் தந்த அனுபூதி வாசகங்களாகிய பன்னிரு திருமுறைகளில் சிறிய வயதிலிருந்தே அடியேனுக்கு ஈடுபாடு இருந்தது.

ஆலயங்களிலே சமயச் சொற்பொழிவு ஆற்றும் வாய்ப்பினை மிக இளம் வயதிலேயே பெற்றிருந்தேன். உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் சகோதர ஆசிரியை ஒருவரின் வேண்டுகோளை ஏற்று உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயில் மஹோற்சவத்தில் ஒருநாள் பெரியபுராணம் பற்றிப் பேசினேன். எங்கள் பாடசாலையில் பௌதிகவியல் ஆசிரியராக இருந்த திரு. ஆ. திருச்செல்வம் அவர்கள் தனது வீட்டிலிருந்து எனது பேச்சினை ஒலிபெருக்கி மூலம் செவிமடுத்திருந்தார். அடுத்த நாள் ஆசிரியர் அறையில் எனது பேச்சினைப், பாராட்டி வாழ்த்தியதுடன் சுத்தானந்த பாரதியார் எழுதிய திருமந்திர விளக்கம் என்ற நூலினைத் தந்து இதனையும் படித்துப் பேசும்படி வேண்டினார். இந் நூலினைப் படிக்க ஆரம்பித்ததும் திருமந்திரத்திலே அளவிலாத ஈடுபாடு அடியேனுக்கு ஏற்பட்டது. திருமந்திரம் பற்றி வெளிவந்த நூல்கள் பலவற்றையும் வாங்கிப் படித்தேன். எங்கள் சமயத்தில் உள்ள ஒப்புயர்வற்ற ஞானத் திருநூல் திருமந்திரம் என்பதை உணர்ந்து கொண்டேன்.

கீரிமலைச் சிவநெறிக் கழகம் நடாத்திய திருமுறை மாநாடுகளில் திருமந்திரம் பற்றிப் பேசும் வாய்ப்பினைக் கழகத்தின் செயலாளர் திரு.ச. விநாயகரத்தினம் அவர்கள் அடியேனுக்குத் தந்திருந்தார். ஆடி அமாவாசைத் தீர்த்தத்திற்கு முதல் நாள் இரவு கீரிமலைச் சிவன் கோயில் முன்றலில் விடியும் வரை சமய நிகழ்வுகள் இடம்பெறும். இந் நிகழ்வில் ஒருமுறை திருமந்திரம் பற்றிப் பேசும் வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்திருந்தது. சொற்பொழிவு முடிந்து மேடையால் இறங்கியதும் வித்துவான் ஆறுமுகம் அவர்கள் அடியேனை அரவணைத்து ஆசீர்வாதம் செய்து வாழ்த்தினார். 1993ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலில் திருமந்திரத்தில் தொடர் சொற்பொழிவினை ஆற்றினேன் . காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து கோயிலுக்கு அருகில் வாழ்ந்து வந்த வணக்கத்திற்குரிய சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் அடியேனைத் தனது வீட்டிற்கு அழைத்துப் பாராட்டி ஆசீர்வதித்ததுடன் திருவாவடுதுறை ஆதினம் வெளியிட்ட திருமந்திர மாநாட்டு மலர்கள் பலவற்றையும் தந்து உதவினார். எனது இந் நூலிற்குத் தள்ளாத வயதிலும் மிகச் சிறந்த ஆசியுரையினை வழங்கி உதவியுள்ளார்.

சந்நிதியான் ஆச்சிரமத்தினர் 1998 ஆம் ஆண்டு முதல் ஞானச்சுடர் என்ற ஆன்மீக சஞ்சிகையினை மாதாந்தம் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றார்கள். இவர்களின் சஞ்சிகையில் திருமுறைச் செல்வம், முருக மந்திரம், ஆகிய கட்டுரைத் தொடர்களை எழுதியிருந்தேன். பின்பு அவற்றினை நூல்களாகவும் வெளியிட்டேன். 2006ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் இருந்து 2011 ஆம் ஆண்டு சித்திரை மாதம் வரை "தவமுனிவனின் தமிழ் மந்திரம்" என்ற தலைப்பில்

நாற்பத்தைந்து கட்டுரைகளைத் தொடராக எழுதியிருந்தேன். இதனை நூல் வடிவில் வெளியிட வேண்டும் என்ற பல அன்பர்களின் வேண்டுகோளினை ஏற்று நூலினை அச்சிடும் பணியினை "கரிகணன் பிறிண்டேர்ஸ் உரிமையாளரிடம் ஒப்படைத்தேன். ஆன்மீக நூல்களை வெளியிடுவதில் ஆர்வம் மிக்கவராகிய கரிகணன் பிரிண்டேர்ஸ் உரிமையாளர் திரு. எஸ். ராஜ்குமார் இந் நூலினை மிகக் குறுகிய காலத்தில் அழகுற அமைத்துத் தந்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்து நாகரிகத்துறைத் தலைவராகவும் கலைப்பீடாதிபதியாகவும் இருந்த பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் மிகச் சிறந்த அணிந்துரையினை வழங்கியுள்ளார். தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறைத் தலைவராக விளங்கும் பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளார். சைவ சித்தாந்த முதுமாணிக் கற்கை நெறியைப் பயின்றபோது எனது ஆசான்களாக இருந்த இருவருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமுறைச் செல்வம், சிவஜோதி, முருக மந்திரம், ஞானதீபம், தரிசனங்களும் வாழ்வியலும் ஆகிய ஐந்து நூல்களை ஏற்கனவே வெளியீடு செய்துள்ளேன். இந்த ஐந்து நூல்களின் வெளியீட்டு விழாக்களிலும் தொடர்ந்து வந்து எனது நூல்களை வாங்கி என்னை ஊக்குவித்து வரும் அன்புள்ளங்களின் ஆதரவே இப் பணியில் தொடர்ந்தும் செயற்பட வைத்துள்ளது. எனது ஐம்பதாவது வயதில் முதல் நூலினை வெளியிட்டேன். அறுபத்து நான்காவது வயதில் ஆறாவது நூலினை வெளியிடுகின்றேன். என்னைக் கருவியாகப் பயன்படுத்தி இப் பணியினில் அடியேனைச் செயற்பட வைத்துள்ள எனது குலதெய்வமாகிய குப்பிழான் கற்பக விநாயகப் பெருமானின் திருவருள் தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்று பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

சிவத்தமிழ் வித்தகர், திருமந்திரவாரிதி, கலாபூஷணம்
**சிவ. மகாலிங்கம்**
B.A. Dip-in-Edu., S.L.E.A.S., M.A.

" சிவஜோதி "
பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொ.பே.இல: *021-221-2226*

# பொருளடக்கம்


1. தவயோகியின் திரு அவதாரம்........................................1
2. சித்த புருஷர்களில் மூலவர் திருமூலர் .............................. 5
3. சிவனே முழுமுதற் தெய்வம்............................................ 10
4. குருவருளின்றித் திருவருள் இல்லை ..................................15
5. கூத்தன் புறப்பட்ட கூடு .................................................... 20
6. கொல்லாமையே சிறந்த அறம்........................................ 26
7. அன்பே சிவம்.................................................................... 32
8. ஞான ஒளி ........................................................................ 38
9. முப்புரமாவது மும்மல காரியம் ......................................... 43
10. கரு உற்பத்தி .................................................................... 48
11. திருவருள் ஜலம் ............................................................... 54
12. சிவ ஞானியரை நிந்திப்பவர்கள் சிவத்துரோகிகள்.............. 59
13. யோகசித்தி ........................................................................ 65
14. சிவயோக சித்தி..................................................................71
15. அட்டமா சித்தி .................................................................. 76
16. காயசித்தி உபாயம்............................................................. 81
17. சிவமூல மந்திரம் - மந்திர யோகம் .................................... 87
18. திரிபுரை தியானம் ............................................................. 92
19. சிவ சக்தியே பூரண சக்தி.................................................. 97
20. திருவருட்சக்தியே ஆதார சக்தி......................................... 102
21. நாவில் நடமாடும் நாவுக்கரசி............................................ 107
22. சீவனைச் சிவனாக்கும் வழிகள்..........................................112
23. சிவானந்தப் பேற்றிற்கான வழிகள்.....................................118
24. திருவடி ஞானம் ................................................................ 123
25. சித்தம் சிவமாதல்.............................................................. 128
26. சிவக்கோலமே தவக்கோலம்............................................. 133
27. அன்பியலும் அருளியலும்................................................. 138
28. உள்ளம் பெருங்கோயில்.................................................... 143
29. விந்து சக்தியே வீரிய சக்தி .............................................. 149

30. சிவயோகம்.................................. 153
31. அநுபூதி ஞானம்.................................. 157
32. அறிவுப் பெரு வெளியைத் திறக்கும் வழி .................. 162
33. சிவ ஒளியினால் சீவ ஒளி பிரகாசிக்கும் .................. 167
34. சீவ ஒளி .................................. 172
35. சிவ சித்தர் ..................................177
36. எது ஆசூசம் .................................. 182
37. சீவன் சிவமாகும்.................................. 187
38. ஞானத் தவம் .................................. 192
39. சிவானந்தக் கூத்து .................................. 197
40. பேரானந்த நிலை..................................202
41. ஞான சாதனை..................................208
42. நமச்சிவாயப் பழம் .................................. 213
43. ஞான சாதகனின் மெய்ப்பாடுகள் .................................. 218
44. திருவடி வணக்கம்..................................223
45. விதியையும், வினையையும் வெல்வதற்கான வழி ............... 228

# தவயோகியின் திரு அவதாரம்

**தெ**ய்வத் தமிழ் என்று போற்றப்படும் பன்னிரு திருமுறைகளிலே பத்தாம் திருமுறையாகத் தமிழ் மந்திரமாகிய திரு மந்திரம் திகழ்கிறது. "தோத்திரத்திற்குத் திருவாசகம் சாத்திரத்திற்குத் திருமந்திரம்" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். தமிழர்களின் சிந்தனையில் முகிழ்த்த தத்துவமாகிய சைவ சித்தாந்தக் கருத்துக்களை முதலில் எடுத்து விளக்கிய ஞானப்பெருநூலாகத் திருமந்திரம் காணப்படுகிறது. திருமந்திரம் ஒழுக்கத்தை உபதேசிப்பதோடு ஆன்ம நாட்டத்திற்கும் ஞானத்தோடு இணைந்த பக்தி வாழ்க்கைக்கும் வேண்டிய பயிற்சியைத் தரும் நூலாகவும் உள்ளது. தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தை அனுபவ ஞானத்திருநூல் என்றே ஆன்றோர்கள் அனைவரும் போற்றுகின்றார்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வாழ்வின் இறுதி இலட்சியமாகிய வீடு பேறு அடைவதற்கும் உரிய வாழ்க்கை நெறிகளைத் திருமந்திரம் வகுத்துக் காட்டியுள்ளது. இந் நூல் யோக நூலாக, வைத்திய நூலாக, வாழ்க்கை நூலாக, தத்துவ நூலாக பல வகைகளில் மானுட சமூகத்திற்கு வழிகாட்டும் நூலாக மிளிர்கின்றது. சைவத் தமிழ் மக்களின் பொக்கிஷமாக இருக்கும் இந்நூலின் பெருமையினைச் சைவமக்கள் அனைவரும் அறிந்துகொள்ளவேண்டும்.

1

### திருமூலர் வரலாறு

திரு என்றால் தெய்வத் தன்மை உடையது என்பது பொருள். நூலின் ஆசிரியர் பெயர் திருமூலர். நூலின்

பெயர் திருமந்திரம். இந் நூலின் சிறப்பிற்கு இவையே காரணம் ஆகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமூலரை நம்பிரான் என்றும், சம்பந்தரை எம்பிரான் என்றும் அழைக்கின்றார். சுந்தரர் மிகவும் அன்பு உரிமையோடு "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என்று திருமூலரைத் திருத்தொண்டத் தொகையிலே குறிப்பிடுகின்றார்.

திருக்கைலாயத்தில் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலின் முதற்பெரும் காவலர் திருநந்திதேவர். இவர் இந்திரன், திருமால், பிரமன் முதலான தேவர்களுக்கும் சிவநெறியினை அருளும் பணியினர். அந்த நந்தியெம் பெருமானிடம் அருள்பெற்ற சிவயோகியர் பலர் உளர். திருமூலரின் சொந்தத் திருப்பெயர் சுந்தரநாதன் என்பதாகும். இவர் வடகைலையில் நடைபெற்ற குருகுலத்தில் சேர்ந்து அறிவு நூல்களாம் வேதாகமங்களை நந்தியெம் பெருமானிடம் கற்றார். நாதர் என்று பட்டம் பெற்றுச் சுந்தரநாதராய்த் தவம் செய்து வாழ்ந்திருந்தார். இங்கு இவருடன் பயின்றோர் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், சிவயோகமாமுனிவர் ஆகிய எழுவராவர்.

சிவயோகி சுந்தரநாதன் அகத்திய முனிவரிடம் நட்புக் கொண்டிருந்தார். அந்த நட்பின் ஆர்வத்தால் அகத்திய முனிவருடன் சில நாட்கள் தங்கியிருக்கவேண்டும் என்று விரும்பி வடகைலையிலிருந்து புறப்பட்டு நற்றமிழ் கமழும் பொதியமலையை நோக்கிப் பயணம் செய்தார்.

அவர் தமிழ்நாடு நோக்கி வரும்போது வழியில் உள்ள திருக்கேதாரம் என்னும் தலத்தை வழிபட்டுப் பசுபதி நேபாளத்தினைப் பணிந்து துதித்தார். நேபாளம் சிவநெறியில் நிற்கும் அரச மரபைக் கொண்டதாகையால் பசுபதி நேபாளம் எனப் பெயர் பெற்றது. பின்பு அவர் கங்கைக்கரையை அடைந்து கங்கைத்துறையிலே நீராடினார்.

கங்கையில் நீராடிவிட்டு அவிமுத்தமாகிய காசித் தலத்தைப் பணிந்து துதித்தார். பின்பு ஸ்ரீ சைலம் சென்று இறைவனை வணங்கினார். திருக்காளத்தி மலைக்குச் சென்று வழிபட்டார். இறைவன் அருட்கூத்தாடும் மன்றங்களில் ஒன்றாகிய திருவாலங்காடு சிவஸ்தலத்திற்குச் சென்று வணங்கினார். காஞ்சிக்குச் சென்று திருஏகாம்பரநாதரை வணங்கிச் சிவயோகிகள் சிலரோடு சில நாட்கள் தங்கியிருந்தார். திருவதிகை வீரட்டானம் சென்று வணங்கிவிட்டுச் சிவபெருமான் ஆனந்தத் தாண்டவமாடும் தில்லையம்பலப் பதியினை (சிதம்பரம்) வந்தடைந்தார். இங்கு சில காலம் தங்கியிருந்து நடராஜப் பெருமானது தரிசனத்தைப் பெற்ற பின்பு காவிரி நதியில் நீராடி அதன் தென்கரையில் இருக்கும் சாத்தனூர் என்ற கிராமத்தை அடைந்தார்.

### சாத்தனூரில் பசுக்களின் துயரத்தினை நீக்கிய வரலாறு

இங்கு ஓரிடத்தில் பசுக்கள் கூட்டமாக நின்று கதறிக்கொண்டிருப்பதைக் கண்டார். அருகே சென்று பார்த்தபோது பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்த

மூலன் என்னும் இடையன் இறந்து கிடப்பதையும் அதன் காரணமாகப் பசுக்கள் துன்புற்றுத் துடிக்கின்றன என்பதையும் உணர்ந்து அவற்றின் துயர் துடைக்க நினைத்தார். தன்னுடைய யோக சித்தியினாலே தன் உடலை ஓரிடத்தில் மறைத்துவிட்டுத் தன் உயிரை மூலன் ஆகிய இடையனின் உடம்பிற்குள் புகவிட்டார். அட்டமா சித்திகளில் ஒன்றாகிய பரகாயப் பிரவேசம் என்ற சித்தியினால் இச் சாதனையைச் செய்தார். உடனே மூலன் தூங்கியெழுவது போன்று உயிர் பெற்றெழுந்தான். எஜமானன் இறந்த துக்கத்தால் கதறிய பசுக்கள் ஆனந்த மேலீட்டால் துள்ளிக் குதித்தன. தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்து முகமாகப் பசுக்கள் மூலனை மோந்தன; நக்கின; தங்களுடைய சந்தோஷத்தைப் பல வகையில் வெளிக்காட்டிக் கொண்டன.

மாலையானதும் பசுக்கள் எல்லாம் மேய்ச்சல் நிலம் விட்டு வீடு நோக்கிப் போகத் தலைப்பட்டன. யோகியும் அவற்றுடனே போனார். பசுக்களின் குரல் கேட்டு மூலனின் மனைவி வீட்டின் உள்ளிருந்து வந்து மூலனை வரவேற்றாள். நிலைமையைப் புரிந்துகொண்டு விட்ட யோகி தமக்கும் உமக்கும் ஒரு தொடர்பில்லை எனக்கூறி, வந்த வழியே திரும்ப மூலன் மனைவி தனது கணவனுக்குச் சித்தம் கலங்கிப் பித்தம் பிடித்துவிட்டது என்று தனது நாயகனின் நிலையை ஊரிலுள்ள நீதிமான்களிடம் சென்று முறையிட்டாள். அவர்கள் திருமூலரை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை உற்று நோக்கினார்கள். இவருக்குப் பித்துப்பிடிக்கவும் இல்லை. சித்தம் கலங்கவும் இல்லை. சிவயோகப் பேரின்பத்தில் அவர் திளைத்திருக்கின்றார் என்ற உண்மை நிலையை மனைவிக்கு உணர்த்தினார்கள். யாராலும் அடைய முடியாத பேற்றினை இவர் பெற்றிருக்கின்றார். இறைவனது திருவருளைப் பெற்ற சீவன் முத்தராக மாறிவிட்டார் என்று அவர் அடைந்திருக்கும் ஞான நிலையினைப் பிரபஞ்ச மயக்கத்தில் இருக்கும் அவருடைய மனைவிக்கு எடுத்துக்கூறினார்கள். தவயோகியாகிய திரு மூலநாயனார் பெற்றிருந்த ஞானநிலையினைச் சேக்கிழார் சுவாமிகள் பின்வருமாறு பெரியபுராணத்தில் விளக்குகின்றார்.

**பித்துற்ற மயலன்று பிறிதொரு சார்புளதன்று**
**சித்த விகற்பங் களைந்து தெளிந்த சிவயோகத்தில்**
**வைத்த கருத்தினராகி வரம்பில் பெருமையிலிருந்தார்**
**இத்தகைமை அளப்பரிதால் யாராலும் என உரைப்பார்**

தனது உடம்மை மறைத்து வைத்த இடத்தினை நோக்கிச் சென்ற திருமூலர் அந்த இடத்தை அடைந்து தமது உடம்பினைத் தேடிப் பார்த்தார். தான் வைத்துவிட்டு வந்த இடத்தில் உடம்பினைக் காணவில்லை. சிவயோகியாரது முன்னைய உடம்பினை இறைவன் மறைப்பித்து விட்டார். சிவாகமங்களின் அரும் பொருளினைத் திருமூலரது வாக்கால் தமிழில் கேட்கவிரும்பிய இறைவன் தனது உடலினை மறைப்பித்தார் என்பதை ஞானத்தால் உணர்ந்தார். சிவபெருமானின் திருவடிகளைச் சிந்தித்த வண்ணம் திருவாவடுதுறைத்

திருகோயிலை அடைந்தார். இக்கோயிலின் மேற்குத் திசையில் உள்ள அரச மரத்தின் கீழ் தேவாசனத்தில் சிவயோகத்தில் அமர்ந்து சிவப்பரம்பொருளுடன் உணர்வினால் ஒன்றியிருந்தார். சிவராஜயோக நிஷ்டையில் இருந்து இதயக் கமலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனுடன் இரண்டறக் கலந்து சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த நிலையினைப் பெற்றார். பரம்பொருளாகிய சிவபெருமானைப் போற்றி 'ஒன்றவன் தானே' என்று தொடங்கி மூவாயிரம் திருமந்திரப் பாடல்களைப் பாடி உலகிற்கு வழங்கியுள்ளார்.

கோமாதா என்று அழைக்கப்படும் பசுவில் எல்லாத் தெய்வங்களும் வீற்றிருக்கின்றன. தாய்க்குச் சமமான பசுவைப் பூசிப்பவர்களுக்குச் சர்வ மங்களங்களும் வாழ்வில் உண்டாகும். திரு மூலரின் பசுப்பணியை நினைவு கூரும் முகமாக திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் மகோற்சவ விழாவின் இரண்டாம் நாளன்று சிறப்பான நிகழ்ச்சி நடாத்தப்பட்டு வருகிறது. அன்று காலை திருவீதியுலாவில் பெருமானுடன் திருமூலதேவநாயனாரும் எழுந்தருளுகின்றார். அவர் மேற்கொண்ட பசுப்பணியின் நினைவாக அவருக்கு முன்பாகப் பசுமாடு ஒன்று கன்றுடன் கொண்டு செல்லப்படுகிறது. திருவுலா முடிந்து ஆலயத்தை அடைந்ததும் சந்நிதியிலே ஆதீன ஓதுவார் மூர்த்திகளால் திருமூலர் வரலாறு வாசிக்கப்படுகிறது. உடனே கோபூஜை நடைபெற்று தீபாராதனை இடம்பெறுகிறது.

கடவுளுடைய ஆணையின்றி மக்களுக்குப் போதிக்க முடியாது. இறையாணையின்றிப் போதித்தால் மக்கள் கேட்க மாட்டார்கள். அந்த உபதேசத்தில் எந்த சக்தியும் இருக்காது. முதலில் சாதனைகள் செய்தோ வேறு எந்த விதத்திலோ இறையனுபூதி பெற வேண்டும் இறவனிடமிருந்து ஆணையைப் பெறுபவன் அவரிடமிருந்து சக்தியையும் பெறுகிறான். இறையாணை பெற்றவர்களின் வார்த்தைகள் கேட்பவர்களின் இதயங்களைத் தொடும்.

**– இராமகிருஷ்ண விஜயம்: 2008 வைகாசி**

# சித்த புருஷர்களில் மூலவர் திருமூலர்

2

இந்து சமயத்தில் பக்தர்கள் ஞானிகள் இருப்பது போலச் சித்தர்களும் பலர் இருந்தார்கள். சித்தர் இனம் நீண்ட காலமாக இந்த நிலத்தில் வேரூன்றி விழுது பரப்பி வருகிறது. உள்ளொளி பெற்று உண்மையை உணர்ந்த சித்தர்கள் தாம் பெற்ற இறை அனுபவங்களையெல்லாம் பாடல்களாகத் தந்துள்ளார்கள். சித்தர்கள் பலவகையான அருள் விளையாட்டுக்களைச் செய்வார்கள். அந்த விளையாட்டுக்கள் எண்ணிறைந்தவையாக இருந்த பொழுதிலும் அவற்றில் எட்டினைத் தேர்ந்தெடுத்து அட்டமாசித்திகள் எனத் திருவிளையாடற் புராணத்தின் கூடற் காண்டம் குறிப்பிடுகின்றது. தெளிந்த ஞானமாகிய சித்தினைப் பெற்றவர்களே சித்தர்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள். 'கடவுளைக் காணமுயல்பவர்கள் பக்தர்கள் என்றும் கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்' என்றும் சித்தர்களுக்கு வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. 'எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி, ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தன்' எனச் சட்டை முனிச்சித்தர் ஞானிகளுக்கும் சித்தர்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்குகின்றார். வாசனை என்பது கர்மவினை ஆகும். பிரபஞ்ச வாழ்வின் இரகசியத்தை சித்தர்கள் அறிந்திருந்தார்கள். இவர்கள் உலகத்தில் வாழ்ந்தாலும் உலகாயுதராக வாழமாட்டார்கள். உணர்ச்சிபூர்வமாக விஞ்ஞானக்கருத்துக்களைப் பரப்பியவர்களில் சித்தர்கள் முதலிடம் பெறுகிறார்கள். சித்தர்கள் என்றால் அறிவர் என்பது பொருளாகும். விளங்கிய அறிவுடையவர்களைச் சித்தர்கள் என்று கூறலாம்.

சித்த புருஷர்களில் மூலவராகத் திருமூலர் காணப்படுகின்றார். இதனைத் தாயுமான சுவாமிகள் "மூலன் மரபில் வந்த வித்தகச் சித்தர் கணமே" எனக் குறிப்பிடுகின்றார். தமிழ்ச் சித்தர் பரம்பரையின் தலைமைத் தளபதியாகத் திருமூலரே திகழ்கின்றார். திருமூலருக்குப் பின்பு பல சித்தர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்தார்கள். கருவூர்த்தேவர், பட்டினத்தார், சிவவாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், அகப்பேய்ச்சித்தர் எனப் பல் வேறு சித்தபுருஷர்கள் வாழ்ந்து பல அருள் விளையாட்டுக்களைச் செய்ததோடு பல அருட்பாடல்களையும் தந்துள்ளார்கள். இருபதாம் நூற்றாண்டிலும் சித்தர்கள் பலர் இருந்துள்ளார்கள். ஈழமணித் திருநாட்டிலும் பல சித்தர்கள் வாழ்ந்தார்கள். மகாகவி பாரதியார் தம்மையும் ஒரு சித்தர் என அறிமுகப்படுத்துகின்றார்.

எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தார் அப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்

எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

## திரு மந்திரம் ஞானப் பெருநூல்

திரு மூல தேவரையும் அவர் அருளிய திருமந்திரத்தையும் சிந்திப்பவர்களுக்குப் பிறவி நோய் நீங்கிவிடும் என்பதைத்

"திருமூலதேவனையே சிந்தை செய்வார்க்குக்
கரு மூலம் இல்லையே காண்"

என்ற பாடல் வரிகள் விளக்கி நிற்கிறது. ஆன்மா இறைவனோடு இணைவதற்கும், சிவகதி பெறுவதற்கும் திருமந்திரம் திசைகாட்டியாக உள்ளது. இறைவனை அகத்திலே காண்பதற்கும், இறையருளை நுகர்வதற்கும் திருமந்திரம் துணையாக இருக்கும் என்பதனைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந்திரமே சிவமாம் – அருமந்த
புந்திக்குள்ளே நினைந்து போற்றுமடியார் தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்.

திருமூலர் அட்டமாசித்திகள் பெற்ற ஒரு தவயோகி. இவர் அருளிய பாடல்கள் எளிமையானவை, இனிமையானவை, படிக்கச் சுவையானவை, பயன்தருபவை, இம்மைக்கும் மறுமைக்கும் உதவுபவை. தவயோகியின் உள்ளம் தூய்மையானதாக இருந்ததால் அவருடைய சிந்தனையில் தெளிந்த ஞானம் இருந்தது. பரந்த நோக்கம் காணப்பட்டது. அவருடைய நாவால் நவிலப்பெற்ற பாடல்கள் யாவும் மந்திரசக்தி உடையதாக இருந்தன. தெய்வத்தன்மையுடைய திரு மந்திரத்தைப் படிப்பவர்கள் யாவரும் அருள் மனிதர்களாக மாறிவிடுவார்கள். அருள்நூல்களை வழங்கிய

ஞானிகளை நிறைமொழி மாந்தர்கள் என்றே தொல்காப்பியரும் வள்ளுவரும் குறிப்பிடுகின்றார்கள்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப
- *தொல் காப்பியம் செய்யுள் - 178*

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் - *குறள் 28*

பன்னிரு திருமுறைகளில் மந்திரம் என்று போற்றப்படும் சிறப்பு திருமந்திரத்திற்கு மட்டுமே உண்டு. திருமந்திரத்திற்கும் திருக்குறளுக்கும் மட்டும்தான், நூலிற்கும் பாடியவருக்கும் முன்பாகத் திரு என்ற அடைமொழி சேர்க்கப்பட்டுள்ளது.

## சிவானுபூதிச் செல்வராகத் திருமூலர் திகழ்வதற்கான காரணங்கள்

1. காயமே பொய் என்ற வாதம் வலுப்பட்டிருந்த சித்தர்கள் மரபில் வந்த திருமூலர் உடம்பைக் கோயில் என்று பாடிய முதல் தமிழ்க்கவிஞராகத் திகழ்ந்தார்.

2. உலக சமுதாயம் உயர்வு தாழ்வுகள் இன்றி ஒன்றாக இருக்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தினைக் கொண்டிருந்தார்.

3. அண்டசராசரமெல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளாகிய இறைவனை அகத்திலே காண்பதற்கு வழிகாட்டினார்.

4. இறையருளால் தான் பெற்ற தெய்வீக அனுபவத்தை அனைவரும் பெறல் வேண்டும் என்ற பரந்த சிந்தனை கொண்டிருந்தார்.

5. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய வாழ்வியல் நெறிகளைத் தனது பாடலின் ஊடாகக் கூறியுள்ளார்.

6. சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் திருமந்திரத்தில் தெளிவாக விளக்கியுள்ளார்.

7. நீண்டகாலம் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கான வழிமுறைகளையும் நோயினை நீக்கும் சித்த வைத்தியத்தினையும் திருமந்திரப் பாடல்களில் கூறியுள்ளார்.

## திருமந்திரத்தை அழிக்கப்பார்த்தார்கள், ஆனால் இறைவன் அழியவிடவில்லை

யோக நூலாக, வைத்திய நூலாக, வாழ்க்கை நூலாக, தத்துவ நூலாக எனப் பல வகைகளில் பரிமளித்த ஞானப்பெருநூலாகிய திருமந்திரம்

அழியாமல் இருப்பதற்காகச் செப்பேடுகளில் எழுதப்பட்டிருந்தது. தமிழிலும் மந்திரமா? அர்ச்சனைக்குரிய அந்தஸ்து தமிழ்மொழிக்கும் உண்டா? இறைவன் விரும்பும் மொழிகளில் தமிழும் ஒன்றாக இருக்கமுடியுமா? என்ற சந்தேகம் கொண்ட சிலர் தமது நயவஞ்சகச் செயற்பாட்டினால் திருமந்திரப்பாடல்கள் எழுதப்பட்டிருந்த செப்பேடுகளைத் திருவாவடுதுறை மாசிலாமணியீசர் பலிபீடத்தின் கீழ் மறைத்து வைத்து விட்டார்கள். "திராவிடச் சிசு" என்று சங்கரரால் அழைக்கப்பட்ட ஞானசம்பந்தர் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தராகவே திகழ்ந்தார். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" எனச் சேக்கிழார் பெரிய புராணத்திலே இவரைப் போற்றுகின்றார். தமிழ்நாட்டுத் திருத்தலங்கள் எல்லாம் தலயாத்திரை செய்துவந்த ஞானசம்பந்தர் திருவாவடுதுறைக்கு வந்ததும் இறைவன் திருமந்திரச் செப்பேடுகள் புதைக்கப்பட்டிருந்த இடத்தினை ஞானசம்பந்தருக்கு உணர்த்தியருளினார். மாசிலாமணியீசர் பலிபீடத்தின் அருகில் சம்பந்தர் வந்ததும் செந்தமிழ் மணம் வீசுவதை உணர்ந்தார். இங்கே "தமிழ் மணக்குது, தமிழ் மணக்குது" என்று கூறினார். பலிபீடத்தின்கீழ் மறைக்கப்பட்டிருந்த திருமந்திரம் வெளியே கொண்டு வரப்படுவதற்கு சம்பந்தப் பெருமானே காரணகர்த்தாவாக இருந்தார்.

## தமிழ் ஆகமம் - திருமந்திரம்

திருமந்திரம் தமிழ் ஆகமம் என்று அழைக்கப்படுகிறது. சிவாகமங்களில் காரணம், காமிகம், வீரம், சிந்திய, வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களின் சாரமாகத் திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களும் அமைந்துள்ளன. அன்பின் அடிப்படையில் எழுவது தோத்திரம். 'தோத்திரத்திற்கு திருவாசகம் சாத்திரத்திற்குத் திருமந்திரம்' என நம்மிடம் ஒரு முதுமொழியும் உண்டு. ஆனால் திருமந்திரம் சாத்திர நூலாக மட்டுமல்லாது தோத்திர நூலாகவும் மிளிர்வதைப் பல திருமந்திரப் பாடல்களின் ஊடாக அறியமுடிகிறது. திருமந்திரத்தின் பெரும் பகுதி யோக நூலாகவே காட்சி தருகிறது.

ஆன்மாக்கள் செய்த வினைகளுக்கேற்ப பல்வேறு உடல்களைப் பெற்றுப் பல பிறவிகளை எடுக்கின்றன. எடுத்த பிறவிகளைச் சரியாகப் பயன்படுத்தி தவத்தினைச் செய்து இருந்தால் உயிர் நோயாகிய பிறவிநோய் நீங்கியிருக்கும். பிறவிகளில் மகத்தான பிறவியாகிய மானுடப்பிறவியை எடுத்தவர்களில் பலர் அதனைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைக் கின்றனர். தான் எடுத்த பிறவியில் தவத்தைச் செய்தமையால் ஆகமக் கருத்துக்களைத் தமிழில் தருவதற்காக சிவன் இப்பிறவியைத் தனக்குத் தந்துள்ளார் என்பதைப் பின்வரும் பாடலின் ஊடாகத் திருமூலர் விளக்குகின்றார்.

பின்னை நின்று என்னே பிறவிபெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

திருமூலர் மூன்று நூல்களை அருளினார் என்றும், அவை மூன்றும் ஒரே பொருளைக் கொண்டவை என்றும் கூறப்படுகின்றது. மூவாயிரம் தமிழ் என்று அழைக்கப்படுவது திருமந்திரம், முந்நூறு மந்திரம் எனப்படுவது திருமந்திரமாலை, முப்பது பாடல்களால் அமைந்தது முப்பது உபதேசம் என்பவை ஆகும்.

மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரை செய்த முப்பது உபதேசம்
மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே

என்ற பாடல் இதனை விளக்குகின்றது.

திருமந்திரப் பாடல்கள் மூவாயிரம் என்பதே திருமூலரின் வாக்கும் ஆகும். ஆயினும் இப்பொழுது திருமந்திரப் பாடல்களாக மூவாயிரத்து நாற்பத்தேழு பாடல்கள் காணப்படுகின்றன. சில பாடல்கள் இடைச் செருகல்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன என்பது அறிஞர்களின் கருத்தாகும். 'ஐந்து கரத்தனை' என்ற காப்புச் செய்யுளும் பிற்காலத்தில் தமிழ் நாட்டில் விநாயகர் வழிபாடு முதன்மை பெற்ற பின்பு சேர்க்கப்பட்ட பாடல் என்றே ஆய்வாளர்கள் சிலர் கூறுகின்றார்கள். திருமந்திரப் பாடல்கள் பாயிரமும் ஒன்பது தந்திரங்களுமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதலில் அமைந்துள்ள பாயிரம் கடவுள் வாழ்த்து, வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு, குரு பாரம்பரியம், திருமூலர் வரலாறு, அவையடக்கம், திருமந்திரத் தொகைச் சிறப்பு, குருமட வரலாறு, மும்மூர்த்திகளின் முறைமை என்பவற்றை உட்பிரிவுகளாகக் கொண்டு நூற்றுப்பன்னிரெண்டு பாடல்களுடன் காணப்படுகின்றன.

சமயம் என்பதொன்று இல்லையேல் உலகில் அறம் ஏது? அன்பு ஏது? ஆன்ம உணர்வு ஏது? மக்களை விலங்கினின்றும் பிரித்து அவர்களைச் செந்நெறியில் நிறுத்தி ஆண்டு வருவது சமயம் எனில், அதன் பெற்றியை என்னென்று கூறுவது.

**–வி. கல்யாண சுந்தரனார்.**

# சிவனே முழுமுதற் தெய்வம்

3

இந்துக்கள்எல்லோரும்தமதுவழிபாட்டில்முதலில் விநாயகப் பெருமானையே வழிபடுகின்றார்கள். இடையூறுகளை நீக்குபவரும் எடுத்த கருமங்களைக் கைகூடச் செய்பவரும் கணபதியே என்பதனால் நாம் முதலில் அவரை வணங்குகின்றோம். இதனாலேயே அவருக்கு விக்கினேஸ்வரன் என்ற பெயர் ஏற்பட்டது. தவயோகி திருமூலநாயனாரும் தனது திருமந்திரப் பாடல்களை அருளுவதற்குமுன்பு காப்புச் செய்யுளாக விநாயகப் பெருமானைப் பாடித் துதிக்கின்றார். சிவபெருமானுக்குரிய பெயர்களில் நந்தி என்பதும் ஒன்றாகும். திருமூலர் பல இடங்களில் சிவபெருமானை "நந்தி" என்ற பெயராலேயே பாடுகின்றார். ஞானத்தின் சிகரமாய் விளங்கும் விநாயகப் பெருமானைப் பக்தி உணர்வோடு வழிபடுகிறவர்களுக்குச் சகல ஞானமும் எளிதில் கிடைத்து விடும். சிவனிலிருந்து வேறாகாத சக்தியாகவே விநாயப் பெருமானைச் சைவர்கள் அனைவரும் வழிபடுகிறார்கள். இவருடைய ஐந்து கரங்களும் பஞ்சகிருத்தியங்களைக் குறிக்கின்றன. பாசத்தை வைத்துள்ள கை படைப்புத் தொழிலையும் தந்தம் ஏந்தியகரம் காத்தலையும், அங்குசம் தாங்கிய கை அழித்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளலையும் குறித்து நிற்கின்றன. ஐந்து கரங்களையும், யானையின் முகத்தையும், இளம்பிறைச் சந்திரனைப் போன்ற தந்தத்தையும் உடைய சிவனின் மைந்தன் ஞானச் சிகரமாகவும் விளங்குகின்றான். இத்தகைய பெருமானை மனத்தில் வைத்து அப்பெருமானின் திருவடிகளை வணங்குகின்றேன் என்ற பின்வரும் பாடல் அனுபூதி நிறைந்த அருட்பாடலாகக் காணப்படுகிறது.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

கடவுள் வாழ்த்து என்ற பகுதியிலே ஐம்பது பாடல்களும், வேதச் சிறப்பு என்ற பகுதியிலே ஆறுபாடல்களும், ஆகமச்சிறப்பு என்ற பகுதியிலே பத்துப் பாடல்களும் காணப்படுகின்றன. கடவுள் வாழ்த்தின் முதல் இருபத்தைந்து பாடல்களில் இறைவனின் பொது இயல்பினைக் கூறி, பின்வரும் பாடல்களில் இறைவனின் சிறப்பியல்புகளைக் கூறி, திருமூலர் இறைவனை உபாசிக்கின்றார். சித்தர்களுடைய வாக்கில் எப்பொழுதும் ஒரு தனித்தன்மை காணப்படும். சிலசமயம் ஏதோ வேடிக்கை பேசுவது போல இருக்கும். அந்த வேடிக்கையினுள் ஆழமான தத்துவங்கள் பொதிந்து காணப்படும். குழந்தைகளுக்கு ஒன்று இரண்டு என்று எண்சுவடிக் கணக்குச் சொல்வது போல இறைவனுடைய இயல்புகளைக் கடவுள் வாழ்த்தின் முதலாவது பாடலில் விளக்குகின்றார்.

ஏகம்ஸத் (உள்பொருள் ஒன்றே) என்ற உபநிடத மகாவாக்கியத்திற்கு அமைவாகப் பரசிவசோதிப் பிழம்பாகக் காட்சி தருகின்ற இறைவன் தனது ஆற்றலை அருட்சக்தியை ஆன்மாக்களுக்கு வழங்கிச் செயற்படும் நிலையில் சக்தியாகவும் விளங்குகின்றான். அம்மையப்பனாகவும் உமையொரு பாகனாகவும் சைவர்கள் இந்த வடிவத்தினை வழிபடுகிறார்கள். ஒன்றவன் தானே என்ற பாடலை ஆரம்பித்தவர் இந்நிலையை இரண்டவன் இன்னருள் என விளக்குகின்றார். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்யும் நிலையில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவகை வடிவங்களிலே காட்சி தருகின்றார். நான்கு வேதங்களை உணர்த்தும் விழுமிய பொருளாகவும் காட்சி தருகின்றார். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன்களையும் வென்ற நிலையில் அறிவிக்காமல் அனைத்தையும் அறிபவனாகத் திகழ்கின்றார். யோக சாஸ்திரங்கள் மனித உடம்பினுள் இருக்கும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய ஆறு ஆதாரங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றன. இந்த ஆறு ஆதாரங்களிலும் ஆறு வகையான ஆற்றல்கள் தொழிற்படுகின்றன. ஒன்றாகக் காட்சி தரும் இறைவனே ஆறு ஆதாரங்களிலும் விரிந்து நின்று செயற்படுகின்றான். இந்த ஆறு ஆதாரங்களுக்கும் அப்பால் ஞானப் பெருநிலை என்ற ஒன்று இந்த உடம்பின் உள்ளே இருக்கிறது. இதனை ஆகாசம் என்றும் சிதம்பரம் என்றும் ஞான மன்றம் என்றும் பல பெயர்கொண்டு அழைப்பார்கள். இவ்வாறு ஏழாவது உம்பர் (உம்பர் - ஆகாசம்) வரை சென்று நிற்பதும் இறைவனே என்பதை ஏழும்பர்ச் சென்றனன் என்று குறிப்பிடுகின்றார். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் ஆகிய எட்டுப்பொது நிலைகளாகவும் இறைவன் உணரப்படுகின்றான் என்பதை எட்டுணர்ந்தான் எனக் குறிப்பிடுகிறார். அஷ்டமூர்த்திசொரூபமாக உணரப்பெற்று அவற்றுள்

கலந்திருக்கிறான் இறைவன் என்பதை இது உணர்த்துகிறது. இவ்வாறு இறைவனின் பல்வேறு வியாபக நிலைகளையும் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

ஒன்று அவன் தானே; இரண்டு அவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள்; நான்கு உணர்ந்தான்; ஐந்து
வென்றனன்; அறுவிரிந்தனன்; ஏழு உம்பர்ச்
சென்றனன்; தான் இருந்தான் உணர்ந்து எட்டே

பன்னிரு திருமுறைகளும், பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களும் தமிழர்களின் சிந்தனையில் முகிழ்த்த உயர் தத்துவமாகிய சைவசித்தாந்த தத்துவமும் சிவனையே முழுமுதற் கடவுளாகக் காட்டுகின்றன. சிவனைவிட மேலான தெய்வம் உலகில் எங்கு தேடினும் இல்லை. தனக்குவமை இல்லாத பெரியவனாக விளங்கும் சிவன் அண்டமெல்லாம் கடந்து நின்று பொன்போல ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றான். அடியவர்க்கு எளியவனாகிய இறைவன் மெய்யன்பர்களின் அன்பால் விளங்கும் நெஞ்சத் தாமரையில் வீற்றிருந்து அருள்புரிவான் என்பதைத் தவமுனிவரின் பின்வரும் திருமந்திரப் பாடல் உணர்த்துகிறது.

சிவனோடொக்குந் தெய்வம் தேடினும் வேறில்லை
அவனோடொப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடை முடித் தாமரையானே.

இறைவன் தன்னுடைய அடியவர்களின் பாவங்களையும் இன்னல்களையும் தீயைவிட மிக வேகத்துடன் எரிப்பான். பக்தர்களுக்கு அருள் செய்வதில் தண்ணீரை விடக் குளிர்ச்சியானவன். இத்தகைய பரம கருணாநிதியாகிய இறைவனின் திருவருளின் தன்மையை உள்ளபடி யாரும் அறிகிறார்கள் இல்லையே எனத் தவயோகி உருக்கத்தோடு வருந்திக் கூறுகின்றார். குழந்தைகளின் உள்ளம் அப்பழுக்கற்றது, தூய்மையானது. மழலைகளின் சிரிப்புத்தான் தெய்வத்தின் சிரிப்பாகக் காணப்படுகிறது. கணக்குப் போட்டுப் பார்த்து இலாபம் கருதி வழங்குகிற அன்பு குழந்தைகளிடம் இல்லை. குழந்தைகளின் அன்புகூட வயது முதிர்ந்ததும் மாறுதல் அடையும். ஆனால் இறைவன் தனது அடியவர்களிடம் கொண்டிருக்கும் அன்பு அப்படிப்பட்டது அன்று என்பதைச் "சேயினும் நல்லன்" எனக் குறிப்பிடுகின்றார். குழந்தைகள் போல இறைவனிடமும் அன்பைச் செலுத்துகின்ற அன்பர்களுக்கு இறைவன் தாயைப் போலவும், தாயை விடவும் அன்பு செலுத்துகின்றான். நீண்ட சடையோடு கூடிய சிவபெருமானே தாயினும் நல்ல தலைவனாக நின்று அடியார்களுக்கு அருள் புரிகின்றார்.

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை

சேயினும் நல்லன் அணியன் நல்லன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ் சடையோனே

இறைவனை எந்த மார்க்கத்திற் சென்று வழிபட்டால் அவனை அடையலாம் என்ற சந்தேகம் அடியார்களுக்கிடையே ஏற்படுவதுண்டு. எந்தத் தெய்வ வடிவத்தை வழிபடலாம். எவ்வாறு வழிபடலாம் எனச் சிந்திக்கும் பக்தர்களுக்குத் திருமூலர் தனது பாடலில் நல்லதொருவிடையினைத் தந்திருக்கிறார். வழிபாட்டு நெறியில் தூய்மையும் உறுதிப்பாடும் இருத்தல் அவசியம் என்கிறார். எல்லா உயிர்களுக்கும் தந்தையாக விளங்குபவனும், நந்தி என்ற திருநாமத்தை உடையவனும், ஆனந்த அமுதுமாகத் திகழ்பவனும், தனக்கு ஒப்புவமை இல்லாதவனுமாகிய இறைவனை நாம் எந்த வடிவில் வழிபட்டாலும் அவனது அருளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது தவயோகி திருமூலநாயனாரின் கருத்து ஆகும்.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
ஏப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசீசன் அருள்பெறலாமே.

கடவுள் பலர் என்று இந்து சமய நூல்கள் எதுவும் கூறவில்லை. ஏகம் ஸத்விப்ரா பகுதா வதந்தி (உள்பொருள் ஒன்றே அறிஞர்கள் அதனைப் பல என உரைத்து விட்டனர்) என்பது வேதவாக்கியம் ஆகும். ஆனால் கடவுளுடைய உருவங்கள் பல என்றும் அவைகளை வழிபடுகின்ற முறைகள் பல என்றும் கூறப்பட்டுள்ளது. எந்தத் தெய்வத்தை எந்த உருவில் வழிபட்டாலும் அவ் வணக்கம் மாதொரு பாகனாகிய சிவனையே சேரும் என்பதை,

யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்

என்று சிவஞான சித்தியார் கூறுகிறது. சைவ சமயத்தவர்கள் வேதத்தைப் பொதுநூலாகவும் ஆகமத்தை சிறப்பு நூலாகவும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். வேதத்தை மந்திரம் என்றும் ஆகமத்தை தந்திரம் என்றும் கூறுவது பெரியோர் மரபு. "மந்திரமும் தந்திரமும் ஆயினான் காண்" என இறைவனை அப்பர்பெருமானின் தேவாரப் பாடலும் குறிப்பிடுகிறது.

வேதத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு ஆறு நூல்கள் இருக்கின்றன. வேதம் உடம்பானால் அதற்கு ஆறு அங்கங்களாக அந்த ஆறு நூல்களும் காணப்படுகின்றன. இந்த ஆறு நூல்களும் வேதாங்கம் என்ற பெயரால் அழைக்கப்படும். வேதத்தின் முடிபாக இருப்பது உபநிடதம். இதனை வேதசிரசு என்று சொல்வார்கள். முடிந்த முடிபாகிய பொருளை அந்த வேதாந்தம் குறிப்பிடுகிறது. மனிதன் பகுத்தறிவு உடையவன். அவனுடைய அறிவினால் ஆராயும் அளவைகளுக்கு எல்லை உண்டு. நமது அறிவினால்

மட்டும் இறைவனைக் காணமுடியாது. இறைவனை அடைய வேண்டுமென்று பக்தி உண்டாவதற்குரிய அறிவு வளர்ந்த பின்பு சாதனாமார்க்கங்களினூடாக அனுபூதி நிலையை அடைகின்ற பொழுதுதான் இறையருள் அகத்திலே பிரகாசிக்கும். ஆய்வு கூடங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தி முடிபுகளைப் பெறுவது போல இறைவனைக் காணமுடியாது.

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்
மிக்குச் சோதிக்க வேண்டா

என இந்த உவமையை ஞானசம்பந்தரும் தனது பாடலிற் குறிப்பிடுகின்றார். இறைவனால் அருளப்பட்ட வேதம் தர்க்கம் செய்கின்ற அறிவுக்கு அப்பாற்பட்டு உண்மையைச் சொல்கிறது. வேதத்தில் நமது வாழ்க்கைக்கு வேண்டிய அறங்கள் யாவும் கூறப்பட்டுள்ளன. இறையருள் பெற்ற அனுபூதிச் செல்வர்கள் தமது வாதத்தை விட்டு எல்லாப் பொருளும் நிறைந்த வேதத்தை ஓதியே முத்தியைப் பெற்றார்கள். இதனை வேதச் சிறப்பு என்ற முதற்பாடலில் திருமூலர் குறிப்பிடுகிறார்.

வேதத்தை விட்ட அறமில்லை; வேதத்தின்
ஓதத் தகும் அறம் எல்லாம் உள; தர்க்க
வாதத்தை விட்டு, மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே.

இறைவனை வாழ்த்துவதற்கும் வணங்குவதற்கும் உரியமொழி என்று எதுவுமே வரையறை செய்யப்படவில்லை. இறைவன் ஒலி வடிவாகவும் ஒளி வடிவாகவும் இருப்பான் என்றே வேதங்கள் கூறுகின்றன. "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்று அப்பர் பெருமானும் "நாதவிந்து கலாதீ நமோ நம" என்று அருணகிரியாரும் இறைவனை நாத வடிவினனாகக் கண்டு துதிக்கிறார்கள். பாஷைகள் எல்லாமே தெய்வத்தின் பேச்சு, இவற்றில் உயர்வு தாழ்வு கூறித் தர்க்கம் செய்வது அறிவீனம் என்று திருமூலர் தனது பாடலில் அழுத்திக் கூறுகின்றார். திருமூலர் காலத்தில் பாரதநாட்டில் பதினெட்டுப் பாஷைகள் வழக்கில் இருந்தன. இவர் பதினெட்டு பாஷைகளையும் கற்றுத் தேர்ந்த அறிஞராகத் திகழ்ந்தார். பதினெட்டு மொழிகளையும் அறிந்த இவர் ஆகமம் கூறும் பொருளை நன்கு உணர்ந்தவராகவும் இருந்தார். எல்லா மொழிகளும் இறைவனுடையய மூச்சுக்காற்றே என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் குறிப்பிடுகின்றது.

பண்டிதர் ஆவார் பதினெட்டுப் பாடையும்
கண்டு அவர் கூறும் கருத்தறிவார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறஞ் சொன்னவாறே

# குருவருளின்றித் திருவருள் இல்லை

**தி**ருமூலருடைய திருமந்திரமானது சாதாரண கவிதைகளைப் போல இலக்கிய இன்பத்தை மட்டும் வழங்கவில்லை . பாரத நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த ஞானிகளின் அனுபவ உணர்வில் நிலவி வந்துள்ள தத்துவங்களை உபதேசிப்பதற்காக எழுந்த அனுபவ ஞானத் திருநூலே திருமந்திரம் ஆகும். யோக நிஷ்டையில் இருந்து உள்ளுணர்வில் தரிசித்த இறை உண்மைகளையே பாடல்களாகத் தந்திருக்கின்றார். மனித உடம்பிற்குள் நின்று செயற்படும் மெய்ப்பொருளாகிய இறைவனை நேரிலே தரிசித்த திருமூலர் தான் அடைந்த பேரின்பத்தை உலக மக்கள் எல்லோரும் பெற வேண்டும் என விரும்பினார்.

வானில் வியாபித்துள்ள பரம்பொருளே ஊனிலும் மறைந்து நிற்கிறார். உணர்விலும் கலந்து இருக்கின்றார். இந்த ஆத்மீக உணர்வு நிலையைப் பற்றிக்கொண்டு ஈடுபட ஈடுபடப் பேரின்பமானது தானே சித்திக்கும். தான் பெற்ற பேரின்பத்தை உலகமும் பெற்றுக் கடைத்தேற வேண்டும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடலின் ஊடாகத் தவயோகி விளக்குகின்றார்.

**நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்**
**வான் பற்றி நின்ற மறைப்பொருள், சொல்லிடின்**
**ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான் ப்ற்றப் பற்றத் தலைப்படும் தானே.**

4

எந்தச் செயலும் சிறப்படைவதற்குத் தொடர் பயிற்சி மிகவும் அவசியம் என்பதை உலகியல் வாழ்க்கையில் நாம் அறிந்திருக்கின்றோம். தியானப்பயிற்சியினைத் தொடர்ந்து செய்து அகத்திலே இறை ஒளியைப் பிரகாசிக்கச் செய்தல்

வேண்டும். பயிற்சி செய்து அந்த உணர்விலே திளைக்கவேண்டும் என்பதற்குப் பற்றப்பற்ற என இரண்டு முறை அழுத்திக் கூறுகின்றார். இறையருள் பெற்ற அருளாளர்களிடம் குறுகிய நோக்கம் எதுவும் கிடையாது. உலக மக்கள் அனைவரும் சேமமாக வாழவேண்டும் என்பதே அவர்களின் பிரார்த்தனையாகும். "ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்க்கவே" என ஞானக்குழந்தையாகிய சம்பந்தரும், " பார் வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்" எனச் சேக்கிழார் பெருமானும் " எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லால் வேறொன்றறியேன் பராபரமே" எனத் தாயுமான சுவாமிகளும் இந்த உயர்ந்த பண்புநிலையினைத் தங்கள் பாடல்களிலே போற்றிப் பாடியுள்ளார்கள்.

திருமூலர் அட்டமாசித்திகளும் கைவரப் பெற்றவர் " பிரான்" என்று சைவ உலகம் துதித்து வணங்குகின்ற மகா ஞானி. சைவ சமய ஆசாரியர்கள் அனைவராலும் குருவாக மதித்து போற்றப்பட்டவர். செல்வத்தைக் குறிக்கின்ற திரு என்ற அடைமொழி இவருடைய நூலிலும் இவரின் பெயரிலும் காணப்படுவது சிறப்பான அம்சமாகும். நமது புலன்களினாலோ அறிவினாலோ இறைவனைக் காண நினைப்பது ஒருவர் தன்னுடைய தோளிலே தான் ஏறி நிற்பதையும்; வண்டிச் சக்கரத்தை உருட்டுவதையும் ஒக்கும் என உபநிடதங்கள் கூறுகின்றன. அருளாளர்கள், ஞானிகள் அடக்கத்தோடுதான் பேசுவார்கள். " நிறைகுடம் தளம்பாது" என்ற முதுமொழியை இவர்களுடைய வாக்கிலும் வாழ்விலும் காணலாம்.

எம்பெருமானுடைய பெருமையை யார்தாம் சரியாக அறிவார்கள்? இந்தப் பெருமையின் அகலத்தையும் நீளத்தையும் யாரால் அளந்து அறியமுடியும். பிரமாவும் விஷ்ணுவும் அடிமுடி தேடியும் காணமுடியாது சோதிப்பிழம்பாகக் காட்சி தந்த வடிவமே பரம்பொருள் எனப் புராண வரலாறுகள் கூறுகின்றன.

" மாலொடயனறியாத வண்ணமும் உள்ளது நீறு" என்கிறார் சம்பந்தர்.

"தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித் தோடானாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்" என அப்பர் பெருமானும் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

உலகிலே யாரும் அறியமுடியாத சுடர் அது. அதன் வேர் ஓங்கி இருக்கிறது என்பதை நான் அறியேன். அறிவுக்கு அப்பாற்பட்டவன் இறைவன் என்பதை நான் உணர்ந்திருக்கின்றேன். தன்னால் அறியமுடியாத தன்மை உள்ளது என்றுகூறி இறைவனின் எல்லையற்ற தன்மையையும், உயர்வையும் உணர்த்துகின்றார்.

இறைவனுடைய பேரின்பத்திலே ஐந்து புலன்களும் ஒன்றி நின்று எல்லாம் மறந்து நிற்கின்ற நிலையே உண்மையான ஞானநிலை, மோனநிலை ஆகும். ஞானத்தில் எல்லாம் சிறந்த தவஞானத்தினைப்பெற்ற தவ யோகி தான் உணர்ந்த உண்மைநிலையினை அவையடக்கமாகக் கூறுகின்றார்.

நீண்டகாலம் தவமிருந்து அந்தப் பேரானந்தத்திலே தோய்ந்து தோய்ந்து அழுந்தி அதன் எல்லையற்ற தன்மையை உள்ளவாறு உணர்ந்து அந்த உணர்வு நிலையிலே நின்று பின்வரும் திருமந்திரப் பாடலை திருமூலர் தந்துள்ளார்.

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யார் அறிவார் இந்த அகலமும் நீளமும்;
பேர் அறியாத பெருஞ்சுடர் ஒன்று; அதின்
வேர் அறியாமை விளம்புகின்றேனே.

முதலாம் தந்திரத்தின் முதலாவது பகுதியில் உபதேசம் என்ற தலைப்பில் முப்பது பாடல்கள் காணப்படுகின்றன. குரு பக்குவமுள்ள தனது சிஷ்யனுக்குக் கூறுவது உபதேசம் எனப்படும். உபதேசம் என்ற வடமொழிச் சொல்லுக்கு உடனிருந்து உணர்த்துதல் என்பது பொருள். அவரவர்களுடைய பக்குவநிலைக்கு ஏற்ப இறைவன் ஞானத்தை வழங்குவான். கடவுட் தத்துவத்தையும் ,உயிர் வர்க்கங்களையும், இந்த உலகையும், உலகின் இயல்புகளையும் நுட்பமாக ஆராய்ந்த தவயோகி நித்தியப் பொருள் மூன்று எனக் குறிப்பிடுகின்றார். சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் இந்த மூன்றையும் முப்பொருள் உண்மை எனக் கூறுகிறது. பதி என்பது இறைவன், பசு என்பது ஆன்மா, பாசம் என்பது ஆன்மாக்களைச் சுட்டிநிற்கும் தளைகள். இந்த மூன்றும் நித்தியமான உள்பொருள்கள். உயிரும் தளையும் ஈசுவரனைப்போல அநாதியானவை. பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகை மலங்கள். இந்த மும்மலப் பாசத்திலே மலங்கள் கட்டுண்டு நிற்கிறது. ஆணவம் நான் என்ற அகங்காரத்தையும்; எனது என்ற மமகாரத்தையும் உயிர்களிடம் தோற்றுவித்து; அறியாமையில் அமிழ்த்துகிறது. " கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டும்" என மணிவாசகப் பெருமான் தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்தில் ஆணவத்தின் தன்மையை அழகாகச் சித்தரிக்கின்றார். நல்வினை தீவினை என்ற வேறுபாட்டை உண்டாக்கி உயிரை ஆட்டுகின்ற தத்துவம் கன்மமலம் ஆகும். ஆன்மா உலகியல் இன்பங்களை அனுபவிப்பதற்கு வேண்டிய போகங்கள் அனைத்தும் மாயையில் இருந்தே தோற்றம் பெறுகின்றன. சிவ தத்துவம், வித்தியாதத்துவம், ஆன்ம தத்துவம் ஆகிய முப்பத்தாறு தத்துவங்களுக்கும் மாயையே காரணம் ஆகும்.

உயிரும் அதைப்பற்றியுள்ள பாசமும் இறைவனைச் சேரமாட்டாது . இதனையே பசு, பாசம், பதியினைச் சென்று அணுக மாட்டாது என்கிறார். உயிரானது பிறப்பு இறப்பில் அகப்பட்டு இறைவனை அணுகமுடியாமல் பாசத்தில் அழுந்திக் கிடக்கின்றது. இந்தப் பாசம் நீங்கி அறியாமை அகன்று உயிர் உய்திபெறல் வேண்டும் என்றால்; அதற்கு இறைவனே வந்து ஆட்கொள்ள வேண்டும். பதியானவன் கருணையோடு ஆன்மாவை அணுகும்போது அதைப் பீடித்துள்ள தளை; தானாகவே நீங்கிவிடும்.

பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப்போற் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்
பதியணுகில் பசு பாசம் நில்லாவே.

திருமூலர் பல கலைகளிலே பாண்டித்தியம் பெற்றவர். வைத்தியம், இரசாயனம், பௌதிகம், வானசாஸ்திரம் ஆகிய எல்லாத்துறைகளிலும் வல்லவராகவும் திகழ்ந்தார். மனித அறிவின் எல்லைக்குள்ளும் அதற்கு அப்பாலும் விரிந்து பரந்து நிற்கிற தத்துவங்களையெல்லாம் மெய்யுணர்வினால் கண்டு பேசுகிற தவயோகியாகக் காணப்பட்டார்.

அறிவுக்கு அப்பாற்பாட்ட தத்துவங்களை விளக்குவதற்காக அறிவுக்குப் புலனாகின்ற உண்மைகளை உதாரணம் காட்டுகின்றார். சூரிய காந்தக் கல்லின் கீழே பஞ்சை வைத்துச் சூரியனுடைய கதிரை அந்தக் கண்ணாடியின் வழியாகச்செலுத்தினால் பஞ்சில் தீ பற்றிக் கொள்ளும் . சூரிய காந்தக் கல்லுக்கு சூரியனின் வெப்பசக்தியை ஈர்க்கும் இயல்பு இருக்கிறது. பஞ்சு எளிதாகத் தீப்பிடிக்கும் இயல்பு கொண்டது. சூரியகாந்தக் கல்லையும் பஞ்சையும் ஒன்றுசேர்த்து நம்முடைய மடியில் வைத்துக்கொண்டிருந்தால் தீப்பிடிக்காது. சூரியகாந்தக் கல்லில் சூரியனுடைய ஒளிக்கற்றையைக் குவியச் செய்த பின்பு பஞ்சை வைத்தால் அதில் நெருப்புப் பிடிக்கிறது. இந்தப் பௌதிக விஞ்ஞான உண்மையை உதாரணமாகக் கொண்டு பெரிய ஆன்ம தத்துவத்தைத் திருமூலர் விளக்குகின்றார்.

ஆன்மாக்களின் பக்குவநிலைக்கு ஏற்ப இறைவனேகுருவாகவந்து ஞானத்தை வழங்குகிறான் என்பது சித்தாந்திகள் கொள்கை ஆகும். "குருவருளின்றித் திருவருள் இல்லை" என்பது சைவ சித்தாந்தம் காட்டும் முடிந்த முடிபு ஆகும். குருவைச் சூரியனுக்கும் குருவருளை சூரியனுடைய கதிருக்கும், அன்மாவைச் சூரிய காந்தக் கல்லுக்கும் மும்மல அழுக்கைப் பஞ்சுக்கும் உவமையாகக் காட்டிய அரிய தத்துவ உண்மைகளைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

சூரிய காந்தமும் சூழ் பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியில் சுடுமாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே.

இறைவனே குருவாக வந்து ஞானத்தை ஊட்டுகிறான் என்பது நமது சமயக் கொள்கையின் அடிப்படையாகும். மணிவாசகப் பெருமானை இறைவன் குருந்தமர நீழலில் குருவடிவாகவே வந்து ஆட்கொண்டார். இதனைக் " கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க" என மணிவாசகரே தன்னுடைய தெய்வ வாசகத்தின் சிவபுராணவரிகளில் குறிப்பிடுகின்றார். குருவின் உருவத்தில் வந்து நமக்குத் திருவருள் புரிகின்ற அந்தத் திருமேனியைத் தரிசிப்பதே ஞானத்தைப் பெறுவதற்கு வேண்டிய பயிற்சியின் முதற்படி

நிலையாகும். குருவைத் தரிசிப்பது, குருநாதனின் திருநாமத்தைச் செப்புவது, குருவின் திருமொழிகளைச் செவியில் கேட்பது, அவருடைய திருவுருவத்தை எப்பொழுதும் தியானிப்பது ஆகிய அனைத்தும் மெய்ஞ்ஞானத்தைப் பெறுவதற்குரிய வழிகள் ஆகும் என்கின்றார் திருமூலர். இங்கு தெளிவு எனக் குறிப்பிடுவது ஞானத்தையே ஆகும். காண்பது அவனுடைய திருமேனியை; மந்திரம் அவனுடைய திருவார்த்தை; சிந்திப்பது அவன் திருஉருவத்தை, இவை அனைத்தும் ஞானத்தை அடைவதற்கான திசை காட்டிகள் ஆகும்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉருச் சிந்தித்தல் தானே.

குரு பக்தியும் ஞானமும் ஏற்பட்டுவிட்டால் பலவிதமான நலன்கள் உண்டாகும். சிந்திப்பது , வணங்குவது, காண்பது, செப்புவது ஆகிய அனைத்தும் இறைவனாகிய குருவையே பற்றி நிற்குமானால் மூர்க்கப் புலன்கள் அனைத்தும் தானாகவே உன்வசம் அடங்கிவிடும் என்று உறுதி கூறுகின்றார் திருமூலர்.

பாகனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கும் யானையைப்போல உலக இச்சையிற் சென்ற புலன்கள் திசை திரும்பி மெய்ப்பொருளை நாடிச் செல்லும். ஆன்மாவைப் பீடித்திருக்கின்ற உலகப் பற்றுக்கள் நீங்கினால் தான் இறைவனைப் பற்றலாம். பற்றுக்களை நீக்குவதற்குப் பற்றற்ற இறைவனைப் பற்றிப்பிடிக்க வேண்டும். என்பதைப்

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்றே தெய்வத் தமிழாகிய திருக்குறளும் கூறுகிறது.

ஆன்மா தன்னைச் சார்ந்திருந்த மற்றப் பற்றுக்களை எல்லாம் நீக்கிவிட்டுத் தன்னந்தனியே மனம், வாக்கு, காயம், ஆகிய திரிகரணங்களையும் இறைவனாகிய ஞான குருவினிடத்தே ஒன்றிக்கச் செய்து விட்டால் புலன்கள் ஐந்தும் சீரான பாதையில் செல்லும் நிலையை அடைந்துவிடும். இந்த உடம்பிற்குள் நிற்கின்ற ஆன்மாவானது குருவின் உபதேச வழியாக இறைவனை இந்த உடம்பிற்குள்ளேயே சந்திப்பதுதான் தவயோகம். அந்தத் தவயோகம் குருவருளினாலேதான் சித்திக்கும். இந்த உண்மையைப் பின்வரும் பாடலின் ஊடாகத் திருமூலர் விளக்குகின்றார்.

தானே புலனைந்தும் தன்வசம் ஆயிடும்
தானே புலனைந்தும் தன்வசம் போயிடும்
தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான் தனைச் சந்தித்தே.

# கூத்தன் புறப்பட்ட கூடு

**சா**தாரண மனித மனம் எப்பொழுதும் உலக சுகங்களை நாடியே சென்று கொண்டிருக்கும். பிறவிகளில் அரிய பிறவி மானிடப்பிறவிதான் என்பதை " அரிது அரிது மானிடராதல் அரிது" எனத் தமிழ் மூதாட்டி ஔவையாரும் கூறியுள்ளார். அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கின்ற பரம்பொருளாகிய இறைவனை இந்தப் பிண்டமாகிய உடம்பிலே ஞானிகள் கண்டார்கள். இறைவன் வீற்றிருக்கின்ற திருக்கோயில் என்றே சித்த புருஷர்கள் இந்த மானுட உடலைக் கூறுகிறார்கள். இத்தகைய அரிய மானுடப் பிறவியைப் பெற்ற சிலர் இறைவன் வீற்றிருக்கும் புனிதமான உடம்பினைச் சிதைவுபடுத்துகின்றார்கள். அகத்திலே இருந்து அருள் ஒளி வீசுகின்ற இறை சக்தியைச் செயற்படாமல் ஒதுக்கி விட்டு மிருக உணர்வுகளை வளர்த்து ஆட விட்டிருக்கிறார்கள். ஆடாத ஆட்டம், தேடாத தேட்டம், கூடாத கூட்டம் எல்லாம் கூடிக் கூத்தாடிக் கூத்தாடி எடுத்த அரிய மானிடப்பிறவியினைப் போட்டு உடைக்கின்றார்கள்.

தாய் தனது பிள்ளையைப் பத்து மாதம் கருவிலே சுமந்து பெற்று எடுக்கிறாள். இறைவன் தாயின் கர்ப்பத்திலே வளரும் சிசுவிற்கு உயிரைக் கொடுத்து இப் பூமிக்கு அனுப்பிவிடுகின்றான். பிள்ளை வளர்ந்துவரும் காலத்தில் ஒவ்வொரு பருவத்திலும் வெவ்வேறு விதமான மயக்கங்களுக்கு உட்பட்டு தான் எடுத்த அரிய மானிடப்பிறப்பைச் சிதைத்தும் சீரழித்தும் விடுகிறான். இதனைக் கடுவெளிச் சித்தர் தனது பாடலில் பின்வருமாறு தெளிவாக விளக்குகின்றார்.

5

நந்தவனத்திலோர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒரு தோண்டி – மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி

இந்த மானுட உடம்பு நிலையற்றது மறைந்து போகும் தன்மை உடையது என்பதை யாக்கை நிலையாமை என்ற பகுதியில் வரும் இருபத்தைந்து பாடல்களின் ஊடாகத் தவயோகி தெளிவாக விளக்குகின்றார். மானுட சரீரத்தை யாக்கை, காயப்பை, தோற்பை எனப் பல பெயர்களால் திருமந்திரம் குறிப்பிடுகின்றது. யாக்கை என்னும் சொல் பிணிப்பு என்னும் பொருளுடையது. ஐந்து பூதங்களின் சேர்க்கையான பிணிப்பு யாக்கை என்றும், சுக்கில சுக்ரோணி என்பவற்றால் விளைந்த பிண்டத்தில் கரும வினைகளால் ஆன்மா கொண்ட பிணிப்பு யாக்கை என்றும் பலவிதமாகப் பொருள் கூறப்பட்டுள்ளது.

உயிர் போன பின்பும் பெறுமதி மிக்கதாகப் பணத்திற்கு விலைபோகும் உடல்கள் பல இப் பூவுலகிலே காணப்படுகின்றன. ஊன் வகை உணவுகளை உண்பவர்கள் யாரும் உயிரோடு எதையும் விழுங்குவதில்லை . உயிர்போன உடலைத்தான் பதப்படுத்தி வாய்க்கு ருசியாக உண்கிறார்கள். தனது வயிற்றையே புதை குழியாக்கி வாழும் மனிதனின் உயிர்போன பின்பு அந்த உயிர் தங்கியிருந்த உடலின் பெறுமதி யாது? உடலில் இருந்து உயிர் பிரிந்து சென்றதும் ஊரவர்கள் . உறவினர்கள் அனைவரும் வந்து ஒன்றுகூடுகிறார்கள். கதறி அழுகிறார்கள். உயிர் இருக்கும் வரை அன்போடு அழைத்த பெயரை மறந்து விடுகிறார்கள். பிணம் என்ற அஃறிணைப்பெயரைத்தான் சுட்டி நிற்கின்றார்கள். சுடுகாட்டிற்கு உடலை எடுத்துச் சென்று தீயில் சுடுகிறார்கள். சாம்பலையும் தண்ணீரில் கரைத்து விட்டு இறந்தவரின் நினைப்பை மறந்து வீடு திரும்புகிறார்கள். இவ்வாறு உயிர்போன உடலிற்கு செய்யப்படும் செயற்பாடுகளை எல்லாம் கூறி நிலையாமைக்கருத்தினைப் பின்வருமாறு திருமந்திரம் தெளிவாக விளக்குகின்றது.

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டு போய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே.

அறுசுவையுடன் கூடிய உணவை உண்ண விரும்பியவர் தனது மனையாளைச் சுவையாக சமைக்கும் படி பணித்தார் . சமைத்த உணவை மிகவும் விரும்பி உண்டார் . தனது அழகான மனைவியோடு அந்தப்புரத்தில் தனித்து உறவாடினார். இடது பக்க நெஞ்சு மெதுவாக வலிக்கிறதே என்றார். கீழே படுத்தார். மீளாத உறக்கத்திற்கு ஆளாகிவிட்டார். வாழ்க்கையின்

நிலையாமையை மறந்து உலகியல் இன்பங்களை நிலையானது என நினைத்து ஈடுபட்டுக் காலத்தை வீணாக்குகின்ற பேதை மக்களின் கண்ணைப் பின்வரும் பாடலின் ஊடாகத் திறக்கின்றார் தவயோகி.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடியாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை. நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே

சிம்மாசனத்தில் ஏறி நாட்டை ஆட்சி செய்த அரசனும், பிச்சையேற்று உண்டு வாழ்ந்த ஆண்டியும் உயிர்போனபின்பு ஒன்றாகவே கருதப்படுவார்கள். இருவரது உடலையும் அக்கினியில் தகித்து விட்டால் எஞ்சுவது ஒரு பிடி சாம்பல்தான்.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பராவார். என்றே பட்டினத்தடிகளின் பாடலும் குறிப்பிடுகின்றது. நாவசைந்தால் நாடசையும் நிலையில் வாழ்ந்த நம்மூர்ப்பெரியவர், நாட்டின் தலைவராகவும் திகழ்ந்தவர், அவரின் இறுதிச் சுடுகாட்டு யாத்திரை நடைபெறுகிறது. சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் பாடையில் இறந்தவரின் உடல் பவனி வருகிறது. பாடையின் முன்பாக மரண ஓலத்தை அறிவிக்கும் பறை முழங்குகின்றது. நன்றி தெரிவிப்பதற்காக நாட்டு மக்கள் பின்னால் பவனி வருகின்றார்கள். என்று நிலையாமைத் தத்துவத்தின் உண்மை நிலையினைத் தத்ரூபமாகத் தவயோகி தனது பாடலிலே சித்தரிக்கின்றார்.

நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன்றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின் செல்ல முன்னே பறை கொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்றவாறே.

உடலின் உள்ளே இருந்து இயக்குகின்ற உயிரைத் திருமூலர் கூத்தன் என்றே குறிப்பிடுகின்றார். உடலில் இருந்து உயிர் பிரிந்து விட்டதை உறுதிப்படுத்தும் வைத்தியர்கள் நாடித்துடிப்பை அல்லது இதயத்துடிப்பினை உற்று நோக்குகிறார்கள். உயிராகிய கூத்தன் போன பின்பு இந்த உடல் பெறுமதியற்றதாகி விடுகிறது. இந்த உடற்கூட்டைக் காக்கை கொத்தினால் என்ன? கண்டவர் பழித்தால் என்ன? எல்லாமே எதுவித பிரயோசனமும் அற்ற செயல்களாகவே காணப்படுகின்றன.

காக்கை கவரிலென், கண்டார் பழிக்கிலென் ?
பால் துளி பெய்யிலென் ? பல்லோர் பழிச்சிலென் ?
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப்போன இக்கூட்டையே

நிலையற்ற பொருட்களை நிலையானது என்று எண்ணிப் பிரபஞ்ச மயக்கத்தில் மயங்கி நிற்கும் மானிடர்களுக்கு நிலையானவை எவை? நிலையற்றவை எவை ? எனத் திருமூலர் தனது தமிழ் மந்திரத்தின் ஊடாகத் தெளிவாக விளக்குகின்றார். மக்கள் நிலையானவை என்று மயங்கி உணரும் சிலவற்றின் நிலையாமையை உணர்ந்தாலன்றி நிலைத்த என்றும் அழியாத வீட்டின்பத்தின்கண் உள்ளம் விழையாது என்பதை உணர்ந்த தவயோகி உடம்பின் நிலையாமையை இருபத்தைந்து பாடல்களால் உணர்த்தி அடுத்த ஒன்பது பாடல்களில் செல்வம் நிலையாமை பற்றிக் கூறுகின்றார். செல்வம் இரண்டு வகையானது. ஒன்று அருட்செல்வம், மற்றது பொருட்செல்வம், அருட்செல்வம் நிலைபேறுடைய இன்பத்தைத் தரும், பொருட்செல்வம் ஈட்டவும் , பூட்டவும் ,காக்கவும் , ஈயவும் ,வரவும், செல்லவும் பெருங்கவலையைத்தரும் . பொருட் செல்வம் உடலைப்பற்றி நிற்கும், உடலுடன் விலகும் அருட்செல்வம் உயிரைப்பற்றி நிற்கும், உயிருடன் சென்று உதவும். புவிச்செல்வத்தையே பெரிதாகக் கருதாமல் சிவநேசமாகிய அருட்செல்வத்தையே சேர்க்க வேண்டும் என்பதைச் செல்வ நிலையாமையை விளக்கும் பாடல்களில் தெளிவாக விளக்குகின்றார்.

நாம் மகிழ்கின்ற செல்வ வாழ்வும் பொன் முதலிய செல்வப் பொருள்களும் நீரில் கவிழும் மரக்கலம் போன்றதாகும். அழிந்தொழியும் தன்மையுடையன. ஆன்ம விடுதலைக்குரிய மார்க்கங்களில் தானதர்மங்களைச் செய்வதும் ஒன்றாகும். தானங்களில் உயர்ந்த தானம் அன்னதானம். பசியோடு இருப்பவனுக்கு உணவைக் கொடுத்து விட்டுத் தான் கீதையை உபதேசிக்கவேண்டும் என்பார் சுவாமி விவேகானந்தர். சந்நிதியான் அன்னதானக் கந்தன் என்பதை உறுதிப்படுத்தும் செயற்பாட்டினையே ஆற்றங்கரை வேலவனின் திருவருளினால் இக்கட்டான சூழ்நிலையிலும் சந்நிதியான் ஆச்சிரமத்தினர் மனம் தளராது செய்து வருகிறார்கள் . செல்வந்தர்கள் தாம் ஈட்டிய செல்வத்தை, தாமே பூட்டிவைக்காமல் பலருக்கும் பயன்படக்கூடியதாக வழங்குதல் வேண்டும். அத்தகைய ஈகையே உயிர்க்குத் துணையாகும் என்பதைத் தவயோகி பின்வரும் பாடலின் ஊடாக விளக்குகின்றார்.

மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம் போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடுபேறாகக்
சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறியாரே

இளமை நிலையாமை பற்றித் திருமூலநாயனார் பத்து மந்திரங்களில் விளக்குகின்றார். இளமைக் காலத்திலே உடம்பின் உறுப்புக்கள் எல்லாம் மினுமினுப்பாகத் தோன்றும், கவர்ச்சியாக இருக்கும். மற்றைய பாலாரைக் கவர்ந்திழுக்கவும் செய்யும். யௌவனப் பருவத்தின் மெருகினை லாவண்யம்

என்று அழைக்கின்றோம். காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், என்ற ஆறினையும் ஷட்தோச வர்க்கம் என வடமொழி நூல்கள் கூறுகின்றன.

வயதில் முதிர்ந்தவர்களைப் பார்த்து வயதில் குறைந்தவர்கள் நையாண்டி செய்கிறார்கள். எள்ளிநகையாடுகிறார்கள். "வாக்கு மாறிப்போய்விட்டது" இவர்களுடைய கருத்தைப் பொருட்படுத்த வேண்டாம். என்று கூறுகிறார்கள் " காவோலைவிழக் குருத்தோலை சிரிக்கிறது" என்ற பழமொழி இதனை விளக்குகின்றது. திருமணம் செய்த புதிதில் தம்பதிகள், சமேதராக பவனிவரும் மணமக்களைப் பார்த்து மன்மதனும் ரதியும் போலப் பொருத்தமான சோடி இவர்கள் தானே எனப் பலரும் பேசிக்கொள்கிறார்கள். "ஈருடல் ஓருயிர்" போல இவர்கள் காட்சி தருகின்றார்கள. கரும்பைப்பிழிந்து இறுதியில் வருகின்ற சாற்றைப்போன்று இளமையிலே விரும்பிய அதே பெண்ணுக்கு முதுமையிலே எட்டிக்காயைப் போல கசப்பான பொருளாக மாறுவது தான் இளமையின் இயல்பு ஆகும். இளமையிலே உயிரைக்கொடுக்கின்றேன் என்று கூறுபவர்கள் முதுமையிலே உயிரை எடுக்கின்றேன் என்று நிற்பார்கள். எனவே இளமையின் நிலையாமையையும் உணர்ந்து கொண்டு தாமரையிலைத் தண்ணீர் போல நாம் இப்பிரபஞ்ச வாழ்வினை வாழுதல் வேண்டும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழையார்க்குங்
கரும் பொத்துக் காஞ்சிரங் காயும் ஒத்தேனே

காதலுக்கும் காமத்திற்கும் இடையே வேறுபாடு உண்டு . உள்ளத்தால் ஈர்க்கப்படுவது காதல். வெறும் உடற்கவர்ச்சியினால் ஏற்படுவது காமம். காதல் தெய்வீகமானது, தூயது, வாழ்க்கைக்கு இன்றியமையாதது. உலகநெறியில் செலுத்துவது, சமுதாயவாழ்க்கையைப்பெருக்கித்தூய்மையாக்குவது. ஆனால் காமம் என்பது இழிந்த தன்மையை உடையது. காமவேட்கை மிகுதியினால் அழிந்தவர்கள் பலரின் வரலாற்றினை இதிகாச புராணங்களிலே காணலாம்.

காதலென்ற தூய்மையான தத்துவத்தின் தூய உருவமே திருமணம் ஆகும். திருமணமே இல்லறத்தின் வேர். நான்கு வகை ஆச்சிரம நெறியில் அச்சாணி போல அமைந்திருப்பது இல்லறம் என்றே தர்மசாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இல்லாளை வாழ்க்கைத்துணை என்று கூறுவதே தமிழ் மரபாகும். கற்பு நெறி தவறாத பெண்ணைப் பத்தினி எனப் போற்றுவது இந்து சமய மரபாகும். இத்தூய வாழ்க்கை நெறியைச் சீரழிக்கத்தோன்றியது " பிறனில் விழைதல்" என்ற கொடிய குற்றம் ஆகும். இத்தகைய செயலில் ஈடுபடுபவர்கள் "இருதலைக் கொள்ளி" எறும்பாகத் தவிக்கிறார்கள். ஒரு இல்லுறை

தெய்வத்தை, தனது ஆன்ம உடமையாக வந்தவளை, வாடச்செய்து விட்டு பிறருடைய காவலிலே இருக்கின்ற மாற்றான் மனைவி மீது காம இச்சையால் கவரப்பட்டுச் செல்கின்ற காளையர்களின் இழி செயலைத் தவயோகி தனது பாடலிலே சாடுகின்றார். தனது வீட்டு முற்றத்திலே தாம் பாடுபட்டு அன்புடன் வளர்த்த பலாமரம் வேரிலும் கொம்புகளிலும் குலுங்கப்பழுத்து இருக்க அப்பழத்தை உண்ண விரும்பாமல் காட்டில் வளர்ந்த ஈச்சம் பழத்துக்கு ஆசைப்பட்டு அல்லற்படுவதை ஒக்கும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடலின் ஊடாகத் தெளிவு படுத்துகின்றார்.

ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ணமாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடருற்றவாறே.

பிறர் மனைவி மீது மோகம் கொள்வதால் ஏற்படும் அவலங்களையும், கஷ்டங்களையும் இடர் என்ற சொல்லில் பொதிந்து காட்டுகின்றார். இவ்வாறு வாழ்வியற் கருத்துக்கள் பலவற்றைக் கூறி பாவக் குழியிலே விழாமல் மக்கள் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு அருள் முனிவரின் தமிழ் மந்திரம் வழிகாட்டுகின்றது.

ஆண்டவனைச் சொந்த அனுபவமாக்கிக் கொண்டு அதனையே பிரசாரம் செய்பவர்கள் வசீகரிப்பதை விட வாழ்ந்து காட்டுவார்கள். விளம்பர வித்தைகளில் மாட்டுப் படாமல் இருப்பவன் தான் உண்மையான ஆன்மீக வாதி. நமது ஞான பரம்பரையினர் நமக்கு அருளியதைப் பெரியோரிடம் முறை தவறாமல் கேட்டு ஆராய்ந்த பின்பே பிறருக்கு அவற்றைக் கூற வேண்டும். இவ்வாறில்லாமல் தன் மனதில் தோன்றியதை எல்லாம் கூறி இப்படித்தான் கூறியதே உண்மை உபதேசம் என்பார்கள் மூர்க்கர்கள்.

**– சுவாமி தேஜோ மயானந்தர்**

# கொல்லாமையே சிறந்த அறம்

உடல், அழகு, செல்வம் ஆகியவற்றின் நிலையாமையை விளக்கிய தவயோகி உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள உறவினுடைய தன்மையைத் தொடர்ந்து விளக்குகிறார். நிலையில்லாத உடம்பிற்குள் உயிர் கலந்துநிற்பது நிலையான சம்பந்தமில்லை என்பதை உயிர் நிலையாமை என்ற தலைப்பில் பத்துப் பாடல்களில் கூறுகின்றார். உயிர் உடம்புடன் சேர்ந்து இயங்குகின்ற சொற்ப காலத்திற்குள் செய்ய வேண்டிய நல்லறங்களைச் செய்து கடைத்தேற வேண்டும் என்கிறார் திருமூலர். தர்மத்திற்கு விரோதமாக வாழ்க்கை நடாத்தக்கூடாது எனக் கூறுகிறார். வஞ்சனை, பொய் முதலிய பிறர்க்குத் துன்பம் உண்டாக்கும் தீய சொற்களைக் கூறி அறநெறி கெடும்படி செயற்படக்கூடாது. பேராசை கொண்டு பிறர்பொருளைச் சிறிதும் விரும்பக்கூடாது. நல்ல பண்புகளை உடையவர்களாக ஆகுதல் வேண்டும். உணவை உண்ணும் போது ஒருபிடி உணவைப் பிறருக்குத் தானம் செய்துவிட்டு உண்ணுதல் வேண்டும். இவ்வாறு உயிர் உடலில் தங்கியிருக்கும் பொழுது செய்யவேண்டிய அறங்களைப் பின்வரும் பாடலின் ஊடாகத் தவமுனிவர் விளக்குகின்றார்.

**அவ்வியம் பேசி அறம்கெட நில்லன்மின்**
**வெவ்வியன் ஆகிப் பிறர்பொருள் வவ்வன்மின்**
**செவ்வியன் ஆகிச் சிறந்து உண்ணும் போது ஒரு**
**தவ்விக்கொடு உண்மின் தலைப்பட்ட போதே**

6

*நல்ல அறங்கள் பலவற்றுள்ளும் கொலைத் தன்மை இல்லாத அறமே மிகச் சிறந்த அறமாகும்.*

கொல்லாவிரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லோர்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே

எனத் தாயுமானசுவாமிகளும் கொல்லாமை என்ற அறத்தின் சிறப்பினைப் போற்றுகின்றார்.

சிவபூசையாவது இறைவனைப் புறக்கருவிகளோடு அகக் கருவிகளையும் கொண்டு மலர் முதலியவற்றால் பூசிப்பதே ஆகும். சிவபூசை செய்வதற்கு தாமரை, கொன்றை போன்ற பல மலர்கள் வேண்டும் . புறத் துணையாகக் கூறப்படும் மலர்களோடு அகத்துணையாகிய மலர்களும் வேண்டும். கொல்லாமை, பொறியடக்கம், பொறுமை, இரக்கம், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன அகத்தில் வேண்டிய மலர்களாகும். இவற்றில் தலையாயது மற்றோர் உயிரைக் கொல்லாமை ஆகும். இது போன்று பல மலர்களால் தொடுக்கப்படுகின்ற மாலை இறைவன் திருவடியில் செய்யப்படுகிற தியானமாகும். இவ்வாறு பூசை செய்யும் ஆன்மா இறைவன் திருவடியில் இணைந்து பேரின்பத்தினை அனுபவிக்கும்.

ஒருயிரையும் கொல்லாமையே அறம் ஆகும். கொலைசெய்தல் பாவச்செயல்கள் எல்லாவற்றுக்கும் வித்தாகும் என்பதை,

அறவினையாது எனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்

எனச் செந்நாப் போதருடைய தமிழ் மறையாகிய திருக்குறளும் கூறுகிறது.

கொலைத் தொழிலைச் செய்பவர்கள் நரகத்தையே அடைவார்கள். உயிரை அதன் உடம்பினின்றும் நீக்குதற்காக கொல் எனவும், குத்து எனவும் கூறிய விலங்கை ஒத்த மக்களை செல் எனவும் நில் எனவும் அதட்டி நரகத்தில் இயமதூதர் தள்ளிவிடுவார்கள் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக்காரர் வலிக் கயிற்றாற் கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே

அன்பையும் அருளையும் வளர்க்கும் அறங்கள் யாவற்றுள்ளும் கொல்லாமையே மிகச் சிறந்த அறமாகும். பிற உயிர்களைக் கொல்வதற்குரிய காரணங்களில் அவற்றின் புலாலை உண்பதற்காகக் கொல்வதும் ஒன்றாகும். ஊன் உண்ணல் கொலைக்குக் காரணமாகவும், கொலையின் காரணமாகவும் காணப்படுகின்றது. கொல்லாமை அறத்தைக்கூறவந்த நூல்கள் யாவும் கொல்லாமையை மட்டுமன்றிப் புலால் மறுத்தலையும் இணைத்துக் கூறியுள்ளன.

தீய செயல்களில் ஐந்து குற்றங்களை மிகத்தீயன என நம்முடைய முன்னோர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், பொய் ஆகியவற்றைப் பஞ்சமாபாதகங்கள் என்று வகுத்துப் பெயரிட்டுள்ளார்கள். ஒருயிரையும் கொல்லாதவனாகவும், புலாலை உண்ணாதவனாகவும் இருப்பவரை எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்பதைக்

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்

என்று திருக்குறள் கூறுகிறது.

ஊன் உண்பவர்கள் இருப்பதால் தான் கொலைத் தொழில் நடைபெறுகிறது. கொலை, களவு, கள், காமம், பொய்பேசுதல் ஆகிய ஐம்பெரும் பாவங்களை விலக்கி வாழ்பவர்களுக்கு இறைவனின் திருவடித் தீட்சை கிடைக்கும். பஞ்சமா பாதகங்கள் செய்வோருக்கு ஏற்படும் பாவங்களும் அவற்றால் வரும் துன்பங்களும் இவர்களுக்கு இல்லாது ஒழியும். இவர்கள் இறையருளாகிய பேரின்பத்தில் என்றும் திளைத்திருப்பார்கள். பஞ்சமா பாதகங்களை விலக்கி அறநெறியில் வாழ்பவர்களுக்குத் தான் தெய்வீக உலகில் அனுமதி கிடைக்கும். ஆன்மா பேரின்பத்தில் திளைப்பதற்கான மார்க்கம்எது என்பதைத் திருமந்திரம் பின்வருமாறு கூறுகிறது.

கொலை களவு கள் காமம் பொய் கூறல்
மலையான பாதகமாம் அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்து இன்பம் சார்ந்தோர்க்கு
இலையாம் இவை ஞானானந்தத்து இருத்தலே

“பிறர் மனை நோக்காப் பேராண்மையாளன்” எனக் கவிச்சக்ரவர்த்தி கம்பர் இராமபிரானைக் கம்பராமாயணத்திலே குறிப்பிடுகின்றார். இந்து சமய மரபின்படி திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் ஆகும். திருமணத்தின் போது மணமகன் சுமங்கலியான மணப் பெண்ணின் கையினைப் பிடித்துக்கொண்டு “நல்ல அதிர்ஷ்டத்திற்காக உனது கையினைப் பிடிக்கிறேன். உன்னுடைய கணவனான என்னுடன் மூப்புப் பருவம் வரை இருப்பீராக” என்று குறிப்பிடுவதை வேதங்களில் காணலாம். தானங்களில் உயர்வான தானம் கன்னிகாதானம். ஒரு பெண்ணைத் தானமாகப் பெறுபவன் பாக்கியசாலி. தானமாகக் கொடுப்பவன்மகா பாக்கிய சாலி என இந்து தர்மசாஸ்திர நூல்கள் கூறுகின்றன. திருமணச் சடங்கின் போது மணமகளின் தந்தை தனது மகளை மணமகனுக்கு கன்னிகா தானம் செய்து கொடுக்கும் சந்தர்ப்பத்தில் மணமகன்பல சத்தியங்கள்செய்தே பெண்ணைத் தனது வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்கிறான். குலமகளாக வாழும் பத்தினிப்பெண்கணவனைத் தெய்வமாகவே மதிக்கிறாள். கணவனையே தெய்வமாகக் கொண்டு வாழும் கற்புடைமகளிர்க்கு இயற்கைச் சக்திகளே

கட்டுப்பட்டு நடக்கும். வானம் வரண்டு இருக்கும் காலத்தில் அவள் ஏவினால் மழையும் பெய்யும்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்
பெய் எனப் பெய்யும் மழை

எனத் தமிழ்மறை இந்த உண்மையை விளக்குகிறது.

கணவனுக்காக ஐம்புலன்களையும் அர்ப்பணித்து வாழும் மனைவியைப் புறக்கணித்து விட்டு விலைமகளின்பாற் சென்று விழுந்து எழும்பும் ஆடவர்களுக்கு தவமுனிவர் தனது பாடலின் ஊடாகச் சாட்டையடி கொடுக்கிறார். இரு மாங்கனிகளுள் ஒன்று திருத்தி வளர்க்கப் பெற்ற இனிமை நிறைந்த தேமாங்கனி. மற்றொன்று பல மரங்களிடையே வளர்ந்துள்ள புளி மாங்கனி. இவையிரண்டும் ஒன்று போல் தோற்றமுடையன. குல மகளை விட்டு விலைமகள் மீது நாட்டம் கொள்பவர்கள் தீராத உடல் நோய்களுக்கும் ஆளாகி விடுவார்கள். அருமையில் கிடைத்த தேமாங்கனியை ஒதுக்கி வைத்துவிட்டு தோப்புப் புளிக்கனியை நாடும் கசடர்களை திருமூலர் கருத்து அறியாதவர் எனக் குறிப்பிடுகின்றார்.

திருத்தி வளர்த்ததோர் தேமாங்கனியை
அருத்த மென்றெண்ணி அறையில் புதைத்துப்
பொருத்த மில்லாத புளி மாங்கொம்பேறிக்
கருத்தறியாதவர் காலற்றவாறே

மகளிர் இழிவு என்ற பகுதியிலே பொதுமகளிரின் இழிவினை ஐந்து பாடல்களில் திருமந்திரம் குறிப்பிடுகின்றது. "மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்னும் பழமொழி வெளித்தோற்றத்தில் மயங்கக் கூடாது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. குடும்பப் பெண்ணாக இருக்கின்ற குல மகளின் சிறப்பு தன்கணவனைப் பாதுகாத்தல் என்றால்; விலை மகளாகிய தாசிக்கு உள்ள சிறப்பு தன் உடலை அலங்கரித்துக் கொள்வது என்பதை "குல மகட்கு அழகு தன் கொழு நனைப் பேணுதல்" என்றும் "விலை மகட்கு அழகு தன்மேனி மினுக்குதல்" என்றும் அதி வீரராம பாண்டியன் அருளிய வெற்றி வேற்கை என்ற நூல் குறிப்பிடுகின்றது. விலைமகள் மீது மோகம் கொண்டு அலைபவர்கள் அம்மிக் கல்லைத் துணையாகக்கொண்டு ஆற்று வெள்ளத்தில் அமிழ்ந்துவதற்கு ஒப்பானவர்கள். இவர்கள்பெரும் செல்வத்தை அழித்து வறுமைக்கு ஆளாகி இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தை அனுபவிப்பார்கள் என்பதை ஔவையாரின் பின்வரும் நல்வழிப்பாடல் கூறுகிறது.

அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும்
கொம்மை முலைபகர்வார் கொண்டாட்டம் – இம்மை

மறுமைக்கும் நன்று அன்று மாநிதியம் போக்கி
வறுமைக்கு வித்தாய் விடும்.

பெண் ஆசை ஞான விளக்கத்தை மயங்கச் செய்யும். உடை, நடை, பாவனைகளால் மற்றவர்களை எல்லாம் மயக்கி மாயவலையில் வீழ்த்துகின்ற விலைமகளிரின் வலையில் வீழ்ந்து வருந்தாமல் இருக்க முருகனை வரம் தரவேண்டுமென அருணகிரியார் வேண்டுவதை

"சிங்காரமடந்தையர் தீநெறி போய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்"

என்ற கந்தரநுபூதிப் பாடலில் காணலாம்.

இலை முதலியவற்றால் அழகாகக் காணப்படும் எட்டிப் பழம் குலையாய்ப் பழுத்தாலும் அக்குலையில் கவர்ச்சி உள்ள பழத்தைப் பறித்து உண்ணுதல் இயலாது. அதுபோலக் கொங்கை அழகைக் காட்டிப் புன்முறுவல் செய்பவர் மீது அவரது கவர்ச்சியிலே ஈடுபடாது விலகுதல் வேண்டும். அம் மங்கையிடம் செல்லும் மனத்தையும் கடிதல் வேண்டும் என்பதைத் தவயோகி பின்வரும் பாடலின் ஊடாக உணர்த்துகின்றார்.

இலைநல ஆயினும் எட்டி பழுத்தால்
குலைநல ஆம் கனி கொண்டு உணல் ஆகா
முலை நலம் கொண்டு முறுவல் செய்வார் மேல்
விலகுறும் நெஞ்சினை வெய்து கொள்ளீரே

உலகியல் வாழ்க்கையில் வறுமை வந்துற்றால் ஏற்படும் துன்பங்களை நல்குரவு என்னும் தலைப்பில் ஐந்து பாடல்களில் திருமந்திரம் விளக்குகிறது. இல்வாழ்க்கைக்குப் பொருள் மிகவும் அவசியம் "நன்மையைப் புறக்கணியாதே, செல்வ வளத்தைப் புறக்கணியாதே" என்று குரு தனது சிஷ்யனுக்கு அறிவுரை கூறுவதை தைத்திரீய உபநிடதத்திலே காணலாம். பொருளில்லாதவரை எல்லோரும் இகழ்வார்கள். பொருளுடைய செல்வரை எல்லோரும் சிறப்புச் செய்வார்கள் என்பதை,

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு

என்றே திருக்குறளும் செப்புகிறது.

கல்வி அறிவில்லாதவனாக இருந்தாலும் அவனிடம் பணம் இருந்தால் எல்லோரும் அவனை மதிப்பார்கள். பணம் இல்லாதவனை அவன் மனைவியும் விரும்பமாட்டாள், ஈன்றெடுத்த தாயும் விரும்பாள், அவன் கூறும் வார்த்தையினை யாருமே ஏற்க மாட்டார்கள் என்பதைக்,

கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்
எல்லோரும் சென்று அங்கு எதிர்கொள்ளவர் – இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்று ஈன்று எடுத்த தாய் வேண்டாள்
செல்லாது அவன் வாயிற் சொல்

*என நல்வழிப்பாடல் கூறுகிறது.*

புடவை மானத்தைக் காக்க வல்லது போலப் பணமும் மானத்தைக் காக்க வல்ல பொருளாகும். பொருள் இருந்தால் தான் பலரும் வந்து உறவு கொண்டாடுவார்கள். விரும்பிய தர்மம் எதையும் செய்யலாம். பொருள் இல்லாதவர்கள் தலை குனிந்து தான் நடக்கவேண்டும். பொருள் இருந்தால் தான் நிமிர்ந்து நடக்கலாம். நாட்டுடன் கூடிய செம்மாந்த நடைபொருள் இல்லாதவர்களுக்கு இல்லாகிப் போய்விடும்.

புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட்டார்களும் அன்பு இலர் ஆனார்
கொடையில்லை; கோள்இல்லை; கொண்டாட்டம் இல்லை;
நடையில்லை நாட்டில் இயங்குகின்றார்கட்கே

*எனத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரம் குறிப்பிடுகிறது.*

ஒரு தனிமனிதனுடைய அல்லது சமூகத்தினுடைய தன்மானமும் பண்பாட்டுணர்வுகளும் அதிகார வர்க்கங்களாற் பாதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக அதிகார மறுப்புக்குரல்கள் ஒலித்து வந்துள்ளன. இக்குரல்களிற் பல ஒலி நிலையோடு மட்டும் அமையாமல் இயக்க நீதியான செயற்பாட்டிற்குத் தூண்டி நின்றதற்கான சான்றுகளும் வரலாற்றிலே நிறைய உண்டு. சைவ வரலாற்றிலே இத்தகைய இயக்க ரீதியாகத் தோன்றியதே சைவ பக்தி இயக்கமாகும்.

**கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர்**

# அன்பே சிவம்

07

மக்கள் நல்வழியினின்றும் தவறாமல் நடப்பதற்காகப் பல அறவுரைகளை அழகுத் தமிழிலே குழைத்து ஊட்டுகின்றார் திருமூலர். இந்த அறவுரைகள் மூன்று வகைப்படும். பாவம் செய்யாதீர்கள் என்று கூறுவது மனித தருமத்துக்கு அடிப்படையான உபதேசம். பாவங்களைச் செய்யாமல் இருப்பதோடு புண்ணியச் செயல்களைப் புரியவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றார். இவற்றுடன் இறைவனுடைய பேரின்பத்தை இந்த உடம்போடு இருக்கும் போதே பெற்று அனுபவிக்கவேண்டுமெனவும் கூறுகின்றார். வாழ்வில் மக்கள் விலக்கவேண்டிய தீய செயல்களை எடுத்துக் கூறுகின்ற தவயோகி புண்ணியச் செயல்கள் சிலவற்றை வரிசைப்படுத்திக் கூறி இவற்றை நாள்தோறும் செய்தல்வேண்டும் எனவும் உபதேசிக்கின்றார்.

அகத்திலே இருக்கின்ற இருளைப் போக்குவதற்கு அக்கினி காரியம் துணை செய்கிறது. நமது அந்தக்கரணங்கள் நான்கினையும் ஞானத்தை உணர்த்தும் கரணங்களாக மாற்றுவதற்கு ஐதரோபநிஷத் வழிகூறுகிறது. இதனையே திருமூலரும் அக்கினி காரியம் என்னும் பத்துப் பாடல்களின் ஊடாக விளக்குகின்றார். ஜீவபோதத்தைப் பலியிட்டு ஞானபோதத்தைப் பெறுவதற்கு அக்கினி காரியத்தில் வரும் பாடல்கள் வழிகாட்டுகிறது. நமது அகத்தைச் சிவத்தோடு சேர்ப்பதற்கு மனிதனிடத்தில் உள்ள அறிவுப் பிழம்பைப் பிரகாசிக்கச் செய்தல்வேண்டும். புறத்து அக்கினியானது ஆக்கவும் அழிக்கவும் வல்லது. இவ்வாறு அகத்திலுள்ள சிவாக்கினியும் அனைத்தையும் செய்யும் தன்மை உடையதாகும். சிவஞானச் செல்வமே சிறந்த செல்வம். இதை நாம்

மூலாக்கினியை வழிப்படுத்தும் முறையினால் அடைய முயலவேண்டும். அக்கினி காரியம் என்பதன் கருத்து சிவஞானம் பெறுவதேயாகும்.

வேதங்கள் இறைவனை ஒளிவடிவாகவும் ஒலிவடிவாகவுமே காட்டுகின்றன. ஒளி வடிவமாக இருக்கின்ற இறைவனை அக்கினி வழிபாட்டிலும் ஒலி வடிவாக இருக்கின்ற இறைவனை மந்திரத்தாலும் வேதகால ரிஷிகள் துதித்தார்கள். ஓமத்திற்குரிய தலைவன் சிவபெருமானே எனத் தவயோகி கூறுகின்றார். ஒளிமிக்க சுடராகி என் உள்ளத்தில் எழுந்தருளியிருப்பவனும் அவனே என்கிறார். ஓமத்தலைவனாகிய சிவன் ஞானத் தலைவனாகவும் திகழ்கின்றான். பேரறிவுப் பெருஞ்சுடராய் உள்ளகத்தே வீற்றிருக்கின்ற ஒளிப் பொருள்களுக்கு ஒளி கொடுக்கும் முழு முதற் தெய்வமாகவும் சிவன் திகழ்கிறார் என்பதை அக்கினி காரியம் என்ற தலைப்பில் வரும் பின்வரும் பாடல் விளக்குகின்றது.

ஒண் சுடரானை உலப்பு இலி நாதனை
ஒண்சுடர் ஆகி என் உள்ளத்து இருக்கின்ற
கண்சுடரோன் உலகு ஏழும் கடந்த அத்
தண்சுடர் ஓமத் தலைவனும் ஆமே.

ஒழுக்கமில்லாதவர்களிடம் இருக்கும் கல்வியினாலும் அறிவினாலும் ஒரு பயனும் இல்லை. கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் ஒழுக்கம் ஒழுக்கமற்றவர்களுடைய கல்வியறிவு ஒளியற்ற விழியையும், மணமற்ற மலரையும், உயிரற்ற உடலையும் போன்றதாகும். ஒழுக்கமற்றவர்கள் எத்தனை தான் அறநூற்பொருட்களை விரித்து உரைத்தாலும், எவ்வளவுதான் இனிமையாகப் பேசினாலும் அவர் கூற்று பிறர்க்கு நலம் செய்யாது. அவர் கூறும் விஷயம் மிகவும் உயர்ந்ததாயினும் அதனை உலகமும் கொள்ளாது. ஒழுக்கம் உடையவர்களிடந்தான் அறவுரைகளைக் கேட்கவேண்டும். அவர் கூறும் உரையே மெய்ந்நூற் பொருள்களை விளக்கி பெரும் பயன் விளையச் செய்யும். உலகியலாகிய இருளை அகற்றுவதற்கு கல்வியறிவே விளக்கெனவும் அவ்விளக்கிற்கு அருளே நெய்யெனவும் அந்த நெய்யைத் தரும் பாலே ஒழுக்கமெனவும் கூறுவர். இதனால் ஒழுக்கமுடையவரே அருள் உடையவராவார். அருள் உடையவரே அறிவு உடையவராவார். அறிவு உடையவரே உலகிருளைக் கடந்து உய்வடைவார்கள்.

பாசம் ஒழிந்து தமது உள்ளத்திலுள்ள சிவ சொரூபத்தைப் பார்ப்பவர்களே பார்ப்பார் ஆவார். அந்தணர் என்பவர்கள் வேதம் ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு தொழில்களைப் பூண்டவர்கள் என்பதை "அந்தணராவோர் அறுதொழில் பூண்டுளோர்" எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. சிவாலயக் கிரியைகளைச் செய்யும் சிவாச்சாரியாருக்கு இருக்கவேண்டிய தகுதிப்பாடுகளை காரணாகமம் தெளிவாகக் கூறுகிறது. சிவாச்சாரியார் குருலட்சணம் நிறைந்தவராய்

சமய விசேட நிர்வாண ஆசார்யபிஷேக தீட்சிதராய், ஆத்மார்த்த சிவபூஜா துரந்தராய் ஆகமக்கிரியா வல்லுனராய், குரு சிவாக்கினி கடவுள் ஆகிய மூன்றிலும் நீங்காத பற்றுடையவராய் காம குரோதங்களில் இருந்து விடுபட்டவராய், புலன்களை வென்றவராய், இருத்தல் வேண்டுமெனக் காரணாகமம் குறிப்பிடுகிறது. வழிபடும் அடியவர்களிடம் பக்தி உணர்வை ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு சிவாசாரியாரிடமே உள்ளது. அர்ச்சகருடைய பிரபாவத்தினால்த்தான் சிலை சங்கரனாக மாறுகிறது (அர்ச்சகஸ்ய பிரபாவேன சிவாபவதி சங்கர) மந்திரம், தந்திரம், கிரியை, முத்திரை, பாவனை ஆகியவற்றை ஆசாரியார் கொண்டிருக்கவேண்டும். (மந்திர தந்திர க்ரியா முத்ரா பாவநா பாவ கர்பித) எனவும் காரணாகமம் குறிப்பிடுகின்றது.

தத்துவ நூல்களைக் கற்பதனாலும், கேட்பதனாலும், வாய் ஞானத்தாலும் மட்டும் இறை உண்மையை உணரமுடியாது. வேதியர் சிலர் வேதாந்தங் கேட்பர். தாம் அறிந்த கருத்துக்களை அனைவருக்கும் கூறுவர். ஆனால் பொருட்களின்மேல்உள்ளவேட்கையினைஒழியமாட்டார்கள். அவ்வேட்கை ஒழிந்து அவா நீங்குதலே உண்மையான வேதாந்த நிலையாகும். வேட்கை ஒழிந்து பற்றுக்கள் நீங்கியவரே வேதாந்த தத்துவத்தை உணர்ந்தவர்கள் ஆவார்கள் என்பதை

வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கை விட்டாரே

சத்தியம், ஆன்மஞானம், பொறியின்பத்தை விட்ட மெய்யுணர்வு, இறையன்பு, கடவுள் ஒருவர் உண்டென்றதெய்வநம்பிக்கை இவை அனைத்தும் உள்ளவரே பிராமணர்கள் ஆவார்கள். இவைகள் எதுவுமின்றி ஐம்புலநுகர்விலே ஈடுபட்டு மருள்கொண்டு இருளுக்கு அடிமையாகி பித்தேறி மாயையில் உழலும் மூடர்கள் பிராமணர்கள் ஆகமாட்டார்கள். அந்தணர்கள் யார் என்பதையும் அவர்களுக்குரிய நெறி எது என்பதையும் பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

சத்தியம் இன்றித் தனி ஞானந் தானின்றி
ஒத்த விடயம் விட்டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரனுண்மையின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே

நாட்டை ஆளும் அரசன் தெய்வத் தன்மை உடையவன் என்ற கருத்து இருக்கு வேதத்திலே காணப்படுகிறது. பூமிக்குத் தேவன், மக்களுக்குத் தேவன், என்ற கருத்தில் அரசர்களை பூதேவ, நரதேவ என்று குறிப்பிடுவதைச் சாசனங்களிலே காணலாம். சிறப்பு மிக்க

அரசர்களில் நான் திருமாலைக் காண்கிறேன். என்பதை நம்மாழ்வார் " திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன் " எனத் தனது திருவாய்மொழிப் பாடலில் கூறுகின்றார். தனது நாட்டுக் குடி மக்களை நல்ல முறையில் காப்பாற்றுகின்ற அரசனை மக்கள் அனைவரும் கடவுளாகவே போற்றி வணங்குவார்கள் என்பதை,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்

எனத் திருக்குறள் கூறுகின்றது.

குடிமக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெறாத அரசனுக்கு வீழ்ச்சிப்பயம் உண்டு என்று வேதங்கள் கூறுகின்றன. அரசன் தருமநெறியில் நின்று தவறுவான் ஆயின் நாட்டில் பல இயற்கை அழிவுகள் ஏற்படும். கொடிய பஞ்சம் தலைவிரித்தாடும். நாடு காடாகும் என அறநூல்கள் அனைத்தும் எடுத்துக் கூறுகின்றன. நாட்டை ஆளும் அரசனுக்கு கல்வி மிகவும் இன்றியமையாதது எனத் திருமூலர் வற்புறுத்துகிறார். கல்வி அறிவில்லாத அரசனும் யமனும் ஒத்த தன்மையுடையவர் எனக் கூறுகின்றார். உடலில் இருந்து உயிரைப் பிரித்துச் செல்லும் காலன் மக்களுக்கு மரணத்தை ஏற்படுத்துவான். கல்வி ஞானம் இல்லாத முரட்டு அரசனும் குடிமக்களைத் தக்கவண்ணம் காப்பாற்றாமல் வருத்தி மாயும்படி செய்வான். முதலில் காலனும் கல்லா அரசனும் நேரொப்பர் என்று கூறிய திருமூலர் அடுத்த வரியில் கல்லா அரசனிலும் பார்க்க காலன் மிக நல்லவன் எனக் கூறுகின்றார். காலனுக்குத் தருமராசன் என்ற பெயர் உண்டு. இறைவனுடைய பக்தர்களாகிய நல்லவர்களிடம் காலன் போகமாட்டான். மார்க்கண்டேயரிடம் காலன் அணுக முடியாமல் இருந்ததைப் புராணங்களினூடாக அறியமுடிகிறது. அறிவில்லாத அரசன் அறநெறியைக் கடைப்பிடிக்கமாட்டான். நியாயம் அநியாயத்தை உணரமாட்டான். தனக்குப்பிடிக்காதவர்களைக் கொல் என்று கட்டளையிடுவான். ஆனால் யமன் நல்லவர்களை நெருங்கமாட்டான். அவர்களுக்குத் துன்பம் தரமாட்டான் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிக நல்லன்
கல்லா அரசன் அறம் ஓரான் கொல் என்பான்
நல்லாரைக் காலன் நணுக நில்லானே

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் தினசரி வழ்க்கையில் செய்யவேண்டிய கடமைகள் சிலவற்றைத் தவயோகி எடுத்துக் கூறுகின்றார். ஒவ்வொருவரும் தம்முடைய ஆன்ம ஈடேற்றத்திற்காக நாள்தோறும் வழிபாடு செய்தல் வேண்டும். வழிபாடு செய்வதற்குப் பூமரத்தின் பச்சை

இலையே போதுமானது. எல்லாத் தெய்வங்களும் வீற்றிருந்து அருள்புரியும் பிராணியாகப் பசு திகழ்கிறது. " கோமாதா எங்கள் குலமாதா" என இந்துக்கள் பசுவைப் போற்றி வருகிறார்கள். பசுவிற்கு ஒருவாய் உணவு கொடுப்பது யாவர்க்கும் ஆகக் கூடிய எளிய செயல். இது ஜீவகாருண்யத்தை வளர்க்கிற தினசரி ஒழுக்கமுறையாக உள்ளது. பிறருக்கு ஒருபிடி உணவைத் தானமாகக் கொடுப்பது அறங்களில் சிறந்த அறமாகும். நமது நாட்டில் பிடிஅரிசித் திட்டத்தில் வளர்ந்த அறநிலையங்கள் பல உண்டு. பிறரிடம் கடுஞ் சொல் பேசாமல் இனிய வார்த்தைகளைப் பேசுவது எல்லோராலும் செய்யக்கூடிய இலகுவான அறம் ஆகும். இவ்வாறு இந்துப் பண்பாட்டின் அடிப்படை அறங்கள் அனைத்தையும் திருமந்திரம் பின்வரும் பாடலின் ஊடாக விளக்குகிறது.

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.

அறம் செய்வான் பெறும் பேற்றினைப் பற்றி ஒன்பது பாடல்களில் கூறிய திருமூலர் அறம் செய்யாதவனின் இயல்பினைப் பற்றிப் பத்துப்பாடல்களில் குறிப்பிடுகின்றார். அறம் செய்யாதவர்கள் இம்மையில் பல துன்பங்களை எதிர்கொள்வார்கள். உடல் நோய்கள் பலவற்றினால் தாக்கப்படுவார்கள். இருமல், இரத்தம் குறைவதனால் வருகிறநோயான இரத்தசோகை, சளியின் தாக்கத்தினால் ஏற்படுகின்ற காசநோய், உஷ்ணத்தினால் உண்டாகும் உபாதைகள் எல்லாம் தருமம் செய்யாதவர்களைத் தேடி வரும் நோய்களாகும். இயற்கை சக்திகளினால் ஏற்படுகின்ற இடி, மின்னல் போன்ற தாக்குதல்கள், விஷம் தீண்டுதல், வயிற்றுக்கட்டி தொண்டையில் ஏற்படும் நோய்கள் என்பன அறம் செய்பவர்களை நெருங்கவே மாட்டாது என்பதனைத் தவயோகியின் திருமந்திரம் பின்வருமாறு கூறுகிறது.

இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமம் செய்யாதவர் தம்பாலது ஆகும்;
உரும், இடி, நாகம், உரோணி, கழலை
தருமம் செய்வார் பக்கல் தாழகிலாவே

தருமத்தையும் தருமம் செய்யும் முறைகளையும் எடுத்தோதிய திருமூலர் தொடர்ந்து வரும் பத்துப் பாடல்களில் இறைவனிடம் அன்புகொள்ளும் தன்மையினைச் சிறப்பாக எடுத்து விளக்குகிறார். அன்பு என்றும் சிவம் என்றும் வெவ்வேறாகப் பிரித்துக்கூறுவதைத் தவறு என்கிறார். இரண்டும் ஒன்றேயென வலியுறுத்துகிறார். அன்பு தான் கனிந்து பூரணம் பெற்றுச் சிவமாகிறது என்பதை மக்கள் அறியாமல் தடுமாறுகிறார்கள் என்று வருந்துகிறார். அறியமாட்டாமல் அலைகிறார்கள் என்பது முனிவரின் துயரம். அன்பு தான் சிவமாகிறது என்பதை அறிந்து விட்டால் அந்த அன்பு

வெள்ளத்திலேயே இதயம் திளைத்து சிவானந்தப் பேற்றினைப் பெறுவார்கள். அன்பு நிலைப்பட்டு வணங்குபவர்கள் பேரின்பத்தைப் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை என்பதை உறுதியோடு உணர்த்துவதற்காக எதிர்காலத்தை இறந்த காலமாகப் பாடுகின்றார்.

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

இறைவனுடைய அருளைப் பெற வேண்டும் என்பதற்காக அடியார்கள் விரதங்களை அனுஷ்டித்து நோன்பு இருக்கிறார்கள். உடம்பினை வருத்திப் பல்வேறு பக்திக் காரியங்களை வெளிப்படுத்துகிறார்கள். துறவு பூண்டு சரீரத்தை துன்புறுத்தி இந்திரியங்களை ஒடுக்கிப்பார்க்கிறார்கள். கடுமையான தவங்களாலும் விரதங்களாலும் இந்த உடம்பை எவ்வளவு தூரம் வருத்தின போதிலும் அன்பினால் உருகி உள்ளம் குழைந்தால் அல்லாமல் இறைவனின் திருவருளைப் பெறமுடியாது. அன்பு ஒன்று தான் இறைவனை அடையும் மார்க்கம் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் வலியுறுத்துகிறது.

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகங் குழைவார்க்கன்றி
என்போன் மணியினை எய்தவொண்ணாதே.

தென் இந்தியாவில் மலர்ந்த பக்தி இயக்கம் பாரதநாடு முழுவதும் பரவி ஒரு பெரும் புரட்சியை உருவாக்கியது. முந்தைய கொள்கைகளைத் தவிடுபொடியாக்கியது. வினையை அனுபவிக்கத் தான் வேண்டும். பிறவிச் சக்கரத்தில் உழல்வதைத் தடுக்க முடியாது என்று கூறிய கருத்துக்களை பக்தி இயக்கம் மறுத்தது. வினையை மாற்ற முடியும், போக்க முடியும், முற்றிலுமாக அழிக்க முடியும் என்று பக்தி இயக்கம் நம்பிக்கையை ஊட்டியது. பிறவியை அறுப்பதற்குக் கிடைத்த சாதனமாகவே உடலைக் கருதினர். ஊனுடம்பினைப் போற்றினர். இவ் உடம்பில் இறைவன் குடி கொண்டிருப்பதாக எண்ணிப் பெருமைப் பட்டனர்.

**–முனைவர் த. கோ. பரமசிவ**

# ஞான ஒளி

அன்பு ஒன்றுதான் இறைவனை அடையும் மார்க்கம் என்பதை வலியுறுத்திய திருமூலர் "அன்பு செய்பவர்களைச் சிவன் அறிவார்" எனக் கூறுகின்றார். அறிவித்தால் அறிந்து கொள்ளும் உயிருக்கும் அறிவுக்கும் தன்மையுடைய இறைவனுக்குமுள்ள தொடர்புதான் அன்பு எனப்படுகிறது. ஆன்மாக்கள் ஒப்புயர்வற்ற இறைவனிடத்திலே வைக்கும் தொடர்பு பக்தி என்றும், இறைவன் நம்மீது வைப்பது அருள் என்றும் அழைக்கப்படும்.

வேறுபொருள்களில் இச்சை செலுத்தாமல் தன்னையும் இறைவனையும் நன்றாக இணைத்துக் கொண்டு இடைவிடாமல் பக்தி செலுத்துகிறவர்களை இறைவன் நன்கு அறிவான். பரமேஸ்வரன் சுயம் பிரகாசமாக உள்ளவர், ஜோதியாக உள்ளவர் ஆதலால் நாம் ஒளிபெற்று ஒளியிலே நின்று நமக்கு ஒரு செயல் இல்லாது நின்றால் இறைவன் நம்முடைய அகத்திலே எழுந்தருளி அருளுவான். அறிவிலே தெளிவு பெற்று எல்லாம் ஈசன் செயல் என்ற நினைப்போடு ஆணவம்ஒழிந்த நிலையில் இறைவனிடம் சரண்புகுந்து பக்தி செலுத்துவோமானால் திருவருள் தானாகவே வந்து அணைத்துக் கொள்ளும் என்றே திருமந்திரம் கூறுகிறது.

ஈசன் அறியும் இராப்பகலுந் தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவு செய்வார்களைத்
தேசுற்றிருந்து செயலற்றிருந்திடில்
ஈசன் வந்தெம்மிடை ஈட்டி நின்றானே

8

மனத்தைத் தீயவழியிற் புக விடாது நல்வழியிற் செலுத்தி மாட்சி பெறவைப்பது கல்வி. மனிதரிடத்தில் உள்ள மிருகத் தன்மையை மாற்றி அவர்களுக்கு மனிதத் தன்மையைக் கொடுக்க வல்லது கல்வி.

ஒரு பிறப்பின்கண் பயின்ற கல்வியானது அப்பிறவி ஒழியினும் தான் ஒழியாது உயிருடன் எழுமையும் தொடர்ந்து சென்று உதவும் தன்மையுடையது என்பதை,

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து

என வள்ளுவர் கூறுகிறார்.

ஆன்மா இறைவனுடைய திருப்பாதாரவிந்தங்களோடு இணைவதற்கு ஞானம் தேவைப்படுகிறது. சாதாரண உலகியல் அறிவு ஞானம் ஆகிவிடாது. எதை அறிவதால் ஒருவனுடைய அறிவு பூர்த்தியாகிறதோ அதை அறிவது தான் ஞானம் எனப்படும். வாழ்வின் குறிக்கோளை விளங்க வைப்பதோடு பிறவி வேரை வீழ்த்த வல்லதும் ஞானமே ஆகும் எனக் கீதையும் ஞானத்தின் பெருமையை விதந்து கூறுகிறது.

நூல்கள் உலகநூல், கடவுள்நூல் என இரண்டு பிரிவினுள் அடங்கும். உலக நூல்கள் யாவும் மனிதனுடைய உள்ளத்தை வெளிப்பொருளிலே செலுத்தி மென்மேலும் ஆசையைப் பெருக்கும். உணர்ச்சி அறிவை வளர்க்கும். கடவுள் நூல்கள் எனப்படுபவை மனிதனுடைய உள்ளத்தை அகமுகமாகத் திருப்பி எல்லாச் செயற்பாடுகளுக்கும் மூலம் எதுவென அறிந்து அந்தப் பொருளோடு ஒன்றாகக் கூடிய ஞானத்தை விளைவிக்கும். கல்வி அறிவினால் உண்டாவது அபர ஞானம் எனப்படும். அநுபூதி ஞானம் எனப்படும் பரஞானம் குருவின் திருவருளினாலே கிடைக்கும். ஞானநூற் கல்வியே மிகவும் இன்றியமையாதது. இதனால் அகக்கண் எனப்படும் பதிஞானம் உண்டாகும். ஞானம் பெறுதலின் பயன் இறைவனின் திருவடி தொழுதலே ஆகும். தூய ஞானக் கல்வியாகிய திருவருட் கல்வியே பிறவிப் பிணிக்கு மருந்தாகக் காணப்படுகிறது.

கல்விக்குள் பெரிய கல்வியாகிய கடவுளைப் பற்றிய அருட்கல்வியை உடம்பில் ஆற்றல் இருக்கும் போதே கற்றுத் தேறுதல் வேண்டும். உடம்பில் உயிர் கலந்து நிற்கிற காலத்திலேயே அழிவற்றவனாகிய இறைவனுடைய பாதங்களை அறிந்து கொள்ளும் முறைகளைக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு செய்கின்றபோது பாவங்கள் முற்றாக நீங்கிவிடும். மனம் ஒன்றி ஈசனை வழிபாடு செய்பவர்கள் ஒப்பரியசோதி ஒளியாகிய ஞான விளக்கொளியைக் காண்பார்கள். ஞானிகளின் உள்ளத்தில் இறைவன் கோயில் கொண்டிருக்கிறான். அவன் அருளைப் பெற்றவுடன் ஞானம் பிரகாசமாகும் என்பதை,

நிற்கின்ற போதே நிலை உடையான் கழல்
கற்கின்ற செய்மின் கழிந்து அறும் பாவங்கள்
சொல் குன்றல் இன்றித் தொழுமின்; தொழுதபின்
மற்று ஒன்று இலாத மணிவிளக்கு ஆகுமே

எனத் திருமந்திரப் பாடல் கூறுகிறது.

இறைவன் விக்கிரக வடிவில் பல தலங்களில் எழுந்தருளியிருக்கிறான். கடலும் மலையும் தலங்களாகக் கொண்டு வீற்றிருக்கிறான். பஞ்சபூதங்களிலும் இறைவனின் வியாபகம் காணப்படுகிறது. இதனை " வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி" என மணிவாசகர் தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்திற் குறிப்பிடுகின்றார். இறைவன் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களையும் உடலாகக் கொண்டு உறைகிறான். பல ஊழிக் காலமாக இடபத்தை வாகனமாகக் கொண்டு சிவபெருமான் பக்தர்களுக்குக் காட்சி தருகின்றான். இத்தகைய இறைவன் மிகச் சிறிய இடமாகிய மனித நெஞ்சத்திலும் வீற்றிருக்கிறான். பக்தர்களுடைய நெஞ்சம் இறைவன் வீற்றிருக்கும் கோயிலாக அமைந்துள்ளது. "அகத்துறையும் அழகன்" என்றும் "உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய் என்றும் நாராயணனை ஆழ்வார்கள் உள்ளன்போடு பாடித் துதித்தார்கள். பிரபஞ்ச மயக்கத்தில் உழலும் நெஞ்சினை இறைவன் பால் திருப்பி திரிகரண சுத்தியோடு வழிபடுவதற்கான வழிகளை அருளாளர்கள் தங்கள் பாடல்களின் ஊடாகப் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள். "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே" என்றும், "துணையிலி பிண நெஞ்சே" என்றும் மணிவாசகனாரும் "கெடுவாய் மனனே" எனக் கந்தர் அநுபூதியில் அருணகிரியாரும் "துயரறு சுடரடி தொழுதெழு மனனே" என நம்மாழ்வாரும் தங்கள் பாடல்களில் மனத்துக்கு உபதேசம் செய்யும் பாடல்களைப் பாடியுள்ளார்கள். இறைவன் வந்திருந்து அருள் புரியக் கூடிய புனித இடமாக நமது அகத்தை நாம் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். என்பதைப் பின்வரும் தமிழ் மந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

**கடல் உடையான் மலையான் ஐந்து பூதத்து**
**உடல் உடையான், பல ஊழி தொறும் ஊழி**
**அடல் விடை ஏறும் அமரர்கள் நாதன்**
**இடம் உடையார் நெஞ்சத்து இல்லிருந்தானே**

"பல வகையான செல்வங்களுள் செவிச் செல்வம் என்பது ஒன்றாகும் செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்" என்பது வள்ளுவர் வாக்கு ஆகும். காதாற்கேட்டு நல்ல விடயங்களை அறிந்து கொள்வதைச் "செவிநுகர் கனிகள்" எனப் பண்டிதமணி அவர்கள் குறிப்பிடுகின்றார். காது இருந்தும் நல்ல சொற்களைக் கேளாதவர்கள் செவிடர்கள். சொல்பவர்களுடைய அறிவு, அவர்களுடைய ஆற்றல், அவர்களுடைய ஆன்மீக வளர்ச்சி என்பவற்றை வெளிப்படுத்தும் ஊடகமாக அவர்களின் வாயால் வரும் சொற்கள் அமைகின்றன. "சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த ஞானச் செல்வர்களின் வாயில் இருந்து வரும் வார்த்தைகள் யாவும் மந்திரங்களாகவே உள்ளன. நல்ல விடயத்தை நல்லவர்கள் வாயினாலே கேட்பதனால் ஆன்மீக பலத்தை நாம் பெற்றுக்கொள்ளலாம். இதனைத்தான் "கற்றிலனாயினும் கேட்க" என்ற முதுமொழியும் எடுத்து விளக்குகிறது. ஞானநூல்களைக் கேட்கின்றபோது பக்தி சிரத்தையுடன் கேட்க வேண்டும். அப்படிக் கேட்ட பின்னர் சிந்தனை செய்து பார்க்கவேண்டும். ஞானத்தைப் பெறுவதற்கான படிமுறைகளாகக்

கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பன கூறப்பட்டுள்ளன. முன்னைய காலத்தில்அரசர்கள், பிரபுக்கள் நல்ல ஞானமுள்ளவர்களைத் தங்களது சபையிலே வைத்துக்கொண்டு அவர்கள் வாயிலாகப் பல நல்ல விடயங்களைக் கேட்டுப் பயன் அடையப்பெற்றனர்.

அற நூல்கள் கூறுகின்ற நல்லுரைகளைக் கேட்டும் அந்தணரின் அறிவுரைகளைக் கேட்டும், பாவங்கள் இவை என்று சொல்லும் நீதி நூல்களைக் கேட்டும், தேவர்களின் மந்திர ஒலிகளைக் கேட்டும், மற்றைய சமய நூல்களிற் கூறப்பட்டுள்ள நல்ல அறிவுரைகளைக் கேட்டும், பொன் போன்ற மேனிப் பொலிவுடைய எம்பெருமானின் தன்மையைக் கேட்டும் அறிய முடியாத பேரருள் திறத்தை அறிந்து கொண்டவர்களுக்குச் சிவப்பேறு கிட்டும்.

**அறம் கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்**
**மறம் கேட்டும் வானவர் மந்திரம் கேட்டும்**
**புறம் கேட்டும் பொன் உரை மேனி எம் ஈசன்**
**திறம் கேட்டும் பெற்ற சிவகதிதானே**

மெய்ப்பொருள் அறிவு இல்லாதவர்களோடு உறவு கொள்வதே தகாது என்கிறார் திருமூலர். படித்தும் மெய்யறிவு அடையாதவர்கள் மூடர்களே ஆவார்கள். இத்தகையமூடரைக் காட்டிலும் கல்லாதார் அதாவது படிப்பே இல்லாதவர்கள் மேலானவர்களாக உள்ளார்கள். இறைவனைப் பற்றிய கல்வியே மெய் அறிவாகும். இறையுணர்வை ஏற்படுத்தக் கூடிய கல்வியைக் கற்காத மூடர்களின் அறிவு கேடு விளைவிப்பதாகும். அறிவற்ற மூடர்களுக்கு அவர்களைப்போன்ற அறிவில்லாத மூடர்களே நல்லவராக நண்பராகத் தெரிவார்கள். கல்வி அறிவு ஞானம் இல்லாதவர்கள் மெய்ப்பொருள் உண்மையை அறியவேமாட்டார்கள்.

**கல்லாத மூடரைக் காணவும் ஆகாது**
**கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன் அன்று**
**கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்**
**கல்லாதர் மூடர் கருத்தறியாரே**

தனக்குக் கேடு வருவதாயிருந்தாலும் ஆக்கம் வருவதாயிருந்தாலும் நடுவு நிலைமையினின்றும் ஒருவன் தவறக்கூடாது. நமது வாழ்க்கையில் நன்மையும் தீமையும் வருவது இயற்கை. அதை நாம் நேர்நின்று சரிக்கட்ட வேண்டுமே தவிர அதற்காகப் பிழையான வழிகளிலே செல்லலாகாது. அதற்காக நடுவு நிலைமையைக் கைவிடுதலும் ஆகாது.

**கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றோர்க் கணி**

என்றே தமிழ் மறையாகிய திருக்குறளும் கூறுகிறது.

நடுவு நிலைமை தவறிப் பொருள் ஈட்டினால் அப்பொருள் பின்வரும் சந்ததிகளுக்கு நன்மையைத் தராது ஒழிந்து விடும்.

திருமந்திரத்தில் வரும் நடுவு நிலைமை என்னும் அதிகாரமானது முத்தி நெறியைப் பெறுவதற்குரிய சாதனாமார்க்கங்களில் ஒன்றாகிய யோகநெறியைப் பற்றிக் கூறுகிறது. நமது உடம்பில் உள்ள நாடிகள் இருபத்தோராயிரம் (21000). அவற்றுள் சிறந்தவை பத்து. இவற்றைத் தசநாடி என அழைப்பர். இவற்றிலும் இடைநாடி, பிங்கலைநாடி, சுழுமுனைநாடி என்ற மூன்றும் பேரின்பத்தைப் பெறுவதற்குரிய நாடிகள் ஆகும். இடைநாடி, பிங்கலநாடிகள் சிற்றின்பத்தை அனுபவிப்பதற்குரிய கருவிகளாகும். இடைநாடி சந்திரகலை, பிங்கலைநாடி சூரியகலை, சுழுமுனைநாடி செந்தீக்கலை. இடைபிங்கலைகளின் வழியே இயல்பாய் இயங்கும் வளியை நிறுத்திச் சுழுமுனையாகிய நடுநாடியின் ஊடே செலுத்தினால் பேரானந்தத்தைப் பெறலாம். அட்டமாசித்திகளும் தாமே வந்து கைகூடும். நடுநாடியின் வழியே நிற்கும் இந்த நிலையை நடுவுநிலை எனத் திருமந்திரம் கூறுகிறது.

நடு நாடியாகிய சகஸ்சாரத்தில் விளங்கும் ஒளியை அறியாதவர்களுக்கு ஞானம் கிட்டாது. நடுவான சகஸ்ராரத்தில் நிற்பவர்களுக்கு நரகம் கிட்டாது. இவ்வாறு நிற்பவர்கள் தெய்வ வடிவம் பெற்று விடுவார்கள். தவம், யோகம் போலவே நடுநிலை தவறாது நிற்பதும் உயர்ந்த ஞானமார்க்கம் என்பதைத் திருமூலர் பின்வரும் பாடலின் ஊடாக உணர்த்துகின்றார்.

நடுவு நின்றார்க்கு அன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார் நல்ல தேவரும் ஆவர்
நடுவு நின்றார் வழிநானும் நின்றேனே.

சக்தியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சாக்த மதப்பிரிவினருள் ஒரு பகுதியினர் வாமசார வழிபாட்டு நெறியினைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள். இந்த வழிபாட்டு நெறி பெரும்பாலும் வட இந்தியாவிலேயே நிலவி வருகிறது. இவர்கள் மது மாமிசம் படைத்துத் தங்கள் வழிபாட்டினைச் செய்து வருகின்றார்கள். சத்தியின் அருளை வேண்டிப் பஞ்சமகா நெறியைப் பின்பற்றும் சாக்தர்கள் மது பானமாகிய கள்ளை அருந்துகிறார்கள். இவர்கள் உண்டு களித்துத் தம்மை மறப்பதால் உடற்சத்தி, உணர்வு என்பன அழிந்து தாம் அம்பிகையிடம் வேண்டிப் பெற்ற அருட்சத்தியையும் இழந்து விடுகிறார்கள். சக்தி என்பது சிவஞானத்தை அறிந்து அதில் ஈடுபட்டுச் சத்திய ஞான ஆனந்தத்தை அடைதலே ஒழிய, கள்ளைக் குடித்துக் களிப்பதில் இல்லை என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள் உண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானந் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞான ஆனந்தத்திற் சார்தலே.

# முப்புரமாவது மும்மல காரியம்

9

**சி**த்த புருஷர்கள் எந்தச்சமயத்தைச் சேர்ந்தவர்கள்? அவர்கள் சிவனை முழுமுதற் கடவுளாக வணங்கும் சைவர்களா? சக்தியை முழுமுதற் கடவுளாக வணங்கும் சாக்தர்களா? விஷ்ணுவை முழுமுதற்கடவுளாகவணங்கும் வைணவர்களா? வேதாந்திகளா? சைவ சித்தாந்திகளா? என்றெல்லாம் சிலர் வினவுகிறார்கள். இவர்களின் வினாவிற்குத் தவயோகி திருமூலரின் மரபிலே வந்த தாயுமானவர் விடை பகர்ந்துள்ளார். தமது குருநாதன் மௌனகுரு திருமூலர் பரம்பரையில் வந்தவர் என்பதை "மூலன் மரபில் வந்த மௌனகுருவே" எனத் தாயுமானவர் குறிப்பிட்டுள்ளார். சமயபேதம் அகற்றிச் சமரசம் கண்டவர்களே சித்தர்கள் என்பதை

"வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே"

எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார். திருமந்திரப் பாடல்களிலே வேதாந்த, சித்தாந்த சமரசநிலையினைத் திருமூலர் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார். புராணக்கதைளை உதாரணமாகக் கொண்டு, தத்துவக் கருத்துக்களை விளக்கும் பல பாடல்களைத் திருமந்திரத்திலே காணலாம்.

திருமந்திரத்தின் இரண்டாம் தந்திரத்தின் ஆரம்பத்திலே அகத்தியம் என்ற பகுதியிலே இரு பாடல்கள் உள்ளன. தமிழ் முனிவர், குறுமுனிவர் என்று போற்றப்படுகின்ற அகத்தியருடைய வரலாறு புராணக்கதைகளிலே கூறப்பட்டுள்ளது. நமது தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கு முதலிலே இலக்கணம் வகுத்தவர் அகத்தியர் முனிவர்

என்றே கூறப்படுகிறது. முருகப்பெருமானுடைய நேரடி உபதேசத்திற்குப் பாத்திரமானவர்களில் அகத்திய முனிவரும் ஒருவராவார். திருக்கைலாயத்திலே நடைபெற்ற சிவன், பார்வதி திருமணத்தைப் பார்ப்பதற்காக எல்லோரும் வடநாடு சென்றார்களாம். அப்பொழுது வடக்குத் தாழ்ந்து தெற்கு உயர்ந்தது. உடனே சிவபெருமான் கட்டளைக்கு இணங்க அகத்தியர் தென்னாடு வந்தார் என்பது புராணக்கதை. அவரோடு தமிழும் சமயமும், ஞானமும் தமிழ் நாட்டிற்கு வருகை தந்தன.

உடம்பின் மூலாதாரத்தில் இருக்கின்ற குண்டலினி சக்தியை யோகிகள் யோக சக்தியாக மாற்றி உடம்பின் ஆறு ஆதாரங்களின் ஊடாக மேலே எழுப்புகிறார்கள். இந்தயோக சக்தியின் ஊடாகப் பெறும் அமிர்தத்தினைச் சுவைத்துப் பேரின்பத்தைப் பெறுகிறார்கள். பிரபஞ்ச வாழ்க்கையில் மயங்கி நிற்பவர்கள் அதைப் போக சக்தியாக மாற்றிப் பிராண சக்தியை இழக்கின்றார்கள். உடம்பில் உள்ள நாதம் அகத்தியம் ஆகும். மூலாதாரத்தின் நடுவில் உள்ள சொரூபமான நாதமே நீ போய் விரைந்து ஓடுகின்ற சீவனின் தலையில் முன்பக்கமாய்ப் பொருந்திக் காண்பாயாக என்பதை அகத்திய முனிவரின் புராணக்கதையோடு இணைத்துத் திருமூலர் கூறியிருப்பதைப் பின்வரும் பாடலிற் காணலாம்.

நடுவு நில்லாது இவ்வுலகம் சரிந்து
கெடுகின்றது எம்பெருமான் என்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீ போய்
முடுகிய வையத்து முன் இரு என்றானே.

தொடர்ந்து பதிவலியில் வீரட்டம் எட்டு என்ற தலைப்பில் எட்டுப் பாடல்கள் உள்ளன. அட்ட வீரட்டம் என்றால் இறைவன் செய்த வீரச் செயல்களைப் புலப்படுத்துகின்ற எட்டு ஸ்தலங்கன் என்று பெயர்.

| | | |
|---|---|---|
| 1. திருக்கோவலூர் | - | அந்தகாசுரனை வதம் செய்த இடம். |
| 2. திருப்பறியலூர் | - | தக்கன் யாகத்தைத் தகர்த்தெறிந்த இடம். |
| 3. திருக்கண்டியூர் | - | பிரமதேவனின் ஒரு தலையைக் கிள்ளிய இடம் |
| 4. திருவிற்குடி | - | சலந்தராசுரனை வதம் செய்த இடம். |
| 5. திருவதிகை | - | முப்புரங்களை எரித்த இடம். |
| 6. திருவழுவூர் | - | கயமுக சங்காரம் நடைபெற்ற இடம். |
| 7. திருக்கடவூர் | - | காலனைக் காலால் உதைத்த இடம். |
| 8. திருக்குறுக்கை | - | காம சங்காரம் இடம்பெற்ற தலம். |

அட்ட வீரட்டத் தலங்கள் ஒவ்வொன்றிலும் சிவன் நிகழ்த்திய வீரச்செயல்களை மையமாக வைத்துத் தத்துவக் கருத்துக்களைத் தவயோகி எட்டுப் பாடல்களில் விளக்குகின்றார்.

புராணக் கதைகளை எடுத்துக் கொண்டு அவற்றின் உட்கருத்துக்களை விளக்குகிற பல இடங்கள் திருமந்திரத்தில் உள்ளன. இந்த விளக்கங்கள் எல்லாம் சமயங்களின் எல்லைக் கோடுகளைத் தாண்டி நின்று பேசுகின்ற பூரண ஞானியின் கருத்தாகவே காணப்படுகின்றன. திருமந்திரத்தில் வரும் திரிபுரம் எரித்த வரலாறு அப்படிப்பட்ட ஒரு விளக்கமாகவே உள்ளது. மூன்று அசுரர்கள் தங்களுடைய வரத்தின் பலத்தால் மூன்று புரங்களை நிர்மாணித்து அங்கிருந்து கொண்டு தேவர்களைத் துன்புறுத்தினார்கள். சிவபெருமான் இந்த மூன்று புரங்களையும் அழித்து, அசுரர்கள் மூவரையும் வதம் செய்து தேவர்களைக் காப்பாற்றி அருளினார் என்பதே புராணங்கள் கூறும் செய்தி ஆகும். இந்தப் புராணக்கதையின் ஊடாக உயர்ந்த சைவசித்தாந்தக் கருத்துக்களைத் தவயோகி விளக்குகின்றார்.

முப்புரம் என்பது உயிரைப் பிணித்துள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களே ஆகும். உயிரைப் பிணித்துக் கேடு விளைவிக்கின்ற இந்த மூன்று அழுக்குக்களையும் பக்திசெய்கின்ற அன்பர்களுக்காக இரங்கிவந்து இறைவன் அழித்து ஆட்கொள்கின்றான். முப்புரங்களை அழித்தது என்பது மும்மலங்களை அழித்தது என்பதை யாரும் உணர்வதில்லை. மலபரிபாகம் ஏற்பட்டால் தான் திருவருட்சக்தி ஆன்மாவிற் படியும். மும்மலங்கள் அழிந்தால்த்தான் முக்தி கிடைக்கும் என்ற கருத்தினைத் திருமூலர் பின்வரும் பாடலின் ஊடாக விளக்குகிறார்.

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே

சிவனுடைய மூவகைத் திருமேனிகளில் அருவுருவ வடிவமாக இருப்பது சதாசிவ மூர்த்தமாகிய சிவலிங்க வடிவமாகும். சக்தி சிவத்தினுள் அடங்கிச் செயல்புரிவதை இவ் வடிவம் உணர்த்துகிறது. அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருந்து அருளாட்சி புரியும் இறைவனைக் குறிக்கும் குறியீட்டு வடிவம் சிவலிங்கம் என்பதைக்

'' காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் ''

எனப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது. இப்பிரபஞ்சம் முழுவதும் சிவசக்தி மயமாகவே உள்ளது. மேற்புறமாகிய நாதம் இலிங்கமெனவும், கீழ்ப்புறமாகிய விந்து பீடமெனவும ஆகமங்கள் கூறுகின்றன. இலிங்கத்தின் விரிவான விளக்கத்தை இலிங்கபுராணம் என்ற பகுதியிற் காணலாம். குறியைக்

குறியாது குறித்தறியும் நெறியில் ஒளிர்வது இலிங்கம் எனப்படும். எல்லாப் பொருட்களும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் உரிய இடமாக இருப்பதே சிவலிங்க வடிவம் ஆகும்.

இறைவனுடைய திருவருளை நாடினால் அந்தத் திருவருளினால் மூன்று மலங்களும் நீங்கிப் பேரின்பத்தை அடையலாம். ஆணவம், கன்மம், மாயை என்ற இந்த மூன்று கோட்டைகளையும் தகர்த்தெறிந்து ஆன்மவிடுதலை பெற்று இறை இன்பத்தை நுகரவேண்டும். இறைவனே கருணையோடு வந்து அருள்புரிந்தால் தான் இது சாத்தியமாகும். இத்தகைய தெய்வத் திருவருள் நமக்கு எளிதிற் கிடைக்குமா என்று சந்தேகப்படுவர்களுக்கு உறுதி கூறுகின்றார்.

இந்த மூன்று அகக் கோட்டைகளும் ஒரு நிலையில் இல்லை. ஓர் உருவத்தில் இல்லை. பல்வேறு உருவங்கள் எடுத்துப் பல்வேறு நிலைகளில் ஆன்மாவைச் சிறை செய்து நிற்பவை ஆகையால், திரிகின்ற முப்புரம் என்கிறார். இறைவனின் அருளை நாடும் ஆன்மாக்களினிடமான முப்புரக்கோட்டைகளைத் தகர்த்துவிட்டு விடுதலையை அவன் தருவான் என்பதை உறுதியாகக் கூறுகின்றார். இறைவன் நம்மால் அணுகமுடியாதவன் என்ற மனத் தளர்ச்சி ஏற்படக்கூடாது. மெய்யான அன்பு கொண்டுள்ள பக்தர்களுக்கு ஈசன் பொய்க்காது அருள் செய்வான்.

திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை
அரியன் என்றெண்ணி அயர்வுறவேண்டா
புரிவுடையாளர்களுக்குப் பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறிவானே

வேள்வி என்பது விரும்பிச்செய்யப்படுவது. யாதேனும் ஒன்றை விரும்பிச் செய்வார்களாயின் அது வேள்வி எனப்படும். அதைத் தனக்காகவும் செய்யலாம். பிறருக்காகவும் செய்யலாம்; அல்லது லௌகீகத்திற்காவும் செய்யலாம். தக்கன் ஒரு வேள்வி செய்தான். தக்கனிடம் வேள்வி செய்ய வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் அவனிடம் ஆணவம் குடிபுகுந்திருந்தது. தேவர்களை எல்லாம் அடக்கி ஆளவேண்டும். அவர்கள் எல்லாம் தனக்குக் கீழ்ப்படிய வேண்டுமெனவும் விரும்பினான். அவனுடைய ஆசை பேராசையாக வளர்ந்தது. எல்லாம் வல்ல பரம்பொருளாகிய பரமேஸ்வரனே தனக்குக் கீழ்ப்படிய வேண்டுமெனவும் எண்ணம் கொண்டான். ஆணவத்திமிரிலே இருந்து தக்கன் செய்த யாகத்தைச் சிவன் வீரபத்திர வடிவம் கொண்டு தகர்த்து எறிந்தார் எனப் புராணங்கள் கூறுகின்றன. தக்கனின் தந்தையாகிய பிரமதேவனுக்கே முதல்வனாகிய சிவபெருமானை முன்னிறுத்தாமற் செய்த யாகம் சிதைவுற்றது. அகத்திலே இறையருளை நிறுத்தாமல் ஆணவத்தோடு செய்யப்படும் செயல்கள் யாவும் பயனற்றுப்போய்விடும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

தந்தைபிரான் வெகுண்டான் தக்கன் வேள்வியை
வெந்தழல் ஊடே புறப்பட விண்ணவர்

முந்திய பூசை முடியார் முறைகெட்டுச்
சிந்தினர் அண்ணல் சினஞ் செய்த போதே

பரம்பொருளாகிய இறைவன் அண்டத்திலும் பிண்டத்திலும் வியாபித்திருக்கிறான். இறைவன் ஊனாய் இருக்கின்றான்; உயிராய் இருக்கின்றான். ஊனையும் உயிரையும் ஒட்டி நிற்கின்ற உணர்வாயும் இருக்கின்றான். வானத்திலே ஓங்கி நிற்கின்றான். உலகத்தையெல்லாம் தாங்குகின்ற நடுத்தம்பமான மேருவாக நிற்கிறான். மேருவைச்சுற்றி வலம் வந்து உலகத்துக்கெல்லாம் ஒளி தருகின்ற சூரியனாயும், சந்திரனாயும் இருக்கின்றான். இறைவன் பிண்டநிலையில் உடலோடு சேர்ந்திருக்கின்ற தொடர்பையும், அண்டநிலையிற் பிரபஞ்சம் எல்லாம் வியாபித்திருக்கும் நிலையையும் தவயோகியின் பின்வரும் திருமந்திரம் வெளிப்படுத்துகிறது.

ஊனாய் உயிராய் உணர்வங்கியாய் முன்னம்
சேணாய் வான் ஓங்கித் திருவுருவாய் அண்டத்
தாணுவும் ஞாயிறும் தண்மதியும் கடந்
தாண் முழுது அண்டமும் ஆகிநின்றானே

தெய்வத் தமிழாக இருக்கின்ற திருமந்திர நூல் வெறும் ஒரு காவிய நூல்போல, வெறும் செய்யுள் இன்பத்தையும் கலை இன்பத்தையும் தருவதற்காக மட்டும் எழுந்த நூலன்று. உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம்' என்று கொண்டிருக்கிற இறைவனை நாம் காண வேண்டுமென்ற நாட்டம் மக்களிடம் இருக்கிறது. ஆனால் வழிதான் தெரியவில்லை. கண் இருக்கிறது ஆனால் இறைவனைக் காணமுடியவில்லை. காது இருந்தும் இறைவனின் குரலைக் கேட்க முடியவில்லை. நாம் எப்படி இறைவனின் அருளைப் பெறுவோம் என்று ஏங்குகின்ற அந்தப் பெருமக்களுக்கு வழிகாட்டுவதற்காக எழுந்த நூல் திருமந்திரம். இதுவெறும் உபதேச நூல் மாத்திரமன்று, அனுபவ ஞானப்பெருநூலாகவும் மிளிர்கிறது. ஆன்மாவிடம் இறை நாட்டத்தை ஊட்டி இறை அனுபவத்தைக் கொடுப்பது திருமந்திரம்.

உலகங்களையும் உயிர்களையும் படைப்பவன் பிரமன் என்றும், காப்பவன் திருமால் என்றும், அழிப்பவன் உருத்திரன் என்றும் தெய்வ சக்தியை மூன்றாக வகுத்துக் கூறுவார்கள். இதனால் தெய்வங்கள் பல என்ற கருத்து நம்மவர்களிடம் இருக்கிறது. மூன்று தொழில்களுக்கும் உரிய மூன்று மூர்த்திகளாகவும் இறைவன் ஒருவரே இருக்கின்றார். அந்தச் சக்தியே உடலோடு உயிரைக் கூட்டுகிறது, காப்பாற்றுகிறது, பின்பு நீக்குகிறது. இந்தத் தெய்வ சக்தியின் சிறப்பினைத் தவமுனிவர் பின்வருமாறு விளக்குகிறார்.

ஒருவனுமே உலகு ஏழும் படைத்தான்
ஒருவனுமே உலகு ஏழும் அளித்தான்
ஒருவனுமே உலகு ஏழும் துடைத்தான்
ஒருவனுமே உலகோடு உயிர்தானே.

# கரு உற்பத்தி

ஆடு அகம்சீர் மணிக்குன்றாக நின்று தில்லையிலே ஆனந்தத்தாண்டவமாடும் நடராஜப்பெருமானின் வடிவம் ஐந் தொழில்களாகிய பஞ்சகிருத்தியத்தினை விளக்குகின்றது. உடுக்கு ஏந்திய கை படைத்தலையும், அபயகரம் காத்தலையும், தீ ஏந்திய கை அழித்தலையும், முயலகன் மீது ஊன்றிய திருவடி மறைத்தலையும் தூக்கிய திருவடியாகிய குஞ்சிதபாதம் அருளலையும் குறிக்கின்றது. மெய்கண்ட சாஸ்திர நூல்களில் ஒன்றாகிய திருவதிகை மனவாசகம் கடந்தார் அருளிய உண்மை விளக்கம் என்ற நூலில் வரும் பாடல் பஞ்சகிருத்திய வடிவத்தின் செயற்பாட்டினைத் தெளிவாக விளக்குகிறது.

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பாதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

திதி என்பதற்கு காக்கப்படுதல் என்பது பொருள் ஆகும். சர்வசிருஷ்டி என்ற தலைப்பினை அடுத்து திதி என்பது வைக்கப்பட்டுள்ளது. உயிர்கள் ஆன்ம விடுதலையாகிய முத்தி நிலையினை அடையும் வரை காத்தல் நடைபெறுகின்றது. அறிவுமயமான ஆன்மா பூரண வியாபகத்துடன் விளங்காமல் இருப்பதற்கு தடை யாக இருப்பது ஆணவமலமாகும். ஆணவத்தை நீக்கி ஆன்மாவை வியாபிக்கச் செய்வதாகிய காத்தல் தொழிலை இறைவனே செய்கிறான். ஏகம் ஸத் (உள்பொருள் ஒன்றே) என்பதே வேதங்களின் முடிபாகும். ஒரு தெய்வ சக்திதான் இந்த உலகங்களையெல்லாம் திரும்பத்திரும்பப் படைத்துக் காத்து அழிக்கவும் செய்கிறது. அதே

10

சக்திதான் உடலோடு உயிரைக் கூட்டுகிறது, காப்பாற்றுகிறது. பின்பு நீக்குகிறது. உடலாகவும் உயிராகவும், கடலாகவும், மேகம் சூழ்ந்து மழை பொழிகின்ற வானமாகவும் , நிற்கின்ற அந்தத் தெய்வம் இடைவெளியில் உள்ள ஆகாசமாகவும், நீக்கமற நிறைந்திருக்கின்றார்.தமது அடியவர்களை அன்பினால் இழுக்கும் விசாலமான கண்களையும் உடையவராகக் காணப்படுகின்றார். அடியவர்கள்,இறைவனின் அருட்பார்வைக்கு உட்படுவார்கள் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

உடலாய் உயிராய் உலகமதாகிக்
கடலாய்க் கார்முகில் நீர்பொழி வானாய்
இடையாய் உலப்பிலி எங்குந் தானாகி
அடையாய் பெருவழி அண்ணல் நின்றானே

உயிர்கள் எத்துணை அணுகி நின்றாலும் இறைவன் அவற்றால் எட்ட முடியாத தொலைவிலேயே இருப்பான்.சிவயோக சாதனையால் அவனைக் கூடினாலும் பதிஞானம் சிறிதளவே நல்குவான். அவன் பூவுலகில் பல உயிர்களும் ஆகி நின்றான். அச்சீவர்கள் தன்னை வழிபட்டாலும் ஆணவம், ஆன்மபோதம் முதலியவை அடங்கப்பெற்றாலும் அவர்களுக்கு அருளுடல் வழங்கி வீடுபேறு அளிப்பவன் அந்தத் தலைவனே எனத் திருமூலர் கூறுன்கிறார். இதில் இறைவன் தலைவன் என்பதையும்,அவன் உயிர்களுடன் ஒன்றாகியும் உடனாகியும் அவற்றினின்று வேறாகியும் இருக்கின்றான் என்பதையும் தெளிவாகக் கூறுகின்றார். சைவ சித்தாந்தம் கூறும் அத்வைத முத்தி என்பதன் விளக்கம் இதுவேயாகும்.

அணுகினும் சேயவன் அங்கியிற் கூடி
நணுகினும் ஞானக் கொழுந்து ஒன்று நல்கும்
பணிகினும் பார்மிசைப் பல்லுயிர் ஆகித்
தணிகினும் மண் உடல் அண்ணல் செய்வானே

சங்கரன் செய்வது சங்காரம். சங்காரம் என்றால் ஒடுக்குதல் , அழித்தல் என்று திருமந்திரம் கூறவில்லை. சங்காரம் என்பதை இளைப்பாற்றுதல் என்னும் பொருளிலேயே திருமூலர் வழங்கியுள்ளார். செந்தழல் போன்ற திருமேனியை உடைய சிவபெருமானே சங்கார கரணனாகின்றான். அவன் சிரித்தாலும் நெருப்புப்பொறி எழுகிறது. சினந்தாலும் தீப்பொறி பறக்கிறது. அவன் கையிலும் நெருப்பு கனல்கின்றது. அழித்தல் தொழிலைச் செய்பவனாகிய சிவன் ஆன்மாவிற்கு வைத்த அழியாத இடமொன்றுண்டு. அதை அடைதற்பொருட்டே உயிர்களையும் கருவிகளையும் தந்தான். உயிர் உணர்வினால் சிவமாகிய தன்னை அனுபவிக்க வைத்தார். ஆகாமிய வினையையும் சஞ்நித வினையையும் அவனது அருளால் பொசுங்குமாறு செய்வித்தார்.

தீயவைத்து ஆர்மின்கள் சேரும் வினைதனை
மாயவைத்தான் வைத்த வன்பதி ஒன்றுண்டு
காயம் வைத்தான் கலந்தெங்கும் நினைப்பதோர்
ஆயம் வைத்தான் உணர்வு ஆர வைத்தானே.

உடம்பினுள் நின்று இயங்குகின்ற ஆன்மாவோடு இறைவனும் உடனிருக்கின்றான். அப்படி எப்போதும் உடன் நிற்கின்ற இறைவனுடைய சொரூபத்தை ஆன்மா அறிவதில்லை ஆன்மாவிற்குள் நிற்கின்ற ஒப்பற்ற தலைவனை ஒளிமயமாக உள்ளே நிற்கின்ற அந்தப் பரஞ்சுடரை, ஆன்மாவை விட்டுவிலகிப்போகாமல் நிற்கின்ற அந்தப் பரம்பொருளை ஆன்மா அறியாமல் நிற்கிறது. பரமேஸ்வரன் நம்முள்ளே இருக்கிறான் . சர்வாந்தர்யாமியாக நிற்கின்ற அவனே நம்முடைய இதயக்குகையில் இருக்கின்றான் . சுயம் ஜோதியாகப் பிரகாசிக்கின்றான். "ஜோதிஷயம்பதயே" என்றே வேதங்களும் கூறுகின்றன. உள்ளத்தினுள்ளே இருந்தும் அஞ்ஞானத்தினால் ஆணவ மலத்தினால் நாம் அவனை அறியமுடியாது அல்லல்படுகின்றோம். சுயம் ஜோதியாக நம்முள்ளே நின்று ஒளி வீகின்ற பரதத்துவத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும் என உபதேசிக்கின்றார்.

உள்ளத்தொருவனை உள்ளூறு சோதியை
உள்ளம் விட்டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறியாதே .

உலகின் தோற்றமும் இந்த உடம்பின் தோற்றமும் , இந்த உடம்பிற்குள்ளே உயிர் நிற்பதும், பின்பு பிரிவதும் எல்லாமே ஈசன் செயல் எனத் தவயோகி கூறுகிறார். ஒரே மண்ணைக் கொண்டு பல பாண்டங்களைப் பல உருவங்களிலே பல தன்மைகளிலே செய்கின்ற குயவனைப்போல இறைவனும் பல்வேறு உருவங்களைத் தனது விருப்பப்படி தோற்றுவிக்கின்றான் .

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்றதெல்லாம் வனைவன்
குசவனைப்போல் எங்கள் கோன் நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அது இதுவாமே

கர்ப்பக்கிரியை என்பது திருமந்திரத்தின் இரண்டாவது தந்திரத்தில் பதினான்காவது அதிகாரமாக உள்ளது . கர்ப்பம் என்பதற்கு கரு என்பது பொருள் . கிரியை என்பதற்கு செயல் என்பது பொருள் . கருவை உருவாக்கி வெளிப்படுத்துகின்ற இறைவனது திருவருட் செயலை கரு உற்பத்தி என்ற அதிகாரத்தின் ஊடாக திருமூலர் விளக்குகின்றார். கருத்தோன்றுவதற்கு மூலகாரணன் இறைவன் எனக் கூறுகின்றார். ஆண் பெண் கூட்டுறவால்

தோன்றுகின்ற சிற்றின்பத்தைப் பேரின்பமாகக் கருதி இன்புற்றுத் தாம் பெற்ற குழந்தைகளைப்பேணி வளர்த்துப் பெரு மகிழ்ச்சி அடைகின்ற மக்கள் இவையெல்லாம் இறைவன் திருவருட்செயல்கள் என்பதை உணர வேண்டும் என்கிறார். கருவிலே இருக்கின்ற போதும் அறிவு வெளிப்படாத நிலையிலும் இறைவனை எண்ணி இன்புறுதல் வேண்டும் என்ற தனது விருப்பத்தைக் "கருவாய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்து உடையேன்" என அப்பர் பெருமான் தனது தேவாரப்பாடலில் குறிப்பிடுகின்றார்.

இன்று மேற்கத்தைய மருத்துவ விஞ்ஞானத்தில் மகப்பேற்று நிபுணர்களாகக் கடமையாற்றும் மருத்துவர்கள் கருவைக் காப்பதற்கும், கரு வராமல் தடுப்பதற்குமான ஆலோசனைகளைக் கூறுவார்கள் ஆனால் சக்கரவர்த்தி தவராசா யோகியாகிய திருமூலர் சிறந்த குழந்தைக்குரிய கரு தோன்றுவதற்கு வழி யாது என்பதையும் குறைபாடு உடைய குழந்தைக்கு உரிய கரு எவ்வாறு தோன்றுகின்றது. என்பதையும் திருமந்திரத்தின் ஊடாக விளக்கிக் கூறியுள்ளார்.

இவர் கூறிய கருத்துக்கள் இன்ப நுகர்ச்சியில் தலைப்படும் மக்களுக்குச் சிறந்த அறிவுரையாக விளங்குகின்றது. சுக்கிலத்தைச் செலுத்தும் வாயுவுக்கு ஏற்பக் குழந்தையின் அங்கம் அமையும் எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. விந்துவைச் செலுத்தும் வாயு குறைந்தால் குழவி குள்ளமாகப் பிறக்கும். வாயு மெலிந்தால் முடமாகும். அந்த வாயு தடைப்பட்டால் குழந்தை கூனாய்ப் பிறக்கும். ஆனால் மாதரின் வாயு இவ்வகையில் பாதிப்பு எதையும் ஏற்படுத்துவதில்லை .

பாய்கின்ற வாயு குறையின் குறள் ஆகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடம் ஆகும்
பாய்கின்ற வாயு நடுப்படில் கூன் ஆகும்.
பாய்கின்ற வாயு மாதர்க்கு இல்லைப் பார்க்கிலே

இன்ப நுகர்ச்சிக் காலத்தில் ஆண் மகனிடம் மூச்சு ஓட்டம் சூரிய கலையில் வலப்பக்கத்து நாசியில் இயங்கினால் ஆண்குழந்தை பிறக்கும். சந்திர கலையில் இடப்பக்க நாசியில் இயங்கினால் பெண் குழந்தை பிறக்கும். விந்துவோடு செல்லும் பிராண வாயுவை அபாணவாயு எதிர்த்தால் இரட்டைக் குழந்தை பிறக்கும். மூச்சுக்காற்று இடகலை பிங்கலைகளில் ஒரே நேரத்தில் இயங்கினால் குழந்தை அலியாகப் பிறக்கும்.

குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலி ஆகும் கொண்ட கால் ஒக்கிலே

இன்பம் நுகரும் இருவர்க்கும் மூச்சுக்காற்று ஒத்தியங்குமானால் குழந்தை அழகாகப் பிறக்கும். புணரும் காலத்தில் ஆண்பெண் இருவருக்கும் உயிர்ப்புத் தடுமாறினால் பெண்ணுக்கு கரு உண்டாக வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

கொண்ட நல்வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியும் கோமளமாயிடுங்
கொண்ட நல்வாயு இருவர்க்கும் குழறிடில்
கொண்டது மில்லையாம் கோல் வளையாட்கே

கருவிற்குக் காரணமான தந்தையும் அக்குழந்தை என்ன குழந்தை என அறிய மாட்டான். அதனை ஏற்றுக்கொண்ட தாயும் அறியமாட்டாள். படைப்புக் கடவுளாகிய நான்முகனாகிய தட்டானும் அறிந்தும் ஒருவருக்கும் கூறவில்லை. சதாசிவனாகிய சிவனும் அங்கே இருந்தும் அவனும் உணர்த்தவில்லை. மாயையின் மயக்கம் ஒருவரையும் உணரவிடவில்லை.

இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க்கு உரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்கு உளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மை எவ்வாறே.

கருவில் கரு வளரும் வகையைத் திருமந்திரம் தெளிவாக விளக்குகிறது குயில் தனது முட்டையைக் காக்கையின் கூட்டின் இட, தன் முட்டை என்று எண்ணியே காக்கை வளர்க்கிறது. இதே போல ஓர் உயிர்க்கு இறைவன் அளித்த உடல் தாயின் வயிற்றில் கருவாக இடப்பட தாயும் தன் குழந்தை என்று மயக்கத்தால் எண்ணிப் பத்து மாதமும் கருவைக் காக்கின்றாள்.

குயிற்குகுஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின்றது போல்
இயக்கு இல்லைப் போக்கு இல்லை ஏன் என்பது இல்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்றவாறே

இறைவன் இயல்பாகவே தன்னிடம் அமைந்துள்ள ஆற்றலாகிய அருளால் கருவினுள் இருந்து உயிர்களுக்கு உதவுகின்றான். இவ்வருள் சூரியனிடத்து ஒளி போல இறைவனுடன் பிரியாமல் இணைந்திருக்கின்றது. அவனின்றி அருளில்லை, அருளின்றி அவனில்லை என்ற உண்மை இதனால் பெறப்படுகின்றது. இக்கருத்து அமைந்த செய்யுள் ஒன்று சிவஞான சித்தியாரிலே காணப்படுகிறது.

அருளது சக்தியாகும் அரன்தனக்கு அருளையின்றித்
தெருள் சிவம் இல்லை அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்கு
இருளிலை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்

காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் பரம்பொருளே, கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிப்பவன். அனைத்துயிர்களையும் காப்பாற்றும் இறைவன் தன் அடியவனைக் கைவிடவா போகிறான். “ நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு” என்ற உண்மையைப் பின்வரும் தனிப்பாடல் ஒன்று தெளிவாக விளக்குகிறது.

கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற்று அமுதளிக்கும் மெய்யன் – உருப்பெற்றால்
ஊட்டி வளர்க்கானோ ஓ கெடுவாய் அண்ணாய் கேள்
வாட்டம் உனக்கேன் மகிழ்.

நிலம் உழ உழப் பக்குவம் பெறுகின்றது. அந்த நிலம் தன் மடிக்குள் மறைந்திருந்த உயிர் ஊட்டத்தை விதைக்கு ஊட்டி விளைச்சலை வீரியம் ஆக்குகின்றது. ஆலையில் பிழியப்பட்ட கரும்பே கற்கண்டாய் இனிமை தருகின்றது. உருகிய உலோகமே உருவங்களாய் மாறிப் பயன் தருகின்றன. பயன்தரு பொருட்களாய் மாற மூலப் பொருள் பக்குவப்படல் வேண்டும்; உருக வேண்டும்; இளக வேண்டும்; இளக்கத்திற்குப் பின்பு தோன்றுகின்ற இறுக்கமே இறுதியானது: உறுதியானது.

**திருவாசகம் – தருமை ஆதீனம்**

# திருவருள் ஜலம்

இறைவனைப்போல ஆன்மாக்களும் அநாதியானவை எனக்குறிப்பிடும் திருமந்திரம் ஆன்மாக்களை மூன்றாகப்பிரித்து மூவகைச் சீவவர்க்கம் எனக் குறிப்பிடுகின்றது. மூவகைச் சீவவர்க்கத்தினுடைய அமைப்பு அதனைத் தடுத்திருக்கின்ற தடைகளின் ஏற்றத்தாழ்வு, அவற்றை நீக்கிய அந்த ஆருயிர்கள் அடையும் பயன் என்பனபற்றியெல்லாம் மூவகைச் சீவவர்க்கம் என்ற பகுதியில் திருமந்திரத்தில் விளக்கப் பட்டுள்ளது.

சைவசித்தாந்தசாஸ்திரம் பதி, பசு ,பாசம் ஆகிய மூன்றுபொருட்களைப்பற்றிக்கூறும். இவற்றுள் பாசம் ஆன்மஈடேற்றத்திற்குத் தடையாக உள்ளது. ஆணவம், கன்மம், மாயை என்பன அவை ஆகும். மூவகை ஆருயிர் வர்க்கத்திலே மிக உயர்ந்த நிலையிலே விஞ்ஞானகலர் கூறப்படுகிறார்கள். ஆணவமலம் ஒன்று மட்டுமே உடையவர்கள் விஞ்ஞானகலர். ஆணவம் கன்மம் ஆகிய இரு மலங்களால் பீடிக்கப்பட்டவர்கள் பிரளயாகலர். ஆணவம் கன்மம் , மாயை ஆகிய மும்மலங்களாலும் பீடிக்கப்பட்டவர்கள் சகலர். மூவகைச் சீவ வர்க்கத்தினுள்ளே ஆணவமலம் ஒன்று மட்டுமே உடைய விஞ்ஞானகலருக்கு ஞானபரிபாகம் முதிர முதிர திருவருளும் உதவ அதனாலே அவர்கள் சுத்தர்கள் ஆகிச் சிவமே ஆகும் தன்மையைப் பெறுகிறார்கள். ஆணவம், கன்மம் ஆகிய இருமலங்களையுடைய பிரளயாகலருக்கு இறைவன் கரசரணாதி அவயங்கள் உடையவராகக் காட்சி அளித்து அருள்புரிகின்றார். அதனால் அவர்களுடைய மலமும் கன்மமும் தொலையும். சகலருக்கு மூன்று தடைகள் உண்டு. இவற்றில் இயற்கையான தடை ஆணவம். இறைவன்கூட்டும் தடை மாயை, நாமாகத்தேடியும் , குவித்தும்,

11

திளைத்தும் வைத்திருப்பது கன்மம். இம்மூன்று தடைகளால் கட்டுண்டு இருப்பதால் சகலான்மாக்கள் என்ற பெயரைப்பெறுகின்றோம்.

இறைவன் குருவாக வந்து அடித்து, திருத்தி, உபதேசித்து, நூலாலும், பார்வையாலும், தீண்டுதலாலும், உணர்த்த உணர்கின்ற ஆன்மாக்களைப் பிரளயாகலர் என்றும் இறைவன் உள்நின்று உணர்த்த உணரும் ஆன்மாக்கூட்டங்களை விஞ்ஞானகலர் என்றும் மூவகை ஆருயிர்வர்க்கமாகத் திருமந்திரம் காட்டுகிறது. விஞ்ஞானகலர் எடுத்த பிறவியில் ஞானம் பெற்றுச் சிவப்பேறு அடைவர். பிரளயாகலர் சில பிறப்பில் ஞானம் எய்திச் சிவப்பேற்றை அடைவர். சகலர் பல பிறவியிலே ஞானம் உற்றுச்சிவப்பேற்றை அடைவர். மூவகை ஆன்மாக்களும் இறுதியில் முத்திப்பேற்றினை அடைவார்கள்.

விஞ்ஞான கன்மத்தால் மெய் அகம் கூடி
அஞ்ஞான கன்மத்தினால் சுவர் யோனிபுக்கு
எஞ்ஞான மெய் தீண்டியே இடையிட்டுப் போய்
மெய்ஞ்ஞானர் ஆகிச் சிவம் மேவல் உண்மையே

பிரபஞ்சத்தில் மானுடர்களாகப் பிறந்த நாம் அனைவரும உயிர் என்றும் உடம்பு என்றும் இருபொருள்களைப் பெற்றிருக்கின்றோம். நாம் உயிருக்கும் ஆக்கம் தேடவேண்டும். உடலுக்கும் ஆக்கம் தேட வேண்டும். அருள் உயிரைப்பற்றிய செய்தி, பொருள்உடலைப் பற்றிய செய்தி, உலகியல் வாழ்க்கைக்கு பொருள் அவசியம். பொருள் அருள் ஆகிய இரண்டும் மூன்றெழுத்து வார்த்தைகள். பொருட்செல்வம் இல்லாதவர்க்கு வீட்டுலக இன்பம் இல்லை என்பதை

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு

எனத் திருக்குறள் தெளிவுபடுத்துகிறது சிவஞானியர்கள் எல்லாம் சிவன் செயல் என்று தம்மை மறந்திருப்பார்கள். மானிடர்களாகிய நாம் அனைவரும் கருவிகள், இறைவனே கர்த்தா அவன் ஆணைப்படியே உலகில் எல்லாம் நடக்கும். போகாதிவஸ்துக்கள் எல்லாம் வரவேண்டியிருந்தால் வந்தே சேரும். அவையெல்லாம் போகுங்காலத்தில் வந்த சுவடுதெரியாமல் போயே தீரும். இதே போல விட்டொழிக்கப்பட வேண்டிய காரியங்கள் யாவும் தாமேபோகும். மேற்கொள்ளவேண்டிய யாவும் வந்து பொருந்தியே இருக்கும். இவற்றையெல்லாம் இறைவன் தான் முன்னிருந்து வெளிக்காட்டி கிருபை பாலித்து அருள் செய்கிறான் என்ற உண்மையைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளையோனே.

“பாத்திரம் அறிந்து பிச்சையிடு” என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். ஞான விசயங்களை உணர்கின்ற பக்குவம் உள்ளவர்களுக்கே அவற்றை வெளிப்படுத்த வேண்டும். ஒழுக்கமும் நோன்பும் இல்லாதவர்களுக்கு ஒன்றை ஈவது அழகான வறட்டுப்பசுவிற்கு குனிந்து நிமிர்ந்து பசுந்தழைகளை இட்டுப் பாலைக்கறந்து குடிப்பது போலாகும். அதுவேயன்றிப் பருவம் தவறிச் செய்த பயிரையும் போன்று பயன் அற்றதுமாகும்.

கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்
பாலைக்கறந்து பருகுவதேயொக்கும்
சீலமும் நோன்பும் இல்லாதவர்க்கீந்தது
காலங் கழிந்த பயிரது ஆகுமே.

பஞ்சமாபாதகங்கள் பொய், கொலை களவு, கள், காமம் என்பன. காமாதி என்பவை காமம், குரோதம், கோபம், மோகம், மதம், மாச்சரியம் (பொறாமை) என்பனவாகும். ஐம்பெருங்குற்றங்களைச் செய்பவன் நல்லவர்க்குக் கொடுப்பதன் பயனை அறியாது கெடுவான். குற்றம் இல்லாத ஞான குருவிற்கும், தூய பெரியவர்க்கும், காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றை நீங்கியவருக்கும் ஈதல் வேண்டும். தகாதார்க்குக் கொடுக்கப்படும் பொருள் தீய வழியிற் சென்று பலர்க்கும் தீங்கு விளைவிக்கும். ஆதலால் அக்குற்றம் பொருளை ஏற்றவரிலும் பார்க்க ஈர்ந்தவரையே சார்ந்து விடும். மற்றவர்க்குத் தீமை செய்வதிலே இன்பம் காண்பவர்கள் பலரை இவ்வுலகில் காணலாம். கொம்புள்ள மிருகத்திற்கு ஐந்து முழமும் குதிரைக்குப் பத்து முழமும், மதங்கொண்ட யானைக்கு ஆயிரம் முழமும் தள்ளிநிற்க வேண்டும். என்று கூறும் நன்நெறிப்பாடல் அதர்மம் செய்ய அஞ்சாத வம்பரைக் கண்டால் அவர்கள் கண்ணில் படாமல் இருக்கவேண்டும் என்பதை

வம்புசெறி தீங்கினரைக் கண்டால் அவர்கண்
தூரத்தே விட்டு நீங்குவதே நல்லநெறி

எனக் குறிப்பிடுகின்றது. கொடிய சொற்களால் மற்றவர் மனதைப் புண்படுத்தும் வம்பர்களை, பிறரை வருத்தும் ஈனச்செயல் செய்பவர்களை, உடலை மட்டும் ஓம்பி வாழும் தேகான்மவாதிகளை, காம இச்சை கொண்டு அலைபவர்களை, அதர்மமே வடிவாக நிற்கும் மூடர்களை நல்லோர் வாழும் நெறியினை அறியாதவர்களை உயர்ந்த பனைபோல ஏன் படைத்துவிட்டாய் என்று பட்டினத்தார் குறிப்பிடுவதைப் பின்வரும் பாடலில் காணலாம்.

கடுஞ்சொல்லின் வம்பரைக் ஈனரைக்
குண்டரைக் காமுகரைக்
கொடும் பவமே செய்யும் நிர்மூடர்
தம்மைக் குவலயத்துள்
நெடும்பனை போல் வளர்ந்து நல்லோர்
தம் நெறியறியா

இடும்பரை ஏன் வகுத்தாய்
இறைவா கச்சியேகம்பனே

இளநீர் தாகத்தைத் தீர்க்கிறது. திருமூலர் பேசுகிற தீர்த்தம் ஆன்ம தாகத்தை தீர்ப்பதோடு நம்முடைய மாசுகளை வினைகளையெல்லாம் கழுவுகிறது. ஆன்ம ஞானக் கல்வி இல்லாதவர்கள் தீர்த்தங்களை நாடிப் பள்ளமும் மேடும் பரந்து திரிகிறார்கள்.

உடற் சுத்தத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் புனித நீர் தேவைப்படுவது போன்று அகச் சுத்தத்திற்கும் அக வளர்ச்சிக்கும் ,அறிவு விளக்கத்திற்கும் ஒருவகையான தீர்த்தம் மிகவும் அவசியமாகின்றது. அதனைத் திருவருள் ஜலம் எனலாம். நமக்கு உள்ளத்தூய்மை ஏற்படுவதற்கு வேண்டப்படுவது ஆண்டவனின் திருவருளே ஆகும்.

நம்முடைய உள்ளத்துக்குள்ளேயே தீர்த்தங்கள் பல இருக்கின்றன. ஆன்மஈடேற்றத்தைத் தருவதற்கு இவை துணையாக அமைகின்றன. எப்படித் தேங்காய்க்குள் இளநீர் இருக்கிறதோ, அப்படி இந்த உள்ளத்துக்குள்ளே அந்தத் தீர்த்தம் இருக்கிறது.

அந்தத் தீர்த்தத்திலே மூழ்கி வினை மாசுகள் அகன்று பேரின்பநிலையை அடைவதுதான் சைவ ஞானத்தின் இலட்சியமாகும். அகத்தூய்மையின்றி புறத்தே தீர்த்தத்தில் மூழ்குவதால் பயன் எதுவும் இல்லை என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

உள்ளத்தின் உள்ளே உள பல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியிலோரே

அகத்திலே தோன்றும் மாசுக்களைக் கழுவுவதற்கு உரிய முக்கிய பொருளாக இருப்பது திருவருள். அந்தத் திருவருளிலிருந்து நமக்கு நல்ல குணங்கள் பல உள்ளத்திலே உதிக்கின்றன. அவைகளெல்லாம் நம்மைத் தூய்மைப்படுத்தும். திருக்கோயில் திருவருளை வழங்கும் இடங்களில் ஒன்றாக மிளிர்கிறது. திருக்கோயிலுக்கும் உள்ளத்திற்கும் இருக்கின்ற சம்பந்தத்தை

"இறைவான் புனல் தில்லைச்சிற்றம்பலத்தும்
என்சிந்தையுள்ளும் உறைவான்"

என மாணிக்கவாசகப் பெருமான் தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்திலே குறிப்பிடுகின்றார். சிந்தை உள்ளே உறைகின்றவன் திருச்சிற்றம்பலத்திலும் உறைகின்றான் என்கிறார். நமக்கு எப்படி இருதயம் உடம்பு முழுவதும் செல்லக்கூடிய செந்நீர் என்று சொல்லப்படும் இரத்தத்தைச் சேர்த்து உடம்பு முழுவதற்கும் கொடுப்பது போல ஆண்டவனுடைய திருவருளைப்பெற்று மக்களுக்குக் கொடுக்கக் கூடிய இடமாகத் திருக்கோயில்கள் திகழ்கின்றன.

இல்லறத்தானுக்குரிய பஞ்சமகா யக்ஞங்களில் தேவ யக்ஞமும் ஒன்று என்றே இந்து தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. இறைவனுடைய சந்நிதானத்தில் இடம்பெறும் அன்றாடப்பூசைகளும் வருடாந்த விழாக்களும் ஒழுங்காக நடைபெறாவிட்டால் வானம் வரண்டு விடும். பூமியில் மழை பெய்யாது . தானிய விளைச்சல்கள் எதுவும் ஏற்படாது. இதனைச்

சிறப்போடு பூசனை செல்லாது வானம்
வறக்கு மேல் வானோர்க்கும் ஈண்டு

எனத் தமிழ் மறையாகிய திருக்குறளும் விளக்குகிறது.

சிவாலயங்களில் நித்திய நைமித்தியக் கிரியைகளுக்கு முட்டுப்பாடு ஏற்பட்டால் நாட்டிற்கும் மக்களுக்கும் பல தீமைகள் ஏற்படும். அரசனுக்குத் தீங்குகள் ஏற்படுவதோடு மழை வளமும் குறையத் திருட்டுக்களும் நாட்டில் அதிகரிக்கும் எனத் தனது குருநாதராகிய திருநந்திதேவர் தனக்கு எடுத்துரைத்தார் என்கிறார் திருமூலர்.

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுந்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே

அன்பும் அறிவும் அருளுக்கு அடையாளம் ஆகும். அன்பும் அருளும் கொண்டு சிவத்தை அகத்தும் புறத்தும் எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கும் இயல்புடையோர் பார்ப்பார் எனப்படுவர். இவர்களை அறவோர் என்றும் அழைப்பர். எல்லா உயிர்கள் மீதும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவர்களே அந்தணர் என்று அழைக்கப்படுவார்கள் என்பதை

அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்

எனத் தமிழ்மறையாகிய திருக்குறளும் கூறுகிறது.

பிராமணருக்குரிய குல ஒழுக்கங்களையும் பண்புகளையும் பேணாதவர்கள் இறைவன் சந்நிதானத்தில் பூசாகாரியங்களைச் செய்தால் வீரம் கொண்ட மன்னர்களுக்குக்கூட பொல்லாத நோய்கள் ஏற்பட்டு விடும். செல்வச் செழிப்பு மிக்க நாடு பஞ்சத்தில் வாடும் நிலைக்குத் தள்ளப்படும். தனி மனித வாழ்வில் ஒழுக்கத்தைப் பேணாத அந்தணர்கள் பிரதிஷ்டா குருவாக இருந்தால் அரசனுக்கும் நாட்டிற்கும் மக்களுக்கும் துன்பந்தான் ஏற்படும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே.

# சிவ ஞானியரை நிந்திப்பவர்கள் சிவத்துரோகிகள்

கீழ்நோக்கியவண்ணம் உள்ள சிவபெருமானின் முகம் அதோமுகம். அதைத் தரிசித்தல் அதோமுக தரிசனம் ஆகும். யாண்டும் கலந்தும் கரந்தும் நிற்கும் பேரொளிப்பிழம்பாம் பரம்பொருளைத் தரிசித்தல்தான் அதோ முகதரிசனம் ஆகும். வற்றா ஊற்றினைப்போன்றதாய், யாவற்றிற்கும் ஆதாரமாய் எல்லா உயிர்களையும் தாங்கித் தொழிற்படுவதாய், சகல வல்லமைகளுக்குள்ளும் பொக்கிஷமாய், அருளியல்புக்கு ஆதாரமாய் விளங்குவது இறைவனுடைய அதோமுகம்.

உயிர்கள் மாயை வயப்பட்டிருப்பதால் முடிந்ததும் உண்மையுடையதுமான இறை வியாபகமான ஆதாரத்தை அறியமாட்டாது. இந்த உண்மையை அறிவிப்பதே சிவலிங்கத்தின் அடிப்பாகம். சிவலிங்கத்தின் மேற்பாகம் சிவனுடைய ஈசானம் முதலான ஐந்து முகங்களையும் குறிக்கிறது. அடிப்பாகம் சிவனுடைய அதோமுகம் ஆகும். அதோ முகம் சகல அண்டங்களையும் கடந்து யாவற்றையும் பொறுக்கும் ஆதாரமாயுள்ளது. அதோமுகம் சிவனுடைய அறிதுயில் முகம் எனப்படும். இம்முகம் பாதாளம் ஏழினும் கீழ்நோக்கும் தன்மையுடையது.

இப்பூவுலகத்தில் பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கிவாழும் மானிடர்கள் மெய்ப்பொருளாகிய இறைவனை உணர்ந்து உரைத்தால் இறையருள் எங்கும் நிறைந்து விளங்கும். நீலமணி போன்ற நிறம் படைத்த கழுத்தையுடைய இறைவன் அவர்களைத் தேவர்கள் வணங்கும் நிலைக்கு உயர்த்திவைப்பான் எனத் திருமந்திரம் கூறுகிறது.

12

செய்தான் அறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே உரைத்துப் புகழும் மனிதர்கள்
மெய்யே உரைக்கில் விண்ணோர் தொழச் செய்வன்
மைதாழ்ந்திலங்கும் மிடறுடையோனே.

ஆறுமுகப்பெருமானுடைய ஆறுமுகங்களில் ஆறாவது முகமாகிய அதோ முகமானது ஓம் எனப்படும் பிரணவ மந்திர உருவம் ஆகும். முருகனுடைய ஆறுமுகங்களில் ஒரு முகம் ஓங்காரம்; மற்றையஐந்து முகங்களும் திருவைந்தெழுத்துக்கள். சிவபெருமான் அதோ முகம் கொண்டு தோற்றியருளிய முருகப்பெருமானின் திருவுருவமே ஓங்காரத்தின் உள்ளொளி என்பதை அருணகிரியாரும் கந்தர் அலங்காரத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆறுமுகக் கடவுளின் அவதாரத்தால் மறைமுகமாய் அதோ முகமாய் நின்ற பரம்பொருளின் தன்மையை அனைவரும் எளிதில் தரிசிக்க முடிகிறது.

சிவனது அதோமுகத்து அரும்பெரும் குணத்தால் நூறு இதழ் கொண்ட பெரிய தாமரை மலராக அவ் அதோமுகமே விரிந்து காட்சியளிக்கிறது. அம்மலர் மேல் எல்லையில்லாத சக்திமயமாகிய அந்தமில் சக்தி அதோமுகக் கடவுள் ஆகிய ஆறுமுகம் கொண்டு அமர்ந்திருந்தான் என்பதைப் பின்வரும் பாடலின் ஊடாகத் தவயோகி திருமூலர் விளக்குகிறார்.

அதோமுக மாமலராயது கேளும்
அதோ முகத்தாலொரு நூறாய் விரிந்து
அதோ முகமாகிய அந்தமில் சத்தி
அதோ முகமாகி அமர்ந்திருந்தானே.

இன்று இவ்வுலகம் நிந்தையிலே சுழன்று அலைகிறது. எதையும் தூஷிப்பதிலும், நிந்திப்பதிலுமே மக்களில் பெரும்பாலானோர் இன்பம் காண்கிறார்கள். காணுகின்ற இடமெல்லாம் சிவமாகக் காணவேண்டிய காட்சியிலே ஒரு சிறிதும் பழகாமல், காணுகின்ற இடமெல்லாம் கொழிக்கின்ற அருளினைக் காணாமல், அன்பினைக்காணாமல், பண்பு சிறிதேனுமில்லாத பொய்க்குப்பைகளையே கண்டு உள்ளம் வருந்தி வாழ உலகம் கீழே போய்க்கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

ஞானம் அடைந்து அனுபூதி பெற்ற ஞானியானவன் தான்பெற்ற அருளனுபவத்தை பக்குவப்பட்ட ஆன்மாக்கள்மீது படியச்செய்தல் வேண்டும். உலகத்தைச் சிவமாகக் காணும் ஞானி சிவமாக ஆக்கவும் முயலுதல் வேண்டும். உலகத்திலுள்ள ஜடப்பொருட்கள் அனைத்தையும் ஞானி சிவமாகக்காண்கிறான். தனக்கு மட்டும் புலனாகி உள்ளுக்குள்ளாய் ஒளிர்கின்ற அச்சிவ ஒளியை மற்றவர்களும் காணுமாறு செய்தல் ஞானியின் பணியாகும்.

அதோமுக தரிசனத்தைத் தொடர்ந்துவரும் திருமந்திரப் பாடல்களில் சிவநிந்தை, குருநிந்தை, மகேசுரநிந்தை பற்றிய பாடல்கள் வருகின்றன.

மக்களில் பலர் தன்னைத்தான் அறியாமல் இறைவனை, குருவை, சிவனடியார்களை நிந்தை செய்து வருகிறார்கள். ஒவ்வொருவனும் எவ்வளவு கீழ்நிலையில் இருந்தாலும் தன்னைப்பற்றிப் பெருமதிப்புக் கொள்கிறான். இதற்குத் தான் ஆணவம் என்று பெயர். இப்படிப்பட்ட ஆணவமலத்தை வேரோடுகளைய வேண்டுமானால் இந்த நிந்தைப்புராணத்திலிருந்து நாம் விடுபட வேண்டும். நிந்தைப்புராணம் என்பது மிகமிக இனிக்கும், நம்மை ஏமாற்றும். எல்லா இன்பங்களிலும் பிறரை நிந்திப்பதற்குக் காரணமான மூலமான ஆணவத்தினாலே வரும் இன்பம் மிகப்பெரியது. அதைத் தட்டிக்கழிக்க முடியாது. ஆணவத்தின் பிடியிலிருந்து விடுபட்டால்தான் உண்மையான இன்பம் உண்டு. இந்த இருட்டிற்கு நேர்மாறான சிவ ஒளி உண்டாகும்.

சிவனையே வழிபடும் ஆத்திகர்களிலும் சிலர் தங்கள் வினையால் ஏற்படும் வறுமைநோய் முதலானவற்றைத் தாங்கள் அனுபவிக்க நேருங்காலத்தே தம் வழிபடு கடவுளாகிய சிவத்தினைத் தூஷிக்கின்றனர். நக்கீரர் “ நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே” என்று நிந்தை செய்ததும் ஒருவகைக் கல்விச் செருக்கின் விளைவேயாகும். விளையாட்டாகவும் இறைவனை நிந்திக்கக்கூடாது என்பது திருமூலதேவரின் கருத்தாகும். தேவர்களும் அசுரர்களும் இறைவர் நிந்தனையால் தீராத பகைமை கொண்டு உய்வு பெறாமல் இடையில் அழிந்தனர். இறைவனிடம் எவ்வகையில் பகை கொண்டாலும் அவனை அடைவது இயலாது. “ முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்” என்ற முது மொழிக்கேற்ப இறைவனைப் போலியாகவேனும் பகை கொண்டாலும் தீமை ஒன்று பத்தாக வளரும் எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

அப்பகையாலே அசுரரும் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை ஆகிலும் எய்தார் இறைவனைப்
பொய்ப்பகை செய்யினும் ஒன்று பத்து ஆமே.

குருவினுடைய திருவருள் இல்லாவிட்டால் ஆண்டவனுடைய சாம் ராஜ்யத்தை அடையமுடியாது. இறைவனுடைய அருள் என்றும் இருந்து கொண்டே இருக்கிறது. ஆண்டவனுடைய அருள் பொழியாத காலமே கிடையாது. ஆனால் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய பக்குவம் யாருக்கு உண்டோ அவர்கட்குத்தான் அது கிடைக்கிறது.

மனிதன் காணும் தெய்வம் மூன்று என்றும், அந்த மூன்றையும் தெய்வமாக மதிப்பவன்தான் நாலாவது தெய்வமாகிய இறைவனைக் காணமுடியும் என்று உபநிடதங்கள் குறிப்பிடுகின்றன. முதலாவது தெய்வம் அன்னை, இரண்டாவது தெய்வம் அப்பன், மூன்றாவது தெய்வம் ஆசாரியான் என்பதை “ மாத்ரூ தேவோபவ” பித்ரூ தேவோ பவ ஆசாரிய தேவோ பவ எனத் தைத்தீரிய

உபநிடதம் குறிப்பிடுகிறது. அன்னையை வணங்கி இறைவனை வணங்கினால் நாலு படிக்கும் அப்பாலே உள்ள மோட்ச சாம்ராஜ்யத்தை அடையலாம்.

கற்புநெறி தவறாது குலமகளாக வாழ்கின்ற பத்தினிப்பெண், இறைவனை நாள்தோறும் வாழ்த்தியும் வணங்கியும் வரும் சிவனடியார்கள், சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தவர்களாகத் திகழும் மெய்ப்பொருளை அறிந்த ஞானிகள் ஆகியோரின் மனம் வருந்தும்படி அவர்தம் நெறிக்கு அழிவுசெய்தவரது செல்வமும் வாழ்நாளும் ஒராண்டுக்குள்ளே அழிந்து ஒழியும் எனத் திருநந்திதேவர்மீது ஆணையிட்டுத் திருமூலர் கூறுகிறார்.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடுஞ்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே

ஈசனுடைய அடியவர்களின் இதயம் கலங்கினால் தேசமும் நாடும் சிறப்பும் அழிந்து விடும். எல்லாம் உன் உடைமையே, எல்லாம் உன் அடிமையே, எல்லாம் உன்னுடைய செயலே என்று சிவத்தினையே எங்கும் வியாபகமாகக் கொண்டு இறை பணியிலே ஊன்றி நிற்போரே ஈசன் அடியார் ஆவர். இவர்களுடைய இதயம் கலங்கினால் சிவமும் கலக்கமுறும். இவர்களுடைய இதய மகிழ்ச்சி உலகை வாழவைக்கும். ஆகையால் அடியார் மகிழும் வண்ணம் நாம் அனைவரும் நடந்து கொள்ளுதல் வேண்டும். அடியார்களின் உள்ளம் வெதும்புமாறு நடந்துகொண்டால் தேவேந்திரன் பதவியும் பறிபோய்விடும். இந்திரனது பீடம் சக்கரவர்த்திகளின்பீடம் முதலிய அனைத்தும் நாசமாகிவிடும் என்பதைக் குருமீது ஆணையிட்டுத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

ஈசனடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமதாகுமே நந் நந்தி யாணையே

மாகேசுவரர்களாகிய சிவனடியார்களை நிந்தைசெய்வது சிவனை நிந்தைசெய்வதற்கு ஒப்பாகும். சிவபெருமானுக்குத் தன்னை நிந்திப்பவர்களிடத்தே கூட அவ்வளவு கோபம் வராது. ஆனால் அடியார்களை நிந்திப்பவர்களிடத்தில் பெரும் கோபம் ஏற்படும். இறைவனுக்குத் தனது சிவனடியார்களிடத்தில் பெரும் மதிப்பு இருக்கிறது. அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசுகிறார்கள் இறைவன் கேட்டுக்கொள்ளுகின்றான். தன்னைத் துதித்ததாகவே மதிக்கிறான்.

சகல சம்பத்துக்களுக்கும் அதிகாரியாக இருக்கின்ற பரமேஸ்வரனை எப்போதும் தமது சித்தத்திலே எண்ணிக் கொண்டிருப்பவர்கள் மாகேஸ்வரர்கள் ஆவார்கள். இவர்கள் உன்மத்தர்கள் போல மௌனிகளாகக்

காணப்படுவர். ஞான மார்க்கத்தின் முடிவுநிலையில் இருப்பவர்களாதலால் இவர்களுக்கு உலக நினைப்பே இருப்பதில்லை. இவர்களைச்சிவமெனவே கருத வேண்டும். அடியவர்களின் தோற்றத்தைக்கண்டு இவர்களைப் பெரும்பாலான மக்கள் விரும்புவதில்லை. இவர்கள் யாசித்தே தமது உணவை உண்பர். எதையும் நாடாத இத்தகைய ஞானிகளை நிந்திப்போர் நரகில் விழுந்து துன்புறுவர். சிவ ஞானிகளை வந்திப்பவர் சிவபுண்ணியச் சீலராய் சிவஞானம் பெற்று அதன் வழி சிவானந்தத்தை எய்துவர். சிவஞானிகளை நிந்திப்பவர் சிவத்துரோகிகளாய் அருநரகும், இழிப்பிறப்பும் எய்துவர். சிவனடியார்களை வந்தியாதொழியினும் நிந்தித்தல் ஆகாது என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

ஞானியை நிந்திப்பவனும் நலனென்றே
ஞானியை வந்திப்பவனுமே நல்வினை
யான கொடுவினை தீர்வாரவன்வயம்
போன பொழுதே புகுஞ்சிவ போகமே.

எவர்களுக்குப் பொறுமை இல்லையோ அவர்களுக்கு யோகம் சித்திக்காது. யோகம் பழக வேண்டுமானால் யோகத்தில் நாம் வெற்றிபெற வேண்டுமானால் பொறுமை மிக அவசியம். அட்டாங்க யோகம் நமக்குத் கைகூட வேண்டுமானால் நாம் முதலில் அடக்கத்தைப் பெற வேண்டும். சாந்தியை அடையவேண்டும். பொறுமையை நாம் நன்றாகவளர்த்துக்கொள்ள வேண்டும்.

எவன் கெட்ட காரியங்களிலிருந்து விலகவில்லையோ, எவனுக்குச் சாந்தி ஏற்படவில்லையோ, எவனுக்குச் சமாதியானது நிலைக்கவில்லையோ, எவனுடைய மனதானது அமைதியைப் பெறவில்லையோ அவனால் ஞானத்தாற் கூட பரமாத்மாவை அடையமுடியாது என்று கடோபநிஷதம் கூறுகிறது. இந்தப் பொறுமை, சாந்தி , அடக்கம் இவை இருந்தாலொழிய யோக முயற்சியினாலே நாம் புருஷார்த்தத்தை அடைய முடியாது என்று தான் மகான்களெல்லாம் கூறுகிறார்கள்.

சீவனாயிருந்த நிலைமாறிச்சிவமாக ஆகின்றவர்களுக்குப்பொறையுடைமை பொருத்தம். ஆனால் சீவன் என்று நீண்ட நிலையிலிருக்கின்றவர்கள் பொறாமை என்ற நீண்ட ஒன்றைத்தான் பற்றி நிற்பார்களே தவிர அது குறுகிப்பொறையுடைமையாக ஆகும் நிலைமை சிலருக்கு ஒத்துக்கொள்ளாது. பொறாமைமட்டும் ஒருவனுடைய மனத்திலே இருந்து விடுமானால் உலகத்தில் யாரையுமே பெரியார் என்று அவன் ஒத்துக்கொள்ளமாட்டான். பொறிபுலன்களோடு கட்டுப்பட்டிருக்கின்ற சிந்தையைப் பிரித்துப் பொறுமையை வளர்த்தால் தான் பொறாமை அகத்தைவிட்டு நீங்கும்.

பொறாமையாலும் மடைமையாலும், கோபத்தாலும், விளையாட்டாலும், நிந்திப்போரை நாம் பொருட்படுத்தாமல் அவர்கள் நிந்தனைகளைப் பொறுத்துக்கொள்ளும் மன உறுதியைப் பெற வேண்டும். " பொறுமை

கடலினும் பெரிது'' என்பது முதுமொழி ஆகும். ''பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்'' என்பது வள்ளுவர் வாக்கு.

நாட்டை ஆளும் மன்னன் தனது சேனையுடன் சூழ்ந்து கைதொழுது வணங்கும் தகுதியுடைய ஞானிகளை வணங்கினால் இறைவன் பிறவிநோயை நீக்கிப் பேரின்பப்பேற்றினை நல்குவான்.

**ஞானம் விளைந்தவர் நம்மிட மன்னவர்**
**சேனை வளைந்து திசைதொறுங் கைதொழ**
**ஊனை விளைத்திடு மும்பர் தம் ஆதியை**
**ஏனை வளைந்தருள் எட்டலுமாமே.**

சகல குணங்களையும் அவயவங்களாகக் கொண்டுள்ள உத்தமமான குணமே பொறையுடைமை என்பதாகும். இத்தகைய உயர்ந்த குணத்தினைப் பெற்றவர்களே பெரியோர்களின் துணையினை நாடுவார்கள். ஆன்ம ஈடேற்றமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவர்கள் பெரியோரின் துணையை நாடுதல் வேண்டும். ஓட வல்லாரும், பாட வல்லாரும் தேட வல்லாரும், கூட வல்லாரும் பெரியோர்கள் என்பதே திருமூலரின் கருத்தாகும்.

ஆன்மாவிற்கான உண்மைத் தவநெறியைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சிவாகமங்கள் வகைப்படுத்தியுள்ளன. இவற்றை முறையே சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்று கூறுவர். சிவனடியார்களோடு இணைந்திருப்பவர்களுக்குத் தான் சிவசிந்தனை ஏற்படும். தொண்டர்களுடைய கூட்டத்தை விடாமல் கூடியொழுகுவோமாயின் நம்மிடத்திலே தீவினை சேராது. நல்வினை மிகும். சிவபுண்ணியச்சிந்தனை வளரும். இதன் பலனாய் இறையருள் கிட்டும். எடுத்த பிறப்பிலேயே பேரின்பம் எய்தத் தகுதி பெற்றிடுவோம்.

உலகத்திற்கு நலம்செய்கின்ற பெரியாருடன் கூடுதலே பேரின்பம் எய்துவதற்குரிய வழியாகும். தீயவழியில் செல்வாரை நல்வழியில் செலுத்துபவர்களே பெரியார் என அழைக்கப்படுவார்கள். ''மூத்த அறிவுடையோர் கேண்மை தேர்ந்துகொளல்'' என்றே தமிழ் மறையும் கூறுகிறது.

பெரியார்களுடன் கூடினால் அவர்கள் நம்மைப் படிப்படியாக ஞானமுறச் செய்து ஞானபூரணத்துவம் அடைய வழிகாட்டுவர். கலைஞானந்தந்து சிவனடியே சிந்திக்கச்செய்வர். மெய்ஞானமூட்டிப் பிறவிநோயை நீக்க வழிகாட்டுவர். அனுபூதி ஞானமடையச் செய்து நம்மை முற்றுமுணர்ந்தவர் ஆக்கிவிடுவர். ''அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப்புரியாய்'' என்ற மணிவார்த்தைக்கு அமையப் பெரியோரைத்துணைக்கொள்ளுதல் பேரின்பத்தை அடைய வழிவகுக்கும்.

**அறிவார் அமரர் தலைவனை நாடிச்**
**செறிவார் பெறுவர் சிவ தத்துவத்தை**
**நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்**
**பெரியோருடன் கூடல் பேரின்பமாமே.**

# யோகசித்தி

13

மூன்றாம் தந்திரம் அட்டாங்க யோகம் முதல் சந்திரயோகம் வரை இருபத்தொரு பகுதிகளையும் இருநூற்று முப்பத்து நான்கு பாடல்களையும் கொண்டுள்ளது. ஞானத்திற்கு ஏதுவாக இருக்கின்ற யோகத்தின் அடிப்படைகளையும் அதன் முடிபையும் மூன்றாம் தந்திரத்தில் வரும் பாடல்கள் விளக்குகின்றன. சரீர சித்தி உபாயம் இப்பாடல்களில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. உடம்பின்றி உயிர் தனித்து நின்று எத்தொழிலையும் செய்யமுடியாது . உயிர்க்கு ஞான சாதனமாகவுள்ள உடம்மைப் பேணுதல் அவசியம் என்பதைத் திருமூலர் இத்தந்திரப் பாடல்களின் ஊடாக விளக்குகிறார்.

மானுடப்பிறப்பெடுத்த நம்மிடம் இருக்கும் விடயங்கள் மூன்று ஆகும். ஒன்று வெளியில் காணப்படும் உடம்பு. இரண்டாவது அந்தக்கரணங்களுக்குத் தலைமைதாங்கும் உள்ளம். மூன்றாவது சூக்குமப்பொருளாயிருக்கிற ஆன்மா. யோகப்பயிற்சியில் முதலாவது வெளியில் இருக்கும் உடம்பை அசையா நிலைக்குக் கொண்டுவருதல் ஆகும். உடம்பை அடக்குவதிலே இருக்கின்ற கஷ்டம் கர்ப்பப்பையுக்குள்ளே சிசுவை அடக்கிவைத்திருப்பது போன்றதாகும். ஒரு கண்ணாடி மாசுபடிந்து கரி ஏறியிருந்தால் எப்படி இருக்குமோ அதேபோன்று மனத்தை அடக்குவதும் கடினமானதாகும். மேகமானது மறைத்துக்கொண்டிருக்கும் ஆகாயத்திலே தெரியாமல் மறைந்து கிடப்பது போன்றதன்மையில் ஆன்மா மறைபட்டுக்கிடக்கிறது.

யோகத்தைப்பற்றிக்கூறவந்த திருமூலர் முதலில் யோகத்திற்குரிய அங்கங்களைக் கூறுகின்றார். யோகத்திற்குரிய அங்கங்கள் எட்டு ஆகும். அவை

இயமம்,நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவற்றில் முதல் ஐந்தும் பகிரங்கயோகம் என்றும் ஏனைய மூன்றும் அந்தரங்கயோகம் என்றும் அழைக்கப்படும். இவற்றில் பிரத்தியாகாரம் என்ற அங்கமானது பகிரங்க யோகத்தையும் அந்தரங்க யோகத்தையும் இணைக்கின்ற ஒரு இணைப்புப் பாலமாக விளங்குகிறது.

யோக சாதனத்தைச் சகமார்க்கம் ( தோழமை நெறி) என அழைப்பர். சாதகன் இறைவனைத் தோழனாகப் பாவித்து அன்புசெய்யும் முறையே இதுவாகும். ஐம்பொறிகளையும் ஒடுக்குதல், சுவாசத்தை நிலைநிறுத்துதல், மனத்தை ஒருவழிப்படுத்தல், உடம்பின் ஆறு ஆதாரங்களையும் தரிசித்தல், உயிரை அவ் ஆதாரங்களுக்கு மேலே செலுத்துதல். சோதிவடிவான சிவப்பிரகாசத்தைக் கண்டு சமாதிகூடி ஆனந்தத்தில் அழுந்தியிருத்தல் ஆகியன யோகநெறியின் பாற்படும். யோகநெறியில் நிற்போர் சாரூப முத்தியைப்பெறுவர். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்பன யோகத்தில் சரியை ஆகும். பிரத்தியாகாரம், தாரணை என்பன யோகத்தில் கிரியை எனவும், தியானம் யோகத்தில் யோகம் எனவும் சமாதி யோகத்தில் ஞானம் எனவும் அழைக்கப்படும்.

அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்ற கொள்கையே யோகநெறியின் அடிப்படை. பேரண்டத்திற் காணப்படும் பொருள் இயக்கங்கள், விதிமுறைகள் ஆகிய யாவும் பிண்டமாகிய நம் உடலிலும் இருக்கின்றன. அண்டப் பெருவெளியில் நடைபெறும் பௌதீக இரசாயனமாற்றங்களும் அவற்றுக்கான விதிகளும் நம் உடலில் உண்டு. அண்டத்தின் சுருக்கமாகப்பிண்டமும், பிண்டத்தின் விரிவாக அண்டமும் இருக்கின்றன. எனவே, அண்டத்தைப்பிண்டத்திற் காணமுடியும் என்றும் பிண்டத்தை அண்டமாக மாற்றமுடியும் என்றும் யோகியர் உறுதியாக நம்புகின்றனர்.

இறைவனை அடைவதற்கான சரியான வழியைத் தெரியாமல் தடுமாற்றமடைந்து அல்லற் படாமல் இருப்பதற்கு அட்டாங்கயோக நெறியில் நிற்பதே சிறந்த வழியாகும். இந்நெறியில் நிற்பவர்களுக்கு ஞானயோகம் வாய்த்துச் சிவப்பேறு கிடைத்துவிடும். ஞானம் கைகூடாவிட்டாலும் பிறவிநோய் அகன்று விடும் என்பதனைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

**அந்நெறி, இந்நெறி என்னாது அட்டாங்கத்**
**தந்நெறி சென்று, சமாதியிலே நின்மின்;**
**நன்நெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகலாம்;**
**புன்னெறி ஆகத்திற் போக்கு இல்லை ஆகுமே.**

சமாதி நிலையே அட்டாங்க யோகத்தின் இறுதிப்படி. கடுமையான தொடர் பயிற்சியால் தான் இவ் இறுதி நிலையை எட்டமுடியும். யோக சமாதியை எட்டுவதற்கான பக்குவநிலைக்கு நம் உடலையும் மனத்தையும்

கொண்டுவரப்பயிலவேண்டியபயிற்சிகளை யோகத்தின் உறுப்புக்களாகக் கூறுகின்றனர். அட்டாங்கயோகத்திலே முதலில் கூறப்படும் இயமம் என்பது பிறருக்குத் தீங்கு செய்யாமலும், பிறரைத் துன்புறுத்தாமலும்வாழ்வது ஆகும். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றாலும் எந்த உயிர்க்கும் தீமை செய்யாது வாழ்தல் இயமம் எனப்படும்.

ஓர் உயிரைக் கொல்லாதவனும், பொய் கூறாதவனும், திருடாதவனும், அறிவில் தெளிவுடையவனும், நல்லவனும், அடக்கமுடையவனும், நீதி வழுவாதவனும், பகுத்து உண்பவனும், கள், காமம், ஆகிய தீய குணங்கள் இல்லாதவனும் அட்டாங்கயோகத்தின் முதற்படியாகிய இயம நெறியில் நிற்பவர்கள் ஆவார்கள்.

**கொல்லான், பொய் கூறான், களவு இலான், எண்குணன்**
**நல்லான், அடக்கம் உடையான், நடுச்செய்ய**
**வல்லான் பகுத்து உண்பான், மாசு இலான் கள்காமம்**
**இல்லான் இயமத்து இடைநின்றானே.**

எனத் திருமந்திரம் இயமநெறியில் நிற்பவர்களின் பண்புகளை விளக்கிக்கூறுகின்றது. புதர்களையும் காடுகளையும் அழித்து மேடு பள்ளங்களைச் சமப்படுத்திய பின்னரே கட்டடம் கட்ட முயல்வது போல ஆன்மீகப் பயணம் தொடங்குவதற்கு முன்பு பின்பற்ற வேண்டிய நெறிகளை இயமம் கூறுகிறது.

நியமமாவது நன்னெறியில் நின்று ஒழுகுதல் ஆகும். பெரும்பாலும் செய்யத்தகாதவற்றை இயமத்திலும் செய்யத்தக்கனவற்றை நியமத்திலும் திருமந்திரம் கூறுகிறது.

“ மனம் அடங்கினால் முத்தி; சினம் அடங்கினால் சித்தி” என்பது சித்த புருஷர்களின் வாக்காகும். மனம் அடங்கினால் புலன் அடங்கும். புலன் அடங்குவது தான் தவஒழுக்கம். தவ ஒழுக்கமே யோகம். அதுதான் சிவத்தியானம். நியமம் என்பது கட்டுப்படுத்துதல், நன்னெறியில் நிற்றல் எனப் பொருள்படும். ஜோதி வடிவமாக இருக்கின்ற இறைவன் உமையொரு பாகனாகவும் இருக்கிறான். சிவமும் சக்தியுமாகக் காட்சி தருகின்றான். உமையொரு பாகனைப் புரிந்து கொள்கின்றவன், ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதியாகிய பரம்பொருள் பராசக்தியுடன் இருக்கிறது என்பதைத் தெரிந்த கொள்பவன் நியமத்தன் ஆகின்றான்.

யோகப் பயிற்சியிலே பத்து நியமங்கள் உண்டு. தூய்மை, அருள், ஊண், சுருக்கம், பொறை, செவ்வை, வாய்மை, நிலைமை ஆகியவற்றைப் பின்பற்றுவதோடு காமம், கொலை, களவு ஆகியவற்றைத் தவிர்க்கவும் வேண்டும். இந்தப் பத்தையும் மேற்கொள்பவன் அட்டாங்கயோகத்தில் நியமநெறியில் நிற்பவன்ஆகிறான். நிலைமை என்பது உறுதி எனப்

பொருள் படும். எது நிலையானது என்பதை அறிந்து நிதானபுத்தியுடன் இருப்பதைத்தான் நிலைமைஎன்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தூய்மை, அருளூண் சுருக்கம், பொறை ,செவ்வை
வாய்மை, நிலைமை, வளர்த்தலே மற்றிவை
காமம், களவு , கொலையெனக் காண்பவை
நேமியீரைந்து நியமத்தனாமே.

உடம்பை அசையா நிலைக்கு உட்படுத்தவதும் உள்ளத்தை அசையா நிலைக்கு வசப்படுத்துவதும்யோக அப்பியாசத்தின் அவசியமான ஆரம்பங்களாகும். யோகசித்தி பெறுவதற்கு உடம்பின் அசைவற்ற நிலை அவசியமாகும். அசைவை உண்டாக்கத்தக்கதாகவும், சுகத்தை உண்டு பண்ணக்கூடியதாகவும் எது ஒன்று உள்ளதோ, அதுவே ஆசனம் எனப்படும். இந்த உடம்பு அசையா நிலை பெறுவதற்காக நன்னலம் பெறுவதற்காக ஆசனப்பயிற்சி செய்தல் அவசியமாகிறது. உடம்பு அசையா நிலை பெற்றால் தான் உள்ளமும் அசையா நிலைபெறும். உள்ளம் உள்முகமாகத் திரும்ப வேண்டுமானால் அது வெளிமுகமாக இழுக்கப்படாத நிலைக்கு உடம்பு துணைபுரிய வேண்டும். அவ்விதம் உடம்பு துணைபுரியும் வகையில் சில பயிற்சிகளுக்கு உடம்பை உள்ளாக்க வேண்டும். இவ்விதமான உடம்பிற்குரிய பயிற்சிகள் ஆசனங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

நம்மைச் சாத்வீக குணவயப்படுத்துவது ஆசனம் என்றே யோக சூடாமணி கூறுகிறது. உடலைப்பீடிக்கும் நோய்களை நீக்குவதற்கு ஆசனம் உதவுகின்றது. எனப் பதஞ்சலியின் யோகசூத்திரம் கூறுகிறது. ஆசனம்செய்வதற்குரிய இடம் சுத்தமானதாகவும், நறுமணம் கமழ்வதாகவும் காற்றோட்டம் உடையதாகவும் இருத்தல் வேண்டும்.

உடல் நலத்திற்கும் வளத்திற்கும் உறுதுணையாகும் இவ்வாசன வகைகளை யோக சாஸ்திர நூல்களில் விரிவாகக் காணலாம். ஆன்ம இன்பத்தை நோக்கும் யோகப்பயிற்சிக்கு உடலை அசையாமல் நேராக இருத்திக்கொள்ள வேண்டும் என்பதே அடிப்படையாகும். குறிப்பாக முதுகுத்தண்டு வடம் வளையாமல் நேராக நிமிர்ந்திருக்குமாறு அமர்ந்து கொள்ளவேண்டும். அவ்வாறு அமர்வது சூக்கும நாடிகளில் வாயுவின் ஓட்டத்தைச் சீர்படுத்த உதவிசெய்யும் உடல் ஒரு சுமையாகவோ தொல்லையாகவோ சாதகனுக்கு இருக்கக்கூடாது.

ஆன்ம இன்பம் சுவைக்க விரும்பும் யோகசாதகன் பத்மாசனமிட்டுப் பயில்வதே மிகவும் சிறந்தது. இடது பாதத்தை வலது தொடையிலும் வலது பாதத்தை இடது தொடையிலும் வைத்து முழந்தாள்ப் பகுதி தரையிற்படுமாறும் கைகளைத் தளர்த்தி முழந்தாள்மீது வைத்தும் நேராக நிமிர்ந்து அமரவேண்டும் கட்பார்வை மூக்கு நுனியை நோக்கி இருத்தல் வேண்டும். இந்நிலையே பத்மாசனம் எனப்படும்.

ஒரணையப்பதம் ஊருவின் மேலேறிட்டு
ஆரவலித்ததன் மேல்வைத்தழகுறச்
சீர்திகழ் கைகள் அதனைத் தன்மேல் வைக்கப்
பார்திகழ் பத்மாசனமெனலாகுமே

இந்து சமயமும் தத்துவங்களும் உலகை அடியோடு மறந்துவிட்டு ஏதோ வானத்திலே பறக்கிற மாதிரிச் சிற்சில உண்மைகளைக்கற்பிக்கின்றன. அதனாலே போதிய பலன் இம்மையிலும் இல்லை. மறுமையிலும் இருப்பதாக நம்புவதற்கில்லை என்று புதிதாக நம் இந்து சமயத்தினை ஆராய்ந்து வருகின்ற பிறநாட்டு அறிஞர்கள் சிலர் கருதுகிறார்கள். ஆனால் திருமந்திரத்திலே உடலைப் பேணிப்பாதுகாத்து வளர்ப்பதற்குரிய வழிவகைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. உடலை அருள் காரணமாக வளர்க்க வேண்டும். ஆண்டவன் இங்கே கோயில் கொண்டிருக்கின்றான் என்ற காரணத்தினாலே உடலைப் பேணவேண்டும் என்ற கருத்துக்கள் திருமந்திரத்திலே வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன.

உடல் வளமாக இல்லாமற்போனால் மனவளம், அறிவுவளம், என்பன சீராக இயங்கமாட்டாது. உடல் நோயில்லாமல் இருப்பதற்கு வகைசெய்துகொண்டால்தான் இறவனை எளிதில் நினைக்க முடியும். பொறியடக்கம், புலனடக்கம், மனஅடக்கம், ஆகிய மூன்றையும் ஒவ்வொரு மனிதனும் பெறவேண்டுமெனத் திருமந்திரம் வலியுறுத்துகிறது. தர்மத்தையே அடிப்படையாகக் கொண்டு மனிதன் மனத்தை அடக்கவேண்டும். நல்வழியிலே இவற்றைத் திருப்பவேண்டும்.

இந்த அழிகின்ற உலகத்திலே அழிகின்ற உடலை அழியாதவாறு காப்பாற்றுவது எப்படி? என்ற அடிப்படையில் அமைந்ததுதான் சித்தர்களின் நூல்கள் . இந்த உடம்பைக்கொண்டு நாம் செய்யவேண்டிய மகத்தான காரியங்கள் பல உண்டு. எனவே, இந்த உடலை உதாசீனம் செய்யவேண்டாம். காயசித்தி உபயங்களைக் கற்று, இந்த உடலினால் ஆகவேண்டிய மகத்தான காரியங்களை நாம் செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலே அமைந்ததுதான் சித்தர்களுடைய ஞான நூல்கள். சித்தர்களில் எல்லாம் பெரிய சித்தராகிய திருமூலரது திருமந்திரத்திலே பிராணாயாமம் என்ற அதிகாரத்தில் இதன் அடிப்படை விளக்கப்படுகின்றது.

அட்டாங்க யோகத்தில் குறிப்பிடப்படுகின்ற பிராணாயாமம் என்ற பகுதியில் மூச்சைக்கட்டுப்படுத்தும் முறைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. மூச்சைக்கட்டுப்படுத்துவதனால் இந்த உடம்பிற்குள்ளே பெரிய கிளர்ச்சியைச் செய்துவிடலாம்.

பிராணாயாமப் பயிற்சி செய்பவன் காற்றை இழுத்துத் தன்வசப்படுத்தி அடக்கியிருந்தால் உடல் பளிங்கைப்போல ஒளிவீசிப் பிரகாசிக்கும். உடல்

முதுமை அடைந்தாலும் இளமைத்தோற்றம் உண்டாகும். உடலில் நரை, திரை என்பன ஏற்படாது. இறைவன் உள்ளத்திற் குடி கொண்டு விட்டு நீங்காதவனாக விளங்குவான். இத்துடன் குருவருளும் கிடைத்துவிட்டால் உடலானது காற்றையும் விட மென்மையானதாகிவிடும்.

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு அளியனுமாமே

மூச்சுப்பயிற்சியில் நிறைவு கண்டவர்களின் முகம் எப்போதும் மலர்ந்திருக்கும். கண்கள் ஒளிவீசும். இவர்களிடம் சூக்கும சக்திகள் நிறைந்திருக்கும். மனம் அமைதி நிறைவுடையதாக இருக்கும், உடல் காற்றினும் இலேசாக இருக்கும் என இரகஸ்யமாலா என்னும் சாத்திரம் விரிவாகக் கூறுகிறது.

சைவ சமயிகளாகிய எங்களுக்கு வாராவரத்தாய் வந்து கிடைத்த மூலதனம் சைவத் திருமுறைகள். நம்மவர்களுக்குச் சிவபெருமானால் சைவ மானியமாக விடப்பட்ட விளை நிலம் திருமுறைகள். என்பதும் பொருந்தும். வெறுமனே தோத்திர நூல்கள், சைவஞான அனுபவ நூல்கள் என்ற மட்டிலன்றிச் சைவர்களான நமக்கு வாழ்க்கை நூல்களுமாஞ் சிறப்பை உணர்ந்து அவற்றை, நடைமுறை வாழ்வில் அநுசரித்து ஒழுக வேண்டும்.

**கலாநிதி பண்டிதர் மு. கந்தையா**

14

# சிவயோக சித்தி

**யோ**கம் மனிதனுடைய மனோநிலையை உயர்த்துகிறது. மனம் உயர்ந்தால் மனிதன் உயர்கிறான். யோகம் என்ற வடமொழிச் சொல்லுக்கு 'யூக்' ஒன்று சேர்வது என்பது பொருள். யோகம் என்பது சித்தவிருத்தியை நிரோதம் பண்ணுவது என்ற பதஞ்சலி மாமுனிவர் தமது யோக சூத்திரத்தில் கூறியுள்ளார். "யோகமே மோஷஹேது" என யோக சூத்திரம் கூறுகிறது. இருபத்தைந்து தத்துவங்களையும் கடந்து இருபத்தாறாம் தத்துவமாக இறைவன் இருக்கிறான் என யோகமதம் கூறுகிறது. மனத்தை ஒருமைப்படுத்தி, இறைவனுடைய திருவுருவத் தியானத்தில் ஈடுபடச்செய்து எல்லாம் மறந்த சமாதிநிலையை அடைவதே யோகத்தின் இலட்சியமாகும். யோகமார்க்கம் ஆன்மா இறைவனை அடைவதற்கான வழியாக ஞானவாயிலாக உள்ளது. என்றே சைவசிந்தாந்தம் கூறுகின்றது. மனம் சாந்தி அடைவதற்கு யோகம் வழிகாட்டுகிறது. என்றே யோக நூல்கள் கூறுகின்றன. ஹடயோகப் பிரதீபிகையில் அளவை, எல்லை வேறுபாட்டு உணர்ச்சி, துக்கம், நினைவு என்ற ஐந்தொழில்களையும் நீக்கி ஒன்றையும் பற்றாமல் மனம் அறிவாக நிலைபெறுதலே யோகம் என்று கூறப்பட்டுள்ளது. யோகம் மனத்தைப்பரிபக்குவப்படுத்துகின்றது. அதனால் அதி சூக்குமமான உணர்ச்சி உண்டாகிறது. உருவமற்ற அறிவே வடிவான ஆண்டவனை அடைய வழி காட்டுகிறது. என மாதவச் சிவஞானமுனிவர் சிவஞானபோதத்திற்குத் தாம் எழுதிய பாஷியத்தில் கூறியுள்ளார்.

அட்டாங்க யோகத்தில் இயமம் என்பது புலனடக்கத்தைக் குறிக்கின்றது. நமது மனத்தால்

ஏற்படும் சலனங்களை அடக்குதல் இயமம் எனப்படும். நற்குணங்கள் சீலங்கள் நிறைந்திருப்பது இயமம் ஆகும். புறக்காரணங்களை அடக்குதல், புறச்செயல்களைச் சீர்படுத்துதல் நியமம் எனப்படும். வரையறையான பழக்கங்களை உடையது நியமம் ஆகும். அதன் பின்பு உடம்பைச் சரிப்படுத்தித் தியானத்திற்கு ஏற்றபடி அமைப்பது ஆசனம் எனப்படும். சிரசுமுதல் குய்யம் வரை நிமிர்ந்து உட்காருதல் வேண்டும். உடல் நிமிர்ந்திருக்கும் இந்நிலையைக் கட்டுத்தறி என்று சித்தர்கள் கூறுவார்கள். எப்படித் துணிநெய்பவர்கள் நூலைஇழுத்துக் கட்டுவார்களோ அப்படியான நிலையில் உடலை நேராக நிமிர்த்தி இருக்கும் நிலை ஆதனம் எனப்படும். மூலத்திலுள்ள சக்தி ஆறு சக்கரங்களையும் தாண்டிச் சிரசை அடைவதற்கு தடைகள் எதுவும் இருக்கக்கூடாது. உடலில் இருக்கும் பிராணனை உடலிற் சீராக நிறுத்தும் முறை பிராணாயாமம் எனப்படும். மூச்சுக்காற்றைக் கட்டுப்படுத்துதலே பிராணாயாமம் ஆகும். அடங்காத குதிரைகளாக இருக்கின்ற மூச்சுக்காற்றை அடக்கியாளும் பயிற்சியே பிராணாயாமம் எனப்படும்.

நமது மனம் எப்போதும் வெளி உலகத்தைப்பற்றியே சிந்திக்கும். அதை வெளிச்செல்ல விடாமல் நம்முள்ளே நிறுத்துதல் பிரத்தியாகாரம் எனப்படும். எண்ணங்களை ஒன்று திரட்டுதல் என்பது இதன் பொருளாகும். பிரபஞ்சக் காட்டில்திரியும் மனம் என்னும் நரியைக் கம்பீர நடைபோடும் குதிரைபோல ஆக்கி அதன் மேல் இறைவனை ஏற்றி வைத்து விடுவதற்குப் பிரத்தியாகாரம் வழிகாட்டுகிறது. பலமுறை பல வழிகளில் தேடிக்கொண்டிருக்கிற இறைவனைப் பிரத்தியாகாரப்பழக்கத்தினால் எந்த நாளிலும் எந்த இடத்திலும் கண்டுகளிக்கலாம்.

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளாகிய இறைவனை இந்தப் பிண்டமாகிய உடலிலே காண்பதற்குப் பிரத்தியாகாரம் வழிகாட்டுகிறது. வெளியே செல்லும் இயல்புடைய மனத்தை உள்ளே பொருந்தும்படி செய்துவிட்டால் அக்காட்சியால் சிறிது சிறிதாக இருள் நீங்கி ஒளி கிடைத்துவிடும். இறை வாக்காகிய வேதங்களின் துணைகொண்டு தேடிய பரம்பொருளை நமது உடலில் கண்டு மகிழ்ச்சி அடையலாம்.

**கண்டு கண்டு உள்ளே கருத்து உறவாங்கிடில்**
**கொண்டு கொண்டு உள்ளே குணம் பல காணலாம்**
**பண்டு உகந்து எங்கும் பழமறை தேடியை**
**இன்று கண்டு இங்கே இருக்கலும் ஆமே.**

பிராணாயாமப்பயிற்சியை ஒழுங்காகச் செய்கின்ற பொழுது மன அடக்கம் ஏற்படும். " எரிகிறதை இழுத்தால் கொதிப்பது நிற்பதுபோல்" மூச்சடக்கம் சித்திக்கச் சித்திக்க மனம் அடங்கிவரும். மனம் அடங்கிய நிலையே பிரத்தியாகாரம் எனப்பட்டது. அடங்கிய மனம் ஐந்து நாழிகை வரையில் இறைவனிடம் ஒன்றியிருக்குமானால் அதுவே தாரணை ஆகும்.

தாரணை பல நாள் சித்திக்குமானால் உச்சிமுதல் உள்ளங்கால் வரை ஆனந்த நீர் பாயும். மனிதனைத் தெய்வமாகமாற்றும் பராசக்தி நமது உடம்பின் உச்சியில் இருக்கின்றாள். அவளுடைய கணவனாகிய மகேஸ்வரமூர்த்தி கீழே மூலாதாரத்தில் இருக்கின்றான். மூலாதாரத்தில் இருக்கின்ற குண்டலினி சக்தியாகிய மகேஸ்வர மூர்த்தியைப் புருவநடுவில் இருக்கும் பராசக்தியுடன் இணைய வைப்பதே தாரணைப் பயிற்சியினால் ஏற்படும் விளைவு ஆகும். இவ்வாறு குண்டலினி சக்தியை யோக சக்தியாக மாற்றி மேலே கொண்டு செல்பவர்கள் பேரானந்தமயமான அமிர்தத்தைச் சுவைப்பார்கள். இதனை உச்சியில் பிட்சை எடுத்தல் எனச் சித்தபுருஷர்கள் கூறுவார்கள்.

மூலாதாரத்தில் இருக்கும் மூர்த்தியைத் தாரணைப் பயிற்சியால் சிரசின்மீது எழுந்தருளப்பண்ணிப் பராசக்தியுடன் சேருமாறு செய்தால் வயது முதிர்ந்தவனும் இளமை உடையவன் ஆவான் என்பதைப் பின்வரும் திருமந்திரம் விளக்குகின்றது.

**மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை**
**மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை**
**ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்**
**பாலனும் ஆவான் பார்நந்தி ஆணையே**

தியானம் என்பது உணர்வும் நினைப்பும் ஒன்றி இருக்கின்ற நிலை ஆகும். ஏதேனும் ஒரு உறுப்பில் மனத்தை ஒருமுகப்படுத்துவது தாரணை எனப்படும். குறிப்பிட்ட உறுப்பொன்றில் மட்டுமல்லாமல் முழுமையிலும் மனத்தை ஒருமுகப்படுத்தி நிறுத்துவது தியானம் ஆகும். தாரணையின் முதிர்ந்த நிலையைத் தியானம் எனலாம். தியானநிலையில் உணர்வுகள் ஆன்மீக மயமாய் இருக்கும். தூய அறிவுச் சுடராய் விளங்கும் புலன்களாற் காணமுடியாத முழுமுதற் பொருளாம் பூரணத்தைத் தியானம் உணர்த்தும். சகுனத்தியானம், நிர்க்குணத் தியானம், எனத் தியானம் இருவகைப்படும். சகுணத்தியான நிலையில் இறைவனின் திருவுருவைக் கண்டு மனம் இன்புறும். சகுணத்தியான முதிர்ச்சியில் இறைவன் திரு உரு மறைந்திட மனம் அருவ நிலையில் ஆழ்ந்து ஆனந்தம் கொள்ளும். அருவத் தியானம் சமாதிநிலைக்கு வழிசெய்யும். சகுணத்தியானத்தில் தியானிக்கப்படும் இறையுரு மட்டுமே இன்ப ஊற்றாக இருக்கும். நிர்க்குணத்தியானத்தில் எல்லாவற்றையும் உள்ளடக்கிய முழுமையும் இன்ப ஊற்றாக இருக்கும். எங்கும் இன்பம், எதிலும் இன்பம் என்ற நிலைக்கு நிர்க்குணத் தியானம் கொண்டு செல்லும்.

தியானத்தில் அமர்ந்த பின் கண்கள் இரண்டையும் முற்றாக மூடிவிடாமல் நடு மூக்கில் வைத்தல் வேண்டும். அப்படி வைத்தால் அது தியானத்திற்கு அனுகூலமாக இருக்கும். உடலுக்கு அழிவு வராது. எவ்வித வாட்டமும் அதற்கு ஏற்படாது. மனம் தறிகெட்டு ஓடுவதும் இல்லை. வெளியுலக

உணர்வு ஏற்படாது. நான் என்ற அகங்காரமும் அடங்கி நிற்கும். எவ்வித வேட்கையும் தோன்றாது. தேட்டமும் விருப்பமும் இச்சையும் தேடுதலும் இல்லை. இந்த நிலையில் சரத்யா சிவசொரூபம் ஆகும்.

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவனாமே.

மன ஒருமுகப்பாட்டின் இறுதிநிலை சமாதி எனப்படும். தாரணை நிலையில் மனம் புறத்தளவில் ஒருமுகப்பட்டிருக்கும். இந்த ஒருமுகப்பாடு நிலைத்திருக்காது. மன உணர்வுகள் அவ்வப்போது ஒருமுகப்படுவதும் சிதறுவதுமாகவே இருக்கும். தியான நிலையில் ஒருமுகப்பாடு சிதறாமல் தொடர்ந்து நிலைத்திருக்கும். இவ் ஒருமுகப்பாடு மேலும் தீவிரமடைந்து ஆன்மாவைப் பிணைந்திருந்த தத்துவங்கள் அனைத்தையும் அழித்துவிடுகிறது. நான் என்ற தன் முனைப்புச் செயலற்றுப் போகிறது. தத்துவ அழுக்குகள் அகன்றுவிடவே ஆன்மா தன்னியல்பான சத் சித் ஆனந்தம் ஆகிறது. இவ்வாறு பக்குவப்பட்ட ஆன்மா பூரணத்திற் கலந்து ஒன்றாகிவிடும் நிலையைச் சமாதி எனலாம்.

உணர்வும் நினைவு மற்று உடம்பை மறந்து இறைபற்றில் ஆழ்ந்திருக்கின்ற யோகநிலை சமாதி எனப்படும். தவத்திலும் தியானத்திலும் ஈடுபட்டவர்களுக்கு சமாதிநிலை எய்துதல் சாத்தியமாகும். உள்ளத்தினுள்ளே சிவன் இருந்தாலும் அவன் வெளிப்படத் தோன்ற உதவுவது தியானமே ஆகும். சிவ சிந்தனையில் ஆழ்ந்து தியானயோகத்தில் திளைத்திருப்பவர்களுக்கு மனம் அடங்கி அசைவற்றிருக்கும். தியானயோகத்தில் ஈடுபட்டுச் சமாதிகூடி இருப்பவர்களுக்கு மனவெளியில் ஆண்டவன் அருள் ஊற்றெடுத்துப்பாயும். இறைவனைச் சிந்தையில் நிறுத்தித் தியானிப்பவர்கள் அருளமுதம் உண்டு, திளைக்கும் ஆற்றலைப் பெறுவார்கள். சிவயோகசித்தி பெற்றவர்கள் ஆவார்கள். உடம்புக்குள் அடைத்து வைத்துள்ள பிராணனை அலையவிடாது மூலாதாரத்தில் நிறுத்திச் சிந்தை கலங்காது, மனம் ஒன்றித் தியானம் செய்பவர்களுக்குச் சிவனருள் வீட்டுத்தோட்டத்தில் விளைந்த மாம்பழம் போல் வேண்டும்போதெல்லாம் விரும்பியபடி எடுத்துண்ணக்கூடியதாக உதவும். சமாதிநிலை சித்திக்கவே சிவயோகம் கைகூடும்.

தியானத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு மெய்ப்பொருளாகிய சிவனருள் கிட்டும். சிவனருள் கிட்டுவதால் மாது நல்லாளாகிய சக்தியும் சிவத்தோடு பொருந்தி நின்று நல்லருள் புரிவாள். தவமும் தியானமும் கைகூடவே மனத்திற் குடிகொண்டிருந்த கோபம் தானாகவே அகன்று விடும். மனம் அசையாது தராசுமுனை நேராக நிற்பது போல சிவ சிந்தையில் திளைத்து நிற்கும். இவ்வாறு நிற்கும் நிலையே சமாதிநிலை ஆகும்.

தலைப்பட்டு இருந்திடத் தத்துவம் கூடும்;
வலைப்பட்டு இருந்திடும் மாது நல்லாளும்;
குலைப்பட்டு இருந்திடும் கோபம் அகலும்;
துலைப்பட்டு இருந்திடும் தூங்க வல்லார்க்கே

தியானிக்கிறவனும் தியானமும் அற்றுத் தியானிக்கப்படும் பொருளே தானாக நிற்கும் நிலை சமாதி எனப்படும். சிவனை நினைப்பவன் சிவனாகவே மாறிவிடும் நிலை இதுவாகும். இந்நிலையில் உள்ளபோது ஆகாரம் வேண்டாம். நீரில் மூழ்கிக் கிடந்தாலும் நிலத்தில் புதையுண்டு கிடந்தாலும் உயிர் நீங்காது. சமாதி நிலையில் வல்லவர்கள் எல்லாம் சிவகரணமாய், இன்பநிலையில் என்றும் நிலைத்திருப்பர்.

ஒரு குரங்கு ஒரு பனை மரத்திலேறிக் கள்ளைப் பருகிற்று. இறங்கி வரும்போது அதை ஒரு தேள் கொட்டி விட்டது. அப்படிப்பட்ட குரங்கிற்கு மனதை ஒப்பிடுவது வழக்கம். இயற்கையாகவே மனது குரங்கைப் போலச் சஞ்சலமானது. காமமாகிய கள்ளின் வெறியும், குரோதமாகிய தேளின் விஷமும் சேர்ந்து அதை இன்னும் அதிக பதட்டமுள்ளதாக்குகிறது.

**–சிவானந்தவாரி பாஷ்யம்**

15

# அட்டமா சித்தி

மனிதனின் ஆத்மீக வளர்ச்சியின் இறுதி உச்சநிலை சமாதி என இந்து சமயசாஸ்திரங்கள் கூறுகின்றன. பிறவிப்பிணியிலிருந்து மனிதனை விடுவித்து எல்லையற்ற பேரானந்தத்தை நல்கும் பேரின்பமுத்தி நிலை இதுவாகும். பதஞ்சலி முனிவர் தமது யோகசூத்திரத்தில் இயமம் தொட்டுச் சமாதி ஈறாக அமைந்த எட்டுப் படிநிலைகளையும் தொகுத்துக்கூறியுள்ளார். சமாதி என்ற வடமொழிச்சொல் ஒன்றாகச் சேர்தல், ஒருங்குவைத்தல், குவித்தல் எனப் பலபொருள்படும். சமாதி நிலையினை ஒருவன் அடைவதற்கு யோக தரிசனம் பின்வரும் நடைமுறைச் சாத்தியமான ஏழு படிநிலைகளைப்பற்றிக் கூறுகிறது. இயமம் (ஒழுக்கக்கட்டுப்பாடு), நியமம் (விதிக்கப்பட்ட நற்பண்புகளை விருத்தி செய்தல்) ஆசனம் (சௌகர்யமான இருக்கை), பிராணாயாமம் (சுவாசச் சீராக்கம்), பிரத்தியாஹாரம் (புலன்களை அடக்குதல்), தாரணம் (மனத்தினை ஒருவழிநிறுத்துதல்) தியானம்(தியானித்தல்) என்பவையாகும். இந்த ஒழுங்குப்படிநிலையை ஒருவன் சிறப்பாக ஆற்றுவானாயின் அவனுக்குப் பேரானந்தமயமான சமாதிநிலை கைகூடும் என யோகதர்சனம் கூறுகிறது

உலகில் வாழும் போதே சமாதிநிலை கைவரப்பெற்றவர்கள் சீவன் முத்தர்கள் என்று அழைக்கப்படுவார்கள். இவர்கள் பிறவிப்பந்தத்திலிருந்து நீங்கியவர்களாகத் திகழ்வார்கள். சமாதி நிலையினை யோக நித்திரை, அறிதுயில் என்ற பதங்களாற் குறிப்பிடும்மரபு உண்டு. சீவன் சிவனாக நிற்கும் நிர்விகற்ப சமாதி நிலையை எய்திய ஒருவருக்கு வீட்டுக்கிரியைகள் பூசனை

போன்ற புற ஆசாரங்கள் தேவையற்றவையாகிவிடும். ஞானமார்க்கமாகிய நன்மார்க்க நெறி நின்று பரமுத்தியினைப்பெற்ற மாணிக்கவாசகப்பெருமான் தனது திருப்படையாட்சிப்பாடல்களில் இதனைத் தெளிவாக விளக்குகிறார். "கண்களிரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே" "மாலறியா மலர்ப்பாதம் இரண்டும் வணங்குதும்ஆகாதே" "மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே" என்ற திருவாசகப் பாடல் வரிகள் இதனைத தெளிவாக விளக்குகின்றன.

சமாதிநிலை அடைந்தோர் உலக வாழ்க்கையில் விருப்பு வெறுப்பு அற்றவர்களாய், சுக துக்கங்களிற் சமநோக்கு உடையவராய், தாம் செய்யும் பலன்களின் கர்மங்களை எதிர்பார்க்காதவர்களாய் நிலைபெற்ற உதவியுடன் உலவித்திரிவர் எனப் பகவத் கீதை கூறும். இக்காலத்தில் யோக மார்க்கத்தின் மூலம் சமாதிநிலை எய்தியவர் மகான் அரவிந்தர் என்றும், ஞானமார்க்கம் மூலம் சமாதி நிலை அடைந்தவர் ரமணமகரிஷி என்றும், பக்தி யோகம், ஞானயோகம், ராஜயோகம் ஆகிய மூன்று நெறிகளையும் உலகினர்க்கு எடுத்துக்காட்டும் முகமாக அனுசரித்து சமாதிநிலையை எய்தியவர் இராமகிருஷ்ணர் என்றும் கூறப்படுகிறது.

யோக சமாதியே யோகப்பயிற்சியின் இறுதிப் படி ஆகும். கடுமையான தொடர்பயிற்சியால்தான் இவ்விறுதிப் படியினை எட்டமுடியும். யோக சமாதியை எட்டுவதற்கான பக்குவ நிலைக்கு நமது உடலையும் மனத்தையும் கொண்டுவரப் பயில வேண்டிய பயிற்சிகள் யோகத்தின் உறுப்புக்களாகக் கூறப்பட்டுள்ளது. அட்டாங்க யோகநெறியைக் கடைப்பிடிப்பதால் அடையும் நன்மைகளை அட்டாங்கயோகப்பேறு என்ற பகுதியில் வரும் எட்டுப்பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன. இந்நெறியில் நின்று படிப்படியாக முயல்பவர்களுக்கு சிவப்பேறு கிடைக்கும் எனத் திருமந்திரம் கூறுகிறது. சிவபிரானது திருவடியைத் துணையாகப் பற்றி அன்பு செய்து, அவனது புகழைக்கற்றும், கேட்டும் ஒழுகுபவர்களை முனிவர் குழாம் முழுவதும் ஒருங்கு சேர்ந்து வந்து சுவர்க்கலோகத்திற்கு அழைத்துச்செல்லும் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகின்றது.

பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்
கற்றிருந்தாங்கே கருதுமவர்கட்கு
முற்றெழுந்தாங்கே முனிவரெதிர் வரத்
தெற்றுஞ் சிவபதஞ் சேரலுமாமே.

சித்து என்னுஞ்சொல் தெளிந்த ஞானத்தைக் குறிக்கும். எனவே ஞானம் பெற்றவர்களைச் சித்தர் எனக்கூறுவது பொருந்தும். யோக நிலையில் உயர்ந்த நிலைக்குச்செல்வது சித்தி பெறுதல் ஆகும். சித்தி பெற்றவர்களைச் சிவனோடு ஒத்தவர்களாகக் கருதி மக்கள் மதித்துப் போற்றுகின்றனர். "சித்தர் போக்கு சிவன் போக்கு" என்பது பழமொழி. சித்தத்தைச் சிவன்பால்

வைத்துச் சிந்தனையில் மூழ்க மூழ்கச் சித்த விகாரம் ஒடுங்கும். சித்த விகாரம் ஒடுங்க ஆத்ம சக்தி பீறிட்டு எழும். இந்த ஆத்ம சத்தி தோன்றுவதைத் தான் " ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" என மணிவாசகனார் தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்தில் குறிப்பிடுகின்றார். ஆத்ம சக்தி அகத்தே தோன்றிவிட்டால் சித்துக்கள் கைகூடும். அச்சக்தியால் செயற்கரிய செயல்களைச் செய்யும் ஆற்றலைப் பெற்றுவிடலாம்.

சித்தர்கள் பலவகையான அருள் விளையாட்டுக்களைச் செய்வார்கள். எண்ணிறந்த சித்தர்களின் செயற்பாடுகளில் எட்டினை மட்டும் தேர்ந்தெடுத்து அவற்றை எண்பெருஞ்சித்திகள் (அட்டமா சித்திகள் ) என்று கூறுவர். திருவிளையாடற் புராணத்தின் கூடற்காண்டத்தில் எண்பெருஞ்சித்திகள் பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அணிமா - அணுவைப்போல் சிறிதாதல்
மகிமா - மேருமலையைப்போல பெரிய வடிவம் கொள்ளுதல்
லகிமா - காற்றைப்போல் இலேசாயிருத்தல்
கரிமா - எளிய கனமற்ற ஒன்றை மலைபோல் கனமாய் இருக்குமாறு மாற்றுதல்
பிராப்தி - எல்லாவற்றையும் ஆளுதல்
பிரகாமியம் - கூடுவிட்டுக் கூடு பாய்தல்
ஈசத்துவம் - விரும்பியவற்றைச் செய்து முடித்து அனுபவித்தல்
வசித்துவம் - எல்லாவற்றையும் வசப்படுத்துதல்

மன ஒருமைப்பாட்டை அடைந்து எட்டுத்திசைகளிலும் மேலாக விளங்கும் அடியார்களுக்கு அட்டமா சித்திகளும் கைகூடும். பணிதல், நிலத்தில் வீழ்ந்து வணங்குதல், தொழுதல், கும்பிடுதல் ஆகிய செயற்பாடுகளின் ஊடாக அட்டமாசித்திகளைச் செய்யும் ஆற்றலைப் பெறலாம்.

பணிந்தெண் திசையும் பரமனை நாடித்
துணிந்தெண் திசையுந் தொழுதெம் பிரானை
அணிந்தெண் திசையினும் அட்டமாசித்தி
தணிந்தெண் திசை சென்று தாபித்தவாறே

சுற்றத் தொடர்புகள் யோகத்திற்குத் தடையாகும். யோகமின்றி நூலறிவு, உலகியலறிவு, இயற்கை நுண்ணறிவு முதலிய அறிவுகளினால் சித்தி கிடைக்க மாட்டாது. " உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை" என்ற பொறையினாலும், ஞானகுருவின் அறிவுறுத்தலாலும் ஏற்படும் யோக நிலையே அட்டமா சித்திகளும் பெறுவதற்கு வழிகாட்டும். பன்னிரண்டு ஆண்டுகள் யோகப்பயிற்சி செய்தால் மறைவிலா அறிவாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானம் கிடைத்து விடும்.

நாடும் பிணியாகும் நம்சனம் சூழ்ந்தக்கால்
நீடும் கலை கல்வி நீள்மேதை கூர்ஞானம்

பீடொன்றினால் வாயாச் சித்தி பேதத்தின்
நீடுந் துரங்கேட்டல் நீண் முடிவீராறே

பர சித்தியாகிய இந்த அட்டமா சித்திகளையும் பெற்று இவற்றால் சிவப்பேறும் கைகூடப்பெற்றவரே பரலோகத்தை அடைபவர், ஆகையால் அவர்களே சித்தர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். தங்கள் விருப்பம் எல்லாவற்றையும் சிவனது திருவருள்வியாபகத்துள் ஒடுக்கி அத்திருவருளையே கண்டு கொண்டிருத்தலே உண்மையான யோகக்காட்சியாகும். சித்தர்கள் சிவலோகத்தை அடைந்து சிவபரம்பொருளைக் கண்டு இன்புற்றிருப்பர்.

எட்டிவை தன்னோடெழிற் பரங்கைகூடப்
பட்டவர் சித்தர் பரலோகஞ் சேர்தலால்
இட்டமதுள்ளே இருக்கல் பரகாட்சி
எட்டு வரப்புமிடந்தானின் றெட்டுமே

ஆச்சிரம தர்மத்தின் அச்சாணிபோன்று இருப்பது இல்லறமாகும். இல்லறத்தின் பண்பு அன்பு பயன் அறம் என்பதை

" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது''

எனத் தமிழ்மறையாகிய திருக்குறள் கூறுகிறது. இல்லறம் ஏற்றும் அதனை ஒழுங்குற நடத்தி மனைவி மக்கள் பெற்றோர்க்கு உதவாமல் பொய்த்துறவியாகிப் போகின்றவர்களைப் பின்வரும் சித்தர் பாடல் கண்டிக்கிறது.

காவியும் சடைமுடி கமண்டலங்கள் ஆசனம்
தாவுருத்திராட்சம் யோகத் தண்டு கொண்ட மாடுகள்
தேவியை அலையவிட்டுத் தேசம் எங்கும் சுற்றியே
பாவி என்ன வீடெல்லாம் பருக்கை கேட்டலைவரே.

கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தை வலமாய்ச் சுற்றி வந்து கால் வருத்தம் அடையத் தலயாத்திரை செய்வதால் பயன் எதுவும் இல்லை. பேரன்பாகிய காதலினால்முழுமுதற் பொருளாகிய சிவனை அகத்திலே காணத்தக்க மெய்யடியார்கள் அகமுக நாட்டம் கொண்டவர்களாக இருப்பார்கள். அன்புடன் இறைவனைக் கண்டு இன்பத்தை அடைபவர்கள், இறைவன் எங்கும் இருக்கிறான் என நினைத்து வழிபட்டுப் பயனை அடைவார்கள். திருவருட்காட்சிக்கு சிவயோகம் இன்றியமையாததாகும்.

ஓதம் ஒலிக்கும் உலகை வலம் வந்து
பாதங்கள் நோவ நடந்தும் பயனில்லை
காதலில் அண்ணலைக் காண இனியவர்
நாதன் இருந்த நகரறிவாறே

பஞ்சபூதங்களாலான உடம்பு உயிர் நீங்கிய பின்பு பஞ்சபூதங்களுக்கே இரையாகி விடுகிறது. உடம்பிலே உள்ள பஞ்சபூதங்களின் சக்திகெட உடல் தானாகவே அழியும். இறப்பு நேருங்காலத்து இப்புலன் உணர்வுகள் ஒன்றன் பின் ஒன்றாகக் கெடுகின்றன. முதலில் பரிச உணர்வும் முடிவில் ஓசை உணர்வும் அவற்றுக்கிடையே ஏனைய புலனுணர்வுகளும் கெடும். யோகநெறியில் நிற்பவர்களுக்கு வாழ்நாள் கூடுவது போல யோகநெறியில் நில்லாதவர்களுக்கு வாழ்நாள் குறுகிவிடும்.

ஓசையில் ஏழும் ஒளியின் கண் ஐந்தும்
நாசியில் மூன்றும் நாவில் இரண்டும்
தேசியும் தேசனும் தன்னிற் பிரியுநாள்
மாசறு சோதி வகுத்து வைத்தானே

வழிபாடு. வாழ்த்து, தியானம் தலயாத்திரை, மலர்ப் பூசனை, சடங்குகள், நியமங்கள் இவை எல்லாம் நன்றே: ஆயின் இவை பக்தியின் ஒரு பக்கமே: மறுபக்கம் ஒன்று உண்டு. அதுவே ஒளி மிக்க பக்கம். அஃதாவது ஏழைகள், தாழ்த்தப் பட்டோர் வசதிகள் மறுக்கப்பட்டோர் முதலியோர்க்குத் தொண்டு செய்வது தான் உண்மையான பக்தி

**–காந்தியடிகள்**

# காயசித்தி உபாயம்

16

திருமந்திரம் நிறைமொழிமாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி நூலாகவே திகழ்கிறது. பாரத நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக ஞானிகளின் அனுபவ உணர்வில் நிலவிவந்துள்ள தத்துவங்களை உபதேசிப்பதற்காக எழுந்த மறைநூலே திருமந்திரம் ஆகும். தவத்திலிருந்து பிறந்த சொற்களானபடியால் அவற்றின் ஒலியிலும் நடையிலும் தெய்வீக சக்தி பிரகாசிக்கிறது. வெளிமுகமாகச்செல்லும் ஆன்மாவை உள்முகப்படுத்தி அங்கே இன்ப ஊற்றைக் காணச் செய்வதே திருமூலர் போன்ற மகான்களின் உபதேசமாகும்.

உடம்பை உறுதியாக வைத்திருப்பதற்கான பயிற்சிகளில் யோகப்பயிற்சியும் ஒன்றாகும். யோக புருஷராகிய திருமூலர் தாம் யோகப்பயிற்சியினால் அடைந்த பலன்களைத் தமிழ்- மந்திரமாகிய திருமந்திரத்திலே தந்துள்ளார். அழிந்து போகின்ற இந்த உடம்பை உயிர் இருக்கும்வரை ஆரோக்கியத்தோடும் உறுதியோடும் இயங்கும்படி பாதுகாக்கின்ற பயிற்சிக்கு காயசித்தி உபாயம் என்ற பெயர் வழங்கப்படுகின்றது. உடம்பைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை தவயோகி வற்புறுத்துகின்றார்.

இந்த உடம்பைக் கொண்டுதான் ஆன்மாவின் நற்கதிக்குரிய உபாயங்களைச் செய்யவேண்டும். ஆன்மா கடைத்தேறுவதற்கான உபாயங்களைச் செய்யாமல் உயிர் உடலை விட்டு நீங்கிவிட்டால் அரிய மானிடப்பிறவியை எடுத்தும் ஆன்மாவிற்கு எதுவித பலனும் இல்லை.

"கூத்தாடிக் கூத்தாடிப்போட்டுடைத்தாண்டி"

என்ற சித்தர் வாக்கே உண்மையாகிவிடும் ஆன்மா அநாதியான பொருள் என்றுமே அழியாது என்பதே சைவசித்தாந்தத்தின் முடிபாகும். உடம்பு அழிந்து விட்டால் உயிருமே அழிந்து விடுகிறது எனத் திருமூலர் கூறுகிறார். உயிர் அழிவது என்றால் அடையவேண்டிய பயனை அடையாமல் நஷ்டம் அடைகிறது என்பதே திருமூலரின் கருத்தாகும். உடம்பைக் கருவியாகக் கொண்டு மெய்யறிவைப்பெறாத ஆன்மா உடம்பு அழிந்தபிறகு கழிவிரக்கம் கொள்வதால் பயன் எதுவும் இல்லை. உயிரைப்பாதுகாக்கும் வழியைத் தெரிந்து உடம்பைப் பாதுகாத்தேன் எனத் திருமூலர் தனது அனுபவத்தைப் பின்வரும் பாடலின் ஊடாகக் கூறுகின்றார்.

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே**

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கின்ற பரம்பொருளாகிய இறைவனை இந்தப் பிண்டமாகிய உடம்பின் உள்ளே காணலாம் எனத் திருமந்திரம் கூறுகிறது. கோயிலைப்பரிசுத்தமாகவும் புனிதமாகவும் பாதுகாப்பது போல இந்த உடம்பையும் பாதுகாக்கவேண்டும். சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த நிலையில் உள்ளத்தைக் கோயிலாக்கி வாழ்ந்த தவ சீலராகிய திருமூலர் உடம்பையும் இறைவன் வீற்றிருக்கின்ற திருக்கோயிலாகப் பேணவேண்டும் என வற்புறுத்துகின்றார். ஆன்ம ஞானம் கிடைப்பதற்கு முன்பு உடம்பைத் துச்சமாகக் கருதி உதாசினம் செய்தேன். ஆனால் இந்த உடம்புக்குள்ளே உறுதுணையான பரம்பொருளைக் கண்டபின்பு அந்த உதாசீனத்தைக் கைவிட்டு இவ் உடம்பை நன்றாகப் பாதுகாக்க ஆரம்பித்தேன் எனத் திருமூலர் கூறுகின்றார். " நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற்பொருட்டேயாம்என்பது நாவலர் பெருமானின் வாக்கும் ஆகும். இறைவன் வீற்றிருக்கும் இந்தப்புனிதமான கோயிலாகிய உடம்பை நாம் இறந்த உயிர்களைப்புதைக்கும் சுடுகாடாக மாற்றக்கூடாது. உடம்பைக்கருவியாகக் கொண்டு திருவருளைப்பெறலாம் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடலின் ஊடாக அறிய முடிகிறது.

**உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்**
**உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று**
**உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே.**

"அளவுக்கு மிஞ்சிஉண்ணாதே, அளவுக்கு மிஞ்சி உறங்காதே, அளவுக்கு மிஞ்சி உளறாதே " என்பது நமது முன்னோர்கள் நமக்குக் கூறிவைத்த அறிவுரைகளாகும். தாளம் பிசகாமல் வாத்தியங்களை இசைப்பது போல நாட்டியத்தை ஆடுவதுபோல மனித வாழ்வில் நாம் செய்யும் செயல்கள் அனைத்திலும் நிதானம் இருக்க வேண்டும். உயிர்ச்சத்தாக இருக்கும்

ஜீவசக்தியை அதிகம் விரயம் செய்யக்கூடாது. அளவுக்க மிஞ்சி விரயம் செய்தால்தீராத நோய்களுக்கு ஆளாகவேண்டிவரும். பிரம்மச்சரிய விரதத்தை இறுக்கமாகக் கடைப்பிடிப்பவர்களிடம் அபார சக்திதோன்றும். வீரத்துறவி சுவாமி விவேகானந்தரிடம் இத்தகைய ஆற்றல் சிறப்புப் பெற்றிருந்ததை நாம் அனைவரும் அறிவோம். கருவாய் செயலற்றிருந்தால் மனிதனுக்கு எதுவித இழப்பும் இல்லை, என்கிறார் திருமூலர்.

நாம் உண்ணும் உணவிற்கும் நம்மிடையே தோன்றும் குணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவே யோகசாத்திர நூல்கள் கூறுகின்றன. ஊன், உணவுகளை மிகுதியாக உண்பவர்களிடம் இராட்சதகுணம் மிகுந்து நிற்கும். புளித்த உணவுகளை உண்பவர்களிடம் தாமத குணம் மேலோங்கி நிற்கும். மற்ற உயிர்களை வதை செய்து உண்ணாது மரக்கறி உணவுகளை உண்பவர்களிடம் சாத்வீக குணம் விஞ்சி நிற்கும். உயிர் வாழ்வதற்காக உண்ணவேண்டுமே ஒழிய உண்பதற்காக வாழக்கூடாது. சிலர் வயிற்றை வளர்ப்பதையே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். உணவைச் சுருக்கினால் உயிர்ப்பு மிகுதியாகத் தோன்றும். ஆரோக்கியமான உடலுடன் நீண்ட ஆயுள்பெற்று வாழலாம். தியானிப்பவன்தியானிக்கப்படும் பொருளாக மாறிவிடுகின்றான். (தியானத் யாத்துருதேய ரூபா) என்றே லலிதா சகஸ்ர நாமமும் கூறுகிறது. யோக நெறியில் நிற்பவர்கள் சீவனுக்குள்ளே சிவமணம் பூத்துச் சிவனாகவே மாறிவிடுவார்கள்.

அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கின் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலவுள
கண்டம் கறுத்த கபாலியும் ஆமே.

ஐம்பொறிகளின் துணையினால் தான் ஆன்மா அறிவைப்பெறுகிறது. பொறிகளில் துணையினால் அறிவைப்பெறும் ஆன்மாவை அறிவான பொருள் என்று கூறுவது பொருந்தாது என்பதைப்

பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவென்ற பேர் நன்றற.

எனத் திருவருட்பயன் கூறுகிறது. ஐம்புலன்களைப் பொருந்தி அறிகின்ற அறிவு, ஐவகைக்கருவிகளைப்பற்றிய அறிவை வேறாக இருந்து அறியும் ஆறாம் அறிவு, பொருள்களின் நன்மை, தீமைகளைப்பற்றிய ஆராய்ச்சி உடைய ஏழாவதான அறிவு, கல்வியால் பெற்ற எட்டாவதான அறிவு, அந்த எட்டுடன் வரும் அனுபவம் பற்றிய அறிவு சேர்ந்த போதுள்ள ஒன்பதாம் அறிவு, ஒன்பது வகை அறிவுக்குக்காரணம் சிவசக்தியாகும். என்பதை அறிந்து அதைப்பிரியாமல் நிற்கும் பதிஞானமான பத்தாம் அறிவு, ஆகிய பலவகையான அறிவின் இயல்பை அறிந்து அதற்கேற்ப நடக்காத மானிடர்கள்

காலம் வரையறை செய்யப்பட்டு அழிகின்றனர். பதிஞானமாகிய சிவஞானத்தைப்பெற்றவர்களுக்கு அழிவே இல்லை. "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" தான் ஆன்ம விடுதலைக்கு வழிவகுக்கும் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

உற்றறிவு ஐந்தும் உணர்ந்தறிவு ஆறு ஏழும்
கற்றறிவு எட்டும் கலந்தறிவு ஒன்பதும்
பற்றிய பத்தும் பலவகை நாழிகை
அற்றறியாது அழிகின்றவாறே.

இறையருளைப் பெற்றவர்களுக்கு வாழ்நாளின் எல்லை அகன்று விடும். அறிவுக்கு அறிவாய் நின்று இயங்குகின்ற சிவப்பரம்பொருளை அகத்திலே தியானிப்பவர்களுக்கு பிறப்புமில்லை, இறப்புமில்லை. "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்ற மானிட ஜன்மங்களாக அவர்கள் இருப்பதில்லை. அத்தகைய மெய்யுணர்வினைப் பெற்றவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழும் தெய்வமாகவே போற்றப்படுவார்கள். இவ்வாறு இறையருளைப்பெற்றவர்கள் நரர்களாகிய மானிடர்களுக்குத் தலைவராகி விடுவார்கள். சிவனுடன் இரண்டறக்கூடும் திருவருள் பெற்றவர்கள் எய்தும் பேரின்பப் பெருவாழ்வு சொல்லில் அடங்காது.

நாட வல்லார்க்கு நமன் இல்லை; கேடு இல்லை;
நாட வல்லார்கள் நரபதியாய் நிற்பர்;
தேட வல்லார்கள் தெரிந்த பொருள் இது
கூட வல்லார்கட்குக் கூறலும் ஆமே.

வாழ்நளை அதிகரிப்பதற்குரிய தேர்வு ஆயுள்பரீட்சை எனப்படும். அட்டாங்க யோகத்தில் ஏற்படும் பிராணாயாமப் பயிற்சி ஆயுளை அதிகரிக்கச்செய்யும். மூச்சு நீண்டு சென்றால் ஆயுள் குறையும். குறைந்து சென்றால் ஆயுள் நீளும். இறைவனுடைய அருட்சக்தியான பராசக்தியே ஞானியர்க்கு சிவத்தைக்கூட்டி வைக்கின்றார்.

கேசரி யோகத்தை அடயோகம், இலம்பிகாயோகம், இராஜயோகம் என மூன்றாகத் திருமந்திரம் பிரித்துக்கூறுகிறது. உடலை வருத்தி பிராணாயாமப் பயிற்சி செய்து தேக சித்தி அடைந்து சமாதிநிலையைப்பெறுதல் அடயோகமுறையாகும். இலயயோக முறையில் நாக்கை மடித்து உள்நாக்குப் பிரதேசத்தில் உள்ள துவாரத்தை அடைத்து பிராணசெயம் பெற்றுச் சமாதி நிலையைப்பெறுதல் இலம்பிகா யோகம் எனப்படும். அறிவினால் அகண்ட பொருளைத் தியானம் செய்து கண்டப்பொருளாகிய தேகத்தில் சக்தியை மாற்றி விடுகின்ற சமாதி நிலையை அடைதல் இராஜயோகம் எனப்படும்.

போகத்தை யோகமயமாக்கும் வழியைப் பரியங்க யோகத்தில் திருமூலர் குறிப்பிடுகிறார். மனித உடலில் கீழ் நோக்குதல் மேல்

நோக்கியிருத்தல் என்ற இரண்டு நிலைகள் உள்ளன. உலகத்தை நோக்குதலால் சோர்வும் இறைவனை நோக்குதலால் சோர்வின்மையும் உண்டாகும். உடம்பின் மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை ஆறு ஆதாரங்களின் ஊடாக மேலே எழுப்புகின்ற ஞானிகள் அதனை யோக சக்தியாக மாற்றுகிறார்கள். பேரானந்தமயமான அமிர்தத்தைச் சுவைக்கின்றார்கள். இதனை உச்சியில் பிச்சை எடுத்தல் என சித்த புருஷர்கள் கூறுகிறார்கள். பிரபஞ்ச மயக்கத்தில் வாழ்பவர்கள் குண்டலினி சக்தியைப் போக சக்தியாக மாற்றுகிறார்கள். யோக சக்தியாக மாற்றி அமிர்தத்தைச் சுவைத்தலை மாங்காய்ப்பால் என்றும் போக சக்தியாக மாற்றி வீண்விரயம் செய்வதை தேங்காய்ப்பால் என்றும் குதம்பைச் சித்தர் பின்வரும் பாடலின் ஊடாகக் குறிப்பிடுகின்றார்.

மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி – குதம்பாய்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி

பரியங்கயோகம் என்பது ஆண் பெண் உறவைப்பற்றிக் கூறுகின்றது. தலைவனும் தலைவியும் விரும்பிச்செய்யும் யோகத்தில் சந்திர மண்டலம் விளங்கிச் சிரசின்மேல் ஒளியைப்பெறுவர். இவ்வொளியில் இருமனமும் பொருந்தியிருத்தலால் அங்கத்தில் ஒரு காலமும் தளர்ச்சி இருக்காது. இன்பத்தைத் துய்க்கும் போதும் இறைவனை நினைக்க வேண்டும் எனத் திருமந்திரம்கூறுகிறது. இவ்வாறு தெய்வீக நினைப்போடு இணையும் தம்பதிகளின் இணைவால் ஏற்படும் விளைவும் தெய்வீகமானதாகவே இருக்கும். நன்மக்கட்பேறு கிடைப்பதற்கு இத்தகைய இணைவு அவசியமானதாகும்.

வீரியம் உடலில் தங்கும்படி செய்தல் அமுரிதாரணை எனப்படும். உடலில் திருவருள் துணையால் ஊறும் சிவக்குடிநீர் ஒன்றுண்டு. இந்தச் சிவநீராகிய அமிர்தத்தைப் பருகிறவர்களுக்கு சிவஒளி மேலோங்கும் மனமும் ஒடுங்கும். உடல் பொன்மேனிபோலமாறும். வெள்ளைநரமயிரும் மிகக் கருமையாகமாறும். யோக நிஷ்டையில் இருந்து குண்டலினியை மேலே எழுப்பி உச்சியில் அமிர்தத்தை சுவைப்பவர்களுக்கு இந்நிலை ஏற்படும். இந்த அமிர்தத்தை சிறந்த மருந்தென்றும், தெய்வமருந்தென்றும், திருவருட்சக்தியின் மருந்தென்றும் நந்தியெம்பெருமானாகிய சிவன் கூறியுள்ளார். உண்மையுணர்வார் இதனை ஆதி மருந்தெனவும், அகன்ற உலகினை விளக்கும் உடலொளி விளக்கு எனவும் கூறினர். இம் மருந்தின் பெருமை இயம்புதற்கரியது.

வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்
ஆதி மருந்தென்றறிவார் அகலிடஞ்
சோதி மருந்திது சொல்ல வொண்ணாதே

மனிதர்களாகிய நாம் நாளாந்தம் மூச்சுவிடுகின்றபோது மூச்சினை உள்வாங்குவதிலும் பார்க்க வெளியில் விடுதலே கூடுதலாகக் காணப்படுகிறது. வரவுக்கு மிகுதியாகச் செலவு செய்வது போல விரைவில் காலத்தை அளக்கும் காலன் கையில் நாம் அகப்பட்டு விடுகின்றோம். அகத்தவமுடையோர் உயிர்ப்புப்பயிற்சியால் மூச்சை அளவாகவிட்டுக்கூடுதலாக உள்ளே தங்க வைத்துக்கொள்கின்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு மூச்சை ஒரு சிறிதும் வெளியில் விடாமல் உள்ளேயே அடக்கி வைத்துக்கொள்கிறார்கள். அதனால் அவர்கள் காலம் அளவின்றி நீள்கிறது. திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார் என்ற வரலாறும் இத்தகையதே ஆகும். இவர்கள் தாமாகவே வேண்டும்போது தம் ஆவியை நீத்துக்கொள்வர். தங்கள் பயிற்சியாகிய நாழியால் யமனை அளக்கின்றனர் சிவனை இடையறாது எண்ணும் அடியவனிடம் யமனுக்கு வேலையில்லை. மார்க்கண்டேயர் சரித்திரம் இதனை நமக்கு உணர்த்துகிறது. "பக்தி வலையில் படுவோன் காண்க" என்ற திருவாசக வரிகளுக்கு ஏற்ப மார்க்கண்டேயருடைய பக்தி வலையில் சிவன் அகப்பட்டுக்கொண்டார். மார்க்கண்டேயருக்காக சிவன் யமனைக் காலால் உதைத்தார். மேலும் இத்தகைய யோகிகள் தூய பர வெளியில் திளைத்திருந்து மீண்டும் அவ்வுடம்புடனே தோன்றுவர். இதனால் அவர்கள் ஊழிமுதல்வரும் ஆகின்றனர். இந்த முதன்மை ஸ்தானம் அவர்களுக்கு சிவன் அருளால் கிடைக்கப்பெற்றதாகும். அகத்தவ முயற்சியால் உடம்பில் நெடுநாள் தங்கவல்லாரை சசிவண்ணர் எனத் திருமந்திரம் கூறுகிறது.

ஊழி பிரியாதிருக்கின்ற யோகிகள்
நாழிகையாக நமனை அளப்பர்கள்
ஊழி முதலாய் உயர்வார் உலகினில்
தாழ வல்லார் இச் சசி வண்ணராமே.

அன்பர் பணியிலே இன்பநிலை கண்டவர் அப்பர். மனிதக் காதலைத் தெய்வக் காதலாக மாற்றிய புண்ணியர், அகிம்சையே அவர் ஆயுதம். தொண்டே அவர் கடமை. இவருடைய பாடல்களைப் படிப்பதால் நம்மைச் சூழ்ந்துள்ள அக இருளும் புற இருளும் மறைந்தோடும். உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகும்.

–கோ. பூவாராகன்

# சிவமூல மந்திரம் - மந்திர யோகம்

17

இறைவன் ஒலிவடிவாகவும், ஒளி வடிவாகவும் இருக்கிறான் என்றே வேதங்கள் கூறுகின்றன. ஒலி வடிவாக இருக்கின்ற இறைவனை மந்திரங்களாலும், ஒளி வடிவாக இருக்கின்ற இறைவனை அக்கினி யிலும் வழிபடும் வழிபாட்டு நெறியினையே வேதங்கள் எடுத்து விளக்குகின்றன. மந்திரம் என்பது நினைப்பவனைக் காப்பது எனப்பொருள்படும். பூரணமாக ஞானத்தைப் பெற்ற ஞானிகளின் வாயில் இருந்து வரும் வார்த்தைகள் எல்லாம் மந்திரமே ஆகும் என்பதை "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நினைப்பவனைக் காப்பது மந்திரம் என்றால் இறைவனோடு சேர்க்கும் நெறியாக யோகம் காணப்படுகிறது. மந்திரயோகம் என்றால் நினைப்பவனைக் காத்து இறைவனோடு சேர்க்கும் நெறி என்பது பொருளாகும்.

மந்திரங்களில் தலையானது ஓம் என்ற பிரணவ மந்திரமாகும். மேலும் ஓம் என்பது எல்லா மந்திரங்களுக்கும் முதலில் சேர்த்து உச்சரிக்க வேண்டிய மந்திரமாகும். ஓ என்பதைப் பிரித்தால் அ + உ என்ற ஈரெழுத்தாகும். அவ்விரண்டும் சிவன் சிவை என்ற இரண்டு பொருள்களைக் குறிக்கும். இவற்றை உயிர்க்குயிர் பரமான்மா, உயிர் சீவான்மா எனவும் அழைப்பர். ஓம் என்பது தாரக மந்திரம், தாண்டச் செய்வது என்பது இதன் பொருள் ஆகும். கப்பலுக்குத் தாரகம் என்றொரு பெயர் உண்டு. கப்பலானது எவ்வாறு கடலைக் கடக்க உதவுகிறதோ அவ்வாறு சம்சாரமாகிய கடலைக் கடக்க இப்பிரணவ மந்திரம் உதவுகிறது. இம் மந்திரம் உச்சரிப்பவர்களது அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை அளிக்கக் கூடியதாகும். பிரணவ மந்திரத்தை ஜெபம் செய்பவர்கள் அஞ்ஞானம்

நீங்கிப் பரமானந்தத் தன்மையைப் பெறுவர். ஓம் என்பதிலிருந்தே எல்லா வேதங்களும் மந்திரங்களும் தோன்றின. ஆதலால் இதனைச் செபித்தால் எல்லா மந்திரங்களையும் செபிப்பதால் உண்டாகும் பயனை அடையலாம். பிரம்ம தேவர் ஓங்காரத்தைச் செபித்து பிரம்ம பட்டம் பெற்றதாகக் காசிகாண்டம் கூறுகிறது.

அஜபா என்று வடமொழியில் கூறுகின்ற சொல் தமிழில் அசபை என்று அழைக்கப்படும். மந்திரத்தின் பெருமையினைப் பற்றியும் திருவைந்தெழுத்தின் பெருமையினைப் பற்றியும் அசபை என்ற பகுதியில் வரும் முப்பது பாடல்களும் நன்றாக விளக்குகின்றன. அசபா மந்திரம் என்றால் ஜெபிக்கப் பெறாத மந்திரம் என்பது பொருள். இம் மந்திரம் உச்சரிக்கப்படாமல் பிரணவத்துடன் சேர்த்து இயங்கும் மந்திரம் ஆகும். உடம்பின் மூலாதாரமாகிய குண்டலினியில் ஓங்கி ஒலித்துக்கெண்டிருக்கும் அசபா மந்திரம் மேலோங்கி எழுதற்குரிய இரகசியத்தை வெளிப்பட உபதேசித்தவர் ஓங்கார வடிவினனாகிய விநாயகர் என்பதை

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து எனத் தமிழ் மூதாட்டி ஔவையார் அருளிய விநாயகர் அகவல் குறிப்பிடுகிறது.

அசபா மந்திரம் என்பது ஓரெழுத்தொருமொழி. அது எல்லா மந்திரங்களுக்கும் ஆதாரமாய் நிற்கும் முதல்வனைக் குறிக்கிறது. இதனை வரிவடிவில் காட்டமுடியாது. உபதேசக்கிரமத்தில் தான் இதனை அறியலாம். ஆன்மீக ஞானியரை அடைந்து முறையாக அவர்களிடம் உபதேசம் பெற்றவர்களுக்கு மந்திரங்களை எப்படி உச்சரிக்கவேண்டும் என்பது தெரியும். ஒலி வெளியில் கேட்குமாறு சொல்லும் நிலை ஒன்று உள்ளது. உதட்டளவில் சொல்வது இரண்டாவது நிலை, இருதயத்தில் வைத்துச் சொல்வது மூன்றாம் நிலை, அதற்கெல்லாம் மேலாக நான் சொல்லவில்லை. சோஹம் ஹம்சம் என்பது நான்காவது நிலை. இதனைப் பேசா எழுத்து என மெய்கண்ட சாஸ்திரங்களில் ஒன்றாகிய கொடிக்கவி கூறுகிறது.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும்
ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பஞ்செழுத்தும் மேலைப்
பெருவெழுத்தும் – நெஞ்சமுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி

திருமந்திரத்தில் அசபை என்ற தலைப்பில் திருமூலர் கூறுவது எல்லாம் நமது சிந்தனை அந்த வழியில் திரும்பிச் சென்று பேசா அனுபூதியைப் பெற வேண்டும் என்பதே ஆகும்.

அ, உ, ம் என்ற மூன்றெழுத்துக்களும் ஒன்று சேர்ந்தே ஓம் என்ற எழுத்து தோற்றம் பெறுகிறது என்பது அறிஞர்களின் கருத்து ஆகும். ஓம் என்ற பிரணவத்தை ஓதி உணர்கின்ற ஞானமே பரம்பொருளை அடையும்

நெறியாகும். பேசும் எழுத்தை 'வ' எனவும் பேசாத எழுத்தை 'சி' எனவும் கூறுவது தமிழாகம மரபாகும். சிவ என இணைத்து ஓதுவதே வழமையாகும்.

புகழ்ந்து பேசப்படும் ஞானத்தை இடையறாது யான் போற்றுகின்றேன். தோன்றாத் துணையாக இருப்பவனும் உலகத் தலைவனுமாகிய சிவனின் திருவடியே துணையாகும். என்பதைத் தெளிந்து உள்ளேன் அப்பெருமானின் சேவடியை அடையும் சிவயோக நெறியை யான் உரைக்கின்றேன். சிவனைக் குறிக்கும் ஒரெழுத்து மந்திரமாகிய பிரணவத்தையும் ஓதுகின்றேன்.

போற்றுகின்றேன் புகழ்ந்தும் புகல் ஞானத்தைத்
தேற்றுகின்றேன் சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின்றேன் அறையோ சிவயோகத்தை
ஏற்றுகின்றேன் நம் பிரான் ஓர் எழுத்தே

மந்திரங்களில் மிக உயர்ந்த திருவைந்தெழுத்து மந்திரத்திற்கு அமைந்த சக்கரங்களில் திருவம்பலச் சக்கரம் மிகவும் சிறப்புடையது. ஆனந்தக் கூத்தாடும் அம்பலவாணர் அருட்சக்தியாதிய சிவகாமியம்மையுடன் மந்திர வடிவாய் நின்று நிலவுவது இந்த யந்திரமாகும்.

வினைகள் அறுத்தலால் சிவன் அரன் ஆவான். மாயா காரியத்தை ஒடுக்குதலால் சிவன் கரன் ஆகிறான். அரன் + கரன் என்பதன் விகாரமே "அரஹர" என்பதாகும். அரஹர என்ற திருப்பெயரைக் கூறுபவர்களுக்குச் செய்வதற்கு அரிய செயல் என ஒன்றுமில்லை. அரஹர என்ற நாமத்தை உச்சரிப்பதால் அனைத்தும் எளிமையாய் முடிந்துவிடும். இத்தகைய சிறப்புடையதாய் இருந்தும் அப்பெயரை ஓதிப் பயன் அடைய மக்களுள் பலர் அறியவில்லை. அரஹர எனத் தியானம் செய்பவர் ஒளியுடலைப் பெற்றவரும் ஆவார். அரகர என்று உரைப்பவர்களுக்கு வினை நீங்கி விடுவதால் பிறவி உண்டாகாது.

அரகர என்ன அரியதொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும் பிறப்பன்றே

இறைவனுடைய திருவருளுக்குப் பாத்திரமான அனுபூதிச் செல்வர்களான நாயன்மார்கள் நால்வரும் பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்பினைப் போற்றித் தங்கள் பாடல்களிற் பாடியுள்ளார்கள்.

வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே என ஞானசம்பந்தரும்,

கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே என அப்பர் பெருமானும்

நற்றவா உனை நான் மறக்கிலும்
சொல்லும் நா நமச்சிவாயவே எனச் சுந்தரரும்

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை என மணிவாசகரும் தங்கள் பாடல்களில் நமச்சிவாய மந்திரத்தின் சிறப்பினைப் போற்றியுள்ளார்கள்.

உடல் என்ற காட்டினுள் ஐம்புல யானைகள் தம் மனம்போல் திரிகின்றன. இத்தைய யானைகளை அடக்கவல்லது ஐந்தெழுத்தாலான நமச்சிவாய என்னும் அங்குசம் ஆகும். ஐந்தெழுத்து மந்திரத்தின் துணைகொண்டு ஐம்புலன்களையும் அடக்க வல்லவர்களுக்கு ஐந்தெழுத்து மந்திரத்தின் முதல்வனாகிய சிவனின் திருவடியை அடையும் பேறு கிடைத்துவிடும்.

அஞ்சுள ஆனை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குசம் ஆவன
அஞ்சையும் கூடத்து அடக்க வல்லார்கட்கே
அஞ்சுஆதி ஆதி அகம் புகலாமே

நடராச வடிவமே பஞ்சாட்சரவடிவமாகும். பஞ்சாட்சரத்தில் தூல பஞ்சாட்சரம் (நமசிவாய), சூக்கும பஞ்சாட்சரம் (சிவாயநம), காரண பஞ்சாட்சரம் (சிவாய) மகாகாரண பஞ்சாட்சரம் (சிவ), மகா மனு (சி) என ஐந்து பிரிவுகள் காணப்படுகின்றன. நமசிவாய என்னும் நகராதி பஞ்சாட்சரத்தை ஓதினால் நல்வினைப் பலன்கள் உண்டாகும். இப் பஞ்சாட்சரத்தைச் செபித்து வந்தால் வலிய தீவினைகள் எல்லாம் அடங்கி விடும். உலகியல் வாழ்க்கையில் காரியங்கள் கைகூடுவதற்கு நமசிவாய மந்திரத்தை ஓதுதல் வேண்டும். முக்திகாமிகள் உச்சரிக்கவேண்டிய மந்திரம் சிவாயநம ஆகும். சிவாய நம மந்திரத்தை உணர்ந்து ஓதினால் இறைவன் நேரடியாகக் கருணைபுரிந்து அருள் செய்வான்.

நம் முதல் ஓர் ஐந்தின் நாடும் கருமங்கள்
அம் முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
சிம் முதல் உள்ளே தெளிய வல்லார்கட்குத்
தம் முதல் ஆகும் சதாசிவந் தானே.

நான்காம் தந்திரத்திலே அருச்சனை என்ற பகுதியிலே பன்னிரண்டு பாடல்கள் காணப்படுகின்றன. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமைகளில் ஆண்டவனை அர்ச்சனை செய்து வணங்குவதும் ஒன்றாகும். ஒவ்வொருவரும் மனத்தாலும், வாக்காலும், உடம்பாலும் நறுமண மலர்களாலும் நாள்தோறும் இறைவனை வணங்குதல் வேண்டும் என திருமூலர் கூறுகிறார்.

ஆண்டவன் திருவருளினால் மனிதர்களுக்குக் கிடைத்திருப்பது உடம்பு, உடம்பிலே சிறப்பாக விளங்குவது தலை. மனிதன் தனக்குக் கிடைத்திருக்கின்ற தலையை இறைவனுடைய திருவடியில் தாழ்த்தி வணங்குதல் வேண்டும். மனிதனின் தலை ஆண்டவனின் திருவடியிலே விழுந்து வணங்காவிட்டால் இந்த உடம்பு எடுத்ததனால் எதுவித பயனும் இல்லாமற்போய்விடும் என்பதை

ஆக்கையாற் பயன் என் ? அரன்
கோயில் வலம் வந்து

பூக்கையால் அட்டிப் போற்றி எண்ணாத இவ்
ஆக்கையாற் பயன் என் ?

எனத் திருநாவுக்கரசர் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

இறைவனுக்கு எந்தப்பூவை எடுத்து வழிபாடுசெய்யவேண்டும் என்பதைப் பற்றித் திருமூலர் அர்ச்சனை என்ற பகுதியில் குறிப்பிட்டுள்ளார். மலர்களை நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ என நால்வகையாகப் பிரித்து இருக்கிறார்கள். அம்புஜம், நீலம், செங்கழுநீர், நெய்தல் முதலிய நீர்ப்பூக்களைத் திருமூலர் முதலில் எடுத்துக் கூறியுள்ளார். நீர் பூக்களில் முதலில் அம்புஜம் ஆகிய தாமரை மலரைக் கூறியுள்ளார்.

“பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை”

என்பதே அப்பர் பெருமானின் வாக்கு ஆகும். தாமரை நீலோற்பலம், செங்கழுநீர், கருநெய்தல், கமுகம், குருக்கத்தி, மந்தாரம், தும்பை, மகிழம்பூ, சுரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதிரி, செவ்வந்தி ஆகிய மலர்களைச் சாத்தி இறைவனை அர்ச்சனை செய்தல் வேண்டும்.

அம்புய நீலம் கழு நீரணி செய்தல்
வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரம்
தும்பை வகுளஞ் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே

அர்ச்சனை செய்து இறைவனை நாளாந்தம் வழிபடுவதன் ஊடாகத்தான் அவன் என்கிற துவைத நிலை மாறித் தானாக இரண்டறக் கலக்கின்ற அத்துவித நிலை உண்டாகிவிடும் என்கிறார் திருமூலர். தான் வேறு, அவன் வேறு என்று, இல்லாத நிலையே சாயுச்சிய முத்தியாகும். இத்தகைய சித்தியைப்பெற்ற சிவஞானியர்கள் தம்மைச் சிவம் நடாத்தும் என்றும், தாம் ஒன்றையும் எண்ணாதவர்களாக விளங்குவார்கள் என்பதையும் பின்வரும் தருமந்திரப் பாடல் விளக்குகிறது.

தானவனாக அவனே தானாயிட
ஆன இரண்டில் அறிவன் சிவமாகப்
போனவனன்பிது நாலா மரபுறத்
தானவனாகுமே ராசித்த தேவரே

சரியை கிரியை முதலிய நான்கு பாதங்கள் தனித்தனியாக நின்று பல படியாக விரிந்து இயங்கும் இயல்புடையன. இந்தவகையில் தவயோகி திருமூலதேவர் ஞானத்தில் யோகம் என்ற நெறியில் நின்று ஞானத்தில் ஞானம் தலைப்படுவதற்கு உபாயம் கூறுவதற்காகப் பல திருமந்திரங்களைக் கூறியுள்ளார். இவை ஞானயோக காரியம் எனப்படும். சரியை, கிரியை, யோகம் மூன்றினையும் கடந்த பின் ஞானத்திலுள்ள சரியை கிரியை என்ற படிகளையும் கடந்து அதற்கு அப்பால் ஞான யோகத்திலே தலைப்பட்டு நிற்பவர்களுக்கே திருமூலதேவர் நின்ற இன்ப ஆனந்த நிலையை அடையமுடியும்.

# திரிபுரை தியானம்

**தி**ருமூலர் திருமந்திரத்திலே பல வகையான யோகங்களைப் பற்றிப் பேசுகிறார். தாம் கண்ட சிவ யோகம் என்பது எல்லா யோகக் கட்டளைகளுக்கும் மேலாக விளங்கவேண்டுமென்று கருதி அதனை அமைத்தருளியிருக்கிறார். அந்தச் சிவஞானயோக நெறியில் நின்று திருமூலர் பெரும்பாலான விசயங்களை அருளிச் செய்துள்ளார். திருமந்திரத்திலே கூறப்பட்டுள்ள விசயங்கள் அனைத்தையும் அறிவினால் மட்டுமன்றி நம் அனுபவத்தினாலும் தான் தெரிந்து கொள்ள முடியும். நான்காம் தந்திரத்திலே அருச்சனை என்ற பகுதியைத் தொடர்ந்து நவகுண்டம் என்ற பகுதி வருகிறது.

நமது திருக்கோயில்களிலே நடைபெறுகின்ற மஹாகும்பாபிஷேகம், தீட்சை ஆகிய கிரியைகளில் நவகுண்டம் அமைத்து அக்கினி காரியம் செய்யப்படுவது வழமை ஆகும். நவகுண்டத்திற்கு உரியவை பற்றி அதிலே செய்யப்படுகின்ற வேள்வியைப்பற்றி, அவற்றின் இன்றியமையாமை பற்றி, அந்த வேள்வியின் பயனைப்பற்றி அதை வெற்றிகரமாக செய்துமுடிக்கின்ற ஆன்மாக்கள் பெறுகின்ற இன்ப நலங்கள் பற்றி விரித்துரைக்கும் பகுதியாக நவகுண்டம் காணப்படுகிறது. உலகப் பொருள்கள் எண் வகைப்படும் என்றே சிவாகமங்கள் கூறுகின்றன.

18

"நிலம் நீர் நெருப்புயிர்நீள்விசும்புநிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப்
புணர்ந்து நின்றான்"

என்றே மணிவாசகரின் தெய்வ வாசகமாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. இந்த எண்வகைப்

பொருட்களை நடாத்துகின்ற இறைவன் அவற்றுக்கு மேலாக நிற்பான். அவன் விளங்குகின்ற இடம் ஆகாசமாகும்.

அந்த ஆகாசம் ஜடாகாசமாகாது சிதாகாசம் ஆகும். இதனைத் தாயுமான சுவாமிகள் சிற்பர வெளி எனக் குறிப்பிடுகின்றார்.

ஜடாகாசத்தில் நிலவுகின்ற ஏனைய நான்கு பூதங்களையும் சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய மூன்று பொருட்களையும் ஜடாகாசத்தையும் சேர்த்து இந்த எட்டுப் பொருட்களை நடாத்துகின்ற இறைவனை வழிபடும் நெறியே சைவசமயம் ஆகும். இவற்றை நோக்கி அமைக்கின்ற குண்டமே நவ குண்டம் எனப்படும். நவகுண்டம் என்று சொல்லப்படுவதில் அக்கினியை வளர்த்து ஆகுதிப்பொருட்களைச் சொரிந்து வழிபடும் வழிபாட்டு முறை யாகம், யக்ஞம் என்றும் தமிழில் வேள்வி என்றும் அழைக்கப்படும். மகோற்சவ காலங்களில் ஆலயங்களில் இறைவன் வெளிப்படும் இடங்களாக பிம்பம், தம்பம், கும்பம் ஆகிய மூன்றும் கூறப்படுகிறது. இங்கே கும்பம் என்று குறிப்பிடப்படுவது யாக கும்பத்தையே ஆகும். யாகக் கிரியைகளில் நாள்தோறும் அக்கினி காரியம் நடைபெறுகிறது.

கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு (ஈசானம்), ஈசானத்திற்கும் கிழக்குத் திசைக்கும் நடு ஆகிய ஒன்பது திசைகளில் குண்டங்கள் அமைத்து அக்கினி வழிபாடு புறத்தே செய்யப்படும். இந்த அக்கினியின் தன்மையை யோக பவித்திரத்தினால் உள்ளே வாங்கி உள்ளேயுள்ள அறிவின் மயமாக இருக்கின்ற அக்கினியோடு கற்பித்து இரண்டின் தன்மையும் ஒன்றாகும் தன்மையே ஞான நலம் எனப்படும்.

சைவசமயம் சிவனையே முழு முதற் கடவுள் எனக் குறிப்பிடுகிறது. திருமூலரும் சிவனையே முழுமுதற் கடவுளாகக் குறிப்பிடுகிறார். அன்பு, அறிவு, ஆற்றல்களையுடைய சிவன் முக்கண்ணன் என்று அழைக்கப்படுவான். சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்றுமே முக்கண் என்று குறிப்பிடப்படும். சிவனுடைய ஆற்றலாகிய வலக்கண் ஞாயிறு என்றும், அன்பாகிய இடக்கண் சந்திரன் என்றும், அறிவாகிய நெற்றிக்கண் அக்கினி என்றும் அழைக்கப்படும். அத்தகைய முக்கண்ணனே எட்டுத் திசைகளிலும் நீக்கமற நிறைந்து இருக்கிறான். இதனை, "எண் தோள் முக்கண் எம்மானே" எனத் திருவாசகமும் குறிப்பிடுகிறது. எல்லா வகைக் கணங்களுக்கும் எம்பெருமானே தலைவன் ஆவான். உயிர் ஆகிய ஆன்மா பக்குவம் அடையும் பொழுது சிவம் ஆகிவிடும்.

**முக்கணன் தானே முழுச்சுடராயவன்**
**அக்கணன் தானே அகிலமுமுண்டவன்**
**திக்கணனாகித் திகையெட்டும் கண்டவன்**
**எக்கணன் றானுக்கும் எந்தை பிரானே**

வடமொழியிலே உள்ள வேத சிவாகமக் கருத்துக்களை தமிழிலே கூறும் தனி நூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. திருமந்திரம் ஒன்றே தமிழில் உள்ள

சிவாகம நூலாகும். சிவாயநம என்ற பஞ்சாட்சர மந்திரத்தில் 'சிவ' என்னும் பதியும் நம என்னும் பாசமும், ய என்னும் பசுவும் ஆகிய முப்பொருளும் அடங்கியுள்ளது. திருமந்திரம் முப்பொருள் உண்மையை விளக்கும் ஒப்பற்ற நூலாகத் திகழ்கிறது. திருமந்திரத்தில் நான்காம் தந்திரத்தில் சத்திபேதம் (திரிபுரை சக்கரம்) என்ற பகுதி கூறப்பட்டுள்ளது. சக்கரம் என்ற வடசொல் தமிழிலே சக்கிரம் என்று வழங்கப்படுகிறது.

பிரணவ மந்திரமாகிய ஓங்காரத்தைப்பற்றி ஆராய்ந்தால் திரிபுரை சக்கரத்தின் உண்மை விளங்கும். சிந்தையாலே சிந்தித்து வாயாலே ஒலிக்கும் முறையை விட்டு உணர்வாலே ஓங்காரத்தை உணர்தல் வேண்டும். மனத்தாலாவதே பிரணவ தியானம் ஆகும். சிவத்தை உணர்தல் சிந்தைக்கும் வாக்குக்கும் செய்கைக்கும் உண்டோ? உணர்விற்கே உரியது; உணர்வினால் உணரவேண்டும். ஒன்றைச் சிந்தையாலும், சொல்லாலும், செயலாலும் எட்டவே முடியாது. தியானம் என்பது இறைவனை நீள நினைதல் ஆகும். சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை "நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்" எனப் பாடியருளினார். நீள நினைதலுக்கு தாரணையும் அதற்குப் பிரத்தியாகாரமும், அதற்குப் பிரணாயாமமும், அதற்கு ஆசனங்களும், அதற்கு இயம நியமங்களும் வேண்டும்.

தொல்காப்பியத்திற்கு உரைசெய்த நச்சினார்க்கினியர் மனத்தை இறைவன்பால் நிலைநிறுத்தலே தியானம் என்பதை

நிறுத்திய அம்மனம் நிலை திரியாமல்
குறித்த பொருளோடு கொழுத்துதல் நினைவே

என்று குறிப்பிடுகிறார். சீவனுக்குள்ளே சிவமணம்பூத்து தானே இறைமயமாகி நிற்கும் நிலையாகிய சமாதி நிலையினை

ஆங்கனம் குறித்த வாய் முதற் பொருளோடு
தான் பிறன் ஆகாத் தகைவது சமாதி எனக்குறிப்பிடுகிறார்.

மூன்றாம் தந்திரம் அஷ்டாங்க யோகத்தை விளக்க நாலாம் தந்திரம் சிவயோகத்தை விளக்குகிறது. இது யோக நிர்வானத்தைச் சார்ந்தது. இதில் பிரணவ தியானம் அஜபா மந்திரம் ஜபம், சக்ரதியானம் முதலிய நுண்பொருள்கள் விரித்துரைக்கப்படுகின்றன.

ஹடயோகம், ஆன்மயோகம், ஞானயோகம், சிவயோகம் என யோக வகைகளின் பரிணாம வளர்ச்சிப் படிகள் அமைந்துள்ளன. உடலைத் தன்வசப்படுத்தும் வாயிலாக உயிர்ப்படக்கம் ஏற்படுத்தும் முறை ஹடயோகம் எனப்படும். உடலையும் உயிரையும் தனித்தனியாக உணர்ந்து பிறவற்றின் (உடல் முதலியவற்றின்) தொடர்பு தவிரச் செய்து ஆன்மாவாகிய தன்னை அறிந்துகொண்டு தானேயாயிருத்தல் ஆன்மயோகம் எனப்படும். ஆன்மா தனக்குள் இருக்கும் சிவஞானத்தை உணர்ந்து அதனைக் கூடி அதுவேயாக இருத்தல் ஞான யோகம் என்றும், அந்தச் சிவ ஞானத்தால் சிவம் என்னும்

பரம்பொருளை உணர்ந்து அச்சிவயோகமாக இருத்தல் சிவயோகம் என்றும் அழைக்கப்படும்.

உடம்பும் உயிரும் கூடுவதாலேயே நாம் பிறப்பு எடுக்கிறோம். அது தேகயோகம் எனப்படும். உடம்பும் உயிரும் பிரியும் இறப்பு தேகவியோகம் என்று அழைக்கப்படும். உடம்போடு கூடிய உயிர் அதனின்று பிரியவேண்டும். பிரியும் முறையில் வேறுபாடுகள் உண்டு. அவற்றுள் இறப்பதும் ஒருமுறை. அதனின் வேறான முறையில் பிரிவதையே சமய நூல்கள் கூறுகின்றன. அத்தகய பிரிவை உடம்பிலிருந்து கொண்டே செய்யப்பழக வேண்டும். மூச்சுக்காற்றைத் தொடராது தனித்திருக்கப் பழகவேண்டும். மும்மலங்களின் வேறாகியிருக்க வேண்டும்; தன்னில் வேறாதல் வேண்டும். ஆன்மாவைப் பீடித்திருக்கும் அகந்தை ஒழியத் திருவருளுடன் கூடி அதில் அடங்கி இருத்தல் வேண்டும். இதனையே "ஊனினை நீக்கி உணர்பவர்க்கல்லது தேனமர் பூங்கழல் சேரவொண்ணாதே" எனத் திருமந்திர மாலையில் திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.

உலகியல் பந்தங்களில் இருந்து நீங்கி ஆன்மா இறையருளைப் பெறுவதற்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளைச் சைவசமயம் குறிப்பிடுகிறது. இவற்றில் தியானம் யோக வகையைச் சேர்ந்தது. சக்தியை வழிபடும் புறப்பூசையில் ஸ்ரீ சக்ரம் முதலிடம் பெறுகிறது. சக்ர தியானம் அகப்பூசைக்கு உரியது. நான்காம் தந்திரத்திலே அஜபா யோகம் முதலிலே கூறப்பட்டுள்ளது. அஜபா மந்திரத்தினால் அனவாத தாண்டவ தரிசனம் பெறலாம். இது நிகழும் திருவம்பலத்தைக் காணலாம். திருவம்பலச் சக்கரமும் திரிபுரை சக்கரமும் தெரியும். இந்த இரண்டு சக்கரங்களும் சிதம்பரத்தில் இன்றும் காணப்படுகின்றன. ஒன்று திருவம்பலமாகிய சிற்றம்பலத்திலும் மற்றது தேவி கோயிலாகிய சிவகாமி அம்பாள் ஆலயத்திலும் உள்ளன. பதஞ்சலி முனிவர் அருளிய சிதம்பர பூஜா விதியில் இவை காணப்படுகின்றன.

சக்திபேதம், திரிபுரை சக்கரம் என்னும் தலைப்பிற்குரிய பொருள் சக்திபேதத்துள் ஒன்றான திரிபுரையின் சக்ரம் என்பதாகும். சிவகாம சுந்தரியே ஸ்ரீ மகா திரிபுர சுந்தரி. மகா திரிபுர சுந்தரியின் வடிவம் சத் + சித் + ஆனந்தம் என்பவற்றின் இணைவே ஆகும். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி நிறைந்திருக்கும் அருள் வடிவமே திரிபுர சுந்தரி எனப்படும். அம் மகாதேவியின் இடம் திரிபுரம் எனப்படும். அதனால் அத்தேவியைத் திரிபுரை என்றனர். மூன்று கூடம் உடைய ஸ்ரீ சக்ரம் திரிபுரை என்றும் கூறப்படுகிறது. லலிதா சகஸ்ர நாமத்தில் திரிபுரைக்குப் பல பெயர்கள் கூறப்பட்டுள்ளன. திருமந்திரத்தில் உள்ள திரிபுரைச் சக்கரம் திருவம்பலச் சக்கர வரிசையில உள்ளது.

திருமூலர் திரிபுரையைத் "தானாஅமைந்த அம்முப்புரம்" எனக் குறிப்பிடுகின்றார். இச்சை, ஞானம், கிரியை ஆகிய மூன்றையுமே இத்திரிபுரம் என்பது குறிக்கிறது. பராசக்தியே ஞானம், கருமம், இச்சை ஆகிய மூன்று

வடிவங்களில் காட்சி தருகிறாள். திரிபுரையின் நிறம் பொன்நிறம், செந்நிறம், வெண்ணிறம் ஆகிய மூன்று நிறங்களில் காணப்படுகின்றன. இந்த மூன்று வடிவங்களும் கல்வி, போகம், முத்தி என்பவற்றைக் குறிக்கும் வடிவங்களாகும். கலை மகள் கல்வியையும், திருமகள் செல்வத்தையும் உமை முத்தியையும் அளிப்பாள்.

தானா அமைந்தவ முப்புரம் தன் இடைத்
தான் ஆன மூஉரு ஓர் உருத் தன்மையள்
தான் ஆன பொன் செம்மை வெண்ணிறத்தாள் கல்வி
தான் ஆன போகமும் முத்தியும் நல்குமே

திரிபுரை ஆகிய பராசக்தியை உணர வேண்டின் உள்ளொளி காணும் முயற்சி வேண்டும். உள்ளொளி சேரும் நெறியில் ஒழுகித்திரிபுரையைக் கண்டுகொள்ளல் வேண்டும். சிவத்தை ஒளிசேர் நெறியிலே ஒழுகி அடைய வேண்டின் சிவசக்தி பிரகாசத்தை அனுபவித்தல் வேண்டும். ஓங்கார மந்திரத்தினால் திரிபுரையை அறியலாம் என்பதை "ஓங்காரி என்பால் அவள் ஒரு பெண்பிள்ளை" எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். ஓங்காரத்தினால் அன்றி மற்ற எதனாலும் திரிபுரையை அறியமுடியாது. அத்தேவியை உள்ளேஉற்றுணர்ந்துஅவளே உணர்வு, உணர்வே அவள் என்னும் உண்மையைத் தவறாது கடைப்பிடித்தல் வேண்டும். திரிபுரை தியானத்தின் முடிந்த பயன் இதுவே ஆகும். என்பதை

ஒன்றாக என்னுள் புகுந்து உணர்வாகியே
நின்றாள் பரஞ்சுடர் ஏடங்கையானே
எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

திரிபுரை ஞான சக்தியாக இருந்து அபரஞானம் பரஞானம் இரண்டும் தருகின்றாள். கிரியையால் ஞானம் கைகூடும். "கிரியை என மருவும் யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என்றே சிவப்பிரகாசமும் குறிப்பிடுகின்றது. திரோதான சக்தியே போகம் செய் சக்தியாக ஆன்மாக்கள் உலக போகங்களை அனுபவிக்க வழிசெய்கிறது. பின் அது பராசக்தியாகி ஆன்மாக்களிடம் மலபரி பாகத்தை ஏற்படுத்துகிறது. மலபரி பாகம் ஏற்பட்டதும் திருவருள் சக்தி ஆன்மாவில் படியும். அடியார் இணக்கம் சத்திநி பாதத்தை வளர்க்கும் அடியார்களிடம் உள்ள பக்குவ ஞானம் நம்மை மலவாதனை தாக்காமல் தடுத்து ஆண்டவன் திருவடி நீழலில் இணைந்து இன்புறச் செய்யும்.

19

# சிவ சக்தியே பூரண சக்தி

சிவாகமங்களின் சாரமாகத் திருமந்திரம் காணப்பட்ட பொழுதும் இது ஞானம், யோகம் என்ற இரண்டினையும் சிறப்பாக வைத்துக்கொண்டு சரியை கிரியை முதலானவற்றைக் குறிப்பாக எடுத்துப் பேசுகின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கின் உட்பிரிவுகளில் ஞானத்தில் ஞானம் என்பதைப் பரம இலட்சியமாகக் கொண்டு விளங்கும் நூலாகவே திருமந்திரம் காணப்படுகின்றது. சிவாகமங்களின் ஞானபாதப் பொருளை விளக்குவதற்காக அவதரித்த ஞானச்செல்வராகவே திருமூலர் திகழ்கிறார். திருமந்திரம் ஞானத்தின் ஞானபாதப் பொருளைச் சிறப்பாக எடுத்து விளக்குகிறது.

பராசக்தியைப் பல வடிவங்களில் பல வழிபாட்டு நிலைகளிலே தரிசனம் கண்டு ஊனும் உள்ளமும் உருகிப் பாடுகின்றார் திருமூலர். பராசக்தியின் அருளாற்றலை அறியாத தேவர்கள் இல்லை. அவளுடைய துணையின்றி எந்தத் தவமும் ஆகாது. பராசக்தியின் ஆற்றலைக்கொண்டு தான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன. பஞ்சமூர்த்திகள் என்று சாஸ்திரங்களிலே சொல்லப்படுகின்ற ஐந்து கடவுளர்களும் தேவியின் ஆற்றலினாலேயே இயங்குகிறார்கள். பராசக்தியின் துணையில்லாமல் முத்தியைப் பெறமுடியாது.

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி ஊர் புகும் அறு அறியேனே.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏலவே உணர்விக்கும் என்னம்மையாகிய வாணி சரஸ்வதியின் வடிவத்தைத் திருமூலர் தனது பாடலிலே விளக்குகிறார். உள்ளங்கையிலே அறிவுச் செல்வமாகிய ஏடு (புஸ்தகம்) தாங்கிய நங்கை கலைமகள் வெண்ணிற ஆடை அணிந்து வெள்ளைத் தாமரைப் பூவிலே வீற்றிருக்கின்றாள். ஒரு கையில் வெண்டாமரை மலரை விரும்பி ஏந்தியும் இருக்கிறாள். படைப்புக் கடவுளாகிய பிரம்மனின் தேவி சரஸ்வதி எப்பொழுதும் திருமுறையாகிய வேதங்களைப் பாடிக்கொண்டு இருக்கிறாள். அந்தத் தேவியின் பாதங்களை என்னுடைய தலை சூடிக்கொள்ளும். எனது வாய் தோத்திரங்களையே சொல்லும்.

ஏடங்கை நங்கை, இறை எங்கள் முக்கண்ணி,
வேடம் படிகம், விரும்பும் வெண்டாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னி, வாய்த் தோத்திரம் சொல்லுமே.

கலைமகள் என்றும், மலைமகள் என்றும் இன்றும் பல உருவங்களிலும் காணுகின்ற தேவியை உள்ளம் குழைந்து தெய்வத் தமிழிலே ஞானத்தவ முனிவர் பாடியுள்ளார்.

காஷ்மீரிலும் நேபாளத்திலும் ஒரு சிலர் வயிரவ மந்திரத்தை வைத்து உபாசிக்கிறவர்கள் இருக்கிறார்கள். தவறான முறையில் ஒரு நாட்டைச் சூறையாடும் காலம் வந்தால் அந்தக் காலத்திலே வயிரவ உபாசனை செய்ய வேண்டும். அதை எப்படி எப்படி உபாசிக்க வேண்டும் என்று வயிரவ மந்திரத்திலே கூறப்பட்டுள்ளது. வயிரவமூர்த்தி பயத்தைப் போக்குகிறவர். மரணம் பிறப்பு என்ற பயத்தைப் போக்குபவர். வயிரவர் என்ற பெயரே அச்சத்தைப் போக்குபவர் என்பதைத் தெரிவிக்கும். சிவனுடைய இருபத்தைந்து மூர்த்தங்களிலே துஷ்ட நிக்ரஹ வடிவமாக வைரவ மூர்த்தம் கூறப்பட்டுள்ளது.

மிருகேந்திரனைக் கண்டு மற்ற மிருகங்கள் அஞ்சி ஓடுவதுபோல வயிரவ மூர்த்தி அஞ்சுகிறவர்களுக்கு அவர்களுடைய அச்சத்துக்கு விஷயமாயிருக்கும் அச்சத்தையும், பகை முதலான அச்சத்தையும், வேற்று அசுரரால் ஏற்படுகிற கொடுமை ஆகிய அச்சத்தையும் போக்குவார்.

வயிரவக் கடவுளின் சக்தியை நினைவு கூர்வது வயிரவ மந்திரம் ஆகும். இதில் ஐம்பது பாடல்கள் உள்ளன. பராசக்தியை வணங்குபவர்கள் மந்திரத்தை உச்சரிக்க வேண்டியமுறை, கிரியைகள் செய்யப்படும் முறை ஆகியவற்றினை இப்பகுதி விளக்குகிறது. வயிரவியாகிய துர்க்கை சிவனுக்கு அங்கமாவாள். சூலத்தையும் கபாலமான மண்டை ஓட்டையும் கையில் தாங்கி உள்ளாள். நான்கு கரங்களையுடைய நாகபாசத்தையும் அங்குசத்தையும் தாங்கி விளங்குகின்றாள். பிரம விஷ்ணுக்களால் அடிமுடி தேடியும் காணமுடியாத சிவனுக்கு மேலான அங்கமாய் நின்ற சிறப்பினை உடையவள் சூலினி துர்க்கை ஆவாள்.

சூலம் கபாலம் கை ஏந்திய சூலிக்கு
நாலாம் கரம்உள; நாகபாச அங்குசம்
மால் அங்கு அயன் அறியாத வடிவுக்கு
மேல் அங்கமாய் நின்ற மெல்லியலாளே.

பிறவிநோய் நீங்குவதற்கு அம்பிகையின் பாதங்களைப் பணிதல் வேண்டும். உலகியற் பற்றுக்கள் நீங்குவதற்கு, ஆசைச் சங்கிலி அறுவதற்கு துறவியர்களுக்கு அருளும் தலைவியாகிய தையல் நாயகியின் பாதங்களைப் பற்றிப் பிடிக்க வேண்டும். பிரபஞ்ச மயக்கத்தைத் தனது அருட்பார்வையால் அகற்றும் மனோன்மணியைப் பக்தி சிரத்தையோடு தோத்திரம் செய்து பணிந்து வணங்கினால் கொடிய பிறவித்துன்பம் நீங்கிவிடும்.

தையல் நல்லாளை, தவத்தின் தலைவியை,
மையலைப் போக்கும் மனோன்மணி மங்கையைப்
பைய நின்று ஏத்திப் பணிமின், பணிந்தபின்
வெய்ய பவம் இனி மேவகிலாவே.

பூரண சத்தியை அனுபவத்தினால்தான் அறியமுடியும். உடலிலே பூரண சக்தி இல்லாமலும் ஞானத்திலே பூரண சக்தி இல்லாமலும், பூரண சக்தியைப் பற்றி அறிந்துகொள்ள முடியாது. இறையருள் பெற்ற ஞானிகளின் அனுக்கிரகம் இருக்குமானால் பூரணசக்தி தானாகவே கிடைத்துவிடும். பூரண சக்தியை அறிபவர் யார்? அறிந்தவர் நிலை யாது? அறிந்தவர் எப்படி அடங்கிஇருத்தல் வேண்டும் என்பதை முப்பது பாடல்களிலே திருமூலர் விளக்குகிறார்.

சக்தி வழிபாடு சக்தியுபாசனை மார்க்கம், தாட்சண்ய மார்க்கம் என்று இருவகைப்படும். சிவமும் சக்தியும் அபின்னமாக இருப்பதாக உபதேசிப்பது தாட்சண்ய மார்க்கம் (சாக்தேயம்) எனப்படும். சைவ சித்தாந்தமும் இந்த நிலையையே ஏற்றுக்கொள்கிறது. நான்காம் தந்திரம் முழுவதும் சக்தி வழிபாட்டின் சிறப்பினையே எடுத்துப்பேசுகிறது. ஆதார, ஆதேயத்தினை அலங்கரிப்பவளாகிய பராசத்தியின் தியானம் உபாசனை பற்றி நான்காம் தந்திரம் குறிப்பிடுகிறது. சத்தி உபாசனை என்ற பெயரில் சிலர் மது மாமிசம் நிறைய அருந்துகிறார்கள். திருமூலர் இத்தகைய வழிபாட்டினைத் தயவு தாட்சண்யம் இன்றிக் கண்டிக்கிறார். சக்தியின் அருளை வேண்டிக் கள்ளைக் குடிக்கும் இவர்கள் தங்களிடம் உள்ள சக்தியையும் இழக்கிறார்கள். என்பதைச்

சக்தியை வேண்டிச் சமயத்தோர் கள் உண்பர்
சக்தி அழிந்தது தம்மை மறத்தலால்

எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. நிலைத்த, அழியாத, மாறாத பேரானந்தப் பெருவாழ்விலே நிலைத்து நிற்கச் செய்வதுதான் உண்மையான சக்தி வழிபாடு. சிவயோகத்திற்குச் சாதகமான கருத்துக்கள் நூல் முழுவதும் வியாபித்திருக்கின்றன.

உடலுக்கும் உள்ளத்துக்கும் இடையிலே தொடர்பு உண்டு. உடலிலே இருக்கின்ற வன்மை, அதுவும் உணவினால் உண்டான வன்மை உள்ளத்தையும் அடியோடு கெடுத்துவிடும். சாத்வீக உணவுகளை உட்கொண்டால் சாத்வீக குணங்கள் மேலோங்கும் மாமிச உணவுகளை உட்கொள்வதோடு மதுபானம் முதலியவற்றை அருந்துவதால் இராட்சத குணங்கள் தலையெடுக்கும். தூய்மை இல்லாத உணவினால் உண்டான வன்மை மனத்தைப் பாழ்படுத்தி விடும்.

பரசிவம் முதல் ஸ்ரீகண்ட ருத்திரர் வரை அவர்களின் செயற்பாடுகள் அத்தனைக்கும், விருப்பங்கள் அத்தனைக்கும், அறிவுரைகள் அத்தனைக்கும் மூலகாரணமாக இருக்கின்ற பராசக்தியே பூரணசக்தி எனக் கூறப்படுகிறது.

ஆண்டவனுக்கு உள்ள போதம் ஆனந்த போதம். நமக்குள்ள அறிவு சுகதுக்க ரூபமான அறிவு. சுகரூபமாக இருக்கும்போது இந்திரிய சுகம் மூலமாக நாம் எக்களிக்கின்றோம். ஆனால் அது நீண்ட காலம் நிலைப்பதில்லை. காது கேட்கும் கச்தியை இழந்தால் கண் ஒளியிழந்தால் அதுவே துக்க ரூபமாக மாறுகிறது. ஆண்டவனைப்பற்றிய அனுபவம் ஆனந்த சொரூபம். அந்த ஆனந்த அனுபவம்தான் பூரண ஆனந்தம். பூரணமாகிய பரசிவத்திலிருந்து பராசக்தியாகிய பூரணம் பிரிந்தது. பூரணமானது பூரணத்திலிருந்து வெளிப்படுகிறது. கடலில் இருந்து ஒரு கலசத்தில் நீர் எடுத்து விட்டால் கடல்நீர் குறையாது. இதேபோலவே காலதேச வரையறைகள் இல்லாத பரம்பொருளில் இருந்து எது எடுத்தாலும் அது எப்போதும் நிறைந்தபொருளாகவே இருக்கும். பரசிவத்தின் திருவுள்ள அசைவுதான் பூரணசக்தி என்பதை

**சக்தி தன் வடிவேது என்னில்**
**தடையிலா ஞானமமாகும்**

எனச் சிவஞான சித்தியார் குறிப்பிடுகிறது.

சிவயோகிகள் நமக்கெல்லாம் உணர்த்தவேண்டிய அனுபவத்தைச் சிவானுபவமாகவே எடுத்துக் காட்டுவார்கள். திருமூலர் அளந்தேன் அகல் இடத்து அந்தமும் ஈறும் எனத் திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார்.

இவ் உலகத்திலே உள்ள சகல பொருட்களிலும் ஆண் பெண் வேறுபாடு உண்டு. எவன் ஒருவன் தத்துவங்களை உணர்ந்தானோ, எவன் ஒருவன் அவைகளைக் கொடுத்து உதவிய பரம் பொருளாகிய இறைவனை உணர்ந்தானோ, எவன் ஒருவன் உலகம் ,ஆணும் பெண்ணும் படைக்கப்படுவதற்கு காரணம், இறைவன் அம்மையும் அப்பனுமாக இருக்கும் நிலையே என்பதை உணர்ந்தானோ அவன்தான் பூரண சத்தியை அறியும் ஆற்றல் உடையவன் என்பதைப் பின்வரும் திருமந்திரம் எடுத்துவிளக்குகிறது.

**அளந்தேன் அகலிடத்து அந்தமும் ஈறும்**
**அளந்தேன் அகலிடத்து ஆதிப் பிரானை**
**அளந்தேன் அகலிடத்து ஆணொடு பெண்ணும்**
**அளந்தேன் அவனருள் ஆய்ந்து உணர்ந்தேனே.**

பசு புண்ணியம் பதி புண்ணியத்திற்கு ஒருவாயில். பதி புண்ணியம் கிடைத்துவிட்டால் பசு புண்ணியம் காரியப்படாது. பதி புண்ணியம் பல பிறவிகளில் ஈட்டி வைத்த பெருமக்கள் புண்ணியராவர். அத்தகைய புண்ணியர்களைப் பராசக்தி தனது அருள் வடிவமாக மாற்றுகின்றாள். இப்படித் தோற்றுவித்ததை முறையே ஒடுக்கிக்கொண்டு தானும் சிவத்திலே ஒடுங்குவாள்.

ஒரு பாதி பூரணம் ஆகாது. இரண்டு கை சேர்ந்தால்தான் பூரண நமஸ்காரம். ஒரு கையைத் தூக்குவது பூரண நமஸ்காரமாகவோ சைவ அறிகுறியாகவோ காணப்படமாட்டாது. எல்லாவற்றிலும் தாழ்வு இருக்க வேண்டும். எங்கே முனைப்பும் தடிப்பும் இருக்கிறதோ, எங்கே பணிவு இல்லையோ அங்கே சைவம் இல்லை. மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை யோகிகள் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி என்ற கேந்திரங்களைத் தாண்டிப் புருவ நடுவாகிய ஆஞ்ஞைக்குக் கொண்டு செல்வர். குண்டலினி சக்தியை யோக சக்தியாக மாற்றி உச்சியில் அமிர்தத்தைச் சுவைப்பார்கள். பிரபஞ்ச வாழ்வில் அழுந்துகிறவர்கள் அதனைப் போக சக்தியாக மாற்றி உலகியல் இன்பங்களைத் துய்ப்பார்கள்.

சீவன்களுக்கு இன்பத்தைத் தரும் குண்டலினி கீழ் முகமாய் இருந்து காமச் செயலில் விருப்பத்தை ஏற்படுத்தும் போக சக்தியாகத் திகழும். சிவக் காதல் கொண்டவர்களுக்குக் குண்டலினி யோக சக்தியாக மாறிப் பேரின்பத்தினை நல்கும். மதங்கொண்ட யானைகளாகிய ஐம்புலன்களும் அவற்றைச் செலுத்தும் மனமும் சிவயோகத்தில் திளைக்கும். பராசக்தி, பரசிவம், ஆன்மா ஆகிய மூன்றும் இணைந்திருக்கும்போது தான் அந்தப் பேரின்ப நிலை ஏற்படுகிறது. அநுபூதிமானாகிய ஆன்மா அனுபவப் பொருளாகிய சிவசக்தியிற் சேர்ந்திருக்கின்ற அனுபவந்தான் பரிபூரண சக்தியை அனுபவிக்கக்கூடிய உபாயம் ஆகும்.

கும்பக் களிறு ஐந்தும் கோலொடு பாகனும்
வம்பில் திகழும் மணிமுடி வண்ணனும்
இன்பக் கலவி இனிதுறை தையலும்
அன்பின் கலவியுளாய் ஒழிந்தாரே.

எங்கும் வியாபித்திருக்கின்ற பரி பூரண சக்தியாகிய பராசக்தி, ஞான சொரூபியாகிய பராசக்தி, திருவருளாகிய பராசக்தி, அந்தப் பராசக்தியை அடைவதுதான் பரம லட்சியம் என்பதைப் பூரண சக்தியுள் அமைந்திருக்கும் முப்பது பாடல்களும் தெளிவாக விளக்குகின்றன.

# திருவருட்சக்தியே ஆதார சக்தி

கன்ம அனுட்டானம் மூன்று வகைப்படும். அவற்றில் முதல்நிலை சாதாரணமானது. அது ஒருவன் தன் நன்மைக்காகவே கன்மத்தைச் செய்தல் ஆகும். இரண்டாம் நிலை முன்பு கூறியதைவிடச் சற்று மேலானது. அது ஒருவன் தன் நன்மையோடு பிறர் நன்மைக்காகவும் கன்மத்தைப் புரிதல் ஆகும். மூன்றாம் நிலையே மிகவும் மேலானது. மூன்றாம்நிலை பிறர் நன்மை ஒன்றையே கருதிப் பலனை உத்தேசிக்காமல் நிஷ்காமிய கன்மத்தைச் செய்தல் ஆகும். இதனால்த்தான் தெய்வத் திருவருளை அடையமுடியும். இத்தகைய உயர்ந்த நிலையினைத் திருமந்திரத்தின் முதலாம் தந்திரம் கூறுகிறது. எந்த மார்க்கத்துக்கும் ஒழுக்கமே அடிப்படை என்பது இங்கு தெளிவாக்கப்பட்டுள்ளது.

திருமந்திர நூலின் இரண்டாம் மூன்றாம் நான்காம் தந்திரங்கள் உபாசனை எனப்படும். பக்தி மார்க்கத்தைத் தெளிவுபடுத்திக் கூறுவன இவை ஆகும். இதனில் அட்டாங்கம், ஆதாரம், மந்திரம், நிராதாரம் என்கிற மார்க்கத்துக்குரிய செய்திகள் படிப்படியாகக் கூறப்பட்டுள்ளன. இதனை மேலோட்டமாகப் பார்த்தால் சாமானிய யோக மார்க்கமாகத் தென்படும். எனினும் மனத்தை ஒருமுகப்படுத்திப் பக்தி செலுத்தும் வழிகள் இத்தந்திரங்களில் கூறப்பட்டிருத்தலைக் காணலாம்.

20

நான்காம் தந்திரம் ஞானத்துக்கான தொடக்க நிலையாகிய மோனத்துக்கு வழிகாட்டுவதாகும். மோனம் நிலைப்பதற்கு மனம் நிலைபெற வேண்டும். மனத்தை நிலைநிறுத்துதல் எளிதான காரியமன்று. இதற்கு நமது முயற்சியும் இறை அருளும் தேவை.

இந்த இரண்டின் கூட்டுறவை எப்படிச் சாதிப்பது என்பதை நான்காம் தந்திரப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இத்தந்திரம் மனமடக்கும் சாதனாமார்க்கத்தைக் கூறுவதாகும். இதனால் சிவயோகம் தலைப்படுவார் உள்ளத்தை உள்முகப்படுத்தி விந்து நாதங்களின் துணைக்கொண்டு அருள்வயப்பட்டு ஆண்டவனை அடையவேண்டுமென்பதைத் தெரிந்துகொள்வர்.

திருமந்திரத்தின் நான்காம் தந்திரம் மந்திரயோகத்தை விரித்துக் கூறுகிறது. இதில் உள்ள பதின்மூன்று உட்பிரிவுகளில் எட்டாவது பிரிவாக ஆதார ஆதேயம் உள்ளது. இப்பிரிவில் நூறு திருமந்திரப் பாடல்கள் உள்ளன. இதன் முன் உள்ள பூரண சக்தி என்பது நான்காம் தந்திரத்தின் நடுப்பகுதியாக இதயபாகமாக உள்ளது.

பாச சம்பந்தம் உள்ள உயிர்கள் அப்பாசத்தை விட்டுப் பதியை அடையும் படியான வழியை உணர்த்துவதே சித்தாந்த சைவத்தின் குறிக்கோள் ஆகும். பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி எனச் சிவஞான சித்தியார் இதனைக் கூறுகிறது. பாசமாவது இவ் உலகும் உலகப் பொருள்களும், உடம்பும், உடம்பில் உள்ள ஐம்பொறி, மனம், புத்தி, அகங்காரம் முதலிய கருவிகளும் ஆகும். இவையெல்லாம் அசுத்த மாயையின் காரியங்கள். இவை ஆணவ மலமாகிய குற்றத்தை உடைய உயிர்களுக்கு அறிவை விளக்கும் கருவிகளாக உள்ளன. ஆணவமலம் சக்தி கெடவும் அசுத்த மாயையின் சம்பந்தம் நீங்கவும் துணை செய்வது சுத்த மாயையே ஆகும். சுத்த மாயையை நூல்கள் மகாமாயை. குண்டலினி, விந்து முதலிய பெயர்களால் வழங்குகின்றன.

நான்காம் தந்திரத்திலே கூறப்படும் மந்திரங்கள், சக்கரங்கள் மூர்த்திகளாகிய எல்லாம் நமது அறிவைச் சுத்தமாயா காரியங்களைப் பற்றச்செய்து அசுத்த மாயா காரியப்பற்றை நீங்கச் செய்வன ஆகும். இங்கே கூறப்பட்டுள்ள தியான யோகங்களிலே நிற்கும்போது அவ்வாறு நிற்போருக்குப் பல சித்திகள் இடைப் பலன்களாகக் கைகூடும். இத்தகைய சித்திகள் கிடைப்பவர்கள் அதில் மயங்கக் கூடாது. இறைவன் திருவருளே சக்தி எனப்படும். சக்தி எங்கும் வியாபித்து நின்று எல்லாப் பொருள்களையும் தொழிற்படுத்தி உயிர்களின் அறிவு முயற்சி என்பதை மலர்விப்பதாக உள்ளது. உயிர்கள் அத்திருவருளையே முடிவில் பற்ற வேண்டும். அத்திருவருளே எல்லாவற்றிற்கும் அடிப்படையாய், சார்பாய் உள்ளது என்று உணர்த்துவதே ஆதார ஆதேயம் என்னும் பகுதியாகும்.

ஆதாரம் என்ற சொல் சார்பாக உள்ள இடத்தைக் குறிக்கும். ஆதேயம் இடத்தில் நிகழ்பொருளைக் குறிக்கும். இறைவனது திருவருளாகிய சக்தி உலகு உயிர் அனைத்திற்கும் ஆதாரம். உலகு உயிர் அனைத்தும் ஆதேயம். திருவருளை முதல்வனது திருவடி எனக்கூறுவர் பெரியோர். திருவருளே உலகு உயிர் அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது என்னும் அடிப்படை உண்மையினை மெய்கண்டதேவர்

தாரகன் ஆம் அத்தன் தாள் நிற்றல்
அவர் வினையால் வித்தகமாம்

என்னும் தொடரால் குறிப்பிடுகின்றார்.

முதற்பொருளாகிய கடவுள் முதற்பொருள் தன்னையே காணும்போது பேரானந்தப் பொருளாய், செம்பொருளாய் அறிவே வடிவாயுள்ள சிவம் எனப்பெயர் பெறுகிறது. உலகு, உயிர் அனைத்தையும் தன் நிறைவுள் அடக்கிக்கொண்டு உயிர்களுக்குப் பிற பொருள்களைக் காட்டி நிற்கும் இயல்பிற் சக்தி எனப் பெயர் பெறுகிறது. ஒளிபோலச் சுடரைக் காணும்போது அதனைக் காட்டி நிற்பனவும் ஒளிக்கதிர்களே ஆகும். அதுபோல மெய்யுணர்ந்தோர் முதற் பொருளைத் தலைப்பட்டு உணரும்போது அம்முதற் பொருளின் குணமாகவும் சொரூபமாகவும் திருவருளே உள்ளது. உடம்பின் ஆறு நிலைகளாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களையும் தாமரைப் பூவாக உருவகித்து இவ் இடங்களில் நின்று இவற்றை இயக்கும் ஆதார சக்தியாகத் திருவருட் சக்தி கூறப்பட்டுள்ளது.

திருவருள் சக்தி தன் உயிர்க்கு உயிராய் விளங்கும் சிவனையே நோக்கி நின்றாள். அவரின் திருவுள்ளப்படி வேதாகமப் பொருளை விரித்துக் கூறினாள்.

மாது நல்லாளாகிய திருவருட் சக்தி அவர் மணாளனாகிய சிவன் தன் உடம்பில் செம்பாதி கொள்ள இடம் கொடுத்துப் பாதி நல்லாள் ஆயினாள். சிவனும் அம்பிகைக்குப் பாதி இடம் கொடுத்துப் பகவானாயினான். அத்தகைய அறிவுப் பேரொளியாக இருக்கின்ற அருட் சக்தியை ஆருயிர்த் துணையாகக் கொள்பவருக்குப் பிறவித்துன்பம் நீங்கும். சக்தி வழிபாட்டினால் ஆன்மா எய்தும் பலனைப் பின்வரும் ஆதாரவாதேயத்தில் வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

மாது நல்லாளும் மணாளன் இருந்திடப்
பாதி நல்லாளும் பகவனுமானது
சோதி நல்லாளைத் துணைப்பெய்ய வல்லிரேல்
வேதனை தீர் தரும் வெள்ளடையாமே

யோகப் பயிற்சி செய்பவர்களுக்கு சக்தி குண்டலினி சக்தியாகத் திகழ்கிறாள் அத்தகையவளின் இயல்பை அறிந்து மேல் எழச் செய்தால் அவள் வீடு அளிக்கும் தலைவி ஆவாள். யோக நெறியில் நிற்பவர்கள் உச்சியில் அமிர்தத்தைச் சுவைப்பார்கள். இந்த உண்மையை அறிந்து பக்தியைச் செலுத்தாமல் வீணே ஆரவாரம் செய்பவர்கள் நாய்போன்று கத்தியபடி இருக்கின்றார்கள்.

"கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்
கத்தித் திரிவர் கழுவடி நாய்போல்"

என வேறொரு திருமந்திரப்பாடல் இதனைக் குறிப்பிடுகிறது. நாடகத்தால் உன் அடியார்போல் நடிக்கும் பக்தியையும், அதனால் ஏற்படும் ஆரவாரப்

பேச்சுக்களையும், தர்க்க வாதங்களையும் பின்வரும் பாடலின் ஊடாகத் திருமூலர் கண்டிக்கிறார்.

சக்தியென்பாளொரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி யென்ப தறிகிலர்
பக்தியைப் பாழில் உகுத்த அப்பாவிகள்
கத்தியை நாய்போற் கதறுகின்றாரே

ஆன்மவிடுதலைக்குரிய பாதை எதுவென்று தெரியாது பலர்தத்தளிக்கிறார்கள். மனம் ஒரு நெறிப்படாது அதுவழி என்றும், இது வழி என்றும் மயங்கி வீண்காலம் போக்குகின்றார்கள். மூலாதாரத்தில் விளங்கும் குண்டலினி சக்தியை மேலெழுப்பி தலையில் விளங்கும் சிவத்துடன் பொருத்தி வழிபடல் சிறந்த வழியாகும். இத்தகைய நெறியினைக் கடைப்பிடிப்பவர்கள் விதியை வெல்லும் ஆற்றலைப் பெறுவர். பிறப்பு இறப்பு என்னும் சுழற்சியில் இருந்து விடுதலை பெறுவர்.

அது இது என்று அவமே கழியாதே
மதுவிரி பூங்குழல் மங்கை நல்லாளைப்
பதிஅது மேவிப் பணிய வல்லார்க்கு
விதி வழி தன்னையும் வென்றிடல் ஆமே.

ஆன்மா அருள்வயப்பட்டு ஆண்டவனை அடையுமார்க்கத்தின் படிமுறையில் ஒன்பதாவதாக நிற்பது ஏரொளிச் சக்கரம் அல்லது அருளொளி அழகொளிக் காட்சியாகும். ஏர் என்பது எழுச்சி எனவும் அழகு எனவும் பொருள் தரும். ஒளி என்பது சோதி ஆகும். சக்கரம் என்பது செம்மையாகச் செய்வது எனப்பொருள்படும். சக்கரம் யந்திரம் என்றும் கூறப்படும். உள்ளொளியை எழுப்பித் திருவருளொளியில் கலக்கச் செய்வதற்கான முயற்சியை அனுபவபூர்வமாக்குதலே ஏரொளிச்சக்கரம் என்பதன் பொருள் ஆகும்.

காற்று ஒளியை ஆக்குதலும் செய்யும், அழித்தலும் செய்யும். அவ்வாறே சக்கரத்துக்கும் விளைவிப்பதும் தொலைப்பதுமாகிய இரண்டுவகை ஆற்றலும் உண்டு. எல்லாப் புவனங்களையும் உண்டாக்கும் ஆற்றலும், அவற்றை ஒடுக்கும் ஆற்றலும் ஒளிக்கு உண்டு. ஆக்கும் ஆற்றலை ஏரொளி என்பர். அழிக்கும் ஆற்றலைக் காரொளி என்பர். சிவ ஒளியை அருள் அருள் ஒளியால் அடைவதே முறை. அருள் ஒளியை நாம் கைக்கொண்டால் நல்வாழ்வு கிடைக்கும்.

கண்ணில் ஒளி உள்ளது. இருட்டில் வேறோர் ஒளியின் துணை இல்லாமல் அது பொருளை அறியமுடியாது. வேறோர் ஒளியுடன் கூடின் கண் எப்பொருளையும் காண வல்லதாகிறது. ஆணவ இருளில் உள்ள ஆன்மா தன்னையும் காணாது, தலைவனையும் அறியாது தவித்து நிற்கிறது. ஆன்மா

அருளொளியாம் ஞானத்தினை துணையாகக் கொள்ளின் தத்துவங்களின் தன்மையை அறிவதோடு தன்னையும் தலைவனையும் அறியும் திறனையும் பெறும்.

ஒரு விளக்கொளியைச் சூரியவொளி முன் வைத்தால் விளக்கொளி தன் ஒளியைப் பேரொளியான சூரியன் ஒளியிலே ஒடுங்கச்செய்து விடுகிறது. தான் ஓர் ஒளியற்ற பொருள்போல அடங்கி நிற்கிறது. விளக்கொளி போலவே நமக்குள்ளேயும் ஒளி உள்ளது. அது இருக்குமிடத்தை நாம் அறியவேண்டும். அருளொளியுடன் அதனைக் கலக்கச் செய்யவேண்டும். இவற்றைக் கூறும் பகுதியே ஏரொளிச் சக்கரம் ஆகும். ஏரொளிச் சாதனத்தை துணைக் கொண்டால் நாம் பிறப்பை அறுக்கலாம். ஏரொளித் துணையே பேரொளியாம் சிவ ஒளியைக் காட்டவல்லது ஆகும்.

ஏரொளிக்கு ஆதாரத்தானம் உடம்பில் உள்ள மூலாதாரம் ஆகும். இது பொன்னிறமான அக்கினித்தானமாகும். இங்குள்ள கதிரொளியை அக்கினிப் பீஜமந்திரத்தினால் எழுப்பி மேலே உள்ள ஆயிர இதழ்க் கதிரொளியிற் கலக்கச் செய்துவிடுவது தான் யோகம் எனப்படும். இவ்வாறு அகத்தும் புறத்தும் ஒளிக்காட்சி பெற்றோர் தன் இழப்புப் பெற்றுச் சிவத்தினை அருள் ஒளியால் அடைந்து இன்புறுவர். இதனையே "மன்று நிறைந்த மணிவிளக்குக் காட்சி" எனத் திருமூலர் கூறுகிறார். இவற்றை எல்லாம் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

ஏரொளி உள் எழு தாமரை நால் இதழ்;
ஏரொளி விந்துவினால் எழு நாதமாம்;
ஏரொளி அக்கலை எங்கும் நிறைந்த பின்
ஏரொளி சக்கர அந்நடு வன்னியே

தனக்குள்ளே சிவத்தைத் தேடித் தெளிவுகண்ட அடியவர்க்கு தம்பனம், மாரணம், வசியம் என்பவை இயல்பாகவே வந்து பொருந்தும். இவர்களின் இருப்பிடத்திற் பகைவரும் வந்து அடையமாட்டார். இவ் உண்மையை அருட்சக்தியின் திருவருளால் தெளிந்து கொள்வார்க்குப் பகையே உண்டாகாது.

கூடிய தம்பனம் மாரணம் வசியம்
ஆடு இயல்பாக அமைந்து செறிந்திடும்
பாடியுள்ளாகப் பகைவரும் வந்துறார்
தேடி உள் ஆகத் தெளிந்து கொள்வார்க்கே.

# நாவில் நடமாடும் நாவுக்கரசி

21

வயிரவச்சக்கரத்திலுள்ள மந்திரங்கள் சிறப்புடைய கருத்துக்கள் செறிந்தவை. இப்பகுதியில் ஆறு திருமந்திரப் பாடல்கள் மட்டும் காணப்படுகின்றன. வயிரவர் யார்? அவரது சக்கரம் யாது? அதன் பயன் யாது? அவரைப் பூசை செய்ய வேண்டியதன் பயன் யாது? என்பதை வயிரவச் சக்கரத்தில் உள்ள ஆறு பாடல்களும் தெளிவுபடுத்துகின்றன. சிவனுடைய மூர்த்தங்கள் அறுபத்து நான்கில் முப்பத்து எட்டாவது மூர்த்தமாக வயிரவ மூர்த்தம் காணப்படுகிறது. தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பாற்றும் துஷ்ட நிக்ரஹ வடிவமே வயிரவ மூர்த்தம் ஆகும். வயிரமூர்த்தி மரணம், பிறப்பு என்ற பயத்தைப் போக்குபவர். வயிரவர் என்ற பெயரே அச்சத்தைப் போக்குபவர் என்பதைத் தெரிவிக்கும். காஷ்மீரத்திலும் நேபாளத்திலும் ஒருசிலர் வயிரவ மந்திரத்தை வைத்து உபாசிக்கிறவர்கள் இருக்கிறார்கள்.

அந்தகாசுரன் என்ற அசுரன் அந்தகனாகிய யமனைப்போலவே கொடுமை நிறைந்த அசுரனாக விளங்கினான். இறைவனிடமிருந்து பெற்ற வரத்தைத் துணையாகக் கொண்டே உயிர்களுக்கெல்லாம் அந்தகாசுரன் தீமைகள் செய்தான். வானவர்கள் எல்லாம் இறைவனிடம் வந்து அந்தகாசுரன் செய்யும் கொடுமைகளைஎல்லாம்முறையிட்டார்கள். இறைவன் துஷ்ட நிக்ரஹ வடிவமாகிய வயிரவ மூர்த்தத்தை எடுத்துத் தனது சூலத்தினால் அந்தகாசுரனை அழித்து அடியவர்களைக் காப்பாற்றினார் என்பதைப் பதி வலியில் அட்டவீரட்டத்தைப் பற்றி விளக்கும்போது குறிப்பிட்டுள்ளார்.

நமது புலன்களால் நாம் இறைவனை உணர்ந்துவிட முடியாது. உருவமற்ற இறைவனை உருவத்தில்

வழிபடுவது சிறந்த எளிமையான முறையாகும். இதனை உணர்ந்த நமது முன்னோர்கள் உருவவழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். வயிரவருக்கு உருவம் உண்டு என்பதைத் திருமூலரும் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். அவருடைய திரு உருவத்தையும் அவருடைய திருக்கரங்களில் அம்மூர்த்தி கொண்டுள்ள படைகளையும், விளக்குகிறார். இரண்டு கைகளில் கபாலமும், சூலமும் மற்றைய இரண்டு கைகளில் தமருகமும் பாசமும் ஐந்தாம் ஆறாம் கைகளில் தலையும் வாளும் உடையவராய் விளங்குகிறார்.

ஆமேவப் பூண்டருள் ஆதி வயிரவன்
ஆமே கபாலமும் சூலமும் கைக்கொண்டு அங்கு
ஆமே தமருக பாசமும் கையது
ஆமே சிரத்தொடு வாளது கையே

வயிரவச் சக்கரத்தை அமைத்து வழிபடுவதால் கிடைக்கும் பயன் யாது? வழிபாடு புரிபவர்களின் பகைவர்கள் தங்களுக்குள் கலகமிட்டு மாய்வர். வேண்டியபடி நடக்கலாம். எண்ணிய எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். செய்கின்ற செயல்கள் யாவும் வெற்றியைத் தரும்.

வேண்டிய வாறு கலகமுமாயிடும்
வேண்டிய வாறினுள் மெய்யது பெற்றபின்
வேண்டிய வாறு வருவழி நீ நட
வேண்டிய வாறது வாகும் கருத்தே

சாம்பவி மண்டலச் சக்கரத்துள் பத்துப் பாடல்கள் காணப்படுகின்றன. முதல் மூன்று திருப்பாடல்களில் சக்கரம் எப்படி அமைக்கவேண்டும் என்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சக்கரங்கள் எல்லாம் சிவசக்தி தங்கியிருக்கும் ஸ்தானங்கள் ஆகும். இயந்திரங்களின் உள்ளே இருக்கும் மந்திரம் சிவசக்தியென்றும், அம் மந்திரப் பொருள் பரசிவமென்றும் கூறப்பட்டுள்ளது. எல்லாச் சக்கரத்திலும் இருந்துகொண்டு எல்லாவகை நலன்களையும் வழங்குகின்ற பரசிவம் ஒவ்வொரு சக்கரத்திலிருந்தும் ஒவ்வொரு நலத்தைச் சிறப்புமுறையிலும் மற்ற நலங்களைப் பொது முறையிலும் வழங்கி அருளுவார்.

இறைவன் வெளிப்படுகின்ற எல்லாத் திருஉருவமும் உயிர்களின் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமுமாகிய பயன் கருதியே இடம்பெறுகிறது. இதேபோல இறைவனை வைத்து உபாசிப்பதற்குரிய எல்லாச் சக்கரங்களும் ஒன்றோடொன்று தொடர்புகொண்ட அந்த இருவகைப் பயனையுமே நல்குகின்றது. வினைவழி உழலும் உயிர்களுக்குத் துன்பம் நீங்கிய இன்பப்பேறு கிட்டும். திருவருளால் வந்து கிடைக்கப்பெறுகின்ற துன்பக்கலப்பற்ற இன்பமே திருமந்திரத்தில் ஒப்பிலா ஆனந்தம் என்று கூறப்பட்டுள்ளது. இத்தகைய பேரானந்தப் பெருங்கடலுள் அழுந்தி இன்புறும் பெரும் பேற்றைச் சாம்பவி மண்டலச் சக்கரம் தரவல்லதாக உள்ளது.

சம்பு என்னும் சொல்லுக்கு ஆனந்தம், சுகம், இன்பம் எனப் பல பொருள்கள் உள்ளன. சம்பு என்ற ஆண்பாற் பொருளின் சக்தியாகச் சாம்பவி என்ற பெண்பாற் பொருள் இருக்கிறது. பிரிப்பின்றி ஒன்றி இருக்கின்ற சிவமும் சக்தியும் சக்கரம் அல்லது இயந்திரங்களில் எழுந்தருளியிருந்து அருள்புரிகின்றார்கள். இதனாலேயே சாம்பவி மண்டலம் அதன் உள்ளிருக்கின்ற ஸ்ரீ பஞ்சாட்சரம் ஆரும் அறியாத ஆனந்தரூபமாகக் காட்சி தருகிறது.

சாம்பவி மந்திரமாகிய அஞ்செழுத்தை யாரும் ஓதலாம். யாரும் தம் அறிவால் அறியவொண்ணாத பேரின்ப வடிவமாகிய ஆனந்த வடிவமே இதுவாகும். இம்மந்திரம் விண், மண், சூரியன், சந்திரன், உடல், உயிர், உணர்வு ஆகிய எல்லா இடங்களிலும் விரவி நிற்கும். இம்மந்திரத்தை அனைவரும் ஓதிப் பயனைப் பெறலாம் என்பதைச் சாம்பவி மண்டலச் சக்கரத்தில் வரும் பின்வரும் பாடல் விளக்குகிறது.

ஆரும் உரை செய்யலா மஞ்செழுத்தாலே
யாரும் அறியாத ஆனந்த ரூபமாம்
பாரும் விசும்பும் பகலுமதியாதி
ஊனும் உயிரும் உணர்வது வாமே.

சக்கரம் என்றால் யந்திரம். சக்கர பூசை என்றால் யந்திரபூசை. உடம்பு மாயையால் உண்டான யந்திரம். இந்த இயந்திரத்தின் உள்ளேதான், சூக்கும வடிவமாகிய ஆன்மா உள்ளது. இதனையே " மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா" எனச் சிவஞானபோதம் குறிப்பிடுகிறது. மாயையைக் கடந்துநின்று இயக்குகின்ற இறைவனை மாயா கருவிகளைக் கொண்டு அறிதல் இயலாது. அறிவே வடிவமாகிய பரம்பொருளை உருவ வழிபாட்டால் அறிய முயலவேண்டும். அருவ நிலையை நன்கு உணர உருவவழிபாட்டு நிலை மிகவும் இன்றியமையாதது. அருவப்பொருளாகிய இறைவனை உருவ வடிவிலே வைத்துப் பூசிக்கின்றோம். அப்பொருளை மந்திரமயமாகவும் சிந்திக்கின்றோம். மந்திர வடிவாக இயந்திரத்தினுள் வைத்தும் பூசிக்கின்றோம்.

புவனாபதி என்றால் புவனை என்னும் சக்திக்கு தலைவனாகிய சிவனையே குறிக்கும். சக்தியை அதிட்டித்து நின்றால் அல்லாமல் சிவம் விளங்காது. சிவம் விளங்கச் சக்தி வேண்டும். சக்தியால் சிவம் விளங்கும். மந்திரமயமாக வழிபடும் பரம்பொருளை இயந்திர வடிவிலே வைத்து வழிபடுகிறோம். மந்திரம் அருவம், இயந்திரம் உருவம். புவனங்களுக் கெல்லாம் நாயகியாகிய புவனாதிபதியைச் சக்கரமாகிய இயந்திரத்தில் வழிபடுவதே புவனாபதி சக்கரம் எனப்படும்.

இறைவனுக்கு மந்திரம் தூலசரீரம். ஆன்மா சூக்கும சரீரம். பராசக்தி ஆதி சூக்கும சரீரம். அண்டமெல்லாம் அணுவாகவும், அணுக்களெல்லாம் அண்டங்களாகவும் கொண்டு உள்ளும் புறமும் ஒப்பற்ற பரம்பொருள்

ஆன்மாக்கள் உய்யும் பொருட்டாகவே விளங்கும். அந்தப் பரம்பொருளை அகத்தில் வைத்து வழிபடுவதுடன் புறத்திலும் வைத்து வழிபாடு செய்கிறோம்.

துன்பத்தினின்றும் விடுவிப்பது எதுவோ அதுவே மந்திரம் எனப்படும். வாசகமந்திரம், வாச்சிய மந்திரம் என மந்திரம் இருவகைப்படும். பஞ்சாட்சரம் வாச்சிய மந்திரம், அதனால் உணர்த்தப்படும் பரம்பொருள்தான் சக்தி. ஞானந்தான் சக்தி, தடையில்லா ஞானமே பராசக்தி. நாம் சக்தியை அறிந்தாலன்றிச் சத்தனை அறிய அடைய இயலாது. "எத்திறம் ஈசன் நின்றான் அத்திறன் அவளும் நிற்பாள்" என்றே சித்தியாரும் கூறுகிறது. சிவனை அடைவதற்குச் சிறந்த சாதனமாகப் பஞ்சாட்சர மந்திரம் இருப்பதுபோல திரிபுரை சக்கரம், புவனாபதி சக்கரம், நவாக்கரி சக்கரம் என்பனவும் அமைந்துள்ளன.

ஒப்பில்லாத பேரறிவுப் பேராற்றலாகிய பராசக்தியே சிவனுக்குத் திருமேனியாவாள். சிவபெருமானின் திருவுரு தடையில்லா மெய்யுணர்வாகிய ஞானம் ஆகும். சித்தியையும் முத்தியையும் அளிக்கின்ற வடிவமாக இவ்வடிவம் காணப்படுகிறது. பராசக்தி ஒருத்தியாய் இருந்தபோதிலும் சிவகுருவோடு பொருந்தி நிற்பதில் அவள் எட்டுச் சக்தியாய் உள்ளாள்.

ஏக பராசக்தி ஈசற்கு ஆம் அங்கமே
அகம் பராவித்தை ஆம் முத்தி சித்தியே
ஏகம் பராசக்தி ஆக, சிவகுரு
யோகம் பராசக்தி உண்மை எட்டு ஆமே.

### நவாக்கரி சக்கரம்

நவாக்கரி சக்கரம் என்பதற்கு புதுமையான அட்சரத்தையுடைய சக்கரம் என்பது பொருளாகும். இச் சக்கரத்திற்குரிய அதி தேவதை அதி சக்தியாகிய சிவசக்தி ஆவாள். சக்தியின் கோலம் யாது? அவளுடைய தன்மை யாது? என்பதைத் திருமூலதேவர் நவாக்கரி சக்கரத்தில் எடுத்துக்காட்டுகிறார். இவளை வணங்கினால் காலனும் எண்ணிய நாளும் கடந்திடும், யமன் அணுகான், வரையறுக்கப்பட்ட வாழ்நாள் பெருகும், பகையில்லை, பிறர் பழிப்பில்லை. பல வகையான உயிர்வர்க்கங்களும் வணங்கி நிற்கும். காமவெகுளி மயக்கங்கள் கலங்கிடும் எனத் திருமந்திரம் கூறுகிறது.

மந்திரங்களைப் பொருள் தெரிந்தே உச்சரிக்க வேண்டும். கண்ணுக்குத் தெரியாத நுட்பமான சக்திகளை உடையது மந்திரம். இந்த நவாக்கரி மந்திரத்தை விதிப்படி உச்சாடனம் செய்கிறவர்களுக்கு நவாக்கிரி சக்தி நன்மையைத் தருவாள். இம்மந்திரத்தை உச்சரிப்பவர்களுக்கு ஞானம், கல்வி என்பன பெருகுவதோடு பீடித்திருக்கும் வல்வினைகள் எல்லாம் நீங்கிவிடும். தீவினைகள் தொடராது, சிவமாந் தன்மையைப் பெற்றுவிடுவர் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் எடுத்து விளக்குகிறது.

நலந்தரு ஞானமும் கல்வியுமெல்லாம்
உரந்தரு வல்வினை யும்மை விட்டோடும்
சிரந்தரு தீவினை செய்வதகற்றி
வரந்தரு சோதியும் வந்திடும் காணே

நாவுக்கரசியாகிய இவளைப் போற்றும் மெய்யன்பர்களது நாவில் நின்று வாகீஸ்வரியாகிய சக்தி நர்த்தனமாடுவாள். வேதாகமங்களை எல்லாம் தனது நாவினால் பொழிகின்ற வாகீஸ்வரியை உள்ளன்போடு பூசிப்பவர்களின் திருமுகமும் அருட்பொலிவுடன் காட்சி தரும்.

வழுத்திடும் நாவுக்கரசு இவள் தன்னைப்
பகுத்திடும் வேதம் மெய் ஆகமம் எல்லாம்
தொகுத்து ஒரு நாவிடைச் சொல்ல வல்லாளை
முகத்துளும் முன் எழக் கண்டு கொளீரே

நவாக்கரி சக்கரத்தைப் பூசை செய்வதால் பலவிதமான நன்மைகள் கிடைக்கும். உலகியல் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் யாவும் நீங்கும். பகையைத் தடுத்து நிறுத்தும். சிறையிலடைத்துத் தண்டம் செய்யும், மன்னனும் வலிய வந்து வழிபடுமாறு செய்யும். உள்ளத்தைக் கலங்க வைக்கும் எவ்வகைத் துன்பங்களும் உண்டாகாது என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

அறிந்திடும் சக்கரம் அர்ச்சனை யோடே
எறிந்திடும் வையத்து இடர் அவை காணின்
மறிந்திடும் மன்னனும் வந்தனை செய்யும்
பொறிந்திடும் சிந்தை புகை இல்லைதானே

நான்காம் தந்திரம் சிந்தியாகமத்தின் சாரம் எனக் கூறப்படுகிறது. இதில் 13 பகுதிகளும் 535 பாடல்களும் உள்ளன. மந்திரம், சக்கரம் என்பவற்றின் உபாசனை முறைகள் எல்லாம் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இவை முழுவதும் ஆசாரியன் மூலமாகக் குரு உபதேசத்தால் உணரப்பட வேண்டியவை ஆகும்.

தானங்களில் அன்னதானமும், வஸ்திர தானமும், தண்ணீர் தானமும் சிறந்தவை. அன்னதானம் ஒருவருடைய பசியைப் போக்கும். வஸ்திர தானம் ஒருவருடைய மானம் காக்கும். தண்ணீர் தானம் ஒருவருடைய தாகத்தைத் தீர்க்கும்.

**–பால நர்மதா**

# சீவனைச் சிவனாக்கும் வழிகள்

22

ஐந்தாம் தந்திரம் இருபது அதிகாரங்களையும் நூற்று ஐம்பத்து நான்கு பாடல்களையும் கொண்ட பகுதியாகும். இவ் அதிகாரம் வாதுளாகமத்தின் சாரம் எனக் கூறப்படுகிறது. சிவாகமப் பயன்களைக்கூறும் பகுதியாக ஐந்தாம் தந்திரம் காணப்படுகிறது. இறைவனின் திருவருளைப் பெறுவதற்கு கலைஞானமாகிய சாஸ்திர ஞானம் தேவை எனக் கூறப்பட்டுள்ளது. சாஸ்திர ஞானத்தால் மட்டும் கடவுளைக் காணமுடியாது. அனுபவஞானமும் வேண்டும் என்பதை இத்தந்திரத்தில் வரும் பாடல்கள் விளக்குகின்றன. ஆணவ மலப் பீடிப்பினால் தத்தளிக்கும் ஆன்மா நிலைமாறி இன்பநிலை அடைவதற்கான நால்வகையான வழிகள் சைவசித்தாந்தத்தில் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நால்வகை நெறியை அடைவதற்கு நேரான வழிகளும் உண்டு, குறுக்குப் பாதைகளும் உண்டு. ஆனால் இவ்வுலகில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் குறுக்குப் பாதைகளையே விரும்புகின்றனர். நேரான வழியிற் செல்லாமல் மற்றவழிகளிற் சென்றால் அவை துன்பத்திற்கே வழிவகுக்கும்.

மனிதர்களில் பலருக்குத் தன் இஷ்டம் போல இன்பம் நுகரவும், எண்ணம் போலத் திரியவும், கட்டுப்பாடின்றிக் காட்டு விலங்குகளைப் போலத் தன் இச்சைகளைப் பூர்த்தி செய்யவும் தான் விருப்பம் உள்ளது. கட்டுப்பாடு என்றால்

கசப்பாகத் தான் இருக்கும். சிறிது சிந்தனைக்குரிய கட்டுப்பாடு சைவசித்தாந்த தத்துவத்திலே காணப்படுகிறது. சிவத்தோடு சம்பந்தப்பட்ட சைவம், சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என நான்கு பிரிவுகளை உடையது. இந்த நான்கு பிரிவுகளும் அன்புடைமை வாயிலாக அருளுடமையைப் பெறுவதற்கு உபாயமாக உள்ளன. இதிலே சுத்த வைசவம் சடங்களவிலே நில்லாது சம்பிரதாயங்களையும் கடந்து தன்னையும் தலைவனையும் அறியும் தன்மை உடையது. தலைவனை அறிவதற்கான தடைகளையும் அறிந்து தலைவன் திருவடிச் சார்பு பெறுதலைச் சுத்தசைவம் விளக்குகிறது.

கற்கவேண்டிய நூல்களை எல்லாம் நல்லாசான்பால் கற்றுத் தெளிந்தவர்கள் மெய்யுணர்வினைப் பெறுவார்கள். மெய்ப்பொருட் சேர்க்கையால் சிவயோகத்தைப் பெறுவதற்குரிய சீலம் நோன்பு என்பன ஏற்பட்டுவிடும். இதனால் முன்னைப் பழம் பொருட்டு முன்னைப் பழம் பொருளாகிய சிவத்தைப் பொருந்துவர். இதனால் மலமாயா கன்மங்களாகிய குற்றங்கள் நீங்கும். குற்றங்கள் நீக்கியதும் தற்பரமாகிய விழுமிய முழுமுதற் பொருளாகிய சிவத்தினை அகத்திலே காண்பர். இவ்வாறு சீவன் சிவனாக மாறி முழுமுதற் பொருளாகிய சிவத்தினை அகத்திலே காண்பவர்களே சைவ சித்தாந்திகள் என்பதைப் பின்வரும் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

**கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்**
**முற்பத ஞான முறை முறை நண்ணியே**
**சொற்பத மேவித் துரிசற்று மேலான**
**தற்பரங் கண்டுளோர் சைவசித்தாந்தரே**

நாத முடிவாகிய சிவத்தைத் தரிசித்தபேர்களே சலனமற்ற ஞானிகள் ஆவர். இவர்கள் பிறப்பு இறப்பு ஆகிய தடுமாற்றத்துக்கு உள்ளாகமாட்டார்கள். தத்துவம் கடந்த பெரும் பொருளோடு இவர்கள் சேர்ந்திருப்பார்கள். சுத்த சைவ சித்தாந்தமே வேதங்களின் முடிபாகும்.

சிவவேடம் பூண்டு சரியை, கிரியை நெறியில் நிற்போர் அசுத்த சைவர் என அழைக்கப்படுவார்கள். செய்யும் காரியம் அனைத்தையும் இறை நினைப்போடும் கடவுள் சம்பந்தமாகவும் சரியை, கிரியை நெறியில் நின்று இவர்கள் செய்வார்கள்.

சுத்த சைவமாகிய ஞான நிலைக்கு இவை வாயில்களாக உள்ளன. உலகில் தோன்றிய ஞானநூல்கள் அனைத்தையும் கற்று மோன நிலையை ஞானிகள் அடைவார்கள். அறுபத்து நான்கு கலைகளும் அவற்றால் ஏற்படும் அறுபத்து நான்கு பேறுகளும் பெறுவர். அட்டமா சித்திகளையும் பெற்றவர்களாய் வேதசிரசு என்று போற்றப்படும் உபநிடதங்கள் போற்றும் அறிவையும் பெற்று சிவத்தையும் தன்னையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் உடையவர்களாயும் ஆவார்கள்.

ஞானி புவியெழு நன்னூலனைத்துடன்
மோன திசையும் முழு எண்ணென் சித்தியும்
ஏனை நிலமும் எழுதா மறையீறுங்
கோனொடு தன்னையுங் காணும் குணத்தனே

சைவ மார்க்கத்தில் நின்று ஆன்மபோதம் கெட்டுச் சிவபோதத்தில் திளைத்திருப்பவரின் நெறியே மார்க்க சைவம் எனப்படும். புறச் சிவ சின்னமாகிய விபூதி உருத்திராக்கம் அணிந்து அகச் சிவசின்னமாகிய திருவைந்தெழுத்து மந்திரத்தை நாவால் ஓதிய வண்ணம் சத்சங்கமும் அடியார் வழிபாடும் செய்வதே சுத்த சைவர்களுடைய மார்க்க சைவ நெறியாகும்.

பொன்னாற் சிவசாதனம் பூதி சாதனம்
நன்மார்க்க சாதனம் மாஞான சாதனந்
துன்மார்க்க சாதனந் தோன்றாத சாதனஞ்
சன்மார்க்க சாதனமாஞ் சுத்த சைவர்க்கே

கடுஞ்சுத்த சைவன் உலக ஞானம் அனைத்திலும் ஒட்டாமல் சிவபோக நிலையில் செறிந்து விளங்குவான். ஞான முதிர்ச்சி ஏற்பட்டதும் வேடமாகிய சாதனங்களில் உள்ள பற்றும் தானாகவே நழுவும். ஆடம்பரமின்றி மலமாயை கன்மங்களின் நீங்கி சிவபோக நிலையை அடைதலே கடுஞ் சுத்த சைவமாகும்.

பாலில் நீர் கலப்பது போல் ஆன்மா இறைவனுடன் பிரிவின்றிக் கலந்து நிற்கும் முத்தியே பரமுத்தியாகிய சாயுச்சிய முத்தியாகும். இந்த அரிய பேற்றினை அடையப்பெற்றால் தன்வழி ஈர்க்கும் புலன் ஐந்தும் திருவருளால் ஆருயிரின் வழிச்சென்று அடங்கிவிடும். ஞானம் விளக்கொளி போன்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். சிரசின் மேல் ஒளியில் ஒன்றுபட்டு நிற்கும் நிலையை கடுஞ் சுத்த சைவர் இதனால் அடைவார்கள்.

சாற்றரிதாகிய தத்துவஞ் சித்தித்தால்
ஆற்றரிதாகிய ஐந்தும் அடங்கிடும்
மேற்றிகழ் ஞானம் விளக்கொளியாய் நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே

சைவசமயத்தவர்களுடைய வழிபாட்டில் கோயில்கள் முக்கிய இடம்பெறுகின்றன. ஆன்மா இறைவனிடத்தில் இலயப்படும் இடம் ஆலயம் ஆகும். பசுவின் குருதியெங்கும் பரந்து ஓடுகின்ற பாலானது பக்குவமாகி அதன் மடியில் சுரப்பதுபோல இறைவன் எல்லா இடமும் நீக்கமற நிறைந்திருந்தாலும் கோயில்களில் தெய்வ சாந்நித்தியத்துடன் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்புரிகின்றார். ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கி ஆன்மா இறைவனின் திருவடியைச் சேர்வதற்கு சிவாலய வழிபாடும் சிவனடியார் வழிபாடும் துணை செய்யும் என்பதை

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே

எனச் சிவஞானபோதத்தின் பன்னிரெண்டாம் சூத்திரம் குறிப்பிடுகிறது. சிவபெருமான் மெய்யடியார்கள் உய்யுமாறு வெளிப்பட்டு அருளுகின்ற திருநாடு, திருநகரம், திருக்கோயில் முதலியவற்றைத்தேடித்திரிந்து அடியார்கள் தொழுவர். " வாயே வாழ்த்து கண்டாய்" என்ற வாக்கிற்கு அமைய, சிவாலயங்களுக்குச் சென்று பாடிப் பரவிப் பணிந்து வணங்கினால் இறைவன் தமது அகத்திலே இருந்து ஞான ஆட்சி புரிவான் என்பதை

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே

எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. தலயாத்திரையின் அனுபவம்" கயிலாயத்து உச்சியுள்ளான் அவன் என்கண் உளானே" என்ற உணர்வு பிறக்கத் துணை செய்யும்.

ஆன்மா இறைவனை அடைவதற்கும் இறையருளைப் பெறுவதற்கும் சரியை, கிரியை, யோகம்,ஞானம் என்னும் நால்வகை நெறிகளைச் சைவசித்தாந்தம் குறிப்பிடுகிறது. இதனையே தவயோகி திருமூலரும் தனது தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்திலே குறிப்பிடுகின்றார். சரியைபின் பயனாக விளைவது இருவினையொப்பு. கிரியையின் பயன் மலபரிபாகம், யோகத்தின் பயன் சத்திநிபாதம், ஞானத்தின்பயன் சற்குரு தரிசனம். இந்த நான்கையும் கடந்து நிற்பதுதான் முத்தி. சரியை தாசமார்க்கம் மூலமாகச் சித்திக்கும். அதாவது ஆண்டவன் என்ற இடத்திலே அடியான் என்ற முறையிலே வழிபடும் முறை இதுவாகும். கிரியை நெறியாகிய சற்புத்திரமார்க்கம் மகன் தந்தை முறைகொண்டு இறைவனிடம் வழிபடும் நெறியாகும். யோக நெறியாகிய சகமார்க்கம் தோழமை மார்க்கத்தில் வழிபடுவதாகும். ஞானகுருவின் துணையோடு தன்னையும் தலைவனையும் அறியும் நெறி ஞானமார்க்கமாகும். ஞான நெறியில் வெற்றிபெற்றால்த்தான் சன்மார்க்கம் சித்திக்கும். நான்கும் படிமுறை வளர்ச்சியில் அமைந்துள்ளது என்பதை "விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே" எனத் தாயுமான சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

ஆலய வழிபாடு, சிவாலயத்தொண்டு செய்யும் சரியை வழியில் நிற்போர் பக்தர்கள் ஆவார்கள். சிவசாதனங்களை அணிந்து சிவவேடம் தாங்கிச் சிவபூசை செய்து வழிபடுவோர் கிரியை நெறியில் நிற்பவர்கள். இயமம் நியமம் முதலிய அட்டாங்க யோக உறுப்புக்களை உணர்ந்து அவ்வழியில் நிற்போர் யோகியர் ஆவர். சீவன் முத்தர்களாகிய சித்தர்கள் சிவத்தைத் தம்மிற் கண்டு அதனுடன் ஒன்றி நிற்பார்கள்.

பக்தர் சரியை படுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள் வேடத்து ஆகுவோர்
சுத்த இயமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானம் சென்று எய்துவோர்களே

சைவ நாற்பாத நெறியில் நின்று இறையருளைப் பெறவிரும்பும் சைவர்கள் அனைவரும் சமயதீட்சை பெறல்வேண்டும். நாளாந்தம் தனது உடலைச் சிவபோகமாக மாற்றித் திரிபுண்டரமாக உடலின் பதினாறு இடங்களில் சிவமூல மந்திரத்தை உச்சரித்து திருநீற்றை அணிதல் வேண்டும். திருநீறு அணியாதவனுடைய முகம் சுடலைக்குச் சமன் எனச் சூதசங்கிதை என்ற நூல் குறிப்பிடுகிறது. திருநீறு அணிகிலாதவரைக் காணில் அம்ம நாம் அஞ்சு மாறே" என மணிவார்த்தையாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. ஒவ்வொருவரும் தன்னுடைய ஆன்ம ஈடேற்றத்துக்காக நாளாந்தம் ஆன்மார்த்த வழிபாடு செய்தல் வேண்டும். இந்த வழிபாட்டிற்குப் பூவும் நீரும் போதுமானது. இதனைப் "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

சரியைநெறி நின்றவன் சிவசக்தி முதிர விதிப்படி விசேட தீட்சை பெற்று இறைவனைப் பூசித்தலே கிரியைநெறி ஆகும். சிந்தனையும் செயலும் இணைந்து இறைத் தொடர்புடன் செய்யும் வழிபாடே கிரியை எனப்படும். கிரியை நெறியாகிய சிவபூசையிலே தியானம், மந்திரம் ஆகிய இரண்டும் சிறந்த இடம்பெறுகின்றன. இதனால் பலனும் சித்திக்கிறது. செயலும் நிகழ்கிறது. கிரியை நெறி நிற்போர் அகத்தேயுள்ள இறைவனைப் புறத்தே இலிங்கத்தில் எழுந்தருளி இருப்பதாகப் பாவித்து பூதசுத்தி முதலாய பஞ்ச சுத்திகளைச் செய்து, மலர்கள் தூவி தூபதீபம் காட்டி வழிபாடு செய்வர். மீண்டும் அப்பொருமானை அகத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பதாகப் பாவித்துச் சிவபூசையை நிறைவு செய்வர்.

நிறைந்து மணம் கமழும் சந்தனமும் சிறந்த மலர்களும் சாத்தி இறைவனை வழிபட்டாலும், கொல்லாமலும் கொன்றதைத் தின்னாமலும் இருப்பதாகிய செந்நெறி ஒழுகிச் சிவனை வழிபடுபவர்களுக்கன்றி ஏனையோருக்குத் திருவருள் வீழ்ச்சியாகிய சத்திநிபாதம் கிட்டாது என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமலரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண்ணாதே

மனத்தை இறைவனிடம் சேர்த்தலே யோகநெறி எனப்படும். மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை யோக நிஷ்டையில் இருந்து மேலே எழுப்பி அமிர்தத்தைச் சுவைப்பவனின் அகம் முழுவதும் சிவ மணம்

கமழும். வரையப்பெற்ற ஓவியம் போல அசைவற்றிருந்து அறியும் வல்லமை உடையவர்களுக்கு புனுகுப்பூனை சேர்ந்த நடுதறிமணத்தைப் பெறுவதுபோல நறுமணம் உண்டாகும்.

பூவினிற் கந்தம் பொருந்தியவாறு போற்
சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம்போல உணர்ந்தறிவாளர்க்கு
நாவியணைந்த நடுதறியாமே

உயிர்களுக்குள்ள இயற்கையான அறிவு பசுஞானம். இது உயிர்கள் கண்டதைப் பற்றிக் கண்டளவிலே நிற்பதாயினும் கற்பனையால் பெருக்கமுற்று நிற்பது. நூலறிவு பசுஞானம், இது பல நூல்களைப் படிப்பதால் விளைவது. பசு ஞானமானது நூலறிவால் வளர்ந்து படிப்பளவில் நிற்கும்போது பசுஞானம் எனப்படும். பசு ஞானமும் பாசஞானமும் கடவுள் உணர்ச்சிக்கு வழியாகப் பயன்படுமேயன்றிக் கடவுள் உணர்ச்சி ஆகாது. இறைவனைப் பற்றியதாகிய சிவானந்தமாகிய இன்பத்தைச் செய்யும் ஞானம் பரஞானமாகும். அறங்களில் சிறந்தும் சமயங்களின் முடிந்த சாதனமாகவும் உள்ளது ஞானமே. ஆகையால் ஞானிகளே மனிதர்களில் சிறந்தவர்கள் ஆவார்கள். ஞான மார்க்கமே பரமுத்திக்கு வழிகாட்டும்.

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே.

சிவ நாமோச்சரணஞ் செய்யும் போதேனும், ஸ்தோத்திரம் செய்யும் போதேனும், ஸ்தோத்திரங்கள், சிவநாமங்கள் என்பவற்றைச் சொல்லி ஆடும் போதேனும் மனசு புலன்களிற் செல்லாது ஒரு நெறிப்பட்டுச் சிவ பக்தியிலே முதிர்ந்து முறுகி ஓங்கி நிற்குங்கால் அவன் உள்ளத்திலே இன்பம் ஜனிக்கும்.

**–ஸ்ரீ காசிவாசி செந்தி நாதையர் – தேவாரம் வேதசாரம்**

# சிவானந்தப் பேற்றிற்கான வழிகள்

சரியை முதலான நால் வகை நெறிகளையும் உணர்த்திய திருமூலருக்கு அவற்றின் இலக்கணம் முடிவு போதாமையின் ஞானத்தைச் சன்மார்க்கம் என்றும் யோகத்தைச் சகமார்க்கம் என்றும், கிரியையைச்சற்புத்திர மார்க்கம் என்றும், சரியையைத் தாசமார்க்கம் என்றும் அதனை மறுபெயர்களாலும் அதிகாரப்பெயர் அமைத்து உணர்த்துகின்றார். சன்மார்க்கம் என்பது நன்னெறியாகும், எது ஒளி நெறியோ, எது நன்னெறியோ அது சன்மார்க்கம் எனப்படும். சன்மார்க்கத்தவரது முகமே சிவன் உறையும் பீடம். சன்மார்க்க கூட்டத்தவரைக் காண்பதே சிவதரிசனம். தன்முனைப்பு அகற்றி ஆன்மா இறைவனுடன் தாடலைபோற் கூடுதலே ஞானநெறியாகும். மனத்தெளிவு பெறாதவர்கள் சிவனது வியாபகத்தை அறியமாட்டார்கள். தெளிவில்லாத காரணத்தினால் அவர்கள் சீவனது வியாபகத்தையும் அறிவதில்லை. சீவனை அறிந்தால் தான் சிவத்தை அறியமுடியும்.

தலைவனை உணர்தற்கும், தம்மை உணர்தற்கும், பாசம் நீங்குதற்கும், பரமுத்தி அடைவதற்கும் சன்மார்க்கமே சாதனமாய் நின்று உதவும். உள்ளம் உருகினால்த்தான் உள்ளொளியாக இருந்து அருள் புரிகின்ற இறை ஒளியை உணரமுடியும்.

23

யானும் பொய் என் நெஞ்சும் பொய்,
என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே

என்றே மணி வார்த்தையாகிய திருவாசகமும் பகர்கிறது.

"கல்லேனும் ஐய ஒரு காலத்தில் உருகும்
என் கல்நெஞ்சம் உருகவில்லையே"

என்கிறார் தாயுமான சுவாமிகள். கல்லுப்போல இருந்த கனியாத மனத்தை நன்றாகக் கனியவைத்து ஆன்மாவைப் பாசத்தில் நின்றும் பிரித்துப் பதியுடன் இணைய வைப்பதற்கு ஞான மார்க்கமாகிய சன்மார்க்கமே துணை செய்யும். ஆன்மாவைப் பாசத்தில் நின்று பிரித்து உண்மைப் பொருளாகிய பதியுடன் இணைத்து சமாதிநிலை எய்துதலே சன்மார்க்கம் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

பசு பாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்து
ஒசியாத வுண்மைச் சொரூபோதயத்துற்று
அசைவான தில்லாமை யானசன்மார்க்கமே.

சன்மார்க்கத்திற்கு வழியாய் அமைவது சகமார்க்கம். இது வீடுபேற்றையும் சித்தியையும் தரும் யோக மார்க்கம் ஆகும். மலரின்கண் மணம் பொருந்தியமைவது போல யோகநெறி நிற்போரின் சீவன் முழுவதும் சிவமணம் கலந்திருக்கும் என்பதனை

பூவினிற் கந்தம் பொருந்தியவாறு போல்
சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது

எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. அட்டாங்க யோகத்தின் இறுதிநிலை சமாதிநிலை ஆகும். சமாதிநிலையில் தியானிப்போன் தியானம், தியானிக்கப்படும் பொருள் என்ற வேறுபாடுகள் நீங்கிவிடும். தியானிப்பவன் தியானிக்கப்படும் பொருளாக மாறிவிடுவான் என்பதை " தியானத் யாத்துருதேய ரூபா" என லலிதா சகஸ்ர நாமம் குறிப்பிடுகிறது. யோகநெறியில் நின்று சமாதி கூடும் யோகியின் உள்ளத்திலே முழு உலகமும் அடங்கிவிடும். சமாதியிலே சிவனது அருவத் திருமேனியைத் தியானிக்க அச்சிவம் சுடர்விடும் பேரொளிமயமாய் நிற்கும். யோகசமாதி கூடுவோருக்கு அட்டமா சித்திகளும் கைவரும். இவர்கள் சித்தத்தை சிவன்பாலே வைத்த சித்த புருஷர்களாகத் திகழ்வார்கள் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே உளரொளி
யோகச் சமாதியின் உள்ளே உளசக்தி
யோகச் சமாதி உகந்தவர் சித்தரே

சற்புத்திர மார்க்கம் சிவபூசையாகிய கிரியையோடு கூடியது. சிவபோகத்தைத் தரும் மார்க்கம் இதுவாகும். வாய்மையும் அழுக்காறு இன்மையும் இந்நெறி நிற்போர் கைக்கொள்ள வேண்டியவை ஆகும். இறைவனைப் பூசனை செய்தலும் அருள் நூல்களை வாசித்தலும், அவனைத்

துதித்துப் போற்றுதலும், அவன் திருப்பெயரை மனத்தில் உருவெண்ணுதலும் குற்றமறச் செய்யும் நற்றவச் செயல்களாகும். உண்மை பேசுவது, காமாதி பகைகளை நீக்குவது கைக்கொள்ளவேண்டிய தூய்மைநெறிகளாகும். இவ்வாறு ஆன்ம சுத்தி செய்தலே குற்றமற்ற சற்புத்திர மார்க்க நெறிமுறையாகும்.

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட்டன்னமும் நீ சுத்தி செய்தன்மற்
றாசற்ற சற்புத்திர மார்க்கமாகுமே

சரியைநெறி தாசமார்க்கம் என்றும் ,அடிமைநெறி என்றும் அழைக்கப்படுகிறது. அடியார்க்கு எளியனாய் ஒழுகுதல் திருக்கோயில்களில் விளக்கிடுதல், திருநந்தவனத்தில் மலர் கொய்தல், மெழுகுதல், திருஅலகிடுதல், இறைவன் புகழை வாயினாற் பாடி வாழ்த்துதல், திருக்கோயில்களில் உள்ள அசையா மணி போன்றவற்றை அடித்தல், இறைவனுக்கு வேண்டிய அபிஷேக திரவியங்களைக் கொணர்தல் ஆகிய திருத்தொண்டுகள் யாவும் சரியைநெறி நிற்போர் செய்யவேண்டியவை என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

எளியனல் தீபம் இடல் மலர் கொய்தல்
அளிதின் மெழுகல் அது தூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ்சன மாதி
தளிதொழில் செய்வது தான் தாச மார்க்கமே

சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியமாகிய முக்திகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களால் எய்தப்பெறும். சிவவுலகம், சிவனண்மை, சிவனுருவம், சிவனாம் பெருவாழ்வு என இம்முக்திப் பேறுகளைக் கூறலாம். இவற்றுள் சரியைநெறி நிற்போர் இறைவன் வாழும் உலகை அடைந்து அவனுடைய இடத்திற்கு அருகில் செல்வர். அவனைப்போலவே இவர்களும் ஒளியுடல் பெற்று சிவனுருவில் நிலைபெறுவர். இறைவனின் சமீபத்தில் உறைதல் சாமீபம் எனப்படும். சிவனுருவாதல் சாரூபம் என்றும் இறைவனோடு இரண்டறக் கலத்தல் சாயுச்சியம் என்றும் கூறப்படும். சாலோக முத்தியில் பாசத்தன்மை கெடாது நின்று பிறவியைத் தரும். சாமீபத்தில் பாசம் பந்தப்படுவதில்லை. சாரூபத்தில் பாசம் மேன்மை அளிக்கும். சாயுச்சியத்தில் பாசம் முற்றாய்க் கரைந்து சிவனிடம் ஒடுங்கி நிற்கச்செய்யும்.

அட்டாங்க யோகத்தின் பயனாய் சிவனுரு அடைதல் சாரூப முத்தியாகும். இது ஞானம் பெற்றவர்க்கு அன்றி மற்றையோருக்கு வாய்ப்பதில்லை. இந்நெறியில் அவர்கள் உறுப்போடு கூடிய சரீர சித்தி பெறுவர். சைவம் என்பது சிவத்தோடு பொருந்தி நிற்பதாகும். சிவ தத்துவம் உணர்ந்தே பொருந்த வேண்டும். சிவத்துடன் பொருந்தி உலகை விட்டுச் சமாதியில் நிலைத்தல் சிவானந்தப் பேறாகிய சாயுச்சியநிலை ஆகும்.

சைவம் என்பது ஆன்மா சிவத்துடன் தொடர்புற்றிருக்கும் நிலை ஆகும். சிவதத்துவத்தை உணர்ந்து அதில் விளங்கும்படியான சிவபெருமானுடன் இணைந்து நிற்றல் இரண்டாம் நிலை ஆகும். சிவம் தம்மிடம் ஒளிர்வதை உணர்ந்து நிற்றல் அடுத்த நிலை ஆகும். இறுதிநிலையில் சிவத்துடனே பொருந்தி உலகைவிட்டுச் சமாதியில் நிலைப்பட்டு சிவானந்தப் பேற்றினை அடைந்திருப்பர். இதுவே சாயுச்சிய நிலை ஆகும்.

சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆவது
சைவம் தனை அறிந்தே சிவம் சாருதல்
சைவம் சிவன் தன்னைச் சாராமல் நீவுதல்
சைவம் சிவானந்தம் சாயுச்சியமே.

சத்திநிபாதம் என்பது சக்தியின் அருள் வீழ்ச்சியாகும். உயிர்களுக்கு மலபரிபாகம் உண்டாவதற்காகப் பக்திநிலையில் மலத்திற்கு அனுகூலமாக நின்று திரோதான சக்தி செயற்பட்டது. மலபரிபாகம் ஏற்பட்டதும் சக்தி பராசக்தியாய் நின்று அருட்பிரவாகத்தை உயிர்களுக்கு வழங்கும். சத்திநிபாதம் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும்.

அறியாமையாகிய இருள் சூழ்ந்த இவ் உடலின் ஒரு மூலையிலே அறியாமையை நீக்கி அறிவை விளக்கும் திருவருட்குமரி மறைந்து உறைகின்றாள். இதனை இருட்டறை மூலையில் இருந்த குமரி என்கிறார் திருமூலர். மலங்களால் பீடிக்கப்பட்டிருக்கும் ஆன்மாவைக் குருட்டுக்கிழவன் என்கிறார். ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்களை நீக்கி திருவருட் சக்தியை ஆன்மாமீது படியவைத்து ஆன்மாவைத் தன்வயப்படுத்தி சிவமணம் கமழச் செய்த சிறப்பினைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

இருட்டறை மூலையிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம் பல காட்டி
மருட்டி அவனை மணம்புரிந்தாளே.

அப்பனாகிய சிவனின் உடமையாகிய தோட்டம் ஆருயிர்களின் உடம்பாகும். இந்த உடம்பின்கண் பொருந்தி இருக்கின்ற பெண் பிள்ளையே திருவருட்சக்தி ஆவாள். பல பிறவிகளை எடுக்கும் ஆன்மாவிற்கு திருவருள் உணர்வினை ஊட்டுவாள். உடம்பின் உள்ளே இருக்கின்ற கருவிக்கூட்டங்கள், கருமக் கூட்டங்கள் ஆகிய அனைத்தையும் திருவருள் அகற்றியருளுவாள். இவை அகன்றதும் ஆன்மாவின் உள்ளே முழுமுதலாகிய விழுமிய சிவக்கனி பிரகாசிக்கும்.

அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனார் தோட்டத்தில்
எண்ணிக்கும் ஏழேழ் பிறவி உணர்விக்கும்
உள்நிற்பது எல்லாம் ஒழிய முதல்வனைக்
கண்ணுற்று நின்ற கனி அது ஆமே

உடலுக்குள் வீற்றிருக்கின்ற பரம்பொருளைக் காண்பதற்கு உதவாத சமயங்களினால் எதுவித பிரயோசனமும் இல்லை என்கிறார் திருமூலர். அத்தகைய சமயங்களை மேற்கொள்வோர், மெய்ப்பொருளைக் காணாமையால் மீண்டும் பிறப்பதற்கே ஆளாகி மாயக் குழியாகிய பிறவிக்குழியில் வீழ்வர். இவ்வாறு பிறப்பதால் உலகியல் பற்றுகளுக்கு உள்ளாகித் தடுமாறுவர். இவர்கள் மலமாயை பாசங்களில் நின்றும் நீங்கார்.

எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளாகிய சிவன் ஆருயிர்களின் உள்ளத்திலும் இருக்கிறான், புறத்திலும் இருக்கிறான். ஞானிகளுக்கு அவர்களின் உயிரிடத்தில் இருந்து அருள் புரிகின்றான். பக்தனுக்கு வெளியில் நின்று அருள் வழங்குவான். அவன் உள்ளும் இல்லை, வெளியிலும் இல்லை என்கிற நாத்திகர்களுக்கு உள்ளத்திலும் புறத்திலும் வெளிப்படாது மறைந்து நிற்பான்.

தெய்வப் பேரின்பம் என்பது உள்ளத்தின் உணர்வில் தானே கண்டு அனுபவிக்கவேண்டிய ஓர் அனுபவம். இந்த அனுபவப் பொருளைப்பற்றி ஆராய்ச்சி செய்து அறியமுடியாது. உள்ளம் தோய்ந்து அனுபவிக்கவேண்டிய ஆனந்தமே இறை அனுபவமாகும். இந்த ஆனந்த அனுபவத்தைப் பெறுவதற்கு ஏற்பட்டுள்ள வழிகளும் வாழ்க்கை முறைகளுமே சமயங்கள்.

உள்ளத்து முள்ளன் புறத்துள னென்பவர்க்கு
உள்ளத்து முள்ளன் புறத்துள னெம்மிறை
உள்ளத்து மில்லை புறத்தில்லை யென்பவர்க்
உள்ளத்து மில்லைப்புறத்தில்லை தானே

உயிருள் இறைவன் உணர்வாய்க் கலந்து நிற்கும் அனுபவநிலையே சமய அனுபவத்தின் முடிந்த முடிபாகும். இறைவன் உருவமில்லாமல் அருவமாய் ஆன்மாவினுள் கலந்து நிற்கும் நிலை நிராதாரம் எனப்படும். இறைவனைத் தியானிப்பவர் எய்தும் பயனும், தியானிக்காதவர் எய்தும் இழிவும் இப்பகுதியிலேயே கூறப்பட்டுள்ளது.

கடவுள் உண்மையைக் கூறும் ஆறு அகச்சமயங்களும் சித்தாந்த சைவத்தோடு தொடர்புடையன. இவை ஏகன், அநேகன், இருள் , கருமம், மாயை இரண்டு ஆகிய ஆறினையும் ஏற்றுக்கொள்கின்றன. இந்த ஆறு சமயங்களும் ஒரு பொருளையே அடைவதற்குச் சாதனமாக உள்ளன. ஆறு வழிகளில் ஓர் ஊரைச் சென்று அடைவதுபோலேவே ஆறு சமயங்களும் உள்ளன. இவற்றுள் இது நன்று, அது நன்று என்பவர்கள் மலையைப் பார்த்துக் குரைக்கும் நாய்க்கு ஒப்பாவார்கள். மலையின் மாண்பை அறியாத நாய் அதைப் பார்த்துக் குரைப்பது போலச் சமய உண்மை அறியாதவர் தம்முள் ஏற்றத் தாழ்வு இயம்புவர்.

ஒன்று அதுபேரூர், வழி ஆறு அதற்குள்
ஒன்றது போல இருமுச் சமயமும்
நன்று இது, தீதுஇது என்று உரையாளர்கள்
குன்று குரைத்து எழு நாயை ஒத்தாரே.

# திருவடி ஞானம்

**ஆ**றாம் தந்திரம் வியாமள ஆகமத்தின் சாரமாக அமைந்துள்ளது. இத் தந்திரத்தில் சிவகுரு தரிசனம் முதல் அபக்குவன் வரை பதின்னான்கு உப தலைப்புக்களும் நூற்றி முப்பத்தொரு பாடல்களும் காணப்படுகின்றன. ஞானம் பெறும் சாதனங்களை உணர்த்தும் பகுதியாக இத் தந்திரம் காணப்படுகிறது. சிவகுரு தரிசனம் கிடைக்கப்பெற்று நற்குருவின் வழிகாட்டலின்பேரில் திருவடிப்பேறு பெறுதலே வாழ்க்கையின் நோக்கம் எனக் கூறப்பட்டுள்ளது. ஞாதுரு (காண்பவன்), ஞானம் (காணும் அறிவு), நேயம் (காட்சிப்பொருள்) என்பவற்றின் விளக்கம் கூறப்பட்டுள்ளது. துறவு, தவம் என்பவை பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. உண்மைத் தவவேடத்தின் இலக்கணம். போலி வேடத்தின் தன்மை, ஞானவேடம், சிவவேடம் என்பன பற்றியும் இத்தந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. குருவும் சற்குருவாக அமைதல் வேண்டும். சீடனும் பக்குவமான சீடனாக இருத்தல் வேண்டும். பக்குவனுடைய குணங்களும் அபக்குவனுடைய தன்மைகளும் இங்கு கூறப்பட்டுள்ளன. சற்குரு நெறி நிற்றலும் வீடுபேறு அடைதலுமே இத் தந்திரத்தின் சாராம்சமான கருத்தாகும்.

சைவசமயம் இறைவன் வெளிப்படும் இடங்களாகக் குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூன்றையும் குறிப்பிடுகிறது. இங்கு கூறப்பட்டுள்ள குரு ஞானகுருவே ஆவார். சிவனது மூர்த்தி பேதங்களில் பதின்னான்காவது மூர்த்தமாகத் தட்சணாமூர்த்தி வடிவம் காணப்படுகிறது. யோகத்திற்கும் ஞானத்திற்கும் உரிய சிவனுடைய வடிவம் இதுவே ஆகும். சகல கலை வித்தைகளுக்கும் என்றும் குறையாத நிதி, பவப்பிணியைப் போகும் பரம புருஷனான வைத்தியர், சகல லோகத்திற்கும் ஆசாரியார் ஆகிய குரு தட்சணாமூர்த்திக்கு நமஸ்காரம் எனச் சங்கரர் சிவனுடைய தட்சணாமூர்த்தி வடிவத்தைப் போற்றித் துதிக்கிறார்.

24

அஞ்ஞானமாகிய இருளினால் ஒளி மழுங்கிய கண்களை ஞானம் என்கிற துலக்குமாற்றல் வாய்ந்த கருவியால் திறக்கவல்ல திறமையாளன் எவனோ அவனே குரு எனக் குரு வணக்க சுலோகம் ஒன்று கூறுகிறது. இறைவனின் திருவருளால்தான் அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற குரு நமக்குக் கிடைப்பார் என இந்து சமயத் திருநூல்கள் கூறுகின்றன. ஆத்ம ஞானம் தானாக விளங்காது. அதை விளங்க வைக்க குருவின் துணைதேவை. இறைவனின் திருவருள் மானுட வடிவில் தோன்றுவதே குரு வடிவம் ஆகும்.

ஜலத்திலுள்ள தாமரை கதிரவன் கிரணம்பட்டு மலர்வது போல ஆசாரிய சம்பந்தம் இருந்தால்தான் ஞான மலர்ச்சியான மோட்சம் ஒருவருக்குக் கிட்டும். குருவை நம்பு, முற்றிலும் நம்பு, வாழ்க்கைத் துயரத்தினின்றும் விடுதலை அடைவாய் என்றும் மனமும் புலனும் ஒழுங்குபட்டால் குருவை உன் உள்ளத்திலேயே காண்பாய் என்றும் சங்கரர் பஜகோவிந்தத்தில் குறிப்பிடுகின்றார்.

மணிவாசகரை இறைவன் குருந்த மரநிழலில் குருவடிவம் தாங்கியே ஆட்கொண்டார் என்பதை

"கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க"
"நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி"
"காட்டாதன எல்லாம் காட்டி
கேளாதன எல்லாம் கேட்பித்து"

என்ற திருவாசக வரிகள் எடுத்து விளக்குகின்றன. சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரம் குருவின் சிறப்பினை எடுத்து விளக்குகிறது. ஆன்மா ஐம்புலன்கள் வழியே செல்வதால் தன்னையும் தலைவனையும் அறியாது நிற்கும் என்றும், ஐம்புலன்களின் நின்றும் நீங்கி ஒருமுகமான தவநிலையில் நின்றால்த்தான் ஆன்மாவால் உண்மைப் பொருளை உணரமுடியும். தவநிலையில் உள்ள ஆன்மாவுக்கே இறை அருளால் குருவின் உபதேசம் கிடைக்கப்பெறும். குருவின் உபதேசத்தால் பற்றறுத்தல், ஞான போதனை என்பன பெற்று ஆன்மா நற்சாதனைகளைச் செய்யமுடியும் என்பதனைச் சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரம் கூறுகிறது.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினிலுணர்த்தவிட்
டன்னிய மின்மையின் அரன் கழல் செலுமே

சூரியனின் ஒளி இல்லாமல் சூரிய காந்தக்கல்லில் நெருப்புத் தோன்றமுடியாததுபோல அருள் வடிவமாகிய குரு இல்லாமல் ஆன்மாக்களுக்கு உண்மை ஞானம் தோன்றாது என்பதை

ஞான மிவனொழிய நண்ணியிடும் நற்கலனல்
பானு வொழியப் படின்

என்ற திருவருட்பயன் பாடல் எடுத்து விளக்குகிறது.

உள்ளத்தினுள்ளே உறைந்து நின்றருளும் சிவபரம்பொருளே குருநாதனாகக் காட்சி அளிக்கின்றார் என்பதை சிவகுரு தரிசனம் எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. தான் இறைவன் என்ற இரண்டிலும் ஓர் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வே பக்தி ஆகும். இத்தகைய பக்தியை அகத்திலே உண்டாக்கி மந்திர உபதேசங்களால் குருநாதன் அகப்புறக் குற்றங்களை நீக்குவார். சத்தாகிய இறைவனையும், அசத்தாகிய பாசத்தையும், சதசத்தாகிய ஆன்மா இரண்டையும் சார்ந்திருக்கும் நிலையையும் இறைவனே குருவாக வந்து உணர்த்தி அருளினார் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

பத்திப் பணித்துப் பரவும் அடி நல்கிச்
சுத்தவுரையால் துரிசறச் சோதித்துச்
சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலாற்
சித்தம் இறையே சிவகுருவாமே

சிவனிடத்துப் பக்தியும் அதனால் பெறப்படும் ஞானமும், ஞானத்தைப் பெறவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் கூடிய வைராக்கியமும் ஆன்மா வீடுபேறடைவதற்குரிய சாதனங்கள் ஆகும். இத்தகைய பக்தி வைராக்கியத்தினால் 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட' என்ற மணிவாசகனாரின் வாக்கிற்கு அமைய அவன் நான் ஆகினேன் என்ற பாவனை உண்டாகும். அப் பாவனையால் சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கும் நிலை ஏற்படும். அதனால் வீடுபேற்றுக்குரிய வித்தாகிய திருவடி உணர்வு அகத்திலே தோன்றும். வீடுபேற்றுக்குக் காரணமாகிய ஞானமாகிய பயிர் சக்தியின் அருளால் எளிதாக வளர்ச்சி பெற்று முத்தி அடைவதற்குத் துணையாக இருக்கும்.

பக்தியும் ஞான வைராக்கியமும் பர
சித்திக்கு வித்தாம் சிவோகமே சேர்தலால்
முக்தியின் ஞானம் முளைத்தலால் அம்முளை
சக்தி அருள் தரில் தான் எளிதாமே

இறைவனது திருவடிகளைத் தொழுதலாகிய உண்மை அறிவே தொழுபவர்களை இறைவனாக்குவிக்கும். இறை உலகமாகிய மோட்ச உலகில் கொண்டு சேர்ப்பிக்கும். ஆன்மா மலத்தால் அடைபட்டுக் கிடக்கின்ற கூட்டினை அவிழ்த்து மீட்பிக்கும். அத்திருவடி ஞானம் வளமான எண்வகைச் சித்திகளையும் மோட்சத்தையும் கொடுக்கும்.

மலம் என்பது ஆன்மாவை இறைவனுடன் சேராதபடி தடுத்து நிற்கும் அழுக்காகும். அவையே ஆணவம், கன்மம், மாயை எனப்படும். சித்திகள் என்பன அணிமா, லகிமா, கரிமா, மகிமா, பிரார்த்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. திருவடியுணர்வு ஆருயிர்களை மும்மலப் பிணிப்பினின்றும் செம்மையுற விடுவிக்கும். அவ்வுணர்வே கிடைத்தற்கரிய திருவருட் சித்திகளை எய்துவிக்கும். அதுவே சிவலோக வாழ்வினைச் சேர்ப்பிக்கும். அவ்வுணர்வே சிவமாம் பெருவாழ்வையும் கூட்டுவிக்கும்.

திருவடி ஞானம் சிவமயமாக ஆக்கும். திருவடி ஞானம் சிவலோகத்தில் சேர்க்கும். திருவடி ஞானம் சீவனைச் சிறைப்படுத்தியிருந்த மலத்தினின்றும் நீக்கும். திருவடி ஞானமே அணிமாதி சித்திகளையும், முத்திப்பேற்றினையும் அளிக்கும்.

திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

நினைப்பவரைக் காக்கும் மந்திரமாகவும், தீராத நோயினைத் தீர்க்கும் பெரிய மருந்தாகவும் இருப்பது எம்பெருமானாகிய சிவனின் இணையடிகளே என்பதை,

"மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராத நோய் தீர்த்தருள வல்லான்"

என ஞானக்குழந்தையாகிய ஞானசம்பந்தர் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

எந்தை பிரானாகிய அம்மையப்பரின் இணையடிகளே உடல்நோய், உளநோய், உயிர்நோய் ஆகிய மூவகை நோய்களையும் நீக்கக் கூடியவையாகும். உடல், உள்ளம், உயிர், உணர்வு ஆகிய அனைத்திற்கும் அழகினைத் தருவதும் இதுவே ஆகும். சிவனின் இணையடிகளே தூய ஞானநெறியாக நின்று உதவுகிறது. மந்திரமாகவும் பிறவிநோய்க்கு மருந்தாகவும் திருவருளைப் பெறுவதற்குரிய வழிகாட்டியாகவும் அடைந்தார் பெறும் பயன் எய்தும் புண்ணியத் தலங்களாகவும் நன்மையைத் தரும் அழகாகவும், வீடுபேற்றினை அளிக்கும் நெறியாகவும் இருப்பது சிவபிரானது திருவடிகளே ஆகும் என்பதைப் பின்வரும் தமிழ் மந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

மந்திரமாவதும் மாமருந்தாவதும்
தந்திரமாவதும் தானங்களாவதும்
சுந்தரமாவதும் தூய்நெறியாவதும்
எந்தை பிரான்றனி ணையடிதானே

ஆன்மா தற்போதம் இழந்து சிவஞானத்தால் இறையுணர்வில் அழுந்தி நிற்றலை உணர்த்துவது ஞாதுரு ஞானநேயம் எனப்படும். அறிவானாகிய தன்னையும் அறிவாகிய கருவியினையும் மறந்து அறியத்தகு பொருளாகிய இறையுணர்வில் ஆன்மா ஏகனாகி ஒன்றி நிற்றலை இப்பகுதி உணர்த்துகிறது. தன்னையும் இறைவனையும் மறந்து அறியத்தகு பொருளாகிய இறையுணர்வில் ஆன்மா ஏகனாகி நிற்றலை இப்பகுதி விளக்குகிறது. தன்னையும் இறைவனையும் தனது உண்மை ஞானத்தாற் கண்டு தான் என்னும் பூவை அவனது திருவடியில் சாத்தினால் நான் என்றும் அவன் என்றும் வேறுபடுத்திக் காணும் உணர்வுமாறி நானே அவன் என்னும் நல்லுணர்வு உண்டாகும்.

மானுடப்பிறவியெடுத்த நம்முடைய முகத்தில் இருப்பது ஊனக்கண். உலகக் காட்சிகளைக் காண்பதற்காகத் தரப்பட்ட ஊனக்கண்ணைப் பயன்படுத்தி அகத்திலே இருந்து ஒளிவீசும் ஞானக்கண்ணைத் திறத்தல்வேண்டும். இதேபோலச் செவிகளின் ஊடாக இறை ஞானத்தைத் தரவல்ல உபதேச மொழிகளைக் கேட்கவேண்டும். திருப்பெருந்துறையிலே குருவடிவம் தாங்கி மணிவாசகனாரை ஆட்கொண்ட பரமசிவன் அவரிடமிருந்த பசு ஞானம், பாச ஞானம் என்பவற்றை நீக்கிப் பதிஞானம் கிடைக்கப்பெற்ற சிறப்பினைக்

காட்டாதன எல்லாம் காட்டிப்
பின்னர் கேளாதன எல்லாம் கேட்பித்து
மீட்டேயும் பிறவாமல் காத்து ஆட்கொண்டாய்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே

எனத் திருவாசகத்தின் திருச்சதகப் பாடலில் குறிப்பிடுகின்றார். உலகப் பொருள்களை அறியாத ஞானக்கண், கேளாது கேட்ட உபதேசமொழி, குறைதல், நிறைதல் இல்லாத சிவபோகம், பிரிதலும் கூடுதலும் இல்லாத சேர்க்கையாகிய சிவ ஐக்கியம், நாத வடிவான ஞானம் ஆகிய அனைத்தையும் நந்தியெம்பெருமான் தனக்குக் காட்டி அருளினார் எனத் தான் பெற்ற சிவானுபூதி அனுபவத்தைத் தவயோகி பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
கோணாத போகமும் கூடாத கூட்டமும்
நாணாத நாணமும் நாதாந்த போதமும்
காணாயென வந்து காட்டினன் நந்தியே

அநாதியான இறைவன் உயிர்கள் அடைய வேண்டிய நெறியையும் நெருஞ்சில் முள்போன்று ஒதுக்கித் தள்ள வேண்டிய செயல்களையும் படைத்திருக்கின்றான். அறநெறியில் நின்று தவறுகிறவர்கள் நெருஞ்சில் முள் குத்துவது போன்றதுன்பத்தை அடைவர். அன்பு நெறியாகிய இல்லறத்தையும், அதன் முதிர்வாகிய அருள் நெறியாகிய துறவறத்தையும் இரு கால்போல அகம் புறம் எனச் சிறப்பித்து இந்துசமயத் திருநூல்கள் கூறியுள்ளன. இத்தகைய நெறிகளில் நில்லாது தீநெறி நிற்போர் அடையும் துன்பங்கள் போல நெருஞ்சில் முள்ளையும இறைவனே படைத்தருளினான். நெருஞ்சில் சாதாரணமாக கண்ணுக்குப் புலப்படாத ஒரு முள். ஆனால் பட்டால்ப் பெரும் துன்பத்தைத் தரும். அறநெறியில் தவறாது நடப்பவர்களுக்கு இத்தகைய துன்பங்கள் ஏற்படமாட்டாது.

நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியின்வழுவின் நெருஞ்சில் முள்பாயும்
நெறியின் வழுவாது இயங்க வல்லார்க்கு
நெறியின் நெருஞ்சில் முள் பாயகில்லாவே.

# சித்தம் சிவமாதல்

வியாமள ஆகமத்தின் சாரமாகிய ஆறாம் தந்திரத்தில் சிவகுருதரிசனம், திருவடிப்பேறு, ஞாதுரு ஞானநேயம் ஆகியவற்றைத் தொடர்ந்து துறவு என்ற பகுதி இடம்பெறுகிறது. அன்பால் இறைவனைப் பற்றி இயல்பான முறையில் பாசங்களினின்றும் நீங்குதல் துறவு எனப்படும். அறிவினால் ஆராய்ச்சி செய்து பற்றில் நீங்குதல் அவாவறுத்தல் எனப்படும். உலக இன்பங்களை இயல்பாகத் துறந்து சோதிப்பிரானை மறவாது வழிபடுவோருக்கு அவர் சிவலோகம் அருளுவார். துறவைத் தொடர்ந்து தவம், தவதூடனம் ஆகிய பகுதிகள் இடம்பெறுகின்றன.

தன்னுள்ளே மறைந்துள்ள பொருளைக் காணச்செய்யும் முயற்சியே தவமெனப்படும். சிவனிடத்தே மனத்தை வைத்து நிலைபெற்ற உத்தமர்களின் உள்ளமானது உலகிலுள்ள எத்தகைய துன்பத்தையும் கண்டு அஞ்சுவதில்லை. முடியாட்சி நிலவிய காலத்தில் மன்னனின் ஆணை தெய்வத்தின் ஆணை என்று மதிக்கப்பட்ட காலத்தில் பல்லவ அரசனின் ஆணையைத் துச்சமென மதித்த நாவுக்கரசர்

நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்பமில்லை

25

எனச் சான்றாண்மை வீரத்துடன் முழங்குகின்றார். அகத்திலே அஞ்சாமை குடிகொண்ட இவர்களுக்குப் பிறப்பு இறப்பு இல்லாமையால் யமனுக்குப் பயப்படுவதில்லை. அவர்களுக்கு வேறு எவ்வகையான துன்பமும் இல்லை. உலகியல்ப் பற்றை நீக்கியவர்களுக்கு அடைதற்குரிய உலகியல்ப்

பயன்கள் எதுவுமில்லை. இரவு பகல் என்ற வேறுபாடுமில்லை புலன்களைச் சிவனின் திருவடித்தாமரையில் ஒடுக்குபவர்கள் பற்றற்றான் பற்றினைப் பற்றியவர்கள் ஆவார்கள்.

ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவதில்லை நமனுமங்கில்லை
இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை
படும்பயன் இல்லை பற்று விட்டோர்க்கே

உண்மையான இறை நாட்டமன்றி வெறும் அறிவு விருத்திக்காக நூல்களைக் கற்றுப் பிதற்றித் திரிவதனால் பயன் எதுவும் இல்லை. பொய்ப்பெருமைகளை விட்டுவிட்டு ஒரு கணப்போதாவது புறத்தே போகும் உள்ளத்தைத் தடுத்து அகத்தே நோக்குங்கள். அவனருளாலே அவனை நோக்கும்பொழுது உள்முகப் பார்வையானது பசுமையான மரத்தில் அடித்த ஆணிபோன்று திருவருளில் பதிந்துவிடும். இதனால் ஆன்மாவைப் பீடித்திருக்கும் பிறவிப்பிணியானது நீங்கிப் போய்விடும்.

சாத்திரம் ஓதுஞ்சதுர்களை விட்டு நீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்த வப் பார்வை பசுமரத்தாணிபோல்
ஆர்த்த பிறவி அகல விட்டோடுமே

தவதூடனம் என்பது தவப் புறக்கணிப்பு அல்லது தவக்கடப்பு என்று சொல்லலாம். தவத்தாற் பெறும் பயன் கிடைத்த பின்னர் தவ அனுசரிப்புத் தேவைப்படாது என்பதே இதன்பொருள் ஆகும். புறநோக்கைவிட்டு அக நோக்குக் கொண்டவர்க்குப் புறத்தே செய்யும் கிரியை ஒன்றும் வேண்டாம். உயிர்க்கு உயிராக நின்று இயக்குகின்ற பரம்பொருளை அகத்திலே கண்ட பின்பு கற்று அறிந்துகொள்ள வேண்டியது எதுவும் இல்லை. பொருள் இரண்டாக இருக்கும்பொழுது காதலுக்கு இடம் உண்டு. பொருள் ஒன்றானபோது காதலுக்கு இடமில்லை. உண்மைப் பொருளான சிவத்தை உடலில் கண்டால் அன்பு செலுத்தவேண்டிய அவசியமும் இல்லை. கருவி கரணங்கள் எல்லாம் இறைவனை நோக்கித் திரும்பினால் ஆனந்தக் கூத்தனை அகத்திலே தரிசிக்கலாம். உடம்பின் அவயவங்கள் அனைத்தையும் இறைவனை நோக்கித் திருப்புவதால் ஏற்படும் நன்மையினைத் திருஅங்க மாலையில் திருநாவுக்கரசர் தெளிவாக விளக்குகின்றார். 'தலையே நீ வணங்காய்'' 'கண்காள் காண்மின்களோ'' ''நெஞ்சே நீ நினையாய்'' என உடல் உறுப்புக்கள் அனைத்தையும் இறைவனை நோக்கித் திரும்பும்படி கட்டளையிடுகின்றார். எல்லாக் கருவி கரணங்களும் இறைவனை நோக்கித் திரும்பினால் ஏற்படும் விளைவினையும் தெளிவாக விளக்குகின்றார்.

தேடிக்கண்டு கொண்டேன்
திருமாலொடு நான்முகனும்

தேடித் தேடொனாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்

என்பது அப்பர் பெருமானின் வாக்கு அகும். சித்தம் சிவமாகிவிட்டால் செய்கின்ற செயல்கள் யாவும் தவமாகிவிடும். என்பதைச் 'சித்தத்தைச் சிவமாக்கி செய்தனவே தவமாக்கும் அத்தன்' என மணிவார்த்தையாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. சிவாயநம என்ற சிவ மூலமந்திரத்தை இடையறாது உச்சரிப்பவர்களுக்குத் துன்பமும் இல்லை. துயரமும் இல்லை. அபாயமும் இல்லை. அச்சமும் இல்லை என்பதைச்

"சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை"

எனத் தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் குறிப்பிடுகின்றார். சிவசிவ என்னும் தனிப்பெரு மந்திரத்தை ஓதிக்கொண்டு வருவார் நெஞ்சம் சிவனுறையும் திருக்கோயிலாகவே மாறிவிடும். அவ்வாறு செய்பவர்கள் வேறு எத்தவமும் செய்யவேண்டியதில்லை. அத்தகையோரின் சித்தமாகிய நெஞ்சில் சிவனடிப்பேரின்பமே நிலைபெறும். 'சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்' என்பதுபோல இத்தகையவர்கள் இறைவனால் வலிந்து ஆட்கொள்ளப்படுவார்கள். 'அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்' என்ற மணிவாசகப் பெருமானின் வாக்கிற்கு அமைய சிவனடியார்களோடு சேர்ந்திருந்து சிவனையே துதிக்கும் வாய்ப்பு உண்டாகும். சித்திக்கும் முத்திக்கும் வழிகாட்டும் அன்பியல் வாழ்க்கை, அருளியல் வாழ்க்கை, இன்பியல் வாழ்க்கை ஆகிய மூன்றும் ஒருங்கே கிட்டும். முன்னைத் தவத்தின் பயனாக சித்தம் சிவமாகியவர் உறவு உண்டாகி சித்தியும் முத்தியும் ஒருங்கே கிட்டும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

சித்தம் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்
சித்தம் சிவானந்தம் சேர்ந்தோர் உறவுண்டால்
சித்தம் சிவமாகவே சித்தி முத்தியாஞ்
சித்தம் சிவமாதல் செய்தவப் பேறே

நாத விந்துவாகிய இறைவனின் திருவடியைப் பொருந்துகின்றவர்களுக்கு ஞானம் தானாகவே விளங்கும். அன்பே சிவமாகிச்சிவனருளைப் பெற்றிருக்கும் அன்பாளன் செல்வம் வேண்டின் அதனைத் திருமகளும் வாரி வழுங்குவாள். ஞானம் வேண்டின் வித்யா தெய்வமான கலைமகளின் அருளினால் ஞானமும் கிட்டும். பராசக்தியின் அருளினால்எல்லாப் பெருமைகளும் அடியவனுக்கு ஒருங்கே கிட்டும். நம்முடைய முயற்சி எத்தனை பெரிதாயினும் எம் பெருமானுடைய அருள் ஒன்றே எமக்கு எல்லா நன்மைகளையும் தரும். தீதற்ற முறையில் வரும் செல்வம், தெளிந்த ஞானம் என்பன கிடைப்பதோடு நம்முடைய மனிதப் பண்புகளும் உயர்வடையும். அதன் பயனாக மனிதனுக்குத் தெய்வநிலையும் சித்தித்துவிடும். எம்பெருமானே குருவாக வந்து ஆட்கொண்டு

திருவருளினை வாரி வழங்குவார். தெய்வத்திருவருளினால்த்தான் ஞான குருவும் நமக்கு வாய்ப்பார்.

பிரானருள் உண்டெனில் உண்டு நற்செல்வம்
பிரானருள் உண்டெனில் உண்டு நன்ஞானம்
பிரானருளிற் பெருந்தன்மையும் உண்டு
பிரானருளில் பெருந் தெய்வமுமாமே

அவவேடம் என்பது போலிக் கோலம் ஆகும். அகமும் புறமும் ஒத்தில்லாத பொய்வேடம் புனைவது பயன் அற்றதாகும். வேடதாரிகளும் விளம்பர விரும்பிகளும் இறையருளை என்றும் பெற முடியாது. ஆத்மீகத்தை வியாபார நோக்கோடு பயன்படுத்துபவர்களுக்கு வாழ்வில் என்றுமே உய்தி கிடையாது. சமூக அந்தஸ்த்திற்காகச் சமய வேடதாரிகளாக நடிப்பவர்களின் தொகை இன்று கூடிக்கொண்டே செல்கிறது. 'உண்டிருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர் உரையீரே' என்ற மகாபாரத வாக்கிற்கு அமைய வாழ்கின்ற போலி வேடதாரிகளின் தொகை நமது சமூகத்தில் அதிகரித்துக் கொண்டே போகிறது. பஞ்சமா பாதகங்கள் ஐந்தும் செய்பவர்கள் பலர் இன்று சிவ சின்னங்களை அணிந்து கொண்டு சமயத்தின் தளபதிகளாகத் தங்களை வெளிக்காட்டிக் கொள்கிறார்கள்.

கலியுகத்தில் இறைவனைப் பற்றிப் பிடிப்பதற்குப் பக்தி மார்க்கமே மிகச் சிறந்தது என நாரத மகரிஷி தனது பக்தி சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

''ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத் தேடுவதும்
நின் அடியார் செய்கை பராபரமே''

என்ற தாயுமான சுவாமிகளின் வாக்கிற்கு அமைய ஆடியும், பாடியும், அழுதும், தொழுதும் இறைவனை வணங்கினால் இறையருளைப் பூரணமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பொய்வேடம் பூண்பவர்களைத் திருமந்திரம் இரக்கம் இன்றிச் சாடுகிறது. வயிற்றை நிரப்புவதற்காகப் பயனற்ற வேடங்களைப் பூண்டு உலகத்தை ஏமாற்றும் அறிவிலிகளின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளால் எதுவித பயனும் இல்லை. பொய்யாய்க் கோலத்தைப் பூண்டு தவம் செய்பவர்கள் நரகத்துக்குப் போவார்கள். உள்ளத்தில் உண்மை இன்றிக் கோலத்தால் மட்டும் நடிக்கும் பொய்த்தவம் செய்பவர்கள் புண்ணியர்கள் ஆகமாட்டார்கள். மெய்த்தவம் போன்று நடிப்பதால் இவர்களுக்கு உலகியல் இன்பங்கள் சில கிடைக்கலாம். ஆயினும் உண்மை ஞானத்தால்த்தான் தவத்தின் பயன் கைகூடும். இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தருவது உண்மை ஞானமே என்பதைப் பின்வரும் திருமந்திரம் விளக்குகிறது.

பொய்த்தவம் செய்வார் புகுவர் நரகத்துப்
பொய்த்தவம் செய்தவர் புண்ணியர் ஆகார்

பொய்த்தவம் மெய்த்தவம் போகத்துள் போக்கியும்
சத்தியம் ஞானத்தால் தாங்கும் தவங்களே

அவ வேடத்தைச் சாடிய தவயோகி அடுத்து தவவேடத்தின் சிறப்பினை விளக்குகின்றார். தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும் தாம் பிற உயிர்களுக்குத் துன்பம் எதுவும் செய்யாது இருத்தலும் தவத்தின் வடிவம் என்பதை

உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு

எனத்திருக்குறள் கூறுகிறது. தவத்தால் உயர்ந்து இறையருளுக்குப் பாத்திரமான அடியவர்களிடம் யமனே நெருங்கமாட்டான் என்பதை

''நாளென் செயும் வினைதான் என் செயும்
எனை நாடிவந்த கோளென் செயும்
கொடுங் கூற்றென் செயும்''

என முருக உபாசகராகிய அருணகிரிநாதர் கூறுவதைக் கந்தரலங்காரத்திலே காணலாம்.

சிவனைக் குறிக்கும் அடையாளங்களாகிய சிவசின்னங்களில் விபூதியும், உருத்திராக்கமும் புறச் சிவசின்னங்களாகும். பஞ்சாட்சர மந்திரம் அகச் சிவசின்னமாகும். இவை ஞான நூல்களைக் கற்பவர்களுக்கு, உரிய அடையாளங்களாகத் திகழ்கின்றன. சைவர்கள் ஒவ்வொருவரும் சமயதீட்சை பெற்றுச் சிவமூல மந்திரத்தினை உச்சரித்து திருநீற்றினைத் திரிபுண்டரமாக நெற்றியிலே தரிக்கவேண்டும் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. தவவேடத்தில் நிற்போர் திருநீற்றை அணிவதோடு செம்பொன்னாலாகிய குண்டலங்களை இரண்டு காதுகளிலும் அணிந்திருப்பர். முப்பத்திரண்டு சிவமணிகள் கொண்ட கண்டிகையாகிய உருத்திராக்கம் மார்பிடத்துக் காணப்படும். நாவினால் சிவமூல மந்திரமாகிய பஞ்சாட்சர மந்திரத்தைச் செபித்தல்வேண்டும். உண்மைத் தவநிலையில் இருக்கும் சிவயோகிக்கு இவையே அடையாளங்களாகும்.

பூதியணிவது சாதனமாதியிற்
காதணி தாம்பிர குண்டலங்கண்டிகை
ஓதியவர்க்கும் உருத்திர சாதனந்
தீதில் சிவயோகி சாதனந் தேரிலே.

# சிவக்கோலமே தவக்கோலம்

26

சைவ சமயத்தவர்களுக்குரிய அடையாளங்களாகப் புறச் சிவ சின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கமும், அகச் சிவசின்னமாகிய பஞ்சாட்சர மந்திரமும் போற்றப்படுகின்றன. 'நீறில்லா நெற்றி பாழ்' என்பது தமிழ் மூதாட்டி ஔவையின் வாக்காகும். விபூதியின் பெருமையைப் பதின்மூன்று உபநிடதங்கள் சிறப்பித்துக்கூறுகின்றன. 'விபூதியைக் கைநழுவவிடாதே' என்றே உபநிடதங்கள் அறிவுரை வழங்குகின்றன. திருநீறு பூசாதவனின் முகம் சுடலைக்குச் சமன் என்ற சூதசங்கிதை என்ற நூல் குறிப்பிடுகிறது. ஞானக் குழந்தையாகிய சம்பந்தர் பாண்டிய அரசனின் வெப்புநோயை நீக்கியதன் மூலம் சிவசின்னங்களில் ஒன்றாகிய திருநீற்றின் பெருமையை உலகறியச் செய்தார்.

இறைவனே பூசிக்கொள்ளும் உடலுக்குக் கவசமாகிய திருநீற்றைச் சிறிதும் தடையில்லாமல் நாமும் உடலில் பூசி மகிழ்ந்தால் தீவினைகள் நீங்கும். மோட்ச இன்பம் கிடைக்கும். இறைவனது அழகிய திருவடிகளை அடையலாம் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரேயாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே

ஞானிகள் வேடம்போட்டு உலகினை ஏமாற்றும் சமய வியாபாரிகள் பலர் இப் பூவுலகிலே நடமாடித் திரிகிறார்கள். மெய்யுணர்வு எள்ளளவும் இல்லாமல் கழு மரத்தடி நாய் போல இவர்கள் கத்தித்திரிவார்கள்.

மன ஒருமைப்பாடு இல்லாது குரங்கு போன்று கொப்புக்கு கொப்புத் தாவும் இயல்புடைய இவர்கள் கழுகு போன்று பிறரைக் கொத்தித் திரிவர். நாடகத்தால் ஞானிபோல் நடித்து நானிலத்தில் வாழும் மக்கள் அனைவரையும் நயவஞ்சகமாக ஏமாற்றிப் பிழைப்பார்கள். ஞானிபோல வேடம் போட்டுத் தன்னை விளம்பரப்படுத்தித் தமது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வார்கள். ஆனால் உண்மையான பக்குவம் உள்ள ஞானிகள் பொறி புலன் முதலிய உடலுடன் கூடியிருந்தும் உலகியல்ச் செயற்பாடுகளில் நாட்டமின்றிப் பற்றின்றிச் செத்தாரைப் போன்று திரிவார்கள். வேடதாரிகளுக்கும் உண்மையான ஞானிகளுக்கும் உள்ள வேறுபாட்டினைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

கத்தித் திரிவர் கழுவடி நாய்போற்
கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்
ஒத்துப் பொறியுமுடலு மிருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானியோர்களே.

உடல், பொருள், ஆவி மூன்றையும் சிவனுக்கு அர்ப்பணம் செய்பவரே உண்மையான சிவ வேடத்தவர் ஆவார். அன்பு வயப்பட்டு உள்ளம் உருகி இறைவனை வழிபட்டால் அவருடைய திருவருட் பேற்றினைப் பெறுவது உறுதி என்பதை

அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தம் ஆய்க் கசிந்து உருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறு

எனத் திருவாசகம் குறிப்பிடுகிறது. திருவருட் துணையால் சிவனுக்கு அடிமையாகி அச்சிவனார் உடமையாகிய தனது உடல் அவர் உறையும் பொற்பதி என்று நாடுதலாகிய உண்மையுணர்வு கொள்ளுதலால் அறியாமையாகிய மலவிருள் அகலும். மலவிருள் அகன்றதும் தன் முனைப்பால் செய்யும் இருவகைச் செயல்களும் நீங்கும். இவை அகன்றதும் தெளிவினை உடையவர்கள் ஆகி இறைவனுக்கு மீளா அடிமையர் ஆவார்கள். பூரண சரணாகதியாக இறைவனைப் பற்றி நிற்கும் நிலையில் கொள்ளும் சிவக்கோலமே உண்மையான தவக்கோலமாகும்.

அருளால் அரனுக்கு அடிமை அது ஆகிப்
பொருளாம் தனது உடல் பொற்பதி நாடி
இருளானது இன்றி இருஞ்செயல் அற்றோர்
தெருளாம் அடிமைச் சிவவேடத்தாரே.

அஞ்ஞானமாகிய இருளினால் ஒளி மழுங்கிய கண்களை ஞானம் என்கின்ற துலக்குமாற்றல் வாய்ந்த கருவியால் திறக்கவல்ல திறமையாளன் எவனோ

அவனே ஞானகுரு என இந்துக்களின் ஞானக்களஞ்சியமாகிய உபநிடதங்கள் கூறுகின்றன. சூரியனைக் கண்டு தாமரை மலர்வதுபோல ஆசாரிய சம்பந்தம் ஒருவனுக்குக் கிடைத்தால்த்தான் அவனிடம் அகத்திலே ஞான மலர்ச்சி ஏற்படும் எனச் சங்கராச்சாரியார் விஷ்ணு பகவான் மீது பாடிய தோத்திர நூலாகிய பஜகோவிந்தத்திலே குறிப்பிடுகின்றார். ஆனால் பிரபஞ்ச மயக்கத்தில் வாழ்கின்ற நாம் நமது அக இருளாகிய அஞ்ஞானத்தைப் போக்கக் கூடியவர்களைக் குருவாகக் கொள்கின்றோம் இல்லை.

அஞ்ஞானத்தை நீக்கித் தெய்வஒளியைக் காட்டுகின்ற குருமார்களைச் சென்றடையாமல் அறிவிலிகளைச் சார்ந்து நின்று தங்கள் வாழ்நாளை வீண்நாளாக்கித் துன்பத்தில் வீழ்கிறார்கள். குருடனுக்குக் குருடன் பாதை காட்டுவதுபோல நாமும் நமக்குத் தவறான வழிகாட்டுபவர்களையே குருவாகக் கொள்கின்றோம். குருடும் குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடிக் குழியில் வீழ்கின்றோம் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடலின் ஊடாகத் தவயோகி உணர்த்துகின்றார்.

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழுமாறே.

மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் தூய்மையுடன் செயற்பட்டாலே செய்கின்ற காரியங்கள் எல்லாம் சித்தியாகும்.

'திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் நீ அருள்வாய்' எனத் தாயுமான சுவாமிகள் இதனைக் குறிப்பிடுகின்றார். சொல்லும், செயலும், நினைப்பும் ஒன்றாக இருந்தால்தான் இறையருளை உணரமுடியும். வாய் ஏதோ ஒன்றைச் சொல்ல, மனம் வேறொன்றை எண்ண, நீ பிறிதொன்றைச் செய்யாதே. திரிகரணங்களும் தூய்மையாக இருந்தால் நீ சிவாக்கினியைப் பெற்றவன் ஆவாய். சிவ ஒளியைப் பெற்றுத் தெளிந்தபின் என்சொல் பித்தனின் சொல் என்று யாருமே கூறமாட்டார்.

வாய் ஒன்று சொல்லி மனம் ஒன்று சிந்தித்து
நீ ஒன்று செய்யல் உறுதி நெடுந்தகாய்
தீ யென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர் தெளியாரே.

நீதி தவறாது நாட்டை ஆளவேண்டியது நாட்டை ஆளும் அரசனின் கடமை, நாட்டு மக்களைச் சரியான முறையில் நீதி தவறாமல் ஆட்சி செய்யும் அரசனை மக்கள் அனைவரும் கடவுளாகப் போற்றி வணங்குவார்கள் என்பதை

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்.

எனத் தெய்வத் தமிழாகிய திருக்குறள் கூறுகிறது. எப்பொழுது அறம் அழிந்து மறம் மேலெழுகின்றதோ அப்பொழுது நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் நான் யுகம் யுகந்தோறும் திரு அவதாரம் செய்கின்றேன் எனக் கிருஷ்ண பகவான் பகவத் கீதையிலே அவதாரக் கோட்பாட்டினை விளக்குகின்றார்.

பஞ்சமா பாதகங்களைத் துணிந்து செய்பவர்களை நாட்டில் தலைதூக்க விடாமல் செய்யவேண்டிய பொறுப்பு நாட்டினை ஆளும் தலைவனுடையது. இத்தகையோரைத் தண்டிக்க அரசன் தவறுவானாக இருந்தால் நாட்டிலே பஞ்சம், பட்டினி தலைவிரித்தாடி நாடானது வறுமைக்குள் சிக்கி முற்றிலும் அழிந்துவிடும்.

பஞ்சத் துரோகத்திப் பாதகர் தம்மை
அஞ்சச் சமயத்தோர் வேந்தனருந்தண்டம்
விஞ்சச் செய்திப்புவி வேறு விடாவிடில்
பஞ்சத் துளாய் புவி முற்றும் பாழாகுமே

பக்குவம் உடையவனுக்கே குருவின் உபதேசம் கிடைக்கும். பக்குவம் அற்றவனாகிய அபக்குவன் ஒருநாளும் குருவின் உபதேசத்தைப் பெறமுடியாது. பக்குவம் இல்லாதவன் தன்னைப் பீடித்திருக்கும் மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி ஆகிய ஐந்து மலங்களையும் பற்றி அறியமாட்டான். அவனுடைய வாயில் இருந்து வரும் வார்த்தைகளில் உண்மை வராது. பொய் கலந்தே பேசுவான். பிறவிநோயை நீக்குவதற்குரிய வழியை என்றுமே அறியமாட்டான். 'பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே' என்ற அப்பர் பெருமான் அருளிய வாக்கிற்கு அமையவே தனது வாழ்நாளைக் கழிப்பான். தில்லைக் கூத்தனின் திருவடிகளைப் பற்றிப்பிடித்து அல்லல் பிறவி அறுக்கும் வழி தெரியாமல் அலைந்து திரிவான். அகத்தை மாசுபடுத்தும் அறுவகைப் பகைகளாகிய காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பவற்றைப் பற்றியும் அறியமாட்டான். இத்தகைய இயல்புடையவர்களை மாணவர்களாக ஏற்கக் கூடாது என்பதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

மன்னும் மலம் ஐந்தும் மாற்றும் வகை ஓரான்
துன்னிய காமாதி தோயும் தொழில் நீங்கான்
பின்னிய பொய்யன், பிறப்பு இறப்பு அஞ்சாதான்
அன்னியனாவான் அசற் சீடனாமே

தகுதி உடைய பக்குவன் குருவின் அறிவுரைப்படியே என்றும் நடப்பான். இறைவனிடம் முற்றிலும் சரணாகதி அடைதல் அல்லது அடைக்கலம் புகுதலே பிரபத்தி நெறி ஆகும்.

பாண்டி நாட்டின் முதல் அமைச்சராகத் தென்னவன் பிரமராயன் என்ற

பட்டத்தோடு திகழ்ந்த மணிவாசகரைத் திருப்பெருந்துறையில் பரமசிவன் குருவேடம் தாங்கி ஆட்கொண்டார். அமைச்சருக்குரிய மிடுக்கான கோலத்தோடு சென்ற மணிவாசகனார் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற பின்பு கௌபீன உடையும், திருமேனி நிறையத் திருநீறு பூசிய கோலமும், மயிர் விரிக்கப்பெற்ற சிரசும், ஆனந்தக் கண்ணீர் பொழியும் கண்களும் உடையவராக மாறிக் குருநாதரிடம் தன்னைப் பூரணமாக ஒப்புவித்த நிலையிற் காட்சி தந்தார். மணிவாசகரைப் புடம் போட்ட தங்கமாக மாற்றவிரும்பிய பரமசிவன் அவருக்குப் பல சோதனைகளைத் தந்தார். பாண்டிய அரசனால் மணிவாசகர் பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டார். தீயிட்டு உருக்குமளவு பொன் ஒளி வீசுவது போன்று இன்னல்கள் அதிகரிக்கும் அளவிற்கு பக்தியானது தீவிர பக்தியாக மணிவாசகரிடம் மாற்றம்பெற்றது. சோதனைகளும், வேதனைகளும் தொடர்ச்சியாக ஏற்பட்டபொழுது மணிவாசகனார் இறைவனையே நொந்து பாடினார். அன்புப் பசையால் உரிமை உணர்வுடன் இவர் இறைவன் மீது பாடிய பாடல்களைக் குழைத்தபத்திலே காணலாம். திருப்பெருந்துறையில் என்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒன்றுசேர ஆட்கொண்ட பின்பு எனக்கு இடையூறு செய்யலாமா? பாதங்களைப் பற்றிப் பிடித்து வணங்கும் அடியவனை சோதனைக்கு உட்படுத்தலாமா? என உரிமையோடு இறைவனை வேண்டுவதைக் குழைத்த பத்திலே காணலாம்.

அன்றே என்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை அட்கொண்ட
பாதே கொண்டிலையோ

இன்றோர் இடையூறு எனக்கு உண்டோ என்தோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ
இதற்கு நாயகமே

இறைவனுடைய திருவருள் துணை இருந்தால்த்தான் நல்ல குருநாதர் கிடைப்பார். நல்ல குருவை அடைந்து அவரிடம் உன் உடைமையாய் உள்ள பொருளையும், உனது உடலையும், உயிரையும் காணிக்கையாக வழங்குதல் வேண்டும். குரு காட்டும் வழியில் நின்று சரியாகச் செயற்பட்டால் ஆன்மாவில் தெளிவுநிலை ஏற்பட்டுச் சிவபதம் தானாகவே கிடைத்துவிடும் என்கிறார் திருமூலர்.

கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக
உள்ள பொருளுடல் ஆவியுடன் ஈக
எள்ளத் தனையும் இடை விடாதே நின்று
தெள்ளியறியச் சிவபதந்தானே.

# அன்பியலும் அருளியலும்

27

திருமந்திரத்தின் ஏழாம் தந்திரம் காலோத்தராகமத்தின் சாரமாக அமைந்துள்ளது. இத் தந்திரம் முப்பத்தெட்டு உபதலைப்புக்களாகப் பிரிக்கப்பட்டு நானூற்றிப் பதினெட்டுப் பாடல்களைத் தன் அகத்தே கொண்டு விளங்குகிறது ஆறு ஆதாரங்கள் பற்றிய விளக்கங்களோடு அண்டலிங்கம் (உலகசிவம்), பிண்டலிங்கம் (உடற்சிவம்), சதாசிவலிங்கம் (உலகமுதற்சிவம்) சூக்குமலிங்கம் (உயிர்ச்சிவம்), ஞானலிங்கம் (உணர்வுச்சிவம்), சிவலிங்கம் (சிவகுரு) ஆகிய ஆறு லிங்கங்களும் சமய சிறப்புப் போதனை, ஆன்மாவில் கலந்துள்ள சிவனுக்கு இயற்றும் வழிபாடு, குருவாகிய சிவனுக்கு இயற்றும் வழிபாடு, மாகேசுரப்பூசை, அடியார் பெருமை, உணவு விதி, பல்வகையான முத்திரைகள், யோகிகள் அடையும் பேறுகள், அவர்கள் தங்கள் உடல்களை விடும்முறை, இடகலை பிங்கலைநாடிகள், புலன்களை அடக்கும்முறை, குருவின் தன்மை, கூடா ஒழுக்கம் முதலிய யாவும் விளக்கப்பட்டுள்ளன.

ஏழாம் தந்திரத்தின் ஆரம்பத்தில் ஆறு ஆதாரங்கள் பற்றி விளக்கப்டுகின்றது. உடலில் சூக்குமவடிவாகவுள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரங்களைப் பற்றியும் விளக்கி இவ் ஆதாரங்களில் இறைவனைத் தியானித்து முறையே மேல் சென்று ஆன்மா சிவத்தோடு இணையும் பேற்றினைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. பகவத் குணங்களான அவாவின்மை, ஈசுவரத் தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியம் ஆகியவற்றை இந்நெறியில் நிற்பவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது. சூக்கும உடம்பின் விளக்கமாக அமைவதே தாய உடம்பாகும். சூக்கும உடம்பின் பக்குவத்திற்கேற்ப தூய உடல் அமையும்.

மனிதப்பிறவி அரியது என்றும், உடல் இறைவனின் திருக்கோயில் என்றும் சித்தர்கள் கூறுகின்றனர். அத்தகைய

அரிய உடலைச் சிலர், காமக்களியாட்டங்களில் ஈடுபட்டுப் பாழாக்கி விடுகின்றனர் என்றும் அவர்கள் இரக்கப்படுகின்றனர்.

**ஊத்தைச் சடலம் என்று எண்ணாதே – இதை**
**உப்பிட்ட பாண்டம் என்று எண்ணாதே**

என்று கொங்கணர் என்ற சித்தர் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். மனித உடலின் மூலாதாரத்தில் உறங்கிக் கிடக்கும் ஓர் அற்புத சக்தியே குண்டலினி சக்தி. யோகப்பயிற்சியின் மூலம் இதனை மேலே எழுப்பி வேண்டிய பலனைப்பெற முடியும். இதில் தெய்வீக சக்தி உண்டென்பர். சாதகர்கள் தம்யோக வலிமையால் பல சித்திகளைப் பெற்றுக்கொள்வர். குண்டலினி சக்தியை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை (புருவநடு) என்ற ஆறு நிலைப்பாடுகளினூடாக மேலே எடுத்துச் சென்றால் சமாதிநிலை கிடைக்கும். இந்நிலையைப் பெறுவோர் பிணி, மூப்பு, சாக்காடு இல்லாமல் நலமாக வாழ முடியும்.

மிகவும் ஆற்றல் வாய்ந்த குண்டலினி சக்தியானது பாம்புபோன்று பிடித்து வைத்திருக்கமுடியாதது. அதனைப் பாம்பாக உருவகித்து அதன் வல்ல பங்களையெல்லாம் பாம்பாட்டிச் சித்தர் பாடி உள்ளார். அவரது பாடல்களில் பாம்பாகக் கூறப்படுவன எல்லாம் குண்டலினி சக்தியைப் பற்றியனவே ஆகும்.

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களிலே ஆரோக்கிய வாழ்விற்குரிய உணவுப் பழக்கம், உடற்பழக்கம், மன ஒழுக்கம் முதலான விடயங்களும், கரு உற்பத்தி, உடற்கூறுகள் என்பன பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. சப்த தாதுக்களால் ஆனது உடல். உடல் சப்த தாதுக்களில் அழிவுகள் ஏற்பட்டுக் கழிவுகளாக நீங்குவது இயல்பு. உதாரணமாகக் குருதியிலுள்ள செங்குருதிக்கலங்கள் தம் வாழ்க்கைக் காலத்தின் பின் மண்ணீரல், ஈரல் முதலிய உறுப்புக்களில் அழிக்கப்படுகின்றன. பின்பு இவை பிலரூபின், பிலி வீடின் என்னும் இரு மஞ்சள் நிறமுடைய கழிவுப்பொருட்களுடன் சேர்ந்து வெளியில் கழிக்கப்படுகின்றன எனச் சித்த மருத்துவம் கூறுகிறது. இக் கருத்தினைப் பாம்பாட்டிச் சித்தரின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

மலக்குடம் மீதினிலே மஞ்சள் பூச்சென்றும்
மல்கும் புழுக்கூட்டின் மேல் வண்ணத்தோல் என்றும்

சலக்குழிக்குள்ளே நாற்றம் சார்ந்து சேறென்றும்
தான் அறிந்து தள்ளினோம் என்று ஆடுபாம்பே.

இவ்வுடலில் உள்ள ஆறு ஆதாரங்களையும் தாமரையாகவும், சக்கரமாகவும் ஞானிகள் உரைப்பர். மூலாதாரம் நான்கு இதழ்த் தாமரை வடிவாகவும், சுவாதிட்டானம் ஆறு இதழ்த் தாமரை வடிவாகவும் அநாகதம் பன்னிரண்டு இதழ்த் தாமரை வடிவாகவும், விசுத்தி பதினாறு இதழ்த் தாமரை வடிவாகவும் காணப்படுகிறது, இந்த ஐந்து ஆதாரங்களையும் தாண்டினால் ஆஞ்ஞையாகி புருவ நடுவில் அமிர்தத்தைச் சுவைக்கலாம். ஒளியைப் பெறலாம்.

நாலும் இரு மூன்றும் ஈரைந்தும் ஈராறும்
கோலிமேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலம் கண்டு ஆங்கே முடிந்த முதல் இரண்டும்
காலம் கண்டான் அடி காணலும் ஆமே.

உலகமே சிவனது அடையாளமாக இலிங்க வடிவமாகக் காட்சி தருகிறது. எட்டுத்திசைகளிலும் வியாபித்திருக்கும் அஷ்டலிங்கம் சிவமேயாகும். சிவன் தடத்தநிலையில் அருவுருவத்திருமேனியாகக் காட்சி தரும் வடிவமே சிவலிங்க வடிவமாகும். யோகம் முதல் வீடுபேறுவரை அனைத்தையும் அருளுவது சிவமேயாகும். அன்பியல் வாழ்க்கையாகிய போகமும் அருளியல் வாழ்க்கையாகிய முத்தியும் சிவன் அருளாலேயே கிடைக்கிறது. போகத்தின் பயனாகிய சிற்றின்பமும் முத்தியின் பயனாகிய பேரின்பமும் ஆன்மாக்களுக்குக் கிடைப்பதற்கு சிவனே துணையாக நிற்கின்றான். மாயையில் இருந்து தோன்றும் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து ஆன்மா சிவமாகி நிற்பதற்குத் துணையாகி நிற்கும் வடிவம் சதாசிவ மூர்த்தியாகிய சிவலிங்க வடிவமே ஆகும். சிவலிங்க வடிவினனாகக் காட்சி தருதல் போல அகத்திலே யோகசக்தியாகக் குண்டலினியாக இருந்தும் அருள் புரிவான்.

போகமும் முத்தியும் புத்தியும் சித்தியும்
ஆகமும் ஆறாறு தத்துவத் தப்பாலாம்
ஏகமும் நங்கியிருக்குஞ் சதாசிவம்
ஆகிம வத்துவா வாறுஞ் சிவமே.

சிவனுடைய அகண்ட வியாபகத்தை உணர்ந்தபோது சீவனது உடம்பே சிவனாரது கோயிலாக மாறுகிறது. மானிட உடம்பின் வடிவம் சிவலிங்கம் ஆகும். மானிட உடலும் உடலைச் சூழவுள்ள பகுதியும் அறிவாலயம் ஆகும். மானிடனின் உடல் சதாசிவவடிவமாகிய சிவபொருமானின் அரு உருவத் திருமேனியாகும். மானிடரின் உடம்பிலுள்ள அசைவெல்லாம் கூத்தப்பெருமானின் திருநடனமாகக் காட்சி தருகிறது. மக்கள் தமது உடலை நடமாடும் கோயிலாகப் பேணி வாழவேண்டும் எனத் திருமந்திரம் கூறுகிறது.

மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே

இறைவன் ஒலி வடிவாகவும், ஒளி வடிவாகவும் காட்சி தருவான் என்றே வேதங்கள் கூறுகின்றன. நாதப்பிரம்மாய் இருக்கின்ற இறைவனை நாதோபாசனை மூலம் வழிபடலாம் என்ற இந்து சமயத் திரு நூல்கள் கூறுகின்றன. சிவனுடைய அட்டமூர்த்தங்களில் ஒன்றாகிய சிவசூரிய வடிவத்தைப் பாட்டினால் நான் பணிய அவன் ஒலியினால் தன்னுடன் ஒன்றியிருந்தான் எனத் திருமூலர் கூறுகின்றார்.

உணர்ந்தேன் உலகினில் ஒண்பொருளானைக்
கொணர்ந்தேன் குவலயம் கோயில் என்நெஞ்சம்
புணர்ந்தேன் புனிதனும் பொய் அல்ல மெய்யே
பணிந்தேன் பகலவன் பாட்டும் ஒலியே.

ஆன்மா அறிவிக்க அறியும் தன்மை உடையது. சுதந்திரம் இல்லாத சீவனுக்கு தலைமை பொருந்தாது. நானே பிரம்மம் என்று கூறுபவர்கள் அறியாமைக் குழியில் வீழ்ந்து துன்புறுவர். பிணிப்புண்ணப்பட்டமையால் ஆன்மா பசுப்பிணிப்பி என்று அழைக்கப்படும். மலங்களால் பீடிக்கப்பட்டது என்பதே, இங்கு குரால் எனக் கூறப்பட்டது. மலங்களால் கட்டுண்ட என் உள்ளத்தைக் கோயிலாய்க் கொண்டவன், பாம்பு அணிந்த சடையை உடையவன், அக்கினி, நீர் பொருந்தப்பெற்றவன், செய்யும் புண்ணியம் அனைத்துமாய் உடையவனே இறைவன் ஆவான் . இத்தகைய இயல்புடைய இறைவன் தலைவன் இல்லைத் தாமே தலைவன் என்று கூறுபவர்கள் அறியாமையாகிய இருளில் மூழ்கியிருக்கிறார்கள்.

பிரான் அல்லன் , நாம் எனின் பேதை உலகம்
குரால் என்னும் என்மனம் கோயில் கொள் ஈசன்
அராநின்ற செஞ்சடை அங்கியும் நீரும்
பொரா நின்றவர் செய் அப்புண்ணியன் தானே.

பல பிறவிகளிலும் ஆன்மாக்கள் செய்த வினைகள் நீங்குவதற்கு இறைவன் பாதங்களைச் சிக்கெனப் பிடித்து வழிபடுதலே சிறந்த வழியாகும். சிவனுடைய அட்ட மூர்த்தங்களில் சிவசூரிய வடிவமும் ஒன்றாகும். சூரியக் குடும்பமாகவே இந்த அண்ட சராசரத்தில் காணப்படும் கோள்கள் யாவும் இயங்குகின்றன. பூமி தன்னைத்தானே சுற்றுவது ஒருநாள் என்றால் பூமி சூரியனைச் சுற்றும் காலம் ஒரு வருடம் ஆகும். நாள், மாதம், ஆண்டு ஆகியவற்றைச் செய்கின்ற சிவக்கதிரவனான சதாசிவத்துடன் சக்தியை வழிபடினும், இருவரையும் வெவ்வேறாக எண்ணாது ஒருவராய் நினைத்து தியானித்தாலும் பயன் ஒன்றே ஆகும்.

சக்தி சிவத்தினுள் அடங்கிச் செயல்புரியும் வடிவமே சதா சிவமூர்த்தமாகிய சிவலிங்க வடிவம். அம்மை அப்பர் ஆகிய இருவருடைய திருவுருவங்களில் எதனை வழிபட்டாலும் இருவரும் வேறுருவில் ஒருடம்பாய்த் திரிகின்றமையால் எல்லாம் சதாசிவ வழிபாட்டையே குறிக்கும்.

வேண்டி நின்றே தொழுதேன் வினைபோய் அற
ஆண்டு ஒரு திங்களும் நாளும் அளக்கின்ற
கான்தகை யானொடும் கன்னி உணரினும்
மூண்டகை மாறினும் ஒன்றது ஆமே.

முதல்வனாகிய சிவபெருமான் ஒருவனே முழுமுதற்பொருள் என்பதைத் திருவருவளால் உணர்ந்தேன். எப்பெருமானின் திருவடிகளே என்றும்

நன்மை பயப்பன என்பதை உணர்ந்து அவனை நாள்தோறும் பூவும் நீரும் கொண்டு வணங்கி வந்தேன் . நனவிலும் கனவிலும் இறை நினைப்போடு வணங்கியமையால் ஐம்பொறிகளின் வழி அறிவு செல்லவில்லை. வஞ்சனையைச் செய்து ஆன்மாவைப் படுகுழியில் தள்ளிய ஐம்புலன்களும் ஞானப்புலன்களாக மாறின. ஆன்மாவின் அறிவு சிவத்தினுடைய திருவருளுடன் பொருந்தியது. சிவன் தனது திருவருள்சக்தி முழுவதையும் ஆன்மாவில் பதியச் செய்வான்.

ஒன்று எனக் கண்டேன் எம் ஈசன் ஒருவனை
நன்று என்று அடியினை நான் அவனைத் தொழ
வென்ற ஐம்புலனும் மிகக் கிடந்து இன்புற
அன்று என்று அருள் செய்யும் ஆதிப்பிரானே

ஞானம் என்பது மோன வரம்பு . உலகியல் பற்றுக்களாகிய ஆசை என்னும் சங்கிலித்தொடர் அறுந்ததும் பேசா அநுபூதியாகிய ஞான நிலையை (மோனநிலை) ஆன்மா பெற்றுவிடும்.

ஆசா நிகளந் துகளாயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே

எனக் கந்தரநுபூதி இதனைக் குறிப்பிடுகிறது. பூரண சரணாகதியாக இறைவனிடம் நம்மை நாம் ஒப்படைத்து விட்டால் அவன் தன்னை நமக்குத் தருவான். நான் என்னை உம்மிடம் தந்ததால் நீர் உம்மை என்னிடம் தந்தீர். இந்தப் பண்டமாற்று வியாபாரத்தில் தனக்குக் கிடைத்ததோ பெருவெற்றி என்பதை

"தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா ஆர் கொலோ சதுரர்"

என மணிவாசகப் பெருமான் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

விரும்பியவாறு எல்லா இடங்களிலும் அனுபவம் இல்லாது பிதற்றித் திரியும் அறிவில்லாத என்னை, என்னிடம் உள்ள குற்றங்களை எல்லாம் அகற்றி ஆவியோடு ஒட்டி உள்ளுணர்ந்துள்ள மாசு அனைத்தையும் இறைவன் தன் திருவருளால் நீக்கினான், பின்பு தன்னையும் என்னையும் தட்டொக்க மாறினான். என்னைத் தான் பெற்றுக் கொண்டு தன்னை எனக்குத் தந்தான். இந்த வாணிபத்தில் எனக்குப் பெரும் இலாபம் கிடைத்துவிட்டது என்கிறார் திருமூலர்.

பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை
ஒட்டடித்துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்
தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே.

# உள்ளம் பெருங்கோயில்

திருமூலர் தான் பெற்ற ஞானானந்த அனுபவத்தை தனது பாடல்களின் ஊடாக மக்களுக்கு வெளிப்படுத்துகின்றார். நந்தியெம்பெருமானே குருவாக வந்து தம்மை ஆட்கொண்டருளிய சிறப்பினைத் தனது பாடல்களில் கூறுகின்றார். குருவாக வந்த இறைவன் தன் திருவருளாலே ஆனந்தக் கடலாகிய அமுதக் கடலிலே என்னைக் குளித்து மகிழச் செய்தான் என்கிறார். அருளோடு தன் திருவடி இரண்டையும் என் தலையிலே சூட்டி என்னை ஆட்கொண்டான். அந்தத் திருப்பாதங்களிலே அன்பு உண்டாக்கி என்னைத் தீவிர பக்தி கொள்ளும்படி செய்தான். திருவருள் அமுதத்தை நான் உண்ணும்படி எனக்கு ஊட்டி அருளினான். இவ்வாறு தனது குருநாதனாகிய நந்தியெம்பெருமான் தன் உள்ளத்திற் புகுந்து கொண்ட அனுபவங்களைத் தவயோகி தனது பாடலில் வெளிப்படுத்துகின்றார்.

சற்குருவை அடையும் போது உள்ளத்தில் பக்தி தோன்றுகிறது. பக்தி வளர்ந்து முதிரும் போது பேரானந்த நிலை ஏற்படுகிறது. இந்தப் பேரானந்தப் பெருநிலையைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி
அருளால் அடி புனைந் தார்வமும் தந்திட்டு
அருளான ஆனந்தத் தாரமுதூட்டி
அருளால் என் நந்தி யகம் புகுந்தானே

28

ஞானம் ஒருவனிடம் உதயமாகிவிட்டால் ஆதவனைக் கண்ட பனி போல அஞ்ஞானம் ஆன்மாவை விட்டு நீங்கி விடும். ஞானத்தீ எல்லா வினைகளையும் பொசுக்கும். திருவருள் ஒளியாகிய ஞானத்தின் முன்பு

பிறவி காரணமாக ஏற்பட்ட துன்பங்கள் அனைத்தும் நீங்கும். ஞானம் என்னும் விளக்கை ஏற்றினால் எல்லையற்ற பரம்பொருளை அறிந்து கொள்ளமுடியும். அப் பரம்பொருளின் முன்பு மலமாயா கன்மங்களாகிய உடலின் துன்பங்கள் யாவும் அகலும். மிக்க ஒளி வெளிப்படுத்தப்படும். திருவருளாகிய அறிவு விளக்கைப் பெற்றவர்கள் திருவருளாகிய விளக்கினைத் திருமேனியாகக் கொண்டு ஒளிர்ந்து விளங்கும் விளக்காகிய சிவத்துள் ஒடுங்கிச் சிவமாய்த் திகழ்வர்.

விளக்கினை யேற்றி வெளியை அறியின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே

உடம்பு என்பது ஓர் ஆலயம். உள்ளம் என்பது ஆலயத்திற்குள் உள்ள கர்ப்பக்கிருகம். அந்தக் கர்ப்பக்கிருகத்துள் இறைவன் வந்து வீற்றிருக்கின்றான். கருணையோடு கோயில் கொண்ட வள்ளலாகிய எம்பெருமானுக்கு உள்ளமே கருவறையாகிய கர்ப்பக்கிருகம். வாய்தான் கோபுரவாசல். தெள்ளிய அறிவோடு மெய்ஞ்ஞானம் பெற்றவர்களுக்கு ஆன்மாவே பூசைக்குரிய சிவலிங்கம் ஆகும்.

இந்த உடம்பாகிய கோயிலுக்கு ஏற்றிய ஐந்து புலன்களும் ஐந்து காளாமணி விளக்குகளாகவே உள்ளன. ஞானம் பெற்றவர்களுக்கு ஐந்து புலன்களும் அணையாத ஆலய விளக்குகளாகும். ஞானம் பெறாதவர்களுக்கு அவை கள்ளப் புலன்களாகும். ஞானம் பெற்றவர்களுக்கு அவையே சிவலிங்கத்தைக் காட்டும் ஒளி விளக்குகளாகும்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

ஒவ்வொரு தனி மனிதனும் தன்னுடைய ஆத்ம ஈடேற்றத்திற்காக நாளாந்தம் வழிபாடு செய்தல் வேண்டும் என்றே சிவாகமங்கள் கூறுகின்றன. இதனை ஆன்மார்த்த பூசை என்று கூறுவர். சைவர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் சமய தீட்சை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். சமய தீட்சை பெறுதலே சைவ சமயி ஆவதற்கான அடிப்படைத் தகுதியாக உள்ளது. சமய தீட்சை பெற்றுச் சிவ மூல மந்திரத்தை உச்சரித்து சிவசின்னமாகிய திருநீற்றினைத் திரிபுண்டரமாக நெற்றியிலே தரித்து உடம்பினைச் சிவக்கோலமாக மாற்றுதல் வேண்டும்.

ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி இறைநினைப்பினை ஏற்படுத்திச் சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கச் செய்வதற்கு நித்திய வழிபாடு அவசியம் ஆகும். நாளாந்தம் வழிபாடு செய்வது நிலையான புண்ணியம். இதைச்

செய்யும் எண்ணம் தோன்றுவது பெரும் பாக்கியம். " என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்ற சம்பந்தர் வாக்கிற்கு அமைய இறைவனை வழிபடுவதற்கும் பூர்வ புண்ணிய பயன் வேண்டும். நாளாந்த வழிபாட்டிற்கு வேண்டிய அடிப்படைப் பொருள்களாகிய பூவும், நீரும் யாருக்கும் எப்போதும் எளிதில் கிடைக்கக் கூடியவை. இவ்வாறு இலகுவான வழி இறைவனை அடைவதற்காக உரிய பொழுதிலும் இந்த எளிய மார்க்கத்தை உணராமல் பலர் நழுவிப் போகிறார்களே என மனம் வருந்துகிறார் திருமூலர்.

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அது கண்டு அருள் புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம் இறை ஈசனை
நண்ணறியாமல் நழுவுகின்றாரே

சைவர்களுக்குரிய சிவ மூல மந்திரம் பஞ்சாட்சர மந்திரம் என்றே நாயன்மார்கள் நால்வரும் உறுதிபடக் கூறியுள்ளார்கள். உலகியலில் வாழ்பவர்கள் தூலபஞ்சாட்சரமாகிய நமசிவாய மந்திரத்தையும் முத்திகாமிகள் சிவாயநம என்ற சூக்கும பஞ்சாட்சரத்தையும் உச்சரித்தல் வேண்டும். " நாதன் நாமம் நமச்சிவாயவே." என்று ஞான சம்பந்தரும், "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று அப்பர் பெருமானும், "சொல்லுநா நமச்சிவாயவே" என்று சுந்தரரும், " போற்றியோம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை" என மணிவாசகரும் நமசிவாய மந்திரத்தின் பெருமையைப் போற்றி உள்ளார்கள்.

காலை, உச்சி, மாலை என்னும் முப்பொழுதும் சிவனை வழிபடுவதற்குப் பேரன்பு கொள்ளுங்கள். "நமசிவாய" என்னும் ஐந்தெழுத்தைப் புகழ்ந்தோதிப் போற்றுங்கள். சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடரும் சிவனார் திருவருள் ஒளி என்பதை உணருங்கள். இம் மூன்றிலும் சிவபெருமான் திருவருள் ஒளி மேம்பட்டு விளங்கும் உண்மை அறிந்து சிவன் திருஉருவாக வழிபடுங்கள். அவனுடைய திருப்பெயர் நந்தி நாயகன் என்று நவிலப்படும்.

உச்சியும் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின் நச்சி நமவென்று நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் பேர் நந்தி நாயகனாகுமே

இறைவன் வெளிப்படும் இடங்களில் ஒன்றாகச் சிவனடியார் வழிபாடாகிய சங்கம வழிபாட்டினைப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது. தொண்டர்களின் உள்ளத்தில் இறைவன் வீற்றிருப்பதால் அவர்களுடைய பெருமை பேசுவதற்குப் பெரியது என்பதை "தொண்டர் தம் பெருமை பேசவும் பெரிதே" எனத் தமிழ் மூதாட்டி ஔவையாரும் குறிப்பிட்டுள்ளார்.

ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கி ஆன்மா இறைவனை அடைவதற்குச் சிவாலய வழிபாடும் சிவனடியார் வழிபாடும் துணை செய்யும் என்பதை

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே

எனச்சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரம் கூறுகிறது. அடியார்களோடு இணங்கி இருத்தலே ஆண்டவனை அடையச் சிறந்த வழியென்பதை "அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்" என மணிவார்த்தையாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. சூரியனுடைய வெப்பத்திலும் பார்க்க சூரியனின் வெப்பத்தை தன் அகத்தே இழுத்து வைத்திருக்கும் மணலின் சூடு அதிகமாக இருக்கும். இவ்வாறு இறைவனுடைய திருவருளிலும் பார்க்க இறையருளைத் தன் அகத்தே பெற்று வைத்திருக்கும் சிவனடியார்களின் அருள் உயர்வானது என்பதைப் பின்வரும் நீதி வெண்பாப் பாடல் சிறப்பாக விளக்குகிறது.

ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த
நேசரெதிர் நிற்பதரிதாமே – தேசுவளர்
செங்கதிரவன் முன் நின்றாலும் செங்கதிரவன் கிரணம்
தங்கு மணல் நிற்பதரிதே தான்.

கோயிலிலே மூர்த்திக்கு ஏதேனும் நிவேதனம் இட்டால் அது அப்படியே அடியார்களுக்குப் போய்ச் சேராது. ஆனால் சற்பாத்திரம் ஆகிய சிவனடியார்களுக்கு ஏதேனும் சமர்ப்பித்தால் அது அவர்களுக்கு பயன்படுவதோடு அப்படியே இறைவனுக்கும் போய்ச் சேருகிறது. தவத்தின் மிக்கார் சிவ நாட்டம் உடையவர்கள் மகிழ்ச்சியோடு உண்ணும் உணவு மூவுலகும் உண்டு நிறைந்தது போலாகும். நடமாடும் கோயிலாகத் திரிகின்ற சிவனடியார்களுக்குச் செய்யும் ஈகையும் சிறந்த கடவுள் வழிபாடே எனத் தவயோகி திருமூலர் தனது பாடலில் வலியுறுத்துகின்றார்.

படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கது ஆமே

அடியவர்களாகிய நாம் அனைவரும் இறைவனுக்கு மீளா அடிமைகள். சுந்தரமூர்த்தி சுவாமிகளை இறைவன் திருமணப்பந்தலிலே அடிமை ஓலை காட்டியே ஆட்கொண்டார். அன்போடும் உரிமையோடும் தனது துன்பத்தை இறைவனிடம் முறையிடும் பொழுது சுந்தரர் தன்னை "மீளா அடிமை" என்றே குறிப்பிடுகின்றார். சிவத்தினுடைய பேரின்பமாகிய தாளை ஆன்மாவாகிய தலை சேருதலே தாடலை முத்தி எனத் திருவருட்பயன் கூறுகிறது. முத்திநிலையிலும் ஆன்மா இறைவனுக்கு அடிமை என்பதே சைவசித்தாந்தக் கோட்பாடாகும்.

அம்மையும் அப்பனும் தாயாகவும் தந்தையாகவும் நின்று அடியவர்களுக்கு அருள் புரிகின்றார்கள் என்பதை "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்று மணிவாசகரும் "எந்தாயுமெனக் கருள் தந்தையு நீ" என்று அருணகிரிநாதரும் தங்கள் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். திருமூல நாயனாரும் சிவபெருமானுக்கு தான் ஆட்பட்ட தன்மையைத் திருமந்திரத்தில் பாடியுள்ளார். என் பிறப்புக்கள் அனைத்திலும் எனக்குத் தாயானவளும் தந்தையானவரும் சிவபெருமானுக்குத் தாம் அடிமை என்று கொடுத்துவிட்டார்கள். இந்த அடிமைப் பத்திரம் பிறக்கும் பொழுதே எழுதப்பட்ட சாசனமாகும். இந்த அடிமைப் பத்திரத்தை எழுதியது யார்? அதில் சாட்சிக் கையெழுத்திட்டது யார்? என்றெல்லாம் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

உலகங்களையும் உயிர்களையும் படைத்த பிரமன் தொடக்கத்திலேயே நான் சிவனுக்கு அடிமை என்று ஆவணம் எழுதிவிட்டான். இந்த உலகங்களைப் பரிபாலித்து வருகின்ற காத்தல் கடவுளான திருமால் சாட்சிக்கு கையெழுத்து இட்டு விட்டார். பிறப்பின் பயன் இறைவனுக்கு அடிமை செய்வதே என்பதைத் திருமூலர் வலியுறுத்துகின்றனார்.

**என் தாயோ டென்னப்பன் ஏழேழ் பிறவியும்**
**அன்றே சிவனுக்கெழுதிய ஆவணம்**
**ஒன்றாய் உலகம் படைத்தான் எழுதினான்**
**நின்றான் முகில் வண்ணன் நேரெழுத்தாமே**

சிவனடியார்கள் ருசிக்காக உணவு உண்பதில்லை. உயிர் உடலில் தங்கி இருப்பதற்காக உணவினை உண்பர். பசித்தால் புசிப்பவர்கள் சிவனடியார்கள். நல்ல விவசாயி தனது விளைநிலத்தைத் தெய்வமாகக் கருதுகின்றான். புனிதமாகவே பாதுகாக்கின்றான். நிலத்தைப் போல உடம்பைக் கருதும் அடியார்களும் அதனைப் போற்றிப் பாதுகாப்பார்கள். இவர்களுக்கு உடம்பு ஆலயமாக உண்ணும் உணவு அமிர்தமாகிறது.

சிவன் உடம்பினுள் உயிர்க்குயிராய் விளங்குதல் கண்டு அடியார்கள் உச்சிப் பொழுதில் பிச்சை எடுத்து உண்டு அவனைக் காப்பர். தான்வேறு, அவன்வேறு என்று அவர்கள் எண்ணியதில்லை. பேதமற்ற ஞானம் வரப்பெற்றதால் ஏகாந்தமாய் இறைவனோடு ஒன்றி இருப்பர்.

**அச்சிவன் உள்நின்ற அருளை அறிந்தவர்**
**உச்சியம் போதாக உள் அமர் கோவிற்குப்**
**பிச்சை பிடித்து உண்டு, பேதம் அற நினைந்து**
**இச்சை விட்டு, ஏகாந்தத்து ஏறி இருப்பரே**

பசிப்பிணி என்பது மிகவும் கொடிய நோய். ஒருவருடைய பசியைப் போக்குவது தானதர்மங்களில் உயர்ந்த தர்மம். "உண்டி கொடுத்தோர் உயிர்

கொடுத்தோரே" என்ற பழமொழி இதனால்தான் ஏற்பட்டது. தானங்களில் உயர்ந்த தானம் அன்னதானம் என்பதை

"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்"

எனப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது. பசி ஏற்பட்டு விட்டால் பெருமை, குடும்பச் சிறப்பு, கல்வி, அழகு, உண்மை உணர்வு, ஈகை, நோன்பு, உயர்வு, தொழில் முயற்சி, மங்கையர்மேல் ஆசை கொள்ளுதல் ஆகிய பத்தும் பறந்து போய்விடும் என ஔவையாரின் மூதுரைப் பாடல் குறிப்பிடுகிறது.

தீயை ஒத்த பசியையும், ஆசையையும், கோபத்தையும், சிவனடியார் குற்றமாய் கருதுவதால் அவற்றில் ஒரு போதும் அவர்களுடைய மனம் பொருந்துவதில்லை. உடம்பும் உடமைகளும் இறைவனால் தமக்கு கொடுக்கப்பெற்ற இரவல் என்பதை மறந்து தம்மை மதித்து மனம் பொங்கிச் செருக்குறுவதில்லை. இதனால் சிவன் அடியார்கள் உடல் இன்பத்தை நாடுவதில்லை. சிவனின் திருவடியையே தஞ்சம் எனச் சேர்ந்து வாழ்வார்கள்.

அங்கார் பசியும் அவாவும் வெகுளியும்
தங்கார் சிவனடியார் சரீரத்திடைப்
பொங்கார் புவனத்தும் புண்ணிய லோகத்துந்
தங்கார் சிவனைத் தலைப்படுவாரே.

பிரார்த்தனை பெரும்பாலும் இறைவனோடு உள்மனதின் உரையாடலாகவே நடைபெறும். புறத்தே அழுகையாக வெளிப்படுவதும் உண்டு. துன்பத்தில் உழல்வோர் தங்கள் வேதனையை நீக்கிக் கொள்ள இறைவனிடம் அழுது அழுதே பிரார்த்திப்பர். ஒரு விதத்தில் பிரார்த்தனை என்பது ஆன்மாவின் அழுகை என்று கூடச் சொல்லலாம்.

**– இராமகிருஷ்ன விஜயம்– கார்த்திகை–2005**

# விந்து சக்தியே வீரிய சக்தி

உலகியலில் வாழும் மனிதன் படும் துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணம் ஆசையே ஆகும். ஆசையை வெல்பவன்பூரணமனிதன்ஆகிறான்என்றேபகவத்கீதையும் கூறுகிறது. இறை அநுபூதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஆசை தடையாக இருக்கும். இறைவனிடத்திலேகூட அன்பு தான் வைக்கவேண்டும். ஆசை வைக்கக் கூடாது. ஆசைகள் அதிகரிக்க துன்பம் அதிகமாகும். ஆசையை விட்டால் பேரானந்தம் கிடைக்கும். ஆசையாகிய விலங்கு தூள் தூளாகி முற்றிலும் பொடியாகிப்போனால் பேசா அநு பூதியாகிய மௌன நிலை தோன்றும்.

செயலற்ற நிலையாகிய மௌனம் இரு வகைப்படும். ஒன்று வாய், மற்றையது மனம். இரண்டும் ஒன்று பட்டுச் செயலாற்றினால் மட்டுமே பயன் உண்டு. வாய் மட்டும் பேசாதிருப்பது ஊமைத் தன்மையாகும். வாக்காலும் மனத்தாலும் தூய்மை உடையோராய்ப் பேச்சற்று செயலற்று இருப்பவரே தூயவராவார்கள். இரண்டும் ஒன்றுபட்டால் அருளில் அழுந்திய தூய உயிராகும். திருவருள் உடன்நின்று ஆர்க்கும் இத்தூய்மையினை யார் அறிவார்கள்.

வாக்கும் மனமும் இரண்டும் மவுனமாம்
வாக்கு மவுனத்து வந்தாலும் மூங்கையாம்
வாக்கும் மனமும் மவுனமாம் சுத்தரே
ஆக்கும் அச்சுத்தத்தை யார் அறிவார்களே.

29

சீவன் முத்தர்களாகிய ஞானிகள் ஆன்மாக்களை இரட்சிப்பதற்காகவே இவ் உலகில் பிறக்கின்றார்கள். இவர்கள் பிறக்கும் போதே சீவன் முத்தர்கள் ஆனபடியால் இவர்களுக்கு மும்மலங்களும் இல்லை. உடலில் இருப்பினும் இறைவனோடு ஒன்றியிருப்பர். அவர்களுடைய செயல்கள் இறை அருட்செயல்களாக இருக்கும். பழுத்த ஞானமும் யோக சித்தியும் அமையப்

பெற்ற ஞானியின் உயிர் பிரியப் பெற்றால்; தான் என்னும் உயிர்த் தன்மை, முனைப்பு விலக மௌன சமாதி நிலையில் இருந்து சிவத்தன்மையைப்பெறுவர். இவர்கள் மீண்டும் ஒரு உடலைச் சாராது, மீண்டும் பிறக்காத, குறையேதும் இல்லாத தவயோக சித்தியில் முழுமை பெற்றுச் சீவன் முத்தராகத் திகழ்வர்.

இத்தகைய சீவன் முத்தர்கள், ஞானிகளின் உடலைத் தீயில் எரிக்கக் கூடாது. ஞானிகளின் உடம்பு தீயில் எரிக்கப்படுமாயின் அப்படி எரிக்கப்படும் நாடுகளில் உள்ள மக்கள் பல துன்பங்களை எதிர்கொள்வர். நாட்டிலே மழை பெய்யாது. மக்கள் பஞ்சத்தால் துன்புறுவர் . வறுமை வாட்டும். ஞானிகளின் உடலை எரிக்காமல் முறைப்படி சமாதி வைத்துப் பூசித்தல் வேண்டும். சமாதியின் மேல் அரசமரக்கன்று அல்லது சிவலிங்கம் வைக்கப்படல் வேண்டும். சூக்கும சரீரத்தில் இருந்து ஞானிகள் தம்மை நாடிவரும் அடியார்களை ஆட்கொள்வார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல சமாதி ஆலயங்கள் உண்டு. செல்வச் சந்நிதி ஆலயத்தின் தல விருட்சமாகிய பூவரசமரம் ஐராவசு முனிவரின் சமாதியின் மேல் அமைந்துள்ளது. புனித இடமாகும் இந்தப் பூவரச மரநிழல் ஞானபண்டிதன் நடமாடித் திரிந்து அருள் விளையாட்டுக்களை நடாத்தும் இடம். இணுவில் கிராமத்திலே வாழ்ந்த மாபெரும்சித்தர் சந்நியாசியாரின் சமாதியிலே அமைந்திருப்பதே மஞ்சத்தடி முருகன் ஆலயம் ஆகும். இவரே கந்தசுவாமி கோயிலில் உள்ள உலகப் பெரு மஞ்சத்தை உருவாக்கிய மூலவராவார். நீராவியடியில் கடையிற் சுவாமிகளின் சமாதியில் அமைந்த சிவன் ஆலயம் காணப்படுகிறது. சில ஆலயங்களிலே ஞானிகளின் சமாதி வைக்கப்பட்டுள்ளது. கோண்டாவில் கிழக்குச் சந்திப் பிள்ளையார் ஆலயத்திலே குடையிற்சுவாமிகளின் சமாதி அமைக்கப்பட்டுள்ளது. ஆனந்த சடாட்சரகுழு சரவணைச் சுவாமிகளின் சமாதி குப்பிழான் வடக்கு சிவகாமி அம்பாள் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

பெருந்தவ யோகிகளுக்குப் பிறவி இல்லை. பழுதுபடாத பழுத்த ஞானமும் யோக சித்தியும் அமையப்பெற்ற ஞானியின் உயிர் பிரியப் பெற்றால், தான் என்னும் உயிர்த்தன்மை முனைப்பு விலக சமாதி நிலையிலே இருந்து சிவத்தன்மை பெறுவர். மற்றுமொரு உடலைச் சாராது, மீண்டும் பிறவி எடுக்காத குறையேதும் இல்லாத தவயோக சித்தியில் முழுமையப்பெற்றுச் சீவன் முத்தராவர். மீண்டும் பிறவி உணர்வடையார்.

ஊனம் இல் ஞானி நல்யோகி உடல் விட்டால்
தான் அற மோனச் சமாதி யுள் தங்கியே
தான் அவனாகும் பரகாயம் சாராதே
ஊனமில் முத்தராய், மீளார் உணர்வுற்றே

இயற்கைச் சக்திகள் இறை ஆணைக்குக் கட்டுப்பட்டே நடக்கின்றன. இயற்கை நமக்குத் தந்த இணையற்ற செல்வங்களை மனிதர்களில் சிலர் அழிக்கிறார்கள். இயற்கையின் சமநிலையைக் கெடுக்கிறார்கள். மனிதனின் நலமான வாழ்விற்கு உதவுகின்ற இயற்கைச் சக்திகளை இந்துக்கள்

தெய்வமாகவே மதித்தார்கள் . இறைவனின் அம்சமாக இருக்கும் இயற்கை சீற்றம் கொண்டால் மக்களால் தாங்கமுடியாது. நமது முன்னோர்கள் ஆலயச் சூழலில் தலவிருட்சங்களாகப் பயன்தரும் பல மரங்களை நட்டு வளர்த்தார்கள். தல விருட்சங்களைத் தெய்வங்கள் வீற்றிருக்கும் இடமாகப் பேணிப் பாதுகாத்தார்கள். இன்று தலவிருட்சங்களாக இருந்த தெய்வீக மரங்களை அழித்துக் கல்யாண மண்டபங்களைக் கட்டுகிறார்கள். தெய்வீக மணம் கமழும் தல விருட்சங்களில் உள்ள ஒரு கொப்பு முறிந்தால் முழு மரத்தையே தறிக்கிறார்கள். மரம் வளர்த்து இயற்கையைப் பேணிய சமுதாயம் இன்று மரத்தை அழித்து இயற்கையின் புனிதத்தைக்கெடுப்பதோடு, இறைவனின் சாபத்திற்கும் உள்ளாகிறது. இறை சக்தியாக இருக்கும் இயற்கை சீற்றம் கொண்டால் மனிதன் தாங்கமாட்டான். கடல் கொந்தளிப்பாகிய சுனாமி ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரினைப் பலியெடுத்த வரலாற்றை நாம் கண்ணால் கண்டுள்ளோம். நிஷா என்று அழைக்கப்பட்ட புயலும் வெள்ளமும் ஏற்பட்டுப் பல நூற்றாண்டு காலமாக ஆலயச் சூழலிலே இருந்த பல தல விருட்சங்களை வேரோடு சாய்த்த நிகழ்வினையும் பார்த்திருக்கின்றோம். நிஷாப் புயலைத் தொடர்ந்து நமது சமுதாயம் பட்ட துன்பங்கள் அனுபவிக்கும் துயரங்கள் வார்த்தைகளால் விளக்க முடியாதவை. அடிப்படை அறவாழ்வில் இருந்து நமது சமுதாயம் நெறி பிசகியதன் விளைவையே நாம் அனுபவிக்கின்றோம்.

இதே போலத்தான் பக்தர்கள் சித்தர்கள், ஞானிகள், யோகிகள் என நம்மிடம் வாழ்ந்த தவசீலர்களை மதியாமல் அவர்களைப் பேணாமல் பஞ்சமா பாதகம் ஐந்தும் செய்பவர்கள், வேடதாரிகள், புகழ் விரும்பிகள் ஆகியோர் காட்டும் பாதையினை நம்மில் பலரும் பின்பற்றுகிறோம். அறவாழ்வு வாழ்பவர்களை ஒதுக்கிவிட்டு அசுரகுணம் படைத்தவர்களை ஆதரிக்கின்றோம். ஞானிகள் யோகிகள் உடலைவிட்ட பின்பு செய்ய வேண்டிய சடங்குகளைப் பற்றிச் சமாதிக்கிரியை என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளது. சிவஞானியின் உடலை எரிக்காமல் சமாதி வைப்பது புண்ணியமான காரியம் ஆகும். சாதாரண மனிதர்களின் உயிர் உடலை விட்டுப் பிரிந்தால் உடலை அக்கினியில் தகிப்பது போல ; ஞானிகளின் உடலை அக்கினியில் சுடக்கூடாது. நடமாடும் கோயிலாகத் திரிந்த அவர்களின் உடலினைச் சமாதி வைத்துக் கோயிலாகப் பேண வேண்டும். பந்த பாசங்கள் என்ற உலகியல் சார்ந்த எண்ணங்கள் எதுவும் இல்லாத மேலான ஞானியரின் பூதவுடலை நெருப்பில் இட்டால் அது பரம்பொருளின் கோயிலுக்குத் தீ வைத்ததைப் போன்ற பாவச் செயலாகும். ஞானிகளின் உடலை எரியூட்டியவர்களின் நாட்டில் மழை பெய்யாது. மக்கள் பஞ்சத்தால் துன்புறுவர், வறுமை வாட்டும், நாட்டை ஆளும் அரசர்கள், தலைவர்கள் நாடிழந்து பதவியிழந்து துன்புறுவர்.

**எண்ணிலா ஞானி உடல் எரிதாவிடில்**
**அண்ணல் தம் கோயில் அழல் இட்டதாங்கொக்கும்**
**மண்ணில் மழைவிழா வையகம் பஞ்சமாம்**
**எண்ணருமன்னர் இழப்பார் அரசே**

காம இச்சையில் ஈடுபட்டுச் சிற்றின்பத்திலே மூழ்கிக் கிடப்பவர்களின் உடம்பு அழியும். உடம்பு கெட்டு,நோய்க்கு இடமாகும். விந்து வீணாகாது காப்பது விந்து சயம் எனப்படும். விந்து சக்தியை வீணாகாமல் பாதுகாத்தால் மனிதரின் ஆயுள் கூடும். பேரின்ப வீடு கிடைக்கும். விந்து இழந்தால் வாழ்நாளும் உடலும் வீணாகிப் போய்விடும்.

விந்து வீணே வெளிப்படாது காக்கத் தெரியாதவர்கள் வீணாக அழியும் விந்துவின் அளவை அறியமாட்டார்கள். வீணே கழியும் விந்தை வீணாக்காது தன்னுள் காத்து வைக்கும் தன்மையையும் இவர்கள் அறியமாட்டார்கள். இப்படி விந்து வீணாவதால் உடல் சோர்ந்து அழிகின்றவர்கள் தங்கள் சோர்வுக்கும் அழிவுக்குமான காரணம் என்ன என்பதை அறியாமல் விந்து வீணாவதைத் தடுத்து தங்களைக் காத்துக்கொள்ளவும் தெரியாதிருக்கின்றனர்.

அழிகின்ற விந்து அளவை அறியார்
கழிகின்ற தன்னை உள் காக்கலும் தேரார்
அழிகின்ற காயத்து அழிந்து அயர்வுற்றோர்
அழிகின்ற தன்மை அறிந்தொழியாரே

தாயின் கருவிலே குழந்தை உருவாகும் போதே குழந்தையின் தலைவிதி தீர்மானிக்கப்படுகின்றது. உடல் வளர்ச்சி மாத்திரமல்ல அறிவு வளர்ச்சியும் அங்கேயே உண்டாகிறது. சிசுவைத் தன் கர்ப்பத்திலே தாங்கியிருக்கும் தாயின் செயற்பாடுகள், எண்ணங்கள் விருப்பங்கள் ஆகிய யாவும் குழந்தையின் உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆணும் பெண்ணும் சற்புத்திரர்களைப் பெறுவதற்காக கூட வேண்டிய காலம் பற்றியும் திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. மாதவிலக்கான முதல் ஆறு நாளும் மாதவிலக்கிற்கு முன்னுள்ள ஆறு நாளும் விலக்கப்படல் வேண்டும் என்றே திருமந்திரம் கூறுகிறது. இன்றைய மகப்பேற்று மருத்துவ விஞ்ஞானம் கூறும் கருத்துக்களில் பல திருமந்திரத்திலே காணப்படுகிறது.

விவசாயம் செய்பவனுக்கு விதை மிகவும் அவசியம் . நல்ல விதையை நிலத்தில் விதைத்தால் தான் பயிர் செழித்து வளரும். விதை நெல்லைக் குத்திச் சோறாக்கி உண்பவன் விவசாயம் செய்வதன் பயனை அறியாதவன். வித்தை வறுத்துத் தின்பவனும் விதையின் பயனை அறியாதவனே ஆவான். பக்குவமானவன் விதையைக் குத்தி உண்ணாமல் உடல் முழுவதும் அதை விதைத்து விளைவின் பயனை அடைந்தவன் ஆவான்.

வித்துக்குற்று உண்பான் விளைவு அறியாதவன்
வித்துக்குற்று உண்ணாமல் வித்துச்சுட்டு உண்பவன்
வித்துக்குற்று உண்பானில் வேறு அலன் ஈற்றவன்
வித்துக்குற்று உண்ணாமல் வித்து வித்தான் அன்றே

# சிவயோகம்

**சி**வனுடைய அஷ்ட மூர்த்த வடிவங்களாக நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டும் கூறப்படுகின்றன. இதனை

இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாயட்ட மூர்த்தியாகி

என அப்பர் பெருமானின் தேவாரம் கூறுகிறது. அண்டமாய், ஆதியாய், ஐம்பூதப் பிண்டமாய், விண் முழுதும் மண் முழுதும் ஆன இயற்கைப் பொருள்களின் வடிவாகச் சிவனை நாயன்மார்கள் அனைவரும் கண்டுகாட்டி உள்ளனர்.

"காலை முளைத்த கதிரே போற்றி" என அப்பர் பெருமானும்,

"புவனம் நீர் தீக்காற்று இயமானன்
வானம் இரு சுடர் கடவுளானே"

என மாணிக்கவாசகரும் தமது பாடல்களில் கூறியுள்ளார்கள். இருக்கு வேதம் குறிப்பிடும் 33 தெய்வங்களில் சூரியன் முக்கிய இடம் பெறுகிறார். மகாபுராணங்களில் பிரம்ம வைவர்த்த புராணம் சூரியனையே முழுமுதற் கடவுளாகக் கூறுகிறது. சிவபெருமானின் எட்டு மூர்த்தங்களில் சூரியனும் ஒன்று என்றும், சூரியன் சிவனின் வலக்கண் என்றும் புராணங்கள் கூறுகின்றன. சிவன் சூரியனாக விளங்கும் போது சிவசூரியன் என்ற நாமத்தைப் பெறுகின்றார். ஆலயங்களில் நவக்கிரக நாயகனாகச் சூரியன் வழிபடப்படுகின்றார். சூரியன் கண்ணில் ஏற்படும் நோய்களை நீக்க வல்லவன் என மயூரகவி தமது சூரிய சதகத்தில் குறிப்பிடுகின்றார். காலையில் தவறாது சூரிய நமஸ்காரம் செய்பவர்கள் கண்ணில் பார்வைக்குறைவு ஏற்படாது என ஆயுர்வேத வைத்திய நூல்கள் கூறுகின்றன.

30

உடலின் ஒவ்வொரு உறுப்புக்களையும் சூரிய தேவன் காத்தருளவேண்டும் என்று சூரிய சதகம் என்ற நூலில் யாக்ஞவல்லிய மகரிஷி குறிப்பிடுகின்றார்.

மந்திரங்களுக்கெல்லாம் தாய் போல் விளங்கும் காயத்திரிக்கு தெய்வம் ஸவிதாவாகிய சூரியன். காயத்திரி மந்திரத்தை வேதவித்து என்றும் கூறுவர். "யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக" என்ற மந்திரத்தைச் சைவர்களும் வைணவர்களும் வேறுபாடின்றி ஏற்றுக் கொள்கின்றனர்.

சிவபெருமான் என்னும் இயற்கைப் பேரொளியில் நின்றும் பகலவன் ஒளியினைப் பெற்று அண்டசராசரம் அனைத்திற்கும் ஒளியினை ஊட்டுகின்றான். அண்டாதித்தன் ஆகிய சூரிய பகவான் உலக ஞானங்களுக்கு ஊற்றாக இருக்கிறான். உலகம் இயங்குதற் பொருட்டு உலகிற்கு உயிரளிக்கும் சக்தியாகவும் விளங்குகிறான். தானே தோன்றிய சிவமாய்த் திகழ்கிறான். உலகிற்கு ஒளியூட்டும் பேரொளிப் பிழம்பாகவும் சிவசூரியன் காட்சி தருகின்றான். அவனே திருவருட் பேரொளியாகவும் விளங்குவான்.

தானேயுலகுக்குத் தத்துவனாய் நிற்குந்
தானேயுலகுக்குத் தையலுமாய் நிற்குந்
தானேயுலகுக்குச் சம்புவமாய் நிற்குந்
தானேயுலகுக்குத் தண் சுடராகுமே

உடம்பில் மூலாதாரம் (மூல உறுப்பு) சுவாதிட்டானம் (தொப்பூழ்), மணிபூரகம் (வயிறு), அநாகதம் (நெஞ்சு), விசுத்தி (மிடறு), ஆஞ்ஞை (புருவநடு) என ஆறு ஆதாரங்கள் உண்டு. மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை ஞானிகள் தியான நிஷ்டையில் இருந்து ஒவ்வொரு ஆதாரத்தின் ஊடாக மேலே எழுப்புவார்கள். இது யோகசக்தி எனப்படும். மூலாதாரத்தில் இருந்து வெளிப்பட்டு உடம்பாகிய உலகைச்சுற்றி வலம் வந்து பின்னர் மீண்டும் அடங்கிக் கிடக்கின்ற இடத்தை அறிந்தவர்கள் யாரும் இல்லை. மூலத்திலிருந்து வெளிப்பட்ட பிண்டாதித்தன் போய்ச் சேரும்இடம் அறிய முடிந்தவர்களிடம் என் உள்ளம் அன்பு கொண்டு உருகும். "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" என்ற நிலை ஏற்படும். இறைவனோடு இணைந்து இன்புறும் பேரின்ப நிலை எளிதாகக் கிடைத்துவிடும்.

உருவிப் புறப்பட்டு உலகை வலம் வந்து
சொருகிக் கிடக்கும் துறை அறிவாரில்லை
சொருகிக் கிடக்கும் துறை அறிவாளர்க்கு
உருகிக் கிடக்கும் என் உள்ளன்புதானே

நவ கோள்களின் இயக்கத்தினால் இவ் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரஞ்சத்தில் பிறந்து வாழும் ஒவ்வொரு மனிதனும் நவகோள்களின் இயக்கத்திற்கு உட்படுகின்றார்கள். சனி மாற்றம், வியாழ மாற்றம் ஏற்படும் பொழுது சிலர் தங்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுமெனப் பயப்படுகிறார்கள்.

நவக்கிரகங்களுக்குப் பிரீதி செய்யும் பல வழிபாடுகளைச் செய்கிறார்கள். தெய்வ நம்பிக்கையில் உறுதிப்பாடு உடையவர்கள் இவை எதற்கும் அஞ்சுவதில்லை. "நாளும் கோளும் நம்பனடியார்க்கு நலிவு செய்யாது" என்ற உறுதிப்பாட்டுடன் செயற்படுவார்கள்.

"நாளென் செயும் வினைதான் என் செயும்
எனை நாடிவந்த கோளென் செயும்
கொடுங் கூற்றென் செயும்

என்ற பக்தி வைராக்கியத்துடன் தங்கள் கடமைகளைச் செய்வார்கள். சூரியன் முதலாய ஒன்பது கோள்களையும் சார்ந்து இவ் உலகம் சுழன்று கொண்டிருக்கிறது. இந்த ஒன்பது கோள்களும் இயங்குவது இறைவன் அருளாணையின் படியே என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. இந்த அறியாமை காரணமாக அவர்கள் அந்த ஒன்பது கிரகங்களையும் விரும்பிச் சென்று வழிபட்டு அதன் காரணமாகப் பரம்பொருளின் கருணையை இழந்தவர் ஆயினர். நவகோள்களை நாடிச் சென்றதால் எந்தப் பயனும் அடையாதவரும் ஆயினர். இதனால் அவர்கள் இடர்ப்பட்டுத் துன்புற்று நிற்பவராயினர். உடல் நோய், உளநோய், உயிர்நோய் (பிறவி நோய்) ஆகியவற்றை நீக்க வல்ல சர்வ வல்லமையும் உடைய முழுமுதற்பொருளாகிய சிவனை வணங்காமல் சிறு தெய்வங்களையும், ஏவல் செய்யும் எடு பிடிகளையும் வணங்குவதால் துன்பப்படுகின்றோம் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

ஒன்பதில் மேவி உலகம் வலம் வரும்
ஒன்பதும் ஈசன் இயல் அறிவாரில்லை
முன்பு அதின் மேவி முதல்வன் அருள் இலார்
இன்பம் இலார் இருள் சூழ நின்றாரே

உலகில் நாம் காணும் அனுபவிக்கும் பொருள்கள் யாவும் நிலையில்லாதவை. நிலையில்லாத பொருள்களிடத்திலே பற்று வையாதே; நிலையான பரம்பொருளிடத்திலே பற்றினைவை, அதுவே நிலையான இன்பத்தைத் தரும் என்றே கிருஷ்ண பரமாத்மா கீதையில் கூறுகிறார்.

இறைவன் பொய்யோடு ஒரு சிறிதும் பொருந்தாத மெய்ப்பொருளானவன். சிவப்பரம் பொருளே உலகுக் கெல்லாம் தலைவனாகிய எம் தந்தை. உள்ளத்துள்ளேயும் வெளியேயும் அடர்ந்து படர்ந்திருக்கின்ற இருளைப் போக்குகின்ற முச்சுடர்களாகக் காட்சி தருகின்ற சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்றும் அவனே. திருக்கைலாயத்திலே சுந்தரநாதன் என்ற இயற்பெயருடன் இருந்த தவயோகி திருமூலநாயனாரைச் சிவனே நந்தியெம்பெருமானாக குருவாக வந்து ஆட்கொண்டருளினார். செய்த வினையால் வரும்துன்ப இருளைப் போக்கி அருளுபவன் நந்தியெம்பெருமான். தன்னுள் இருக்கும் அறியாமையாகிய ஆணவ இருள் விலகியோட என்னுள்ளத்தினுள்ளே ஞானாதித்தனாக சிவன் எழுந்தருளியுள்ளான்.

பொய்யிலன் மெய்யன் புவனாபதி எந்தை
மை இருள் நீக்கும் மதி அங்கி ஞாயிறு
செய் இருள் நீக்கும் திருவுடை நந்தி என்
கை இருள் நீங்கக் கலந்து எழுந்தானே

சிவப்பரம் பொருள் வியாபித்து எழுந்தருளியிருக்கும் இடங்களாகச் சுடரும் தீ, ஞாயிறு, திங்கள் , நிலம், புனல், அனல், மாருதமாகிய காற்று, வானம், ஆகிய எட்டும் காணப்படுகின்றன. மெய், வாய், கண், மூக்கு செவி ஆகிய ஐம்புலன்களின் செயற்பாட்டிற்கு உடம்பு நிலைக்களனாகும். சைவர்களின் பெரும் பதியாகிய சிவன் ஐம்புலன்களிலும் ஆறு ஆதாரங்களையும் கலந்து நின்று எல்லோரையும் இயக்குகின்றான். சிவாதித்தன் ஆகிய சிவப்பரம்பொருளின் துணை இல்லாது எப்பொருளும் இயங்காது. “அவனின்றி அணுவும் அசையாது என்ற முதுமொழி இதனையே விளக்குகிறது.

தெய்வச் சுடர் அங்கி ஞாயிறும் திங்களும்
வையம் புனல் அனல் மாருதம் வானகம்
சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயிர்
ஐவர்க்கு இடம் இடை ஆறங்கமாமே

அண்டாதித்தன், பிண்டாதித்தன் மனவாதித்தன், ஞானவாதித்தன், சிவாதித்தன் ஆகிய ஐந்து நிலைகளில் சிவப்பரம்பொருள் வியாபித்திருந்து ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் சிறப்பினை மேற்கூறிய பாடல்கள் விளக்குகிறது. இப்பாடல்களில் சிவயோகமே கூறப்பட்டுள்ளது. ஆன்மா இறைவனுடன் இணைதலே யோகம் எனப்படும். சிவன் திருவடியிலே ஆன்மாவை இணைப்பதற்கான தொடர்பு இங்கே கூறப்பட்டுள்ளது. ஆன்மாவிடம் ஞானம் உதயமாகி விட்டால் வினைகள் பொசுங்கிவிடும். சூரியன் கிளம்புவதற்கு முன்பு அதன் நெருப்பாகிய ஒளி கிளம்புவது போல ஞானம் உதித்து விடும். இது படிப்படியாகப் பரிணாமம் அடைந்து சிவயோகத்தில் ஞானபாகமாகிய அகண்ட ஒளி சித்திக்கிறது. ஞானபாதம் முற்றினால் சிவனருள் அதில் தேங்கிக் கிடக்கும்.

அண்டத்தில் விளங்கும் சூரியன், உடம்பில் விளங்கும் சூரியன், மனமண்டலத்தில் விளங்கும் சூரியன், ஞான சூரியன், சிவசூரியன் எனச் சூரியன் முதலாய தெய்வங்கள் எல்லாம் சிவனை வழிபட்டே ஒளியைப் பெற்றன. கண்ணாற் காணும் தெய்வமாகிய சூரியன் எவ்வாறு உலகம் முழுவதற்கும் ஒளியை வழங்குகின்றதோ அவ்வாறே அண்ட லோகத்தில் விளங்கும் ஆத்ம சூரியன் சிவமாகவும், சக்தியாகவும் உலகனைத்திற்கும் நன்மையைச் செய்கிறான். காமசெயம் பெற்றவர்கள் பேரண்டத்தில் விளங்கும் ஒளியை அறியும் தன்மையைப் பெறுவார்கள். சிவ ஒளிக்கு மாறுபட்ட பாச இருளும் அதனால் விளையும் அஞ்ஞானமும் சிவம் பிரகாசித்ததும் ஆன்மாவை விட்டு நீங்கிவிடும். அஞ்ஞானத்தின் ஆற்றல் முற்றாக அழிந்து விடும்.

# அநுபூதி ஞானம்

31

அறிவு வேறு, அனுபவம் வேறு என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். இறைவன் உணரப்படும் பொருளேஒழிய; அறியப்படும் பொருள் அல்லஎன்பது ஞானிகள் கண்ட முடிபாகும். நமது பூதவுடல் பஞ்ச பூதங்களால் ஆனது. இப்பிரபஞ்சமும் பஞ்சபூதங்களின் சேர்க்கையாகவே உள்ளது. பஞ்சபூதங்களில் எல்லாம் கலந்து நின்று அவற்றை இயக்குபவன் பரம் பொருளாகிய இறைவன். இதனை "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி" என மணிவாசகர் தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்தின் திருச்சதகப் பாடலில் குறிப்பிடுகின்றார். வேத ஆகம நூல்களைக் கற்றுப் பண்டிதனாகி விடலாம். ஆனால் அந்த நூல்கள் எல்லாம் உணர்த்தும் பரம்பொருளாகிய இறைவனை உணர்ந்து அறிந்து கொள்கின்ற அநுபூதி ஞானம் இல்லாவிட்டால் எல்லாம் வெறும் ஆரவாரமாகவே முடிந்து விடும்.

வேத ஆகம நூல்களை நிரம்பக் கற்ற பலர் பொருள் அனுபவம் இன்றிப் புலம்பிக் கொண்டு வீதி வீதியாகத் திரிகின்றார்கள். தமக்குக் கிடைத்த பட்டம் பதவிகள் நிரந்தரமான சொத்துக்கள் என நினைத்துக் கொண்டு மயங்கி நிற்கின்றார்கள். அரச செல்வாக்குப் பெற்றவர்கள் பதவி மோகத்தில் மயங்கி ஆணவச் செருக்குடன் தங்கள் மேதா விலாசத்தை வெளிக்காட்டிக் கொண்டு அலைந்து திரிகிறார்கள். முதிர்ந்த அநுபூதிமான்களின் உண்மை அறிவானது ஒரு குடம் பால்போலச் சிறிய அளவினதாக இருந்தாலும் உலகிற்குப் பயனைத் தரும். அகத்திலே இறையருள் இல்லாதவர்களின் வாய் வேதாந்தமானது பால் வற்றிப் போன வறட்டுப் பசுக்கள் போலவே காணப்படும்.

கற்ற பசுக்கள் கதறித் திரியினும்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினும்

முற்ற பசுக்க ளொருகுடம் பால்போது
மற்றைப் பசுக்கள் வறள் பசுதானே

ஆன்மாக்கள் தானாக எதையும் அறியும் தன்மையில்லாதவை. பொறிகளின் துணையினாலேயே அறிவைப் பெறுகின்றன. பொறிகளின் துணையில்லாமல் அறிவைப் பெறும் ஆன்மாவை அறிவான பொருள் என்று கூறுவது பொருந்தாது என்பதைப்

பொறியின்றி ஒன்றும் உணராத புந்திக்கு
அறிவென்ற பேர் நன்றற

எனத் திருவருட்பயன் விளக்குகிறது. உடம்போடு பொருந்தியிருக்கும் ஐம்பொறிகளையும் ஐந்து சிங்கங்களாகத் திருமூலர் உருவகிக்கின்றார். இந்த ஐந்து சிங்கங்களும் தமது விருப்பத்திற்கு ஏற்ப வெளியிலே போய் இரை தின்றுவிட்டுப் பின் தம் இருப்பிடம் வந்து சேர்ந்து விடும். இந்த ஐந்து சிங்கங்களின் பற்களையும் நகங்களையும் அறுத்து எறிந்து விட்டால் அவை தனது பலத்தை இழந்துவிடும். அதேபோல மனிதனின் ஆசை வயப்படுத்தும் பொறிகளை அடக்கிவிட்டால் அவை இறையருளைப் பெற்றுவிடும்.

அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும் போய் மேய்ந்து தம் அஞ்சு அகமே புகும்
அஞ்சின் உகிரும் எயிரும் அறுத்திட்டால்
எஞ்சாதிறைவனை எய்தலுமாமே

புலனடக்கம் என்பது அவற்றைத் தீயவழியிற் செலுத்தாது தூய வழியிற் செலுத்துதலே ஆகும். இவ் உண்மை திருவருள் வயப்பட்டவர்களுக்கே தெரியவரும். ஏனையோர் பொறிபுலன்களைச் செயலறச் செய்தலே அடக்குதல் என்பர். இறை சிந்தனையோடு வாழ்பவர்களுக்கு ஐந்து புலன்களும் ஞானத்தை உணர்த்தும் கருவிகளாகச் செயற்படுகின்றன. பிரபஞ்ச வாழ்வில் அழுந்தி வாழ்பவர்களுக்கு இந்த ஐந்து புலன்களும் கள்ளப் புலன்களாகவே காணப்படுகின்றன.

அறிவற்ற மூடர்கள் புலன்களை அடக்குங்கள் என்று ஓயாது கூறுவார்கள். வானுலகத் தேவர்களாற் கூட ஐம்புலன்களையும் அடக்க முடியாது. ஐம்புலன்களையும் அடக்கிவிட்டால் உடம்பு உணர்வேதும் இல்லாத உணர்ச்சியற்ற மரக்கட்டை போலச் சடம் ஆகிவிடும். ஐம்புலன்களையும் சிவ சிந்தையில் செலுத்தியே ஞானத்தைப் பெற வேண்டும். அறிவற்ற கல்மரம் போலச் சடமாகி விடுவதே அசேதனமாகும், புலன்களை அடக்காமல் அறிவு வழியிற் செலுத்தி இறையருளைப் பெறுதல் வேண்டும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

அஞ்சுமடக்கடக்கென்பர் அறிவிலார்
அஞ்சுமடக்கும் அமரரும் அங்கிலை

அஞ்சு மடக்கில் அசேதனமாமென்றிட்டு
அஞ்சு மடக்கா அறிவறிந்தேனே

மெய்ஞ்ஞானம் இல்லாத அறிவுக் குருடர் கண்பார்வை இல்லாதவர்களுக்கு கோலைத் தந்து வழிகாட்டிச் செல்வது போல வழிகாட்ட முற்படுவார்கள். இரண்டு குருடர்களும் தவறான பாதையிற் சென்று பழைய குழியிலே வீழ்ந்து கிடப்பார்கள். இதுபோலவே நல்ல ஞானம் இல்லாத குருமார்களிடம் கற்கும் சீடர்களும் அறியாமையாகிய குழியிலே வீழ்வார்கள். பழைய குழி என்பது பிறவியினைக் குறிக்கிறது. பிழையான குருவை வழிகாட்டியாகக் கொண்டால் பிறவிப் பிணி தொடருமே ஒழிய ஆன்மா சிவகதி அடைய முடியாது.

குருடர்க்கு கோல் காட்டிச் செல்லும் குருடர்
முரனும் பழங்குழி வீழ்வர்கள் முன்பின்
குருடரும் வீழ்வர்கள் முன்பின் அறவே
குருடரும் வீழ்வார் குருடரோடு ஆகியே

ஆன்மாக்களைப் பீடித்திருக்கும் அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைத் தருபவரே ஞான குரு ஆவார்.

சூரியனைக் கண்டு தாமரை மலர்வது போல நல்ல குருவின் அருட்பார்வை கிடைத்தால் ஆன்மாவில் ஞான மலர்ச்சி ஏற்படும் எனச் சங்கராச்சாரியார் பஜகோவிந்தத்தில் குறிப்பிடுகின்றார். பந்த பாசங்களை விட்டொழித்துத் தன்னைப் பரம்பொருள் சிந்தனையில் ஒன்றச் செய்து வாழ்பவர்களே உண்மையான ஞான குரு ஆவார்கள். மனமாசுகளைப் போக்கிக் கொண்டு அன்போடும் உள்ளத்துள் ஊறும் விருப்போடும் இறைவன் திருவடித் துணைகளை நாடிச்சிவமயமாக ஞானகுரு வாழ்ந்து கொண்டிருப்பார். தன்னை அடைந்தவர்களையும் அத்தன்மை அடையச் செய்யும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. இந்த நற்குணம், நல்லறிவு இல்லாமல் வீண்வாதம் செய்து சண்டை இடுபவர்கள் நல்ல சிவஞானம் உடைய குரு ஆகமாட்டார்கள்.

பாசத்தை நீக்கிப் பரனோடு தன்னையும்
நேசத்தை நாடிமலமற நீக்குவோர்
ஆசற்ற சற்குரு ஆவோரறிவற்றுப்
பூசற்கு இரங்குவோர் போதக் குருவன்றே

காவலுக்கு ஆளில்லை; கேட்பவர் எவருமில்லை என்று திருட்டுத்தனம் செய்யும் இயல்புடையவர்கள் மனிதரில் பலர் இருக்கிறார்கள். ஆனால் எல்லாவற்றையும் கண்காணித்துக் கொண்டு காவல் செய்கின்ற காப்பாளனாகிய இறைவன் இல்லாத இடம் உலகில் எதுவும் இல்லை. அவன் எங்கும் நிறைந்திருக்கிறான். எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டும் கண்காணித்துக் கொண்டும் இருக்கிறான். அவனே சிவப்பரம்பொருள். இந்தக் காவலனை உயிர்களின் காப்பாளனெனக் கண்டு அறிந்து கொண்டவர்கள் தீவினை நீங்கியவர்களாக அகத்திலும் புறத்திலும் தெய்வீக நினைப்பு

உள்ளவர்களாகத் திகழ்வார்கள். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனின் சர்வ வியாபகத்தை உணர்ந்தவர்கள் தம்முடைய வாழ்விலும் நெறி தவறிப் போகாது நிதானத்துடன் வாழ்வார்கள்.

கண்காணி இல்லென்று கள்ளம் பல செய்வார்
கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
கண்காணியாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந்தாரே

கிடைத்தற்கரிய பிறவியாகிய மானிடப் பிறவியைப் பெற்றிருந்தும் மனிதர்களில் பலர் பரம்பொருளாகிய இறைவனின் திருவடியைப்போற்றித் துதித்து வணங்காமல் வாழ்நாளை வீழ்நாளாக்குகிறார்கள். பெறுவதற்கு அருமையான மனிதப்பிறவியைப் பெற்றும் சிந்திக்கும் உணர்வின்றி விலங்குகளைப்போல வாழும் இந்த மனித மிருகங்கள் பிறவிப் பயனைப் பெற முடியாதவர்களாக மாறிவிட்டார்கள். பேரின்ப வாழ்வு பெறும் வாய்ப்பை இழந்து விட்டார்கள். இவர்கள் ஆறறிவு உயிரோடு பிறந்தும் மனித உணர்வற்றதால் பிராணிகள் எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரானடி பேணார்
பெறுதற்கரிய பிராணிகளெல்லாம்
பெறுதற்கரிய தோர் பேறிழந்தாரே

பக்தியின் உயர்வு நிலையில் நின்றவர்கள் பிரபத்தி நிலையை அடைந்தவர்கள் ஆடியும் பாடியும் அழுதும் தொழுதும் இறைவனை வணங்குவார்கள். "
"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத்தேடுவதும்

நின் அடியார் செய்கை பராபரமே"

என்பது தாயுமானவர் வாக்காகும். மானுட சரீரத்தை ஆலயமாக்கி யோக நிஷ்டையில் இருக்கும் ஞானிகள் குண்டலினி சக்தியை ஆறு ஆதாரங்களின் ஊடாக மேலெழுப்பி உச்சியிலே அமிர்தத்தைச் சுவைப்பர். இதனை உச்சியிலே பிச்சை எடுத்தல் எனச் சித்தர்களின் பரிபாசை கூறும்.

" மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி குதம்பாய்"

எனக் குதம்பைச் சித்தர் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். இவர் குறிப்பிடும் மாங்காய்ப் பால் தான் அமிர்தமாகும்.

விலங்குகள் மனிதர்கள், மேலான தேவர்கள், பறவைகள் எல்லாமே இறைவனிடம் அன்பு கொண்டு அவனை நினைக்காமல் இல்லை. அனால் மாதவம் செய்த ஞானிகள் சிவனருளான அமுதத்தை அள்ளிப் பருகிக் கொண்டே இருப்பார்கள். அவன் அருளில் திளைத்துக் கூத்தாடுவார்கள்.

பூமியில் பிறந்ததன் பயனை அடையப் பெற்று மகிழ்வார்கள். இவர்கள் சிவனின் திருவடியில் பொருந்துவதற்கேற்ற பெருந்தவமாம் நன்நெறியில் ஒழுகும் இயல்புடையவர்கள். பிறவிப் பயனைப் பெற்ற பேரருளாளர்களாக இவர்கள் திகழ்வார்கள்.

மிருகம் மனிதர் மிக்கோர் பறவை
ஒருவர் செய்த அன்பு வைத்து உன்னாதது இல்லை
பருகுவர் ஓடுவர் பார்ப்பயன் கொள்வர்
திருமரு மாதவம் சேர்ந்து உணர்ந்தாரே

மனித குலம் முழுவதும் ஒன்றுதான். இறைவனும் ஒன்றுதான். மனித குலத்திற்குள்ளே உயர்வு தாழ்வு கற்பிப்பது பேதமை. தெய்வங்கள் பல என்று நினைப்பதும் அறிவீனம். "உள்பொருள் ஒன்றே அறிஞர்கள் அதனைப் பல என்று பொய் உரைத்து விட்டனர். (ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி) என்பதை வேத வாக்கியமும் வெளிப்படுத்துகிறது. குலமும் ஒன்று இறைவனும் ஒருவன் தான் என்ற நினைப்புடன் நல்லதையே செய்பவர்கள் இறவாப் புகழுடன் இருப்பார்கள். இவர்களை நாடி இயமன் வரமாட்டான். வெட்கப் படாமல் துணிந்து செய்யக்கூடிய வழி வேறெதுவும் இல்லை. எனவே மனத்துள்ளே சிவனை நினைத்து அவனருளுணர்வோடு பொருந்தி தடுமாற்றம் இன்றி அவன் திருவடியை நினைத்து நற்கதி அடைய வேண்டும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே

காரைக்காலம்மையார் இறைவனிடம் இறவாத இன்ப அன்பு வேண்டினார். "இடையறா அன்பு உனக்கென் ஊடகத்தே நின்றுருகத்தந்தருள் எம் உடையானே" என மணிவாசகனார் இறைவனிடம் இரந்து வேண்டினார். முருகப் பெருமானிடம் வீரவாகு தேவர் "சால நின் அன்பையே வேண்டுவன் தமியேன்." என அன்புரிமையுடன் வேண்டுகின்றார். இறைவனோடு இணைந்திருக்கும் இன்பமே மேலான இன்பமாகும். அத்தகைய இன்பத்தைப் பெற்று மகிழுங்கள். இறைவன் திருவடி பணிந்து எல்லா உயிர்கள் மீதும் அன்பு செய்தால் மெய்ஞ்ஞானமாகிய சிவஞான சித்தி கிடைக்கும். பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்ற பிறவி நோயை நீக்க வேண்டும். இறைவனிடம் அன்பைச் செலுத்தித் தவத்தைச் செய்தால் இறைவனோடு இணைந்திருக்கும் பேரானந்தத்தினைப் பெறலாம்.

இன்புறுவீர் அறிந்தே எம் இறைவனை
அன்புறுவீர் தவம் செய்யு மெய்ஞ்ஞானத்துப்
பண்புறுவீர் பிறவித் தொழிலே நின்று
துன்புறு பாசத்துழைத்தொழிந்தீரே.

# அறிவுப் பெரு வெளியைத் திறக்கும் வழி

32

திருமந்திரத்தின் எட்டாந் தந்திரம் சுப்பிராகமத்தின் சாரமாக அமைந்துள்ளது. இத்தந்திரம் 43 உட்பிரிவுகளையும், 526 பாடல்களையும் தன் அகத்தே கொண்டுள்ளது. தைத்திரீய உபநிடதம் ஆன்மாவிற்கு உரிய பஞ்சகோசங்ககளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்பன அவையாகும். உடம்பாகிய மெய்ப்பையினுள்உயிர்கலந்துநிற்கின்றகாயப்பையாகிய உடம்பினுள் ஊன் முதலிய சரக்குகள் பல உள்ளன. இதனை மாயையின் காரியம் என்ற பொருளில் மாயப்பை என்றும், நிலையாமை உடையது என்னும் பொருளில் மாயப்பை என்றும் கூறுவர். இவ் உடம்பின் உள்ளே உள்ளம் முதலியவற்றைக் கருவியாகக் கொண்டு உய்த்துணரும் ஆருயிரும் உண்டு. இதனை மற்றுமோர் பை எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. காயப்பை, மாயப்பை, மற்றுமோர் பை ஆகிய சகலவற்றையும் மறைந்து நின்று இறைவன் இயக்குகின்றான். இவை அனைத்தையும் அந்தர்யாமியாக உள்நின்று இயக்குகின்ற கள்வனாகிய இறைவன் இக்கூட்டை விட்டுப் புறப்பட்டு விட்டால் இம் மாயப்பையாகிய உடல் மண்ணோடு மண்ணாகி அழிந்து விடும்.

ஞானசம்பந்தர் இறைவனை அன்புரிமையோடு உள்ளம் கவர் கள்வன் என்றே அழைக்கின்றார். அருணகிரியாரும் முருகமந்திரமாகிய கந்தரநுபூதியில் "செம்மான் மகளைத் திருடும் திருடன்" என்றே முருகனைக் குறிப்பிடுகின்றார். காயப்பை மாயப்பை மற்றுமோர் பை ஆகிய உடலோடு சேர்ந்திருக்கும் சகல பைகளையும் விட்டு இறைவன் நீங்கி விட்டால் உடல்வெறும் சடமாகிவிடும்.

காயப்பை யொன்று சரக்குப் பலவுள
மாயப்பை யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு
காயப்பைக்குள் நின்று கள்வன் புறப்பட்டால்
மாயப்பை மண்ணாய் மயங்கியவாறே

வாலிப வயதில் குமரப்பருவத்தில் சித்தத்தின் கிளர்ச்சியால் உடம்பில் காம உணர்ச்சி மிகுந்து காணப்படும். காம உணர்ச்சி மாதர்கள் பால் மயக்கத்தை உண்டு பண்ணும்.

"வேணில் வேள் மலர்க்கணைக்கும்
வெள்நகைச் செவ்வாய்க்குரிய
பானலார் கன்னியர்க்கும்
பதைத்துருகும் பாழ் நெஞ்சே"

எனத் திருவாசகம் காம உணர்ச்சியால் ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிடுகிறது. நமது உடல் மின்னல் போன்றது, நிலையில்லாதது என்பதை ஆன்ம பக்குவம் உள்ள ஞானிகள் உணர்ந்து கொள்வார்கள். இவர்கள் தமது பூத உடலைச் சுமையெனத் தாங்கித் திரிவார்கள். பக்குவ ஆன்மாக்களின் கல்லையொத்த உறுதியான எண்ணம் என்றும் சிவனையே சார்ந்து நிற்கும். இந்த உடலை இரவலாகத் தந்த இறைவனை அகத்தில் இருத்தினால் சரீர வாதனை நீங்கி விடும். சிவசிந்தனைதான் இவற்றை நீக்குவதற்கான வழியெனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

இலையா மிடையில் எழுகின்ற காமம்
முலைவாய நெஞ்சத்து மூழ்கும் உளத்துத்
தலையாய மின்னுடல் தாங்கித் திரியுஞ்
சிலையாய சித்தஞ் சிவ முன்னிடைக்கே

ஐம்பூதங்களில் முதலாவதாக விளங்கும் வானத்திற்குரிய பண்பு ஓசை ஒன்றே ஆகும். வளியாகிய காற்றுக்கு ஓசை ஊறு என்னும்இரண்டு பண்புகள் உள்ளன. தீயாகிய நெருப்பினிடத்து ஓசை,ஒளி, ஊறு என்னும் மூன்றும் காணப்படுகிறது. நீரினிடத்து ஓசை, ஊறு, ஒளி, சுவை,என்னும் நான்கும் உள்ளது. கன்னியாகிய நிலமகளிடத்து ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்தும் காணப்படுகிறது. இந்த ஐம்பூதங்களையும் பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் பிள்ளைகள் என்றே திருமூலர் குறிப்பிடுகின்றார். இத்தகைய பிள்ளைகள் சிவத்திற்கும் சக்திக்கும் முதலில் இருக்கவில்லை. உலகைப் படைப்பதற்காகச் சிவன் பரிக்கிரக சக்தியாகிய மாயையையுடன் கூடினார். மாயையாகிய கன்னியைச் சிவன் காதலித்துச் செயற்பட வைத்ததால் பஞ்சபூதங்களும் தோற்றம் பெற்றன என்பதைப் பின்வரும் திருமந்திரம் விளக்குகிறது.

முன்னிக்கொரு மகன் மூர்த்திக்கிருவர்
வன்னிக்கு மூவர் வதுவைக்கு நால்வர்
கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர் முனாளில்லை
கன்னியைக் கன்னியே காதலித்தாரே.

அவத்தை பேதம் ஆன்மாவின் நிலை வேறுபாட்டைக் குறிக்கும். சீவன் உடம்பிலே வாழும் போது அடையும் வேறுபாடுகள் கீழாலவத்தை எனப்படும். இவை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், என ஐந்து வகைப்படும். விழிப்பு நிலை, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்பு, அடக்கம் என்பன இவையாகும்.

ஆன்மாக்களின் பக்குவத்திற்கேற்ப இறைவன் வினைப்போகத்தை தந்தருளுவான். வருந்தி அழைத்தாலும் நமக்கு வந்து சேர முடியாதன நம்மை வந்து அடைய முடியாது. வந்து சேர வேண்டிய பொருள்களை நாம் எவ்வாறு வெறுத்து ஒதுக்கினாலும் அவை நம்மை விட்டுப் போகாது. இவ் உண்மையை உணராமல் மாந்தர்கள் ஏக்கமுற்றுக் கவலைப்பட்டு உள்ளம் புண்பட்டு மடிகிறார்கள் என்பதைத் தமிழ் மூதாட்டி ஔவையாரின் நல்வழிப்பாடல் குறிப்பிடுகிறது.

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா – இருந்து ஏங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுங்தூரம் தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்

இன்பப் பொருள்களின் சேர்க்கையும் நீக்கமும் ஆவன அழிவன என்றும், வினைகளின் சேர்க்கையும் நீக்கமும் புகுவன போவன என்றும் திருமந்திரம் குறிப்பிடுகிறது. ஆக வேண்டியவை ஆகும். போகவேண்டியவை போகும். வரவேண்டியவை வரும். இறைவன் ஆன்மாக்களுக்கு இவை எல்லாவற்றையும் கூட்டி வைத்து விட்டுத் தான் சாட்சியாக மட்டும நிற்பான். ஒவ்வொருவரின் ஆன்ம பக்குவத்திற்கும் ஏற்ப கருணையைப் பொழிந்தருளும் பேரருளாளனாக இறைவன் திகழ்கின்றார்.

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர் நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இலங்கிழையோனே

பல்வேறு நிறங்களையுடைய பசுக்களில் இருந்து கிடைக்கும் பாலின் நிறம் என்றும் வெண்மையாகவே இருக்கும். பசுக்களின் நிறத்திற்கு ஏற்ப பாலின் நிறம் மாறுவதில்லை. பசுக்கள் பல ஆயினும் மேய்ப்பவன் ஒருவனே ஆவான். மேய்ப்பவன் மேய்ப்பதை நிறுத்தினால் பசுக்கள் மேய்ப்பவனைச் சுற்றி அகலாது நிற்கும். அகத்தில் இறைப்பற்று நிலைத்து விட்டால் புறப்பற்றுக்கள் அனைத்தும் ஆன்மாவை விட்டு நீங்கி விடும். புறப்பற்று நீங்கி விட்டால் ஆன்மாவில் ஞான ஒளி உண்டாகிவிடும்.

பசுக்கள் பல வண்ணம் பால் ஒரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் ஒரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் கோல் போடில்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே

செய்வதறியாது திகைக்கின்ற எண்ணத்தினுள் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று சிங்கங்கள் உள்ளன. உலகியல் விடயங்களை மகிழ்ச்சியுடன் போய்ப் பற்றி வஞ்சகமாய் அவற்றை அடையும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு நரிக்குட்டிகள் உள்ளன. வெளிப்பொருள்களை அனுபவிக்கும் முறையில் வகைப்படுத்தி அனுபவிக்க முயலும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் யானைக்கன்றுகள் ஐந்து உள்ளன. இவ்வாறு வெளியிலும் உள்ளேயும் செலுத்துகின்ற இருவகையான தன்மைகள் மனதுக்கு உண்டு.

திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு
வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன்று ஐந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பால் இரண்டு ஆமே.

ஒவ்வொருவருடைய வாழ்வின் உயர்விற்கும் தாழ்விற்கும் அவரவரே காரணமாக அமைகின்றார்கள். என்பதைத் "தீதும் நன்றும் பிறர் தர வாரா" எனப் புறநானூறு கூறுகிறது. தன்னைச் சிறுவனாக ஆக்குவதும் தெய்வீக மயமானவனாக ஆக்குவதும் அவரவர் செயல்களே என்பதைத்

"தன்னைச் சிறுவனாகச் செய்வானும் தானே
தன்னை இறைவனாகச் செய்வானும் தானே"

என அறநெறிச் சாரம் என்ற நூல் குறிப்பிடுகிறது. ஒவ்வொருவரும் செய்த வினையை அவரவரே நுகர வேண்டும். செய்த வினை பிறர்க்கும் போகாது, பிறவாற்றாலும் கழியாது.

தனக்கான விரோதியும் உற்ற சிநேகிதனும் தானே ஆவான். தனக்கு உரிய மறுமைப் பயனும் இம்மைப் பயனும் தன்னாலே தான் தனக்கு ஏற்படுகிறது. ஒவ்வொருவருடைய நாளாந்தச் செய்கையும் நித்திய தெய்வீகத்துலாக்கோலில் நிறுக்கப்படுகிறது என்றே இந்த சமயத்தின் கர்மநியதிக்கோட்பாடு கூறுகிறது. தான் செய்த புண்ணிய பாவச் செயல்களின் பயனை அனுபவிப்பவனும் தானே ஆவான். தன்னுடைய தலை விதியை நிர்ணயிக்கும் தலைவனும் தானே ஆவான் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் குறிப்பிடுகிறது.

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தனக்கு வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே.

திருவருட்கண்ணால் அகத்திலே இறைவனை உணர்ந்தவர்களுக்கு உலகியற் பொருட்களின் நிலையாமைத் தன்மை நன்கு விளங்கும். இறையருள் அகத்தில் தோன்றாவிட்டால் அழியும் பொருள்கள் யாவும் நிலையான பொருள்களாகவே தெரியும். உருவமும் தோற்றமும் எப்படியிருப்பினும் அதைக் கொண்டு தெளியாமல் பொருள்களின் உண்மை நிலையையும் இயல்பையும் கண்டறிவதே உண்மையான அறிவாகும் என்பதை

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

எனத் தமிழ்மறையாகிய திருக்குறள் கூறுகிறது.

சிற்பி ஒருவனின் கைத்திறத்தால் செய்யப்பட்ட யானையின் உருவம் மரத்தை மறைத்து யானையைக் காட்டுகிறது. மரம் தான் என நினைப்பவனுக்கு யானையின் உருவம் தெரியாது. யானையைக் காண்பவனுக்கு மரம் தெரியாது. இவ்வாறு இறைவனின் வியாபத்தை அனைத்துப் பொருள்களிலும் கண்டவர்களுக்குப் பஞ்சபூதங்கள் நிலையில்லாத பொருள் என்பது தெளிவாகத் தெரியும். ஆனால் பிரபஞ்ச மயக்கத்தில் இருப்பவர்களுக்கு இறைவனின் சர்வவியாபகம் விளங்காது.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்து பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே

மனம் அடங்கினால் முத்தி ; சினம் அடங்கினால் சித்தி என்பது சித்த புருஷர் ஒருவரின் வாக்காகும். சினம் என்னும் உயிர்க்கொல்லி சேர்ந்தோரையும் நண்பரையும் தன்னில் இருந்து விலகச் செய்யும். கோபம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது தான் தன்னைத் தான் பார்த்துக் கொள்வதன் முதற்படியாகும் . அப்படிக் காத்துக் கொள்ளாவிடில் சினம் கொண்டவனையே அழித்து விடும் என்பதைத்

தன்னைத் தான் காக்கின், சினம் காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

கோபத்தை இயன்றவரை அடக்குவதுடன் நமது கட்டுப்பாட்டிலும் வைத்துக் கொள்ளவேண்டும். உள்ளத்தை முடிந்தவரையில் நிறைவான இறையின்பத்தில் தோய்ந்திருக்கச் செய்தல் வேண்டும். முழு நாட்டத்தையும் விழுமிய முழுமுதற் பொருளாம் சிவனிடத்து இடையறாது செலுத்துதல் வேண்டும். அல்லும் பகலும் சிவப்பரம் பொருளை நெஞ்சிலே இருத்தி வழிபட்டால் அகங்காரம் என்னும் கல்லும் அருளால் பிளக்கும். திருவருளின் அறிவுப் பெருவெளி திறக்கும். பாசமென்னும் அந்தகாரம் நீங்கிச் சமாதி நிலையைப் பெறும் வாய்ப்புக் கிட்டும்.

வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவுஞ் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்
கல்லும் பிளந்து கடுவெளியாமே.

# சிவ ஒளியினால் சீவ ஒளி பிரகாசிக்கும்

33

உலக பந்த பாசங்களில் ஆன்மா அமிழ்ந்துவதற்கு மூல காரணமாக இருப்பவை மலங்களே ஆகும். மலம் தன் வலி ஒடுங்கிய நிலையில் ஆன்மா சிவத்தைச் சார்ந்து தன்னையும் மறந்து வியாபகமாய் நிற்கும் தன்மை நின்மலாவத்தை நிலை ஆகும். சார்ந்ததன் வண்ணமாகும். தன்மையுடையது ஆன்மா. சத்தாகிய சிவத்தையும் சாரும்: அசத்தாகிய மலங்களையும் சாரும் இதனால் சதசத்து என்று அழைக்கப்படுகிறது.

**சத்தசத்தைச் சாராது அசத்தறியாது அங்கணிவை**
**உய்த்தல் சதசத்தாம் உயிர்**

எனத் திருவருட்பயன் இதனை விளக்குகிறது. நின்மலாவத்தை நிலையில் அறியாமையாகிய கேவல நிலையிலிருந்த ஆன்மா ஏகதேச ஞானத்தைத் தரும் கருவிகளைச் சார்ந்து சிவமாம் தன்மையைப் பெற்று வியாபகமாய் நிற்கும். எண்ணம், சொல், செயல்,ஏதும் எண்ணாத தூய நிலை நின்மலாவத்தை எனப்படும். நின்மலாவத்தையில் பொருந்தியவர் பிரணவ தேகம் பெற்று மரணமிலாப் பெருவாழ்வு பெறுவர். தன்னையும் தலைவனையும் அறியும் தவப்பேறு இல்லாதவர் மீண்டும் மீண்டும் பிறவியினைப் பெற்று இப்பிரபஞ்ச வாழ்க்கையில் அழுந்துவர். தன்னையும் தலைவனையும் அறிபவர்களே சிவப்பேறு எய்துவர்.

ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி அறிவாகிய ஞானத்திரியைத் தூண்டிபிரகாசிக்கச் செய்வதே ஆன்ம விடுதலைக்கான சிறந்த வழி ஆகும். ஞானம் தோன்றியதும் உள்ளத்தின் உள்ளே சிவ ஒளி பிரகாசிக்கும். சிவ ஒளி பிரகாசித்ததும் ஊனாலாகிய உடம்பு சோதி வடிவமாக மாற்றம் பெறும். சிவலோகம் எய்துவதற்கு இதுவே மிக எளிய வழியாகும்.

ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்
ஞானத் திரியைக் கொளுவி அதனுட்புக்கு
ஊனை இருளற நோக்கும் ஒருவற்கு
வானகம் ஏற வழி எளிதாமே

முற்பிறவிகளில் நன்றாய் முயன்று தவம் செய்யாதவர்களே தொடர்ந்து பிறவி எடுத்துப் பிரபஞ்சச் சேற்றில் அழுந்துகிறார்கள் என்பதைப்

பின்னை நின்றின்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலர்

எனத் திருமூலர் திருமந்திரத்தின் பாயிரச் செய்யுளில் குறிப்பிட்டுள்ளார். முற்பிறவிகளில் செய்த நல்லறங்கள், மேலான தவச் செயல்கள் என்பவற்றின் பயனைப் பின் தொடரும் பிறவிகளில் பெற்றுள்ள நற்பயன்களால், ஞானத்தினால் அறிந்து கொள்ளலாம். பல பிறவிகளில் செய்த தவத்தின் பயனால் தான் இப்பிறவியில் தன்னை அறியும் உயர் ஞானத்தைப் பெற முடியும். தன்னுள்ளே இருக்கும் பரம்பொருளை அறிவதே உண்மையான மெய் அறிவு ஆகும். மற்றையவை எல்லாம் பயனற்ற அறிவாகவே உள்ளது. தவயோகி திருமூலநாயனார் இதனைப் பேயறிவு என்கிறார்.

முன்னை அறிவினில் செய்த முதுதவம்
பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாம்
தன்னை அறிவது அறிவாம் அஃது அன்றிப்
பின்னை அறிவது பேயறிவாகுமே

ஆன்மாக்கள் தன்னை உணர்ந்து அறியும் அறிவைப் பெற்றுவிட்டால் பிறந்து பிறந்து இறக்கும், துன்பத்தை அடைய வேண்டுவதில்லை. இல்லாவிட்டால் "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என்ற அப்பர் வாக்கிற்கு அமையப் பிறவி நோய் தொடர்ந்து கொண்டே இருக்கும். தன்னைத் தான் அறியும் அறிவை ஆன்மா பெற்றுவிட்டால் அச்சீவன் தன்னைச் சிவனுக்கே அர்ப்பணித்துக் கொள்ளும். இவ்வாறு ஆத்மநிவேதனம் செய்பவர்களின் உள்ளத்தின் உள்ளே சிவன் எழுந்தருளுவான். புலன் இச்சைகள் அடங்க மனம் சிவசிந்தனையில் பொருந்தி எல்லாம் எமை ஆளும் ஈசன் செயல் என்றிருக்கும். கருவி கரணங்களின்றித் தானே எல்லாவற்றையும் அறியவல்ல ஒளி வடிவினை ஞான சாதனையால் ஆன்மா பெற்றுக் கொள்ளும். தன்னை அறிந்து எல்லாம் சிவன் செயல் என்று இருப்பவர்களை வினைகள் எதுவுமே தாக்காது. இந்நிலையினைப் பெற்றவர்கள் உலகோர் வணங்கும் படியான சிவசொரூபமாகத் திகழ்வார்கள்.

தன்னையறியத் தனக்கொரு கேடில்லை
தன்னையறியாமல் தானே கெடுகின்றான்
தன்னையறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே.

மாயா விளக்காகிய இந்த உடம்பு அழியக் கூடியது. உடம்புக்குள் இருக்கும் உயிர் உள்ளவரை உடம்பாகிய விளக்கு நின்று எரியும். உயிர் உடலை விட்டுப்

போனதும் உடம்பு அழிந்துவிடும். விளக்கும் அணைந்துவிடும். புனிதமான நல்ல விளக்காகிய தூய விளக்கு இறைவனுடைய திருவிளக்காக என்றும் பிரகாசிக்கும். ஆன்மா மலங்களால் கட்டுப்பட்டு இருக்கும் நிலையில் (பெத்த நிலையில்) ஆத்ம சொரூபம் தேகத்தோடு பொருந்தியிருக்கும். வெளியிலே தெரியாதவாறு மறைந்திருக்கும். ஞான நிலையில் நிற்போர்க்கு ஆத்ம சொரூபம் ஒளிபெற்று விளங்கி நிற்கும். இந்த ஒளியானது தேகத்திலே இருந்து சூட்டினை நல்கிக் கொண்டிருக்கும். அறியாமை இருளினை அகற்றும். அந்த அருட் சோதியினைத் தான் தேடுகின்றேன் எனத் தவயோகி தனது தமிழ் மந்திரத்திலே குறிப்பிடுகின்றார்.

மாய விளக்கது நின்று மறைந்திடும்
தூய விளக்கது நின்று சுடர்விடும்
காய விளக்கது நின்று கனன்றிடும்
சேய விளக்கினைத் தேடுகின்றேனே.

வேதங்களும் ஆகமங்களும் இறைவனால் அருளிச்செய்யப்பெற்ற உண்மையை அறிவிக்கும் நூல்களாகும். வேதங்களைச் சுருதி என்றும், ஆகமங்களைப் பரசுருதி என்றும் அழைப்பர். வேதத்தைப் பொது நூல் என்றும், ஆகமத்தைச் சிறப்பு நூல் என்றும் கூறுவர். இறைவனால் உணர்த்தப் பெற்ற இந்த இரண்டு நூல்களின் முடிவும் வேறானவை எனச் சிலர் கூறுவர். ஆனால் தத்துவ தரிசனம் கண்ட பெரியோர்கள் இரண்டிற்குமிடையே வேறுபாட்டைக் காண்பதில்லை. இரண்டு நூல்கள் கூறும் முடிவும் ஒன்றே எனக் கூறுவர்.

வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென்றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதமதென்பர் பெரியோர்க் கபேதமே

மானுடஉடம்பின் அமைப்பிலேயே நமது சிவாலயங்கள் அமைக்கப் பட்டுள்ளன. உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களுக்கு அமைய ஆலயங்களில் ஆறுமண்டபங்கள் காணப்படுகின்றன. சிவன் கோயில்களின் உள்ளே சிவலிங்கமும், அதற்கு முன்பாக நந்தியும் நந்தியின் பின்னால் பலிபீடமும் இருக்கும். மூலஸ்தானத்தில் உள்ள சிவலிங்கம் ஐந்தொழில்களில் அருளலைக் குறிக்கும் சதாசிவ மூர்த்தம் ஆகும். மூலஸ்தானத்திற்கு எதிராக உள்ள, வலிமை மிக்க எருது (நந்தி) பக்குவப்பட்ட ஆன்மாவைக் குறிக்கும். இடபத்திற்குப் பின்னால் உள்ள பலிபீடம் பாசத்தினைக் குறிக்கிறது. பாசங்களைப் பலிபீடத்தில் பலியிட்டுவிட்டுப் பக்குவப்பட்ட ஆன்மா மூலமூர்த்தியாகிய சிவனையே நோக்குவதால் திருவருளைப் பெறுகிறது. இவ் உண்மையினைச் சிவாலயத்தின் அமைப்புத் தெளிவாக விளக்குகிறது.

ஆயபதிதான் அருட் சிவலிங்கமமாம்
ஆயபசுவும் அடலேறு என நிற்கும்
ஆயபலி பீடம் ஆகும் நற்பாசமாம்
ஆய அரன் நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே

சிவ பக்தர்கள் அனைத்தையும் சிவமயமாகக் காண்பார்கள். அண்ட சராசரமெல்லாம் சிவசக்தியின் வியாபகத்தைக் கண்டு இன்புறுவார்கள். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண ஆனந்த வடிவினனாகிய சிவனை மர வடிவாகவும், மலை வடிவாகவும், நீர் வடிவாகவும், சிலை வடிவாகவும், காலை, மாலை என்னும் பொழுதுகளின் வடிவாகவும் சைவச் சான்றோர்கள் கண்டு மகிழ்ந்தார்கள் என்பதைப் பின்வரும் குறவஞ்சிப் பாடல் விளக்குகிறது.

கிளைகளாய்க் கிளைத்த பல கொப்பெலாஞ்
சதுர்வேதம் கிளைகள் ஈன்ற
களையெலாம் சிவலிங்கம் கனியெலாம்
சிவலிங்கம் கனிகள் ஈன்ற
சுளையெல்லாம் சிவலிங்கம் வித்தெல்லாம்
சிவலிங்கம் சொரூபமாக
விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டுவோமே

சிவனுடைய மூர்த்தங்களில் பஞ்சகிருத்திய வடிவமாக நடராஜர் வடிவம் காணப்படுகிறது. சமயம், தத்துவம், கலை ஆகிய மூன்றும் இணைந்து ஆனந்தத் தாண்டவம் ஆடும் வடிவமாக நடராஜர் வடிவம் மிளிர்கிறது. நடராஜ வடிவத்தின் உடுக்கு ஏந்திய கை படைத்தலையும், அபயகரம் காத்தலையும், தீ ஏந்திய கை அழித்தலையும், முயலகன் மீது ஊன்றிய திருவடி மறைத்தலையும் தூக்கிய திருவடியாகிய குஞ்சிதபாதம் அருளலையும் குறிக்கிறது.

படைத்தலும், காத்தலும் இளைப்பாற்றும் பொருட்டுச் செய்யும் அழித்தலும், மறைத்தலும், வாழும் காலத்திலும், இறந்த பின்பு முத்தியின் பொருட்டுச் செய்யும் அருளலும் ஆகிய அனைத்துச் செயற்பாடுகளையும் சிவனே நடராஜ மூர்த்தியாகிச் செயற்படுத்துகின்றார்.

படைப்பும் அளிப்பும் பயில் இளைப்பாற்றும்
துடைப்பும் மறைப்பும் முன்தோன்ற அருளும்
சடத்தை விடுத்த அருளும் சகலத்து
அடைத்த அனாதியை ஐந்து எனலாமே

இறைவனை இடைவிடாது தியானிப்பவர்களுக்கு இறையருள் நிச்சயமாகக் கிடைக்கும் என்பதை " எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" என்ற வாக்கு உணர்த்துகிறது. கரங்குவித்து வணங்குபவர்களின் அகத்தில் மகிழ்ச்சியைத் தருபவன், கரங்களைச் சிரம் மேல் கூப்பித் தலை பணிந்து வணங்குபவர்களுக்கு உயர்ச்சியைத் தருபவன் இறைவன் என்பதைக்

" கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க'

'சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க" என மணிவாசகரின்

மணிவார்த்தையாகிய திருவாசகத்தின் சிவபுராண வரிகள் குறிப்பிடுகிறது. தன்னை இடையறாது வணங்கும் அடியவர்களுக்கு

அண்மையில் வந்து அருள் புரிபவனாகிய இறைவன் தன்னை வணங்காதவர்களுக்கு தூரத்தே விலகி நிற்பான் என்பதைப்

"புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க" எனச் சிவபுராணம் செப்புகிறது. தன்னை வணங்காதவர்களுக்கு நலத்தைச் செய்யாதவன், வணங்கும் அடியவர்களுக்கு நன்மையை வாரி வழங்குபவன், மலங்களால் பீடிக்கப்படாதவன் சங்கரன் ஆகிய சிவன் என்பதை

நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்

எனத்திருவருட் பயன் கூறுகிறது.

இறைவனுடைய திருவடிகளை இடைவிடாது நினைப்பவர்களின் நெஞ்சை இடமாகக் கொண்டு அவனும் அவர்களை விட்டு நீங்காது அவர்களின் உள்ளத்தின் உள்ளே தங்கியிருப்பான். அவனை மனத்தால் நினையாதவரை வெறுத்து (கருத்து) ஒதுக்குவான். பக்குவ நிலையை அடைந்தவர்களை அப் பரம் பொருள் பாதுகாத்துத் தாங்கி நிற்பான்.

தரித்து நின்றான் அடிதன் இடநெஞ்சில்
தரித்து நின்றான் அமராபதி நாதன்
கரித்து நின்றான் கருதாதவர் சிந்தை
பரித்து நின்றான் அப் பரிபாகத்தானே

காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றும் உயிர்களுக்குத் துன்பத்தைத் தருவனவாக உள்ளன. இம்மூன்று குற்றங்களும் உயிர்கள் தங்களது உண்மைச் சொரூபத்தை அறியவிடாது தடுக்கின்றன. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்களில் இருந்தும் விடுபட்டவர் பிறப்பு இறப்புகளை விட்டு நீங்கியவர் ஆவார். உயிர் நோயாகிய பிறவி நோய் ஏற்படுவதற்கு இம் முக்குற்றங்களும் காரணமாக அமைகின்றன. முக்குற்றங்களால் வரும் துன்பங்கள் உயிர்களுக்கு அழிவினையே நல்கும்.

மூன்றுள குற்ற முழுது நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்றவாறே

# சீவ ஒளி

**கா**மம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றும் ஆன்மாவிற்குப் பெருங்கேடு விளைவிப்பனவாக உள்ளன. ஆன்மாவிடம் மெய்யுணர்வு ஏற்படுவதற்கு இம்மூன்று குற்றங்களில் இருந்தும் ஆன்மா விடுபடல் வேண்டும். ஒவ்வொரு மனிதனிடமும் குடிகொண்டிருக்கும் ஆசை, சினம், அறியாமை ஆகிய மூன்றின் பெயரும்கூட இல்லாமல் அவற்றை அடியோடு அழிப்பவனுக்கு அவனுடைய துன்பங்கள் அனைத்தும் நீங்கும் என்பதை

காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்

எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் கூறுகிறது. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்களும், ஆன்மாவிற்கு என்றும் துன்பத்தையே தருவன. இதனால் உயிர்கள் தங்கள் உண்மைச் சொரூபத்தை அறியாது மாயா காரியமாகிய இருளில் மயங்கிக் கிடந்தன. இம்மூன்று குற்றங்களில் இருந்தும் விடுபட்டவர் பிறப்பு இறப்புக்களை விட்டு நீங்கியவராவர். இவற்றிலிருந்து நீங்காதவர் அம் முக்குற்றங்களின் காரியமாகிய மாயையால் துன்பப்பட்டு அழிபவரேயாவர்.

மூன்றுள குற்ற முழுது நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்றவாறே

34

ஒருவர் யாரிடமும் பேசாமல் மௌனமாக இருக்கலாம். ஞானத்தை அறிந்த யோகி

போல இருக்கலாம். யோகம் செய்து கொண்டும் இருக்கலாம். நாட்டைத் துறந்து காட்டிலே போய் வாழலாம். ஆயினும் உள்ளத்திலே தூய்மையில்லாதவர்களாயிருந்தால் பயன் எதுவும் இல்லை. உள்ளத்திலே குற்றங்களுக்கு ஊற்றுக் குழியான ஆசையை வைத்துக்கொண்டு இருப்பவர்கள் நாட்டிலிருந்தாலும், காட்டிலிருந்தாலும் ஒரே தன்மை உடையவர்களாகவே இருப்பார்கள். இவர்களுடைய மனப்பாசியாகிய அழுக்கு ஒரு காலமும் நீங்காது. இவர்கள் அன்பையோ அறிவையோ பெறமாட்டார்கள். உண்மையான அறிவான இறைவனைக் காணவும் மாட்டார்கள்.

உள்ளத்தில் தூய்மை உள்ளவர்கள் மனமாசு அற்றவர்கள், மௌனமாக இருந்து ஞான நெறியிலே நடப்பவர்கள் உண்மையாளர்கள் ஆவார்கள். இவர்களே யோகிகள், ஞானிகள் என்று போற்றுதற்குரியவர்கள். இவர்கள் உயிர் நோயாகிய பிறவி நோய் நீங்கப் பெற்றவர்கள். இக் கருத்தினைச் சித்த புருஷராகிய சிவவாக்கியரின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

மனத்து அகத்து அழுக்கு அறாத மவுன ஞானயோகிகள்
வனத்து அகத்து இருக்கினும் மனத்து அகத்து அழுக்கு அறார்
மனத்து அகத்து அழுக்கு அறுத்த மவுனஞான யோகிகள்
முலைத் தடத்து இருக்கினும் பிறப்பு அறுத்து இருப்பாரே

ஆருயிராகிய அணுவும், அவ்வுயிரினைச் சிவத்துடன் கூட்டுவதாகிய பரமாகிய திருவருளும் ஒன்றாகக் கலந்த நிலையில் எவ்வகைத் தடையுமின்றி இயங்கும் சிவனும் இணைந்தால் பால், தேன், அமுது ஆகிய மூன்றும் கலந்த கலவையை ஒத்த இனிமை நிலை ஆன்மாவில் ஏற்படும். இத்தகைய இனிப்பு என்றும் தெவிட்டாது விளங்கும். இந்நிலையில் வாய் பேசாது மௌனமாகி விடும். ஆன்மா சிவத்தோடு கலந்திருக்கும் பேரானந்த நிலையை விளக்க முடியாது.

அணுவும் பரமும் அசிபதத் தேய்ந்து
கணு வொன்றில்லாத சிவமுங் கலந்தால்
இணையறு பால்தேன் அமுதென இன்பத்
துணையது வாயுரையற்றிடத் தோன்றுமே.

ஆன்மா சிவத்தோடு கலந்திருக்கும் இன்பத்தினை அனுபவத்தினால் உணரலாமே ஒழிய, வாயினாற் கூற முடியாது.

உலகியற் பற்றுக்கள் நீங்க வேண்டுமாயின் ஆன்மா இறைவனின் திருவடிகளை இறுகப்பற்ற வேண்டும். பற்றுக்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவனாகிய நிர்மலனாகக் காட்சி தருபவன் இறைவன். அவனிடம் பற்றினை வளர்த்தால் உலகியற் பற்றுக்கள் அனைத்தும் தானாக நீங்கி விடும் என்பதைப்

பற்றுக பற்று அற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

எனச் செந்நாப் போதரும் திருக்குறளில் செப்புகிறார்.

தடத்த நிலையில் ஆன்மாவின் தலைவனின் பெயர் பதி; சொரூப நிலையில் சிவம். தத்துவங்களின் பற்று நீங்க அது இலயமடையும் பொருளாகிய சிவனைப் பற்றில் விஞ்ஞான கலர் நிலையை அடைந்து ஆன்மாக்கள் சதாசிவராகிவிடுவர். நாத சொரூபமாக இருப்பது சிவனுடைய அறிவு. பற்றுக்கள் நீங்கிவிட்டால் நாத சொரூபமான சிவத்தின் அறிவே ஆன்மாவின் அறிவாகிவிடும். சீவபோதம் கெடச் சிவப்பற்று மேலோங்கி நிற்கும் நிலையில் ஆன்மா சிவத்துடன் கலந்து இறவா இன்ப நிலையை எய்தும்.

பற்றறப் பற்றிற் பரம் பதியாவது
பற்றறப் பற்றிற் பரனறிவே பரம்
பற்றறப் பற்றினில் பற்ற வல்லோர்கட்கே
பற்றறப் பற்றிற் பரம்பரமாமே

சிவன் ஆதியும் அந்தமும் இல்லாதவர். ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும்சோதி என மணிவாசகப் பெருமான் சிவனைத் திருவாசகத்தின் திருவெம்பாவைப் பாடலில் குறிப்பிடுகின்றார். பிரம விஷ்ணுக்கள் சிவனின் முடியையும் அடியையும் தேடிக் காணமுடியாத பொழுது அவர் சோதி வடிவாகத் தோன்றினார் என்பதை

“இங்குற்றே னென்று இலிங்கத்தே தோன்றினான்“

என அப்பர் பெருமானின் பாடல் கூறுகிறது.

“எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவார் ஈசன் ” என்ற

வாக்கிற்கு அமைய தன்னை நினைந்து வழிபடுகிறவர்களுக்குத் திருவருளை இறைவன் வாரி வழங்குவான்.

முதலும் முடிவும் இல்லாத மேலான தலைவராகிய சிவன் சோதிவடிவாய்ப் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ளார். எங்கும் நிறைந்திருந்தும் நல்லோர்க்குத் தோன்றியும் அல்லார்க்குத் தோன்றாதும் செம்மையோடு இறைவன் பிரகாசிப்பார். இத்தகைய சிவஞானத்தை அவ்வாறு உணர்வில் பெற்றவர் புண்ணியம் உடையவர் ஆவார். ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியை அகத்திலே உணர்ந்தவர்கள் பக்குவம் உடையவர்களாகத் திகழ்வார்கள்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பதி
சோதிப் பரஞ்சுடர் தோன்றத் தோன்றாமையின்
நீதியது ஆய் நிற்கும் நீடிய அப்பரம்
போதம் உணர்ந்தவர் புண்ணியத்தோரே

ஆத்மாவின் உள்ளே சிவம் பிரகாசிப்பதைச் சீவ ஒளி என்பர். சீவ ஒளி ஆன்மாவில் பிரகாசிக்கும் நிலை துரிய நிலை எனப்படும். யோக சாதனையிலே துரிய நிலையில் உணர்வினைச் செலுத்தினால் ஆன்மாவின் உள்ளே சிவமணம் கமழும். ஆன்மீக சாதனைகளிலும் சோதனைகள் இடையிடையே ஏற்படும். தொடர்ந்து முயற்சி செய்தால் சோதனைகளைத் தாண்டிப் பல சாதனைகளைச்

செய்யலாம். இறைவனின் சிவ துரியாதீதத்தை ஆன்மா பற்றுவதற்குத் தொடர் முயற்சி வேண்டும். தொடர்ந்து முயன்றால் இறையருளினால் அந்நிலையினை அடையலாம். இவ்வாறு முயன்றும் முடியாவிடில் இறைவனை அடையும் நெறியினை உணர்த்தும் ஞான, நூல்களைக் கற்றல்வேண்டும். ஞான நூல்களுடன் இணக்கம் வைத்தால் பல், நா, உதடுகள், பொருந்திச் சொல்வதற்கு மேற்பட்ட சிவ தத்துவம் நாத வடிவாய் அகத்திலே பொருந்தும்

தொட்டேயிருமின் துரிய நிலத்தினை
எட்டாது எனினும் நின்று எட்டும் இறைவனைப்
பட்டாங்கு அறிந்திடில் பல் நா உதடுகள்
தட்டாது ஒழிவதோர் தத்துவந் தானே

ஆன்மா இறைவனோடு இணைந்திருக்கும் பேரின்ப நிலையான முத்தி நிலையைச் சீவமுத்தி, பரமுத்தி, சிவமுத்தி, என மூன்று வகையாகத் திருமந்திரம் குறிப்பிடும். பாசம் கடந்து நிற்றல் சீவன் முத்தி என்றும், தன் செயலின்றி அருளின் வழியே நிற்றல் பரமுத்தி என்றும், சிவம் ஆன்மா என்ற இருமையற்று ஆனந்தமயமான நிலையில் நிற்றல் சிவமுத்தி என்றும் அழைக்கப்படும்.

ஆன்மா பிறப்புக்குரிய காரணத்தை விட்டுவிட்டால் பிறக்க வேண்டிய காரியம் இல்லாமற் போகும் நிலை சீவன் முத்தி எனப்படும். உலகம் பொய் என்றும் அது தீமையைத் தருவது என்றும் ஆன்ம விசாரணையால் அறிந்து வைராக்கியத்தால் பிரபஞ்சப் பற்றிலிருந்து விடுபட்டு நிற்கும் நிலை சீவன் முத்தி ஆகும். ஆன்மா பிறக்க வேண்டிய நியதியைக் கடந்து அறிவுருவாய் சிவத்தில் இலயம் அடையாமல் நிற்கும் நிலை பரமுத்தி என்று அழைக்கப்படும். மூவகை ஆன்மாக்களில் பிரளயாகலர், விஞ்ஞானகலர் இந்நிலையில் உள்ளவர் என்பர். உடலுள்ள போதே சிவானந்தத்தில் திளைத்து உடலை மறந்து வாழ்ந்து சிவத்துடன் ஒன்றாகி நிற்கும் நிலையே சிவானந்த முத்தி எனப்படும். இம் மூவகையினரும் உடலை விட்டவரே ஆவார்.

சீவன் தன் முத்தி அதீதம் ; பரமுத்தி
ஒயுபசாந்தம் சிவமுத்தி ஆனந்தம்
மூவயின் முச்சொரூப முத்தி முப்பாலதாய்
ஒவுறு தாரத்தில் உள்ளும் நாதாந்தமே

சைவ சித்தாந்த தத்துவம் மாயையை இறைவனின் வைப்புச் சக்தி அல்லது பரிக்கிரக சக்தி என்று கூறும். உயிர்களைத் தன் வயமாக்கி மயக்குவதால் மாயை என்ற காரணப் பெயரைப் பெற்றது. உடல், உலகம் என்பவற்றின் உற்பத்திக்கும் ஒடுக்கத்திற்கும் மூல காரணமாயிருக்கும் மாயை சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்த மாயை (பிரகிருதி மாயை) என மூன்று வகைப்படும். இவற்றிலிருந்தே முப்பத்தாறு தத்துவங்களும் தோற்றம் பெற்றன.

மும்மலங்களில் ஆணவம் அறிவை மயக்கும். மாயை அறிவை விளக்கும். மாயை விடியும் வைரயும் இருளை ஒருவாறு போக்குவதற்குச் சிறு விளக்கு

உதவுவது போலச் சிவஞானம் ஆகிய பேரொளியைப் பெற்று ஆன்மா முத்தி, நிலையை அடையும் வரையும் ஆணவத்தைப் போக்கக் கூடிய அறிவைக் கொடுக்கும்.

விடிவா மளவும் விளக்கணைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து

என்று மேற்கூறிய உண்மையைத் திருவருட் பயன் விளக்குகிறது.

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் ஆகிய மூவர்கள் வாழ்கின்ற இடம் பிரகிருதி மாயை, அசுத்த மாயை, சுத்தமாயை என்பன ஆகும். இந்த வகையான மூன்று மாயையில் இருந்துமே முப்பத்தாறு தத்துவங்களும் தோன்றியுள்ளன. இம் மூன்று மண்டலங்களிலும் ஊடுருவி நிற்கும் ஆத்மசோதியைக் கண்டதும் உயிரின் பிறவி வட்டம் முடிவு பெறும்.

மூன்று உள மாளிகை மூவர் இருப்பிடம்
மூன்றினின் முப்பத்தாறும் உதிப்பு உள
மூன்றி னினுள்ளே முளைத்து எழும் சோதியைக்
காட்டலும் காயக் கணக்கு அற்றவாறே

மனித உடம்பில், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்று ஆறு ஆதாரங்கள் உள்ளன. மூலாதாரத்தில் உறைந்திருக்கும் குண்டலினி சக்தியை ஆறு ஆதாரங்களின் ஊடாக யோகிகள் மேலே எழுப்புவர். இது யோக சக்தியாக மாறி உச்சியில் அமிர்தத்தைச் சொரியும். இதனை ஞானிகள் உச்சியில் பிச்சையெடுத்தல் எனக் கூறுவர். குதம்பைச் சித்தர் இதனை மாங்காய்ப் பால் என்று குறிப்பிடுகின்றார். குண்டலினி சக்தியை உலகியல் இன்பங்களை அனுபவிக்கும் சக்தியாக மாற்றினால் அது போக சக்தியாக மாறிவிடும். இதனைத் தேங்காய்ப் பால் எனக் கூறுகின்றார்.

மாங்காய்ப்பால் உண்டு மலை மேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி ? குதம்பாய்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி ?

என்பது குதம்பைச் சித்தரின் பாடல் ஆகும். ஒளியையுடைய கண்ணின் பார்வையை மேலும் ஒளி பெறுமாறு செய்து, ஓம் என்ற பிரணவ மந்திரத்தைத் தியானிப்பதால் மூலாதாரத்திலிருக்கும் குண்டலினி சக்தியை மேலே எழுப்ப முடியும். சந்திர கலை, சூரிய கலை ஒன்றாகுமாறு சுழு முனையிலே சேர்த்துச் சிரசுக்கு மேல் சகஸ்ரதள வெளியில் பொருந்தினால் கனலும் காற்றும் இணைந்து சிவ ஒளியாகப் பிரகாசிக்கும், தியானத்தின் முதிர்வு நிலையில் சிவபதம் தானாகவே அமையும்.

ஒளியையொளி செய்து வோமென்றெழுப்பி
வளியை வளி செய்து வாய்த்திட வாங்கி
வெளியை வெளி செய்து மேலெழ வைத்துத்
தெளியத் தெளியும் சிவபதந் தானே

# சிவ சித்தர்

35

வடநாட்டு வழிமுறையாக வந்து கலந்த அட்டாங்க யோகத்தை திருமூலர் சிவயோகமாக வளர்த்து அதன் மூலம் ஞானத்தைப் பெறும் வழியைத் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். யோகமும் ஞானமும் முறையே சாதனமும் சாத்தியமும் (பயிற்சியும் பயனும்) எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. யோக சாதனையில் உணர்வு உடம்பு முழுவதும் எதிரொலிக்கின்றது. மூலாதாரம் முதல் ஆஞ்ஞை வரை அந்த உணர்வு ஏற்படுகின்றது. சீவன் சாதாரண உலகியல் வாழ்க்கையில் தொடங்கிச் சிவம் ஆகும் நிலை வரை அடையும் உணர்வுகளை மிக விரிவாகத் திருமூலர் எடுத்துக் கூறுகின்றார். உலகியல் உணர்வுகள் போல இவை யாவும் இறையியல் உணர்வுகளே எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. அழியும் உடலைக்கொண்டே அழியா வாழ்வு பெறுவதற்கான வழிகளைக் காட்டுகிறது.

ஒன்றுமில்லாமல் எல்லாம் வெறுமையாய் இருக்கும் நிலை சூனியம் எனப்படும். அது என்ற தற்பதமும், நீ என்ற தொம்பதமும், அதுவாக ஆகின்றாய் என்ற அசிபதமும் ஆகிய முப்பதமும் நீங்கிய நிலையே பெரு நிலை ஆகும். சிவத்தை முன்னாலே வைத்துத் தியானித்தால் அகத்திலே சிவம் பிரகாசிக்கும். சிவபதிக்கு அடிமையாகி நின்ற ஆன்மா தன் உணர்வு முழுவதையும் சிவ சொரூபத்தில் நிறுத்திப் பேரானந்தத்தினை அனுபவிக்கும் 'அ' என உயிரும், 'உ' எனப் பரமும்,

'ம்' எனச் சிவமும் இணைந்து ஒன்றாக நிற்பதே ஓம் என்ற பிரணவ மந்திரம். முப்பதமும் நீங்கிய நிலையில் ஆன்மா சிவத்தோடு இணைந்து சிவகதியைப் பெறும்.

வைத்துச் சிவத்தை மதி சொரூபானந்தத்து
உய்த்துப் பிரணவமாம் உபதேசத்தை
மெய்த்த இதயத்தை விட்டிடு; மெய் உணர்ந்து
அத்தற்கு அடிமை அடைந்து நின்றானே.

முத்தி நிலையில் உள்ள ஆன்மா இறைவனுக்கு அடிமையாக இருக்கும் என்றே மெய்கண்ட சாஸ்திர நூல்களில் ஒன்றாகிய திருவருட்பயனும் கூறுகிறது. இறைவனுடைய தாளும்(திருவருளும்) உயிரினது தலையும் (அறிவும்) பொருந்துவதை உவமையாகக் கூறுவதால் இறைவன் தலைவன் என்பதும், உயிர் அடிமை என்பதும் பின்வரும் திருவருட் பயனின் ஊடாக விளக்கப்படுகிறது.

தாடலை போற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலை நீ ஏகமெனக் கொள்.

காரணம் எதுவுமில்லாமல் காரியம் எதுவும் விளையாது என்பது அறிவியல் அறிஞர்கள் அனைவரினதும் ஏகோபித்த கருத்தாகும். காரணமாகிய பாவ புண்ணியத்திற்கு உரிய விளைவே காரியமாகிய நரகமும் சொர்க்கமும் ஆகும். காரணத்தை அழித்தவரிடம் காரியம் இல்லை. மனமண்டலம் குணத்தைச் சார்ந்து மனோமயகோஷம் அமைகிறது. இதற்கேற்ப தேகம் கிடைக்கிறது. மனம் நினைப்பதற்கேற்பவே இவை உண்டாகின்றன. மனம் அண்ட சராசரமெல்லாம் வியாபித்து நிற்கும் பரம்பொருளாகிய சிவத்தைப் பற்றி நின்றால் தேகப்பற்று நீங்கிச் சிவ ஒளி புலப்படும்.

மனமண்டலமே தேகம் என்றும் தேகமே மன மண்டலம் என்று கூறும் தன்மை அறிந்து அவ்விரண்டுக்கும் உள்ள உண்மையான தொடர்பினை உணரும் ஞானியர்களுக்கு அவர்களைக் கீழ்மைப்படுத்தும் பள்ளமும் இல்லை. மேலாகச் செய்யும் மேடும் இல்லை. இத்தகையவர்களிடம் பிரபஞ்ச மயக்கம் இல்லாமையால் அவர்கள் தேகதர்மம் கடந்து விளங்குவர்.

உள்ளம் உருவென்றும் உருவம் உளமென்றும்
உள்ள பரிசறிந் தோருமவர்கட்குப்
பள்ளமும் இல்லைத் திடரில்லைப் பாழில்லை
உள்ளமும் இல்லை யுருவில்லை தானே

சைவ சித்தாந்தம் கூறும் மும்மலங்களில் ஒன்றாகிய மாயை இறைவனின் வைப்புச் சக்தி ஆகும். உயிர்களைத் தன்வசமாக்கி மயக்குவதால் மாயை என்ற காரணப்பெயரைப் பெற்றது. குயவன் தன் திரிகையின் உதவியோடு மண்ணிலிருந்து குடத்தைச் செய்வது போல நிமித்த காரணமாகிய பதி,

துணைக் காரணமாகிய தன் சக்தியால், முதற் காரணமாகிய மாயையில் இருந்து முப்பத்தாறு தத்துவங்களையும் தோற்றுவிக்கிறது. சுத்த மாயையில் இருந்து சிவ தத்துவங்கள் ஐந்தும், அசுத்த மாயையில் இருந்து வித்தியா தத்துவங்கள் ஏழும், சுத்தாசுத்த மாயை அல்லது பிரகிருதி மாயையில் இருந்து ஆன்ம தத்துவங்கள் இருபத்துநான்கும் தோற்றம் பெறும்.

சிவன் காரியோபாதியாகிய ஆன்ம தத்துவங்களில் விறகில் தீ போலவும், காரண உபாதியாகிய வித்தியா தத்துவங்களில் பாலில் நெய் போலவும் சிவ தத்துவங்களில் மணியில் ஒலி போலவும் கலந்து நிற்பார். உயிருக்கு உயிராகப் பிரிதலின்றி நிற்பவனும், காரிய உபாதி, காரண உபாதி என நிற்கும் தத்துவங்களில் வெவ்வேறு வகையாக ஒன்றாய் நிற்பவனுமாகிய சிவபெருமான் உயிர்க்கு உடனாய் நின்று அனுபவம் தந்தால் அல்லாமல் உயிரைக் களைத்துப் போகச் செய்யும் ஆணவமலம் நீங்காது.

உயிரக்கு உயிராகி ஒழிவு அற்று அழிவு அற்று
அயிர்ப்பறு காரண உபாதி விதிரேகத்து
உயிர்ப்பு உறும் ஈசன் உபமிதத்தால் அன்றி
வியர்ப்பு உறும் ஆணவம் வீடல் செய்யாவே

விருப்பு வெறுப்பு அற்று இருக்கும் நிலை உபசாந்தம் எனப்படும். மன அலைவு அற்ற நிலை, போக்கு வரவு அற்ற நிலை என்றும் கூறலாம். சிவ ஞானமே வீடு பேறாகிய முத்தி அடைவதற்குரிய மார்க்கமாகும். சிவனிடத்தில் தன் முனைப்பின்றி அவனது திருவடிகளைப் பொருந்தியிருத்தலே பக்தி செய்யும் வழியாகும். பக்தி என்பது தான் இறைவன் என்ற இரண்டிலும் ஓர் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வே ஆகும். உண்மைச் சமயத்தின் உயிர் நாடியாகத் திகழ்வது பக்தியே ஆகும். இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று மனித மனம் முயல்கின்ற முயற்சியே பக்தி ஆகும். ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் உள்ள உறவு ஒன்றை மட்டும் ஆன்மா விரும்பி நிற்பதே பக்தி எனப்படும். பக்தனின் செயல்கள் அனைத்தும் இறைவனின் செயல்களாகவே காணப்படும் என்பதைச் "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்." எனத் திருவாசகம் குறிப்பிடுகிறது.

திருவடியுணர்வாகிய சிவஞானமே திருவடிப் பேறாகிய முக்திக்கு வழிகாட்டும் வாயிலாக உள்ளது. சிவனின் திருவடியினையும், அவனது மெய்யடியார்களின் திருவடியினையும் பணிவும் இன்சொல்லும் உடையவனாய் நீங்கா நினைவுடன் தொழுதல் பக்திக்கு வித்தாக அமையும். சிவத்தைப் பொருந்திச் சிவமாதலே அட்டமா சித்திகளையும் பெறுவதற்குரிய வழியாகும். அருள் வழி நிற்றலும், அவ் அருளினை மறவாமையும் மனம் தன்வயப்படுதலாகிய சித்திக்கு வழிகாட்டும். ஆன்மா விருப்பு வெறுப்பின்றி அடங்கி இருத்தலே சக்தியை அடைவதற்குரிய வழியாகும்.

முத்திக்கு வித்து முதல்வன் தன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரம் தானாதல்
சக்திக்கு வித்துத் தனதுபசாந்தமே

ஆன்ம தரிசனம் பெற்றுப் பேரின்பம், அடைந்த அனுபவத்தை திருமூலர் பல பாடல்களின் ஊடாக வெளிப்படுத்துகின்றார். இந்த உடம்புக்குள்ளே புகுந்து நிற்கின்ற இறைவனை அகப்பார்வையினால் கண்டு ஆனந்தித்த தன்மையை எடுத்துக் கூறுகின்றார். "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்." என்ற முதுமொழிக்கு ஏற்ப அடியவர்களின் உள்ளத்தில் இறைவன் எழுந்தருளித் தரிசனம் தருவான். இறைவன் இந்த உடம்புக்குள்ளேயே நம்மைத்தேடி வந்து புகுந்து நின்ற போதிலும் அகத்தினுள்ளே பார்வையைச் செலுத்தி உள்ளுணர்வினால் மக்கள் அவனை அறிகின்றார்கள் இல்லையே என்று இரக்கப்படுகின்றார் திருமூலர். தான் இறையருளால் பெற்ற ஞான அனுபவத்தைத் தொடர்ந்து கூறுகின்றார். கண் இமைகளை மூடித் தியானத்தில் இருந்த பொழுது, அண்ட சராசரங்கள், ஏழு உலகங்கள் எல்லாம் அவனுக்குள்ளே அடங்கி இருப்பதைக் கண்டேன்.

நேடிக் கொண்டு என்னுள்ளே நேர்தரு நந்தியை
ஊடு புக்கு ஆரும் உணர்ந்தறிவாரில்லை
கூடு புக்கு ஏறலுற்றேன் அவன் கோலம் கண்
மூடிக் கண்டேன் உலகு ஏழும் கண்டேனே

கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் என்றும் கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்றும் தேவாரம் சித்தர்களுக்கு வரைவிலக்கணம் கூறியுள்ளது. சிவசித்தர்கள் பேரறிவு வடிவாகிய சிவத்தை தரிசித்தவர்கள். இவர்கள் ஆணவ மலம் நீங்கிய சீவன் முத்தர். பரமுத்தி அடையத் தகுதி உடையவர்கள். சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய மூன்று வகை முத்திகளும் முறையே சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றால் அடையப்படுவன. இவை பத முத்தி எனப்படும். எனது என்னும் புறப்பற்றும் நான் என்னும் அகப்பற்றும் விட்டுச் சிவமயமாகிய சித்தத்தில் நிலைபெற்று நிற்பவரே சிவசித்தர் எனத் திருமந்திரம் கூறுகிறது.

பதமுத்தி மூன்றும் பழுது என்று கைவிட்டு
இதம் உற்ற பாச இருளைத் துரந்து
மதம் அற்று, எனது யான் மாற்றிவிட்டு ஆங்கே
திதம் உற்றவர்கள் சிவசித்தர்தாமே

ஆன்மாவினது அறிவையும், மனம், வாக்கு, காயம், ஆகியவற்றையும் செயற்படுத்துபவள் சதாசிவ பத்தினியாகிய மனோன்மணியே ஆவாள். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் அகத்திலே இருக்கும் திரிகரணங்கள் ஆகும். மனதிலே தோன்றுவது எண்ணம், வாக்கிலே தோன்றுவது சொல்,

காயமாகிய உடம்பாலே செய்யப்படுவது செயல். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் தூய்மையாகச் செயற்பட்டால் செய்கின்ற காரியங்கள் அனைத்தும் சித்தியாகும். இதனைத் "திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் நீ அருள்வாய்." எனத் தாயுமான சுவாமிகள் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களும் தம் வயப்பட்டு நின்ற காலத்தில் நின்றாலும், இருந்தாலும், பலவிதமான உலக நிலைகளைப் பேசினாலும், புலன்களை வென்று மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனையே நாடுவர். நடக்கும் போதும் உட்கார்ந்திருக்கும் போதும் இறை உணர்வு உள்ளபடியால் இவர்கள் சிவத் திருவுடையோர்களாகத் திகழ்வார்கள். சிவமாம் திருவுடையோர் எப்போதும் சிவனையே நினைந்திருப்பர்.

ஒன்றும் மிரண்டும் ஒருங்கிய காலத்து
நின்றும் இருந்தும் நிலம் பல பேசினும்
வென்றும் மிருந்தும் விகிர்தனை நாடுவர்
சென்றும் இருந்தும் திருவுடையோரே

சித்தம் சிவமாகிவிட்டால் சீவ இயல்பு ஆன்மாவை விட்டு நீங்கிவிடும். "சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எணையாண்ட ." என்றே திருவாசகமும் குறிப்பிடுகிறது. சீவனுக்குள்ளே சிவ ஒளி பிரகாசித்ததும் பழைய வினைகள் அனைத்தும் வேரோடு சரிந்து விடும் என்பதனைப்

" பழவினைகள் பாறும் வண்ணம்"

என மணிவாசகரும் திருவாசகத்தின் அச்சோப்பதிகத்தில் குறிப்பிடுகின்றார்.

திருவருளால் சிவனையே இடையறாது நாடுபவர்களின் சிந்தையின் கண் சிவன் உறைவான். ஆருயிரின் முனைப்புத் தன்மை அகன்று இறைவனுக்கே அடிமையாகும் நினைப்புத் தன்மை இடையறாது இறைவனைச் சிந்திப்பதால் ஏற்படும். பிறவிக்கு காரணமாக உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் ஆன்மாவை விட்டு நீங்கும். சித்தம் சிவமாகிவிட்டால் செய்கின்ற செயல்கள் யாவும் தவமாகவே மாறிவிடும். ஒன்பதாகக் குறிப்பிட்ட வகையின் இறுதியில் நல்ல சிவஞானம் தவத்தால் அடையும்பயனாகித் தான் என்பது இல்லாமல் சிவமாய் விளங்கும்.

சிவமான சிந்தையிற் சீவன் சிதையப்
பவமான மும்மலம் பாறிப் பறிய
நவமான அந்தத்தின் நற்சிவ போதம்
தவமாம் மவையாகித் தானல்லவாகுமே.

# எது ஆசூசம்

மனிதனை மனிதன் வேறுபடுத்தி உயர்சாதி, தாழ்ந்த சாதி எனப் பல்வேறு பிரிவுகளைப் பாகுபடுத்திப் பார்க்கும் வழக்கம் நம்மவர்களிடம் உண்டு. பிறரைத் தீண்டுவதால் தீட்டு (ஆசூசம்) உண்டாகிறது எனச் சிலர் கருதுகின்றார்கள். இருக்கு வேதத்தில் பத்தாம் மண்டலத்தில் புருஷ சூக்தம் என்ற பகுதியில் பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வர்ணப் பிரிவுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. இந்த வர்ணங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து பல ஜாதிப் பிரிவுகள் நமது சமூகத்தில் தோற்றம் பெற்றன. இந்து சமயத்தில் இருந்து பலர் வேறு சமயங்களிற்கு மாறிப்போவதற்கும், சமயப்பண்பாட்டில் இருந்து விலகி நிற்பதற்கும் இந்த வர்ணப் பாகுபாடே அடிப்படையாகக் காணப்படுகின்றது. இறையருளைப் பெறுவதற்கு ஆன்ம பக்குவம் தகுதிப்பாடாக அமைகிறதே ஒழியப் பிறப்புக்காரணமாக அமைவதில்லை. பிறப்பு முறையால் எல்லா உயிர்களும் ஒரே தன்மையானவை. எனவே செய்கின்ற செயல்களை வைத்து வேறுபடுத்துவது அறிவீனம் ஆகும் என்பதைப்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்

என்றே திருக்குறள் கூறுகிறது.

36

அறிவில்லாதவர் பிறரைத் தீண்டுவதால் தீட்டு உண்டாகிறது என்பர். ஆனால் தீட்டு எவ்விடத்தில் உள்ளது என்பதை யாரும் அறியவில்லை. தீட்டு தோன்றும் இடம் எது என்று தெரிந்து கொண்டால் மானிட உடம்பே தீட்டுத்தான் என்பதைப் புரிந்து

கொள்வர். உயிர்கள் தோன்றும் இடமாகிய கருப்பையே தீட்டுத்தோன்றும் இடமாகும். எனவே மனித உடலே தீட்டு உடையதாகவே காணப்படுகிறது. உயர் சாதியினர் தாழ்ந்த சாதியினரைத் தீண்டுவது ஆசூசம் என்பது அறியாமையால் ஏற்பட்டதாகும். மலங்களால் ஆகிய உடம்பே அசுத்தமானது என்பதை அறிவதே அறிவுடைமையாகும்.

ஆசூசம் ஆசூசம் என்பார் அறிவிலார்
ஆசூசமாமிடம் ஆரும் அறிகிலார்
ஆசூசமாமிடம் ஆரும் அறிந்தபின்
ஆசூச மானிடம் ஆசூச மாமே

உலகியல் வாழ்க்கையை வாழ்பவர்களில் பலர் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என லௌகிக உலக இன்பங்களை அனுபவிப்பதே பேரின்பம் என நினைத்து வாழ்கின்றார்கள். ஆன்மா இறைவனோடு இணைந்து பெறுகின்ற பரகதியாகிய முத்தியினை ஏற்க மறுக்கின்றார்கள். மோட்ச நிந்தை செய்பவர்கள் நன்னெறி காட்டியும் காணாத மூடர்களாகவே இருப்பார்கள்.

உண்மையான பக்குவமான ஞானிகள் என்றும் நிலை தளம்புவதில்லை. புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒன்றாகவே நோக்குவார்கள். உலகியல் இன்பங்களால் அவர்கள் ஈர்க்கப்படுவது இல்லை. காம மயக்கம் உண்டாக மாதர்கள் நோக்கினாலும் அரிய தவம் செய்யும் ஞானியர் தமது தவ நிலையில் நின்றும் தவறுவதில்லை. ஞானியரைச் சினம் உண்டாகப் பேசும் தீவினையாளர்கள் தமக்குத் தாமே கொடிய வினையினைத் தேடிக்கொள்கிறார்கள்.

மயக்குற நோக்கினும் மாதவஞ் செய்வார்
தமக்குறப் பேசின தாரணை கொள்ளார்
சினக்குறப் பேசின தீவினையாளர்
தமக்குற வல்வினை தாங்கி நின்றாரே

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளும் ஞானேந்திரியம் என்று அழைக்கப்படும். இந்த ஐந்து பொறிகளும் வெறிகொண்டு அலைவதனால் ஆன்மா ஞானத்தைப் பெற முடியாமல் தவிக்கிறது. கொல்ல வரும் மதயானைகள் போல இந்த ஐம்பொறிகளும் செயற்படுவதால் ஆன்மா உண்மை ஞானத்தை அறியமுடிவதில்லை.

ஓம் என்னும் பிரணவ மயமாகிய வில்லில் ஐந்தெழுத்தாகிய நமசிவாய மந்திரத்தை நாணாகச் சேர்த்துக் கட்டி அம்பாகிய சிவத்தை அதிலே பொருத்தி இறையருளாகிய ஞானத்தைக் குறிவைக்கவேண்டும். ஞானம் கிடைக்கப்பெற்றதும் ஐம் பொறிகளும் செயலற்றுப் போய்விடும். இப்படியாக மனம், வாக்கு செயலற்றுச் சித்தம் சிவ சிந்தனையில் பொருந்தி இருக்கும் ஒருவர்க்கு மாணிக்க மணியில் ஒளிபோலச்சிவப்பரம்பொருள் எதிரிலே

தோன்றித் திருவருளை வாரி வழங்கும். சித்தம் சிவமாகிய நிலையில் மனம் சமாதி நிலையைப் பெற்றுவிடும் மாணிக்க மணியாய் மாமணிச் சோதியாய் சிவம் அகத்திலே பிரகாசிக்கும்.

வில்லின் விசை நாணில் கோத்து இலக்கு எய்தபின்
கொல்லும் களிறு ஐந்தும் கோலொடு சாய்ந்தன
வில்லுள் இருந்து எறி கூரும் ஒருவற்குக்
கல், கலன் என்னக் கதிர் எதிராமே

தத்வமஸி என்பது சாம வேதத்தில் காணப்படும் மகாவாக்கியம் ஆகும். தத்துவமஸி என்பது தத்+துவம்+அஸி என்ற மூன்று பதங்களைக் கொண்டது. அது நீ ஆகிறாய் என்பது இதன் பொருள். வேதாந்தத்தில் நீ அது ஆகிறாய் என்பதும் சித்தாந்தத்திலே நீ சிவம் ஆகிறாய் என்பதும் ஒன்றேயாகும். குரு உபதேசத்தால் நான் அது ஆனேன் என்ற நிலையை அடைந்து சீவன் சிவமாகும். சீவன் சிவனாக மாறுவதற்குப் பிரணவமே காரணமாக உள்ளது.

அறிவு படிப்பறிவு (ஏட்டறிவு), பட்டறிவு ( அனுபவஅறிவு) என இரண்டு வகைப்படும். இவை பரம்பொருளின் திருவருளைப்பெறுவதற்குத் துணைசெய்யமாட்டாது. இறையருளைப் பெறுவதற்கு மெய்ஞானமாகிய தவஞானம் வேண்டும். எங்கும் செறிவுடைய பேரறிவாய் விளங்கும் பரம்பொருளைக் காண்பதற்கு அறிவு, அறியாமை ஆகிய இரண்டும் உயிர்களை விட்டு விலக வேண்டும். பேரறிவாய் விளங்கும் பரம்பொருளை நினைவில் விட்டுப்பிரியாது நிலைத்திருக்கச்செய்தல் வேண்டும். இந்த வகையில் இறைவனை அகத்திலே நிலைத்திருக்கச்செய்து போற்றிக் கொண்டாடும் குறிப்பறியாதவர்கள் சிவனருளைப் பெறும் குறிக்கோள் அற்றவர்கள் ஆகிவிடுவார்கள். அகண்ட அறிவு உடையது சிவம், சிற்றறிவுடையது சீவன் அகண்டத்தில் செல்லும் போது சீவனது செயல் அடங்கும். அகண்டத்தில் உள்ள சிவத்துடன் சீவன் தன்னை ஒன்றுபடுத்தும். இதற்குத் துணையாக இருப்பது பிரணவோபாசனை ஆகும். இதை அறியாதவர்கள் சிவத்தைத் தம்மிடம் பொருந்தக் கூடிய வழிகளை அறியாதவர்களாவார்கள்.

அறிவறியாமை இரண்டு மகற்றிச்
செறிவறிவாயெங்கு நின்ற சிவனைப்
பிறி அறியாது பிரானென்று பேணும்
குறியறியாதவர் கொள்ளறியாரே

நிழல் உருவம் வானத்தே தோன்றி அங்கே மறையும். நீர்க்குமிழி நீரில் தோன்றி அங்கே மறையும். இதேபோல இவ்வுடல் தீயின் முன் கர்ப்பூரம் எரிந்து மறைவது போலத் தோன்றிய இடமான சிவத்திலேயே ஒடுங்கிவிடும். இங்கு உடல் என்பது சூக்கும உடலாகிய நுண் உடலையே குறிக்கும்.

செவி, மெய், வாய், கண், மூக்கு ஆகிய அறிகருவிகளும். பக்குவப்படாத மனம் முதலிய அந்தக்கரணங்களும், புருடனும் ஆகிய ஐந்தும் அடங்காமல் உலகியலில் நாட்டம் கொண்டு செயற்படும். இதனால் உலக வாழ்வும், இதில் உள்ள அசையும் அசையாப் பொருள்கள் மேல் வைத்த பற்றும் தவிர்க்க முடியாததாகக் காணப்படும். மனம் உலகியலில் பற்றுக்கொண்டிருக்கும் வரை உலகம் நிலையானதாகவே தோன்றும். பற்றுக்களை விட்டு இறைவனைப் பற்றினால் உலகியல் பற்றுக்கள் மறையும், கருவிகள் விரிந்த நிலையில் உலகம் காட்சிப் பொருளாய்த் தோன்றும். குவிந்த நிலையில் காட்சிப் படாததாய் இருக்கும்.

செவி, மெய், கண், வாய், மூக்குச் சேர் இந்திரியம்
அவி இன்றிய மனம் ஆதிகள் ஐந்தும்
குவிவு ஒன்று இலாமல் விரிந்தும் குவிந்தும்
தவிர்வு ஒன்று இலாத சாராசரம் தாமே

பொய்ப்பொருளை நீக்கி மெய்ப்பொருளைச் சேர்தல் வாய்மை எனப்படும். நெருப்பிலிட்ட பொன் மாசு நீங்கி உயர்ந்த பொன்னாவது போலச் சீவனும் அருளும் உபதேசங்களாகிய நெருப்பால் மலமாகிய குற்றம் நீங்கி ஒளிவிடும்.

உடலில் உள்ள அகப்புறக் கரணங்கள் அனைத்தும் இறைவனை நோக்கித் திரும்பினால் இறைவனை நமது அகத்திலே தரிசிக்கலாம் என்பதை,

"தேடிக் கண்ட கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்"

என அப்பர் பெருமான் தனது திருவங்கமாலைப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

உள்ளத்துள்ளே இறைவன் கோயில் கொண்டிருக்கிறான் என்னும் உண்மையை உணர்ந்தவர்கள் உலகுக்குத் தலைவன் எனத் தரும் தகுதிக்கு உயர்ந்தவர்கள் ஆவார்கள். அவர்களே உலக ஞானத்துக்கோர் எடுத்துக்காட்டாகவும் திகழ்வர். இப்படிப்பட்ட நல்லோர்கள் நாட்டில் இருப்பதால்தான் வானம் பொய்க்காது மழை பொழிகிறது என மாமறையாகிய வேதங்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட மேலோர் நெஞ்சு நெக்குருக இறை நினைப்புடனே என்றும் இருப்பார்கள். அவர்களுடைய நினைவும் மனமும் எப்போதும் இறைவனுடன் இரண்டறக் கலந்து நிற்கும்.

தானே உலகில் தலைவன் எனத் தகும்
தானே உலகுக்கு ஓர் தத்துவமாய் நிற்கும்
தானே மழைபொழி மாமறை கூர்ந்திடும்
ஊனே உருகிய உள்ளம் ஒன்று ஆமே...

மயக்கத்தைத் தருவன ஐம்புல ஆசைகள். மயக்கத்தால் வரும்கலக்கத்தைப் போக்க வல்லவன் சிவன். உலகியல் பற்றுக்களினால் பீடிக்கப்பட்டிருப்பவர்கள்

பரம்பொருளாகிய சிவனை இடைவிடாது வணங்கினால் அவன் காலம் தாழ்த்தாது வந்து அருள் செய்வான். முழுமுதற் கடவுளாக இருக்கின்ற சிவனையே வணங்க வேண்டும். சிவனை வழிபடாமல் சிறு தெய்வங்களை வழிபடுவதனால் எதுவித பிரயோசனமும் இல்லை.

" சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்"

என அப்பர் பெருமானும் சிறு தெய்வ வழிபாட்டால் பயனில்லை எனக் கூறுகின்றார். சிவனே எம்பிரான் என்று தொடர்ந்து வணங்கியதால் என்னுள்ளம் அவன் நினைவில் கூடிடச் சிவன் கருணை காட்டினான் என்றே தவயோகி திரு மூலநாயனாரும் தனது பாடலில் கூறுகின்றார்.

மயக்கிய ஐம்புலப் பாசம் அறுத்து
துயக்கு அறுத்தானைத் தொடர்மின் : தொடர்ந்தால்
தியக்கம் செய்யாதே, சிவன் எம்பெருமான்
உய்ப்போ என மனம் ஒன்று வித்தானே.

நமது வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். நாம் இந்தப் பூமியில் வெறுமனே காலத்தைப் போக்க வரவில்லை. மனதிற்கு உள்ளேயும் வெளியேயும் தீய எண்ணங்கள் சூழ்கின்றபோது வாழ்வு அர்த்தமற்றதாகிவிடும். வாழ்க்கையின் நோக்கமே மகிழ்ச்சியாக இருப்பதுதான். எனினும் உண்மையான மகிழ்ச்சி பிறருக்கு உதவும்போது தான் உண்டாகிறது. நீருக்கு மட்டுமின்றி சிந்தனையில் ஊறிப் பிறக்கும் சொற்களுக்கும் ஆழமுண்டு. எண்ணத்தின் வலிமை அதிகரிக்கும் போது, நமது சத்தியின் அளவும் அதிகரிக்கும். சொற்களை உச்சரிக்கும் முன் ஆயிரம் முறை சிந்தித்த பிறகே அவற்றை வெளியிட வேண்டும். அப்போது தான் வாழ்வில் இன்பம் இருக்கும். நாம் சிந்திப்பதை எல்லாம் பேசுவதோ, சிந்திக்காமல் எதையும் பேசுவதோ கூடாது.

**சிந்தனைக் கவிஞர் கவிதாசன்**

# சீவன் சிவமாகும்

37

தன் இயல்பு உணர்ந்த ஞானியின் செயல் வினையைக் கடிதல் ஆகும். ஞானிகள் ஐம்புல ஆசை இல்லாதவர் ஆகையால் வினைகளால் துன்பம் எய்தார். ஆன்மாக்கள் அனுபவிக்கும் கர்மவினையைச் சைவசித்தாந்தம் சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என மூன்றாக வகுத்துக் கூறும். பல பிறவிகளிலும் செய்து அனுபவித்தவை போக எஞ்சியிருப்பது சஞ்சிதவினை எனப்படும். சஞ்சிதக் குவியலில் இருந்து இப்பிறவியில் அனுபவிப்பதற்கென எடுக்கப்பட்ட வினை பிராரப்தம் ஆகும். பிராரப்த வினையை நுகரும் போது நமக்கு ஏற்படுகின்ற விருப்பு வெறுப்புகளால் புதிதாக நாம் செய்கின்ற நிகழ்வு ஆகாமியம் எனப்படும். இந்த மூன்றுவகை வினைகளிலிருந்தும் விடுபட்ட ஜீவன் முத்தர்களே ஞானிகள் எனப்படுவர்.

"தன்னை அறிந்தவன் தத்துவஞானி என்றே இந்து சமயத் திருநூல்கள் அனைத்தும் கூறுகின்றன. தன்னை அறிந்தவன் தலைவனாகிய இறைவனை அறிவான். இறைவனை அறிதற்குரிய தடைகளையும் அறிவான். தடைகளைத் தாண்டி இறையருளைப்பெறும் வழி தன்னை அறிந்தவனாலேயே முடியும். இதனை நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்? என்னை யாரறிவார்? என்றே மணிவாசகரின் திருவாசகமும் குறிப்பிடுகிறது. உலகியல் வாழ்க்கையிலே கூடத் தன்னை அறியாது, தனது நிலை அறியாது, தான்தோன்றித்தனமாக நடந்து தமது வாழ்வையே

அழித்தவர்கள் பலரைக் காண்கின்றோம்.

தம்முள்ளே இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை உணர்ந்த ஞானிகளுக்கு உள்ளம் கருவறையாகவும் ஊனுடம்பு இறைவன் வீற்றிருக்கும் ஆலயமாகவும் மாற்றம் பெற்றுவிடும். இவர்கள் தன் முனைப்பையும் பற்றுக்களையும் நீக்கி முன் செய்த பழவினையின் பயன்களாகிய பாவமூட்டையின் முடிச்சை அவிழ்த்து அவற்றை விலகி ஓடச்செய்து விடுவார்கள். தன்னை உணர்ந்த தத்துவஞானிகள் பழவினையின் பந்தத்தை சிவசிந்தனையால் நீக்கி விடுவார்கள். ஏறுவினையாகிய ஆகாமியவினையை நெருங்கவிடாமல் அழித்து ஒழித்து விடுவார்கள். இவர்கள் இறைவன் திருவடிகளைத் தமது தலைமேல் தாங்கி நிற்பதால் அவனருளின் துணையால் இதனைச் சாதித்து விடுகிறார்கள்.

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே

பொருளின் மேற்செல்லும் ஆசையைப் போக்குதல் " அவா அறுத்தல் ." எனப்படும். ஆசை பிறவிக்கு வித்தாதலால் அதனை அறுப்பது ஞானியின் கடனாகும். மனிதன் படும் துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணம் ஆசையே ஆகும். "ஆசையை வெல்பவன் பூரண மனிதன் ஆகிறான்." என்றே பகவத் கீதையும் கூறுகிறது. இறை அநுபூதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசை எப்பொழுதும் தடைக்கல்லாக இருக்கும்.

அருணகிரிநாதர் சிறந்த முருகபக்தர். இவர் முருகன் மீது பாடிய மந்திரமாலையாகிய கந்தரநுபூதியில் ஞான நிலைக்கு ஆதாரமான மௌன நிலையை; தான் பெற்ற சிறப்பினை எடுத்துக் கூறுகின்றார். ஞானபண்டிதனாகிய முருகப் பெருமானின் அன்புடன் கூடிய அருளினால் ஆசையாகிய விலங்கு; தூள் தூளாக முற்றிலும் பொடியாகியது. இதனால் பேசா அநுபூதியாகிய மௌனநிலை தனக்குத் தோன்றியது என்பதை

"ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அனுபூதி பிறந்ததுவே"

என அருணகிரியார் கந்தரநுபூதியில் குறிப்பிடுகின்றார். ஒருவன் எந்தப் பொருள்களில் இருந்து ஆசையை அறுத்துக் கொண்டு பற்று அற்றவனாக இருக்கின்றானோ, அவன் அந்தப் பொருள்களினால் வரும் துன்பத்தை அடைவதில்லை என்பதை

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்."

என்றே தமிழ் மறையாகிய திருக்குறளும் செப்புகிறது. தனது அடியவனுக்கு பக்தனுக்கு எதைத் தரவேண்டும் என்பது இறைவனுக்குத் தெரியும்.

"வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ

என்றே மணிவார்த்தையாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. வினைக்கு வித்தாக இருக்கும் ஆசையைக் களையுங்கள் என்றே திருமூலர் கூறுகின்றார். இதுவே வழி என்பதற்காக இதனை " ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்" என்று இரண்டு முறை அழுத்திக் கூறுகின்றார். ஆசைகளைத் தீர்த்துக் கொள்ள வேறு வழிகளை நாடாமல் ஈசனையே பிரார்த்தித்துப் பெறலாம் என்று முயல்வதும் கூட ஆசைகளைப் பெருக்கும் என்கிறார். இறைவனைத் தியானிக்கும் போது, ஆசைகளைப் பிணைத்துப் பிரார்த்தனை செய்ய வேண்டாம் எனக் கூறுகின்றார். இதற்காகத்தான், "ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" என்கிறார். ஆசை பெருகப் பெருக அவற்றால் உயிர்க்குத் துன்பம் உண்டாகும். ஆசையை அறவே விட்டால் ஆனந்தம் அகத்திலே ஊற்றெடுக்கும்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தமாமே

அடியவர்க்கு எளியவனாகிய இறைவனின் அருளைப் பெறுவதற்கு பக்தி மார்க்கமே சிறந்தது என நாரத மகரிஷி பக்தி சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். "பக்தி வலையில் படுவோன் காண்க" என்றே திருவாசகமும் கூறுகிறது. அடியவன் இறைவனிடம் வைக்கும் அன்பின் முதிர்வு நிலையே பக்தி ஆகும். பக்தி பிரபக்தியாக மாறும் பொழுது நான், எனது என்ற முனைப்புகள் நீங்கி ஆன்மா இறைவனின் திருவடி நிழலைச் சரணாகதியாகப் பற்றிக் கொள்ளும். தேவர்களாலும் காணப்படாத பரமசிவன், தன்னை அடைந்த அடியவர்களின் உள்ளத்திலே பேரறிவாய் நின்று பிரகாசிப்பான் என்பதை,

ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்

எனத் திருவருட்பயன் விளக்குகிறது.

பசுவினது கன்று தாயை நாடிக் கதறி அழைப்பது போல நான் கன்றாய் இருந்து என் நாதனாகிய இறைவனை நாடி அழைத்தேன். நான் கன்றின் தன்மையில் இருந்து என் தாயாகிய சிவத்தைப் பக்தியினால் கதறி அழைத்தேன். தேவர்களாலும் காண முடியாத மறைப் பொருளாகிய சிவன் ஊன் உடம்பால் கட்டப்பெற்றிருக்கும் என்னை விரும்பி என் உள்ளத்தில் எழுந்தருளியுள்ளான்.

ஆன் கன்று தேடியழைக்கு மதுபோல்
நான் கன்றாய் நாடியழைத்தேனென் நாதனை
வான் கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்
ஊன் கன்றானடி வந்துள் புகுந்தானே

பக்தியினால் ஞானிகள் சீவன் முத்தி நிலையைப் பெறுவார்கள். உடலோடு இருந்த படியே ஞானிகள் பெறும் முத்தி சீவன் முத்தி எனப்படும். சீவன் முத்தர்களாகிய ஞானிகள் மக்களை இரட்சிப்பதற்காகவே இவ் உலகில் பிறப்பது உண்டு . இவர்கள் மலங்களால் பீடிக்கப்படாதவர்கள். உடலில் இருப்பினும் இறைவனோடு ஒன்றியிருப்பர். இவர்களுடைய வாக்கு இறைவன் வாக்காகவும் இவர்களுடைய செயல்கள் இறை அருட் செயல்களாகவுமே இருக்கும்.

முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து அவற்றுக்கு அப்பாலுள்ள ஸ்கந்த சாயுச்சிய நிலையைப் பெறுவதற்குத் தனக்கு வழிகாட்டுமாறு அருணகிரியார் முருகப் பெருமானிடம் வேண்டுவதை

"ஆறாறையும் நீத்ததன் மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமாறுளதோ"

எனக் கந்தரநுபூதிப் பாடல் குறிப்பிடுகிறது.

முத்தி நிலையில் சிவபிரானது முழு அருளையும் சீவன் பெற்றுவிடும். முப்பத்தாறு தத்துவங்களும் தனக்கு வேறெனக் கண்டு நீங்கி ஆன்மா உண்மையை உணர்ந்து கொள்ளும். தனது கடமை இறைவனை நினைந்திருத்தலாகிய தவத்தைச் செய்தல் என்பதை உணர்ந்து அதன்படியே ஆன்மா செயற்படும். வினைகள் நீங்கி உண்மையான பக்தியில் ஈடுபட்டவர்கள் மேலான சிவானந்தத்தைப் பெற்ற மெய்யறிவுடைய ஞானிகளே ஆவார்.

முத்தியில் அத்தன் முழுத்த அருள் பெற்றுத்
தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி
மெய்த்தவஞ் செய்கை வினைவிட்ட மெய்யுண்மைப்
பத்தியிலுற்றோர் பரானந்த போதரே

குருவருளால் ஆன்மா உண்மையை உணர்தல் சோதனை எனப்படும். காண்பவன், காட்சி, காட்சிப் பொருள் ஆகிய மூன்றும் அற்று இறைவனுடன் அத்துவிதமாய் நிற்கும் நிலையே "சும்மா இரு" என்று முருகப் பெருமான் அருணகிரியாருக்கு உபதேசித்த உயர்ந்த நிலை ஆகும்.

"சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"

எனக் கந்தரநுபூதிப் பாடல் இந்த உண்மையை விளக்குகிறது. எல்லா விதமான மாயா சம்பந்தங்களையும் கடக்கச் செய்து அவற்றினின்றும் வேறுபடுத்திச்

செயலற்று இருக்கும்படி குருதேவராகிய நந்தியெம்பெருமான் தனக்கு அருளினார் என்பதை

"எம்மாயமும் விடுத்து என்னைக் கரந்திட்டுச்
சும்மா திருந்து இடம் சோதனை ஆகுமே"

எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். குருவின் திருவருளால் சீவபோதம் அழிந்த பின் அகத்திலே சிவம் வந்து பொருந்தும்; சிவ மணம் கமழும். சீடனிடம் அஞ்ஞானம் அகன்று விட, ஞானம் தோன்றும். சோதனை செய்யப்பட்ட சீடர்களிடம் இருந்து மும்மலங்களும் நீங்கிவிடும்.

காற்றினில் இருந்து பிரிக்க முடியாது காணப்படும் பரிசமும், கரும்புள்ளே கலந்திருக்கும் இனிப்புச் சுவையும், பழத்தோடு பொருந்தியிருக்கும் தித்திப்புச் சுவை தரும் சாறும், பூவை விட்டு விலகாது அதனோடு இரண்டறக் கலந்திருக்கும் மணமும் போலச் சீவர்களின் உயிரோடும் உணர்வோடும் ஒன்றாகக் கலந்திருக்கின்ற எம் இறைவன் அவ் உயிருக்குக் காவலனாய் எங்கும் நிறைந்து விளங்குகிறான்.

காலினில் ஊறுங் கரும்பினில் கட்டியும்
பாலின் உள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவின் உள் நாற்றமும் போல் உளன் எம் இறை
காவலன் எங்கும் கலந்து நின்றானே

திருமந்திரத்தின் எட்டாம் தந்திரம் முழுவதும் சாத்திரப் பகுதியாய் அமைந்துள்ளது. உடம்பின் கூறுகளை விளக்கி உயிரின் இயல்பைத் தெளிவித்து முத்தி நெறியை இப்பகுதி விளக்குகிறது. தத்துவமசி என்ற உபநிடத மகாவாக்கியத்தின் பொருள் "அது நீ ஆகிறாய்" என்பதாகும். குரு உபதேசித்தருளிய தத்துவமசி வாக்கியத்தால் சீடன் "நான் அது ஆனேன்." எனப் பாவிக்க சீவன் சிவமாகும். சீவன் பரமாய்ச் சிவமாதலே தத்துவமசி என்பதன் பொருள் எனத் திருமந்திரம் கூறுகிறது. பொய்ப் பொருளின் மேல் மனம் செல்வதால் ஏற்படும் ஆசையே பிறவிக்கு வித்தாகும். இதனை நீக்குவதே ஞானிகளின் முக்கியமான கடமை ஆகும். பக்தியினால் வீடு பேறு கிட்டும். குருவின் உபதேசத்தால் அழியாத உடலைப் பெறலாம் என்ற உயர்ந்த தத்துவக் கருத்துக்களை எல்லாம் எட்டாம் தந்திரப் பாடல்கள் சிறப்பாக விளக்கி உள்ளதைக் காணலாம்.

# ஞானத் தவம்

38

தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தை தமிழாகமம் என அழைக்கும் மரபு உண்டு. இருபத்தெட்டுச்சிவாகமங்களில் ஒன்பது ஆகமங்களின் சாரமாகத் திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களும் அமைந்துள்ளன. ஒன்பதாம் தந்திரம் மகுடமாகமத்தின்சாரம் எனக் கூறப்படுகின்றது. மகுடம் என்பது மன்னர் தலையில் அணியும் கிரீடமாகும். அது இங்கே வாழ்க்கைச் சிகரமாகிய பேரின்பத்தை எடுத்துக்காட்டுவதாகும். பேரின்பத்தை அடைவதற்கான வழிகாட்டியாகவும் அதனால் மேலும் அடையக் கூடிய பெறுபேறுகளைச் சாதகர்களுக்கு விளக்கும் தூண்டு கோலாகவும் திருமந்திரத்தின் ஒன்பதாம் தந்திரம் அமைந்துள்ளது. 22 உபபிரிவுகளும் 399 பாடல்களும் இப்பிரிவில் அமைந்துள்ளன.

பேரானந்தப் பெரு வாழ்வினை இறந்த பின்புதான் பெறமுடியும் எனத் திருமூலர் கூறவில்லை. பக்குவநிலை அடைந்தவர்கள் இவ்வுலகிலேயே வீடுபேற்றினைப் பெற்றுப்பெருவாழ்வு வாழலாம் என்பதைத்திருமந்திரம் தெளிவாக விளக்குகின்றது. இத்தகைய நிலையை அடைந்தவர்களைத் திருமூலர் அணைந்தோர் என வாழ்த்தி அவர்களுடைய பெருமையைப் பாடிப் போற்றுகின்றார் அவர்களை நீத்தார் எனவும், சீவன் முத்தர் எனவும் சைவ சித்தாந்தம் கூறும்.

வேதங்களில் பொதிந்துள்ள ஆழமான பொருள் மன இந்திரியங்களுக்குச் சரிவரப்புலப்படாது மறைந்துள்ள படியால் அவற்றைப்பொதுவாக மறைஞானம் என வழங்குவர். வேதங்களின் மறைபொருளை விளக்குவதே சிவாகமங்களாகும். மறைபொருள் விளக்கத்தை சிவ யோகிகள் மறைஞானம் எனக் கூறுவர். இந்து

சமயம் மறைஞானத்தைப் பொதுவாக தரிசனம் என்று கூறும். ஆன்மா பரம்பொருளோடு இணைய எடுத்துக்கொள்ளும் முயற்சி அல்லது அம் முயற்சியில் பெறும் அனுபவம் மறைஞானம் எனப்படும். வைச சித்தாந்த தத்துவத்தின் முதற் தரிசன நூலாகத் தமிழில் அமைந்திருப்பது திருமந்திரமே ஆகும்.

சாதாரணமாகக் கேள்வி அறிவிலும் பார்க்க காட்சி அறிவு தெளிவு கூடியதாகும். செவிக்கும் மூளைக்கும் தொடர்புள்ள மூளைநரம்புகளிலும் பார்க்க கண்ணுக்கும் மூளைக்கும் தொடர்புள்ள நரம்புகள் இருபது பங்கு சக்தி கூடியவை என நரம்பியல் நிபுணர்கள் ஆய்வு செய்து கூறியுள்ளனர். கல்வி கேள்வி அறிவு மூலம் பெறும் மன வாசக உண்மை விளக்கத்தை விட மாசறு காட்சி மூலம் பெறும் சத்தியப் புலப்பாடு ஆயிரம் பங்கு கூடியது. திருமந்திரத்தின் ஒன்பதாம் தந்திரம் சிவதரிசனமாகிய மாசறு காட்சிக்கே முதலிடம் கொடுக்கின்றது. குருமடதரிசனத்துடன் ஆரம்பமாகும் ஒன்பதாம் தந்திரம் படிப்படியாக ஞானகுரு தரிசனம், திருக்கூத்துத் தரிசனம், சிவ தரிசனம், சிவசொரூப தரிசனம், மோன சமாதி என உயர்ந்து செல்கிறது. மோன சமாதி இன்றி மாசறு காட்சி பெறுதல் சாத்தியமில்லை. சிவசொரூப தரிசனமே மகுடாகமத்தின் சிகரமாக விளங்குகிறது. காலம், இடம், காரணம் ஆகிய மூன்று பரிமாணங்களுக்கும் உட்பட்ட கொள்கைகளும் கருத்துக்களும் சிவசொரூப தரிசனத்தைக் கொடுக்கமாட்டாது. நான்காவது பரிமாணமாகிய துரியாதீதம் அல்லது மோன சமாதியே சத்திய தரிசனத்தை நல்குவதாகும்.

அன்பர்கள் உள்ளமே இறைவன் வாழும் இல்லம். தன்னைச் சார்ந்த தனக்குரியவனான இறைவனைக் கொள்வதே அறிவுடமை ஆகும். மெய்யடியார்கள் தேடிச்சென்றடைய வேண்டியது சிவப்பரம்பொருளின் திருவடிகளே என்பதைத் திருமந்திரம் வலியுறுத்துகிறது. பிறருக்குத் தீமை எண்ணாத அற உணர்வுகளே அருட்காட்சி எனக் கூறுகிறது. சிவப்பரம்பொருளே உலக உயிர்களின் தோற்றத்திற்குக் காரணமாகிறது.

சுத்த மாயை, அசுத்த மாயை ஆகிய இரண்டும் ஆன்மாக்களைப்பற்றி நின்று அவற்றின் அறிவை மழுங்கச் செய்யும், ஆன்மாவைப்பீடித்திருக்கும் பஞ்ச கோசங்களாகிய அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம், ஆகிய ஐந்து திரைகளும் அகல அகத்திலே பரம்பொருள் காட்சி தோன்றும். சிவம் பிரகாசிக்கும்; அறியாமை அகல ஆன்மா தன்னையும் அறிந்து தலைவனையும் அறியும். இப்படி உணரும் நிலை பெற்றவர்கள் ஞானத்தவயோகம்அடையப்பெற்ற ஞானிகள் ஆவார்கள். ஆன்மா ஒளி பெற்ற ஞானிகள் காண்பான் - காணப்படும் பொருள் - காட்சி ஆகிய மூன்றும் கடந்த மேலான பிரணவ யோகத்தை அறிந்தவராவார்கள்.

மாயை இரண்டும் மறைக்க மறைவுறும்
காயம் ஓர் ஐந்தும் கழியத்தான் ஆகியே

தூய பரஞ்சுடர் தோன்றச் சொரூபத்துள்
ஆய்பவர் ஞானாதி மோனத்தர் ஆமே.

ஞானகுரு தரிசனமும் ஆன்மிக விடுதலைக்கு நல்லதொரு வழிகாட்டியாகவே அமைகிறது. முப்பத்தாறு தத்துவங்களையும் கடத்தல், விழிப்பு, உறக்கம், கனவு ஆகியவற்றைக் கடந்து துரியாதீத நிலை என்னும் சமாதி நிலையை அடைதல். சிவனும் சீவனும் அத்துவிதமாகக்கலந்து நிற்கும் சிவோகம் பாவனை செய்தல், தியானநெறியை அனுசரித்தல் ஆகிய நான்கும் சாதனா முறைகளைச் சாதகர்களுக்கு சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. ஞான குருவின் நேரடியான வழிகாட்டுதல் இன்றிச் சாதனாமார்க்கத்தினைக் கடைப்பிடித்தல் இயலாததாகும். வழிகாட்டல் முறைகளை ஞானகுரு தரிசனத்தின் மூலமே பெற்று அனுசரித்தல் வேண்டும் எனத் திருமந்திரம் கூறுகிறது.

பசுவாகிய சீவன்களைப் பிறர் வணங்கும்பபடியான தலைவராக்கி, நாவால் இறைவனைப் போற்றி வணங்கும் நிலையைக் குருவாகிய நந்தியெம்பெருமான் அருள் செய்து உதவினார். ஆதலால் நாம் இனிமேல் சிறு தெய்வ வழிபாட்டைச்செய்யமாட்டோம். சிவன் ஒருவரையே வணங்குவோம். சிவனையே சிக்கெனப் பிடித்தமையால் நாமும் பிறரால் வணங்கப்பெறும்பேறு பெற்றவர்கள் ஆனோம்.

கோ வணங்கும்படி கோவணம் ஆக்கிப் பின்
நா வணங்கும்படி நந்தி அருள் செய்தான்
தே வணங்கோம் இனிச் சித்தம் தெளிந்தனம்
போய் வணங்கும் பொருளாய் இருந்தோமே

( கோ- ஆன்மா, கோவணமாக்குதலாவது - தலைவனாய் ஆக்குதல், தே- சிறுதெய்வம்)

ஓம் என்னும் பிரணவமே ஓங்காரம் எனப்படும். ஓங்கார ஒலியிலிருந்தே ஐம் பூதங்களும் தோற்றம் பெற்றன. ஓம் என்னும் பிரணவத்தை அறிந்தவர்களுக்கு முத்தியும் சித்தியும் கைகூடும்.

மனித மனம் ஒரு நிலையில் நில்லாது என்றுமே தடுமாறிக்கொண்டு இருக்கும். அலை பாய்ந்து கொண்டே இருக்கும். நன்மை தீமை அறியாது மயக்கம் உறும். இந்த நிலையில் மனத்தெளிவும் மன உறுதியும் உள்ளம் பெற உதவுவது ஞானகுரு உணர்த்தும் உபதேசமே ஆகும். ஒளி விளக்காக இருந்து ஆன்ம விடுதலைக்கு இதுவே துணை செய்யும் ஆன்மாக்களின் தவ முயற்சியும் சித்த சுத்தியுமே இதற்குத் துணையாகநின்று உதவும். இதுவே சன்மார்க்க உபதேசம் கூறும் நன்மார்க்கமாகும்.

மலையும் மனோபவம் மருள்வனவாவன
நிலையின் தரிசனம் தீப நெறியாம்

தலமும், குலமும் , தவம் சித்தம் ஆகும்.
நலமும் சன்மார்க்கத்து உபதேசந்தானே.

சிவன் பேரொளிப்பொருள். சீவன் ஒளிப்பொருள். சீவனாகிய ஒளிப்பொருள் சிவனாகிய பேரொளியை அறியில் பிறவி நீங்கும். சிவ ஒளியை உணர்ந்து அறிந்திருந்தால் உடம்பைப்பற்றிய நினைப்பு மறந்து போகும். அழியப்போகின்ற உடம்பின் நினைப்பு இருந்தால் மீண்டும் பிறவி எடுக்க நேரிடும். சிவனுடைய அருளைப் பெற்ற ஞானிகளுக்கு சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடரும் மூன்று கண்களாக அமையும்.

உலகத் தோற்றத்துக்கு காரணமாகிய இறைவன் உண்டு என்று இந்து சமய தத்துவங்கள் அனைத்தும் கூறுகின்றன. ஆனால் இறைவன் என்றொரு பொருள் தேவையற்றது என்பது பௌத்தம், சமணம், உலகாயதம், ஆகிய அவைதீக தத்துவங்களின்கருத்தாகும். தொன்றுதொட்டே இயங்கி வரும் உலகத்தையும், அதன் தோற்றத்தையும் கண்ட பின்பும் அதற்குக் காரணமான இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதைமறுப்பவர்கள் மேலான நற்கதி அடைய முடியாது. கண்ணால் கண்ட உலகத்தையே இல்லை என மறுப்பவர்கள் காணவேண்டும் என்ற நினைப்புடன் பார்த்தால் அவர்களுடைய உள்ளத்தில் அப்பரம்பொருள் விளக்கொளி போல விளங்கித்தோன்றும்

உண்டு இல்லை என்னும் உலகத்து இயல்பிது
பண்டு இல்லை என்னும் பரங்கதி உண்டு கொல்
கண்டு இல்லை மானுடர் கண்ட கருத்துறில்
விண்தில்லை உள்ளே விளங்கு ஒளி ஆமே

சிவ மூல மந்திரமாக நமசிவாய மந்திரம் திகழ்கிறது. நமசிவாய மந்திரம் தூல பஞ்சாக்கரம், நகராதி பஞ்சாக்கரம் எனக் கூறப்படுகிறது. சிவாயநம, சூக்கும பஞ்சாக்கரம், சிகராதி பஞ்சாக்கரம் எனக் கூறப்படுகிறது. உலகியல் வாழ்க்கையின் நன்மையை விரும்புபவர்கள் தூல பஞ்சாக்கரத்தையும்,முக்தி காமிகள் சூக்கும பஞ்சாக்கரத்தையும் ஓதிப்பயன்பெறலாம். புற வழிபாட்டில் கூறப்படுவது "நமசிவாய" அகவழிபாட்டில் தியானத்தில் செபிக்கப்படுவது" "சிவாயநம" ஆகும். தூல பஞ்சாக்கரம் உயிர்களைத் தீயவழிக்குச் செல்லாது திருத்தி நல்வழிப்படுத்தும் அங்குசமாகத் திகழ்கிறது. உடம்பை விட்டுப்போகும் உயிர்க்கு அடைக்கலமாகப் பாதுகாப்பாகக் கைகொடுப்பது அஞ்செழுத்தே ஆகும். மரணப் படுக்கையில் இருப்பவர்களின் உயிர் உடலை விட்டுப்பிரியும் நேரத்தில் அவர்களுடைய நெற்றியிலே திருநீறணிந்து, கையிலே தர்ப்பைபோட்டுக் காதிலே நமசிவாய மந்திரத்தை ஓதும் வழக்கம் நமது சமூகத்தில் பல்லாண்டு காலமாக நிலவி வந்தது. கால வெள்ளத்தால் அழிந்து போன நமது பண்பாட்டு அம்சங்களில் இதுவும் ஒன்றாகி விட்டது.

நாள்தோறும் மனதால் நமசிவாய மந்திரத்தை நினைத்துத் துதித்தும், வாயால் " இறைவா!எம் தலைவா! எனப் போற்றியும், துயிலப் போகும்

போதும் இறைவா உன் திருவடிகளே எனக்குத் துணையாக வேண்டும் என்றும் நினைத்தும் வாழ்ந்தால், திருக்கைலாய மலையில் அமர்ந்து இருக்கும் பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருளைப் பெறலாம்.

நெஞ்சு நினைந்து தம் வாயால் பிரான் என்று
துஞ்சும் பொழுது உன் துணைத்தாள் சரணென்று
மஞ்சு தவழும் வடவரை மீது உறை
அஞ்சில் இறைவன் அருள் பெறலாமே

சிவாயநம என்ற சூக்கும பஞ்சாக்கரத்தை ஒளிபெற்ற குரு சீடனுக்கு உபதேசம் செய்வார். சிவமும் அதன் உடனான சக்தியும் ஒளிமயமானவை. சூக்கும பஞ்சாக்கர செபத்தால் சீவனைப்பற்றிய பாசம் நீங்கிவிடும். சிவப் பரம்பொருளைச்சிந்திப்பதில் உள்ள பயன்களை அறியாதவர்கள் வாயிருந்தும் பேச இயலாத ஊமைகளாவர். சிவ சிவ என்று சிந்திக்க மனமும் மூச்சுக் காற்றாகிய பிராணனும் அலைபாயாது குவிந்து ஒரு முகப்பட்டு உள்ளடங்கி இருக்கும்.

முற்பிறவியில் செய்த தீவினையின் காரணமாக சிவ சிவ என்று சிவனது திருப்பெயரைப் பாவிகள் சொல்வதில்லை. எத்தகைய தீவினையாளரும் சிவ சிவ என்று கூறுவாராயின் அவர்களின் தீவினைகள் நீங்கும். சிவ சிவ என்று கூறித் தியானிப்பவர் தெய்வ வடிவம் பெற்றுத் திகழ்வர். சிவ நாமத்தை தொடர்ந்து கூறினால் நமது தீவினைகள் முற்றாக நீங்கி விடுவதுடன் சிவகதியும் கிடைத்துவிடும்.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்னச் சிவ கதிதானே

மலம் நீங்கிய சீவன் சிவ சக்தியோடு பொருந்தி ஆனந்த நிலையில் இருக்கும். வேத ஞானத்தின் பிழிவாக அதில் முதிர்ந்து கனிந்த பழமாக உள்ளது ஐந்தெழுத்து மந்திரமாகும். ஆனால் இந்தப் பழத்தை உண்டு பயனடைந்து சித்த சமாதி நிலையில் நிற்கும் எண்ணம் எவர்க்கும் இல்லை. இது ஐந்தெழுத்துத் தானே? இது எங்களுக்கும் தெரியும் என்று கூறுபவர்கள் மூடர்கள். இவர்கள் தங்கள் தலையெழுத்தை மாற்றி அமைக்கும் தலைப்பெழுத்து பஞ்சாட்சர மந்திரம் என்பதைச் சிறிதும் அறியார். ஞான மில்லாதவர்கள் பஞ்சாட்சரம் தலைவிதியை மாற்றும் தன்மை உடையது என்பதை அறியாமல் தவிக்கிறார்கள்.

பழுத்தன ஐந்தும் பழமறை உள்ளே
விழித்து அங்கு உறங்கும் விளைவு அறிவார் இல்லை
எழுத்து அறிவோம் என்று உரைப்பர்கள் ஏதர்
எழுத்தை அழுத்தும் எழுத்து அறியாரே

# சிவானந்தக் கூத்து

**ந**டராஜ மூர்த்தியின் ஆனந்தக் கூத்திலேதான் உலகின் தோற்றமும், இயக்கமும், மறைவும் எல்லாம் நடைபெறுகின்றன. எல்லாமாக நூற்றெட்டுத் திருக்கூத்துக்கள் உள்ளதாக சிவாகமங்கள் கூறுகின்றன. மகுடாகமம் கூறும் ஆனந்த தாண்டவம் நடராஜ வடிவமேயாகும். திருக்கூத்தானது ஓங்கார பஞ்சாட்சர மந்திரங்களின் வியாக்கியானமாக உள்ளது. நடராஜரின் திரு உருவம் பஞ்சகிருத்தியச் செயற்பாடுகளை விளக்குவதாக அமைந்துள்ளது. உடுக்கு ஏந்திய கை படைத்தலையும், உபயகரம் காத்தலையும், தீ ஏந்திய கை அழித்தலையும், முயலகன் மீது ஊன்றிய திருவடி மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும் குறிக்கிறது. இதனைத்திருவதிகை மனவாசகம்கடந்தாரின் உண்மை விளக்கப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு

பஞ்சாட்சர மந்திரம் திரோதான சத்தி, மலம், ஆன்மா, சுத்த அருட்சக்தி, சிவம் ஆகிய ஐந்தின் இலக்கணங்களையும் குறிக்கும் கூத்தாகவும். இந்த ஐவகைத் திருக்கூத்துக்களையும் சிவானந்தத் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக் கூத்து எனத் திருமந்திரம் விளக்குகிறது.

39

சிவனின் திருமேனியாகிய சிவசக்தி சொரூபமே எல்லா இடமும் நிறைந்திருக்கிறது. சிதம்பரம் இறைவன் ஓயாது நடனமாடிக் கொண்டிருக்கும் இடம். இருதய ஸ்தானம் என்றும் கூறுவர். திருக்கூத்துத் தரிசனம் என்பதற்கு அழகிய திருநடனக் காட்சி என்பதே பொருளாகும்.

ஞானத்திரு உருவாகவும், சோதி ஒளி வடிவாகவும் உள்ள சிவப் பரம்பொருள் அருள் விளையாட்டாக ஐந்தொழில் புரிவது போல உலக இயக்கம் ஒழுங்குற நடைபெறுவதற்காக ஐவகைக் கூத்தினை நிகழ்த்துகிறார். சிவானந்தத்தைச் சீவன்களுக்கும் அருளும் சிவானந்தக் கூத்து, பிரணவ ஒளியில் விளங்கும் அழகியல் கூத்தாகிய சுந்தரக் கூத்து, சிரசின் மேல் சித்தாகாசத்தில் பொன் ஒளியில் விளங்கும் பொற்பதிக் கூத்து, பொன்னம்பலமாகிய தில்லையிலே ஆடும் பொற்றில்லைக் கூத்து, ஆருயிர்கள் எல்லாம் கண்டு களித்து இன்புற ஆடும் ஆனந்தக் கூத்து ஆகிய ஐவகைக் கூத்தினை ஆடுகின்றார். இவ் ஐந்தும் அறிவு, ஆற்றல், அன்பு, ஆற்றல் கூடுதல், அறிவு கூடுதல் என்பவற்றால் நிகழும் நிகழ்ச்சிகளாகும். இப்படியாக மன்றிலும், மனதிலும், வெளியிலும், ஒளியிலும், உயிரிலும் கலந்து நடனமிடும் கூத்தனாகிய சிவப் பரம்பொருளின் அளப்பரிய ஆற்றலை அறிந்துணர யாரால் இயலும் எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

சிற்பரஞ்சோதி சிவானந்தக் கூத்தனைச்
பொற்பதமாம் அந்த சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யார் அறிவாரே.

கூத்து என்பது ஆடற்கலையைக் குறிக்கும் பழைய தமிழ்ச் சொல். நடனம் ஆடும் ஆண்களைக் கூத்தன் என்றும், நடனம் ஆடும் பெண்களை கூத்தி என்றும் அழைப்பது மரபாகும். ஆடவல்லானுக்கு நடராஜன், நிருத்தியாதிபதி, தாண்டவக்கோன் எனப் பல பெயர்கள் கூறப்படுகிறது. நடனக் கலையின் தோற்றத்திற்கு மூலவராகிய நடராஜன் ஆடும் கூத்தே சிவானந்கக் கூத்து ஆகும். சிவனல்லாத மற்றும் தெய்வங்கள் சந்தர்ப்பம் கருதிச் சில வேளைகளில் மட்டும் ஆடும் கோலத்தில் காணப்படுகின்றன. ஆனால் நடராஜன் ஆடும் சிவானந்தக் கூத்து எக்காலத்திலும் ஓயாது நிகழ்வதாகும். சிவானந்தக் கூத்து இல்லாவிட்டால் உலகமே இயங்காது, அசையாது, எத்தொழிலும் நடக்காது.

நடராஜனின் ஆனந்தக் கூத்தின் பொருள் அறிவது தான் ஞானம். இந்த ஞானம் கிடைப்பதற்கும் இறைவனுடைய அருள் வேண்டும். எல்லாமே தெய்வ லீலை, எல்லாமே ஆனந்தமயம் என்பது தான் சைவர்களின் கொள்கை, எல்லையில்லாத பேரின்பம், தெவிட்டாத பெருமகிழ்ச்சி என்பதே ஆனந்தம் என்பதன் பொருள். சிவப்பரம் பொருள் திரு நடனமிடும் இடம் ஆனந்த மயமானது. ஆடும் நடனத்திற்கு ஏற்ப பாடும் பாடல்களும்போற்றும் துதிகளும் கூட பரமானந்தமானவை. பாட்டிற்கும் நடனத்திற்கும் ஏற்ப இசைக்கப்படும் இசைக் கருவிகளும் வாத்தியங்களும் கூட இன்ப ஆனந்தம் அளிப்பவை. இப்படியாக எல்லாம் இன்ப மயமாக இருக்கும்போது அவனைச் சுற்றியுள்ள அசையும் அசையாப் பொருள்கள் யாவும் இன்ப வடிவினதாகவே உள்ளன. ஆடவல்லானுக்கு எல்லாம் ஆனந்தம், பரமானந்தமாகவே காட்சி தரும்.

ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல் இயம், ஆனந்தம் வாச்சியம்
ஆனந்தம் ஆக ஆகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந்தானுக்கே

அகத்திலே இறைவனைத் தரிசனம் செய்யும் நெறியே ஞான மார்க்கம். சீவனுக்குள்ளே சிவமணம் பூத்திருக்கும் நிலை ஞான நிலை. பிரமத்தை அறிந்தவன் பிரமமாகிறான் (பிரம்மவித் பிரமைவ பவதி) என்பது கீதா வாக்கியம். ஞானத் தீ எல்லா வினைகளையும் பொசுக்கிவிடும். ஞான சாதனை செய்யும் போது பொய்யறிவாகிய அஞ்ஞானம் ஆதவனைக் கண்ட பனி போல அகன்று விடும். ஆன்மா மெய்யறிவு பெற்று நிற்கும் நிலை சிவத்தோடு சேர்ந்திருக்கும் நிலையாகும். சிவமாம் தன்மை பெற்ற ஆன்மா சிவத்தை அன்றிப் பிறிதொன்றையும் காணாது. அது தன்னையும் சத்தாகிய சிவமாகவே காணும். ஆண்மா சிவத்தோடு கலந்து அனுபவிக்கும் இன்பமே பேரின்பமாகும்.

யானையை அடக்க உதவும் அங்குசத்தைப் போல மனித மனங்களை தீமைவழிச் செல்லாது தடுத்து சன்மார்க்கமாகிய சிவநெறியிற் செல்ல உதவுவது சிவஞானமாகும். இந்த ஞானம் கைவரப் பெற்றவர்களுக்கு மனம் ஒரு முகப்பட்டு குவிந்து காணப்படும். இந்நிலையில் சங்கரனாகிய சிவன் நடு நாடியினுள் அறிவினுள் தங்கி 'தொம்தீம்' எனத் தாளமிசைத்து திருக்கூத்தாடுவான். இக்காலம் திருவருள் பொங்கும் காலமாகும். "மனம் அடங்கினால் முத்தி" என்பதே சித்த புருஷரின் வாக்கும் ஆகும். சிவன் சுழுமுனை உச்சியில் பொங்கி எழுந்து அருள் சுரக்கும் காலத்தில் மனம் அடங்கும்.

அங்குசம் என்ன எழுமார்க்கம் போதத்தில்
தங்கிய தொந்தி எனும் தாள ஒத்தினில்
சங்கரன் மூல நாடிக்குள் தரித்து ஆடல்
பொங்கிய காலம் புகும் போகல் இல்லையே

அகோரம், வாமதேவம், தற்புருடம், சத்தியோசாதம், ஈசானம் என்னும் ஐந்து திருமுகங்களைக் கொண்டு விளங்கும் சதாசிவ மூர்த்தம் உருவமாகவும், அருவமாகவும், அரு உருவமாகவும் காட்சி தருகிறது. சிவனின் திருவருளால் அவனின் திருவடிப் பேறு பெற்றுச் சிவானந்தம் கிடைத்தவர்கள் சிவனடியார்கள் ஆவார்கள். இவர்களே இறைவன் பொன்னம்பலத்தில் ஆடும் திருநடனம் கண்டு களிக்கும் பேற்றினைப் பெற்றவர்கள்.

இந்திரியங்களின் இச்சை வயப்பட்டு அலையும் ஆசை வயப்பட்ட மனம் உடைய என்னை அடங்கி நிற்குமாறு செய்து குருவடிவம் தாங்கி நந்தியெம்பெருமான் தனது திருவடிகளை என் தலைமேல் வைத்து ஆட்கொண்டான். பரிபூரண ஞானத்தை நடன உருவில் காட்டும்

மூர்த்தியாகிய நடராஜப் பெருமான் பேரானந்தப் பேற்றினை நாம் அடையும் இடத்தினை நமக்குக் காட்டி அருள் செய்தான். சித்திரம் போலச் சித்தமானது அசைவற்று நிற்கும் வண்ணம் என் உள்ளத்தில் வந்து அமர்ந்து தன் கருணையை ஐம்புலன்களிலும் வியாபிக்கச் செய்து பேரின்ப நடனம் புரிந்து ஆட்கொண்டார்.

அடங்காத என்னை அடக்கி அடிவைத்து
இடங்காண பரானந்தத்தே என்னை இட்டு
நடத்தான் செயும் நந்தி நன் ஞானக் கூத்தன்
படந்தான் செய்து உள்ளுள் படிந்திருந்தானே

நிலத் தொடர்பின்றி நாற்புறமும் கடல் சூழ இருப்பதுதான் நமது தாய் நாடாகிய ஈழமணித் திருநாடு. இதனைச் சிவபூமி என்கிறார் திருமூலர். யோகக் கலையை ஆதாரமாகக் கொண்டு இதனை விளக்குகிறார். உலகில் உயர்ந்து விளங்கும் மேருமலைபோல உடம்பில் நடுநாடி உள்ளது. நடு நாடியின் இரு பக்கமாக இடகலை, பிங்கலை நாடிகள் விளங்குகின்றன. பூமியோடு தொடர்பற்றுத் தனியாகக் கடல் நீர் சூழ் இலங்கைத் தீவு காணப்படுகிறது. இதே போல இடகலை, பிங்கலை ஆகிய இரு நாடிகளும் இதயமாகிய தில்லை வனத்தை வளைத்து உச்சித் தலையில் சென்று சுழுமுனையில் கூடுகிறது. இதயமாக தில்லைச் சிதம்பரமும் சிரசாக இலங்கையும் சுட்டப்படுகிறது. இதயமும் தலையும் சிவபூமியாகும். இதயத்தில் இறைவனை நினைத்து வழிபடுவது கிரியை நெறி. உச்சித்தலையில் வைத்துப் பரம் பொருளை வழிபடுவது ஞானமார்க்கம். சிவபூமியில் இறைவனை வைத்து வழிபட்டால் சிரசின் மேல் நட்சத்திரங்கள் போன்ற ஒளி தோன்றும்.

மேரு நடுநாடி மிக்க இடை, பிங்கலை
கூரும் இவ்வானின், இலங்கைக் குறி உறும்
சாரும் திலை வனம் தண்மாமலயத்து ஊடு
ஏறும் சுழுமுனை இவை சிவபூமியே

சிவனுக்கு ஐந்து முகங்கள் உண்டு. அதோ முகம் சக்திக்கு உரியது. ஐம்முகச் சிவன் அதோ முகத்தை உடைய சக்தியுடன் இணைந்து ஆறுமுகச் செவ்வேளாக உலகம் உய்யத் தோன்றினார் என்றே கந்தபுராணம் கூறுகிறது. ஆறுமுகங்களை உடைய கந்தவேட் பெருமானை ஞானபண்டிதன் என முருக உபாசகர்கள் அழைப்பார்கள். சிவனுக்கு பிரணவ மந்திரத்தின் உட்பொருளை விளக்கியதால் சுவாமிநாதன் என்றும் முருகப் பெருமான் அழைக்கப்படுகின்றார்.

நாதா குமரா நம என்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்

என அருணகிரிநாதர் முருகப்பெருமானிடம் வேண்டுவதைக் கந்தரநுபூதியிலே காணலாம்.

ஆத்ம சொரூபம் அகத்திலே பிரகாசிக்கும் சாதகர்கள் ஐந்து முகத்தோடு அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுகத்தோடு கூடியவன் குருபரன் என்பதை அறிந்தனர். சிவ சிந்தனையில் பொருந்திய தவ யோகிகள் தெளிந்து அறிந்த நிலையில் தென்தில்லைச் சிற்றம்பலம் வேறு, மெய் அடியார்களின் உள்ளம் வேறல்ல என்பதை அறிந்தனர்.

ஆறு முகத்தில் அதிபதி நான் என்றும்
கூறு சமயக் குருபரன் நான் என்றும்
தேறினர் தெற்குத் திருவம்பலத்துளே
வேறு இன்றி அண்ணல் விளங்கி நின்றானே

சிவனடியார்களும் சிவனும் வேறுபட்டவை அல்ல என்பதே சைவ சித்தாந்தத்தின் முடிவும் ஆகும்.

வார்த்தைகளால் கூற முடியாத பரவச நிலையை அடையச் செய்வது அற்புதக் கூத்து. உலகில் உள்ள அசையும் அசையாப் பொருள்கள் அனைத்துமே இறைவன் திருநடனம் ஆடும் அரங்கமாகும். முப்புரம் எரித்தபோது இறைவன் ஆடிய கூத்து பாண்டுரங்கம் எனப்படும்.

புளியைப் பார்த்தால் சிலருக்கு வாயில் உமிழ் நீர் ஊறும். இதேபோல இறைவனின் ஆனந்த நடனத்தைக் கண்டவர்களுக்கெல்லாம் கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியும். இன்ப அன்பில் உள்ளம் திளைத்து உருகும். உள்ளத்துள்ளே ஒளியாகத் தோன்றும் இறையருள் ஆனந்தமாக அமுத ஊற்றாகப் பெருக்கெடுக்கும். தில்லைக் கூத்தனின்அற்புதக் கூத்தினைக் கண்டவர்கள் பேரின்பப் பெரு வாழ்வினைப் பெறுவார்கள்.

புளிக் கண்டவர்க்குப் புனல் ஊறுமா போல்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க்கெல்லாம்
துளிக்கும் அருட் கண்ணீர் சோர் நெஞ்சு உருக்கும்
ஒளிக்குள் ஆனந்தத்து அமுது ஊறும் உள்ளத்தே

தர்ம மார்க்கத்தில் ஒருவன் இருந்தால் பிராணிகள் கூட அவனை ஆதரிக்கும். அதர்மத்தில் விழுந்தால் உடன் பிறந்தவனும் எதிரியாகிவிடுவான் என்பதை ராமாயணம் நிரூபிக்கிறது. ஸ்ரீ ராமனை வானரங்களும் ஆதரித்தன. இராவணனை சகோதரன் விபீஷனனும் விட்டு விலகினான். தர்மமே தலைகாக்கும்

**–சந்திர சேகரேந்திர சரஸ்வதி மஹா சுவாமிகள்**

# பேரானந்த நிலை

40

உள்ளத்துள்ளே சிவம் ஓங்காரமாய் விளங்கும் நிலை ஆகாசப்பேறு எனப்படும். உள்ளுதலைச் செய்வது உள்ளம். உள்ளத்துள்ளே ஓம் என்னும் பிரணவ ஒளி வடிவாக உள்ள பரம்பொருளை, உள்ளத்துள்ளே ஞான விளக்கொளியாகத் திகழ்கின்ற இறைவனை, உள்ளத்தின் உள்ளே அறம் விளங்க தர்மத்தின் தலைவனாக விளங்குகின்ற சிவத்தைச் சிந்தை செய்தால் உள்ளம் சிவமாகும்.

இல்லற வாழ்விற்குச் சிற்றின்ப நுகர்விற்குப் பெண்கள் துணையாவது போலப் பேரின்ப வாழ்வாகிய முத்தியின்பம் துய்ப்பதற்கு ஆதியாகிய பரம்பொருளே துணையாவான். ஆதியாகிய அப்பரம்பொருள் பிரமனும் திருமாலும் அடியும் முடியும் காணாதபடி பேரொளிப் பிழம்பாக நின்றவன். சீவர்கள் கடைத்தேற உயர்ந்த நன்நெறியாகிய ஒளி நெறியை அவனே அருளி உதவினான்.

பயனுறு கன்னியர் போகத்தின் உள்ளே
பயனுறும் ஆதி பரஞ்சுடர்ச் சோதி
அயனொடு மால் அறியா வகை நின்றிட்டு
உயர் நெறியாய் ஒளி ஒன்றது ஆமே

போகத்தை ஊட்டிய சிவனே ஞான நெறியையும் ஊட்ட வல்லவன் என்பதை மேல்வரும் பாடல் விளக்குகிறது.

மனம் ஐம்புலன்கள் வழியாக உலகப் பொருள்களில் இன்பம் கண்டு விழிப்பு நிலையில் மகிழ்வடைவது நனவாகும். பொறி புலன் வழியாக இல்லாது தூக்கத்தில் கண்டு இன்புறுவது கனவாகும். இப்படி நனவிலும் கனவிலும் காண்கின்ற ஆனந்தம் அல்லாது தானே சிவன் என்னும் ஞானம் அடையப் பெறுதலே உண்மையான ஞானம் ஆகும்.

சிவன் யானைத்தோலை உரித்த கைகளை உடையவன் மண்டையோட்டைக் கையிலே தாங்கியவன். சுடர்விடுகின்ற இளம்பிறைச் சந்திரனைத் தலையிலே சூடியவன். இவ்வாறு அரும் பெரும் செயல்களைப் புரிந்த அருளாளன் என்று நினைத்து நான் அவனுக்கு ஆட்பட்டேன் அடிமையானேன் அல்லாமல் அவனுடைய நிறம் கறுப்போ சிவப்போ என்றெல்லாம் நான் எண்ணிப் பார்கவில்லை. இறைவன் நிறமும் வடிவமும் கடந்தவன் என்பதையும், காட்சிப் பொருளாக நிற்காமல் உள்ளத்தில் உணர்வு நிலையினைப் பற்றி நிற்பவன் என்றும் திருமூலர் பாடுகின்றார். நிறமும் வடிவமும் ஒழிந்த பரிபூரண வழிபாட்டில் உள்ளத்தை நிறுத்திச் சிவபெருமானை நினைவு ஒழித்த பரவச நிலையில் நின்று துதிக்கிறார். அகத்திலே அனுபூதி நிலையை அடைவதற்கு இவ்விதமான பரவச நிலையும் ஓர் அங்கமாவே உள்ளது.

கரியட்ட கையன் கபாலம் கை ஏந்தி
எரியும் இளம்பிறை சூடும் எம்மானை
அரியன் பெரியன் என்று ஆட்பட்ட தல்லால்
கரியன் கொல் சேயன் கொல் காண்கின்றிலேனே

அப்பர் சுவாமிகளும் இறைவன் இத்தன்மை உடையவன், இந்த நிறத்தைக் கொண்டவன் இத்தகைய செயல்களை உடையவன் என்பதை எழுதி விளக்க முடியாது என்பதை "இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே" எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். இவ்வாறு காரைக்காலம்மையாரும் அற்புதத் திருவந்தாதியில்,

"அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருஉருவம் காண்கிலேன்'' என்று இறையருளின் உயர் நிலையினை வெளிப்படுத்துகின்றார்.

தெய்வ சிந்தனையிலே இதயம் தோய்ந்து இரண்டற்ற பாவனையில் மூழ்குவதே இறைவனுடைய அனுக்கிரகப் பேரின்பத்தைப் பெறுவதற்கு ஒரே வழியாகும் என்பது தவமுனிவரின் கருத்தாகும். இவ்வாறு நான் இறைவனை எனக்குள்ளே தேடத் தொடங்கியதும் நான் என்றும் இறைவன் என்றும் தன்னந் தனியாக இரண்டு பொருள் இல்லை என்பதை உணர்ந்து கொண்டேன். இந்த உணர்வு ஏற்பட்டதும் நானும் நானென்பதை விட்டொழிந்தேன். நான் என்று என்னைத் தனியாகப் பிரித்துக் கொண்டு நினைக்கின்ற ஆணவ நினைப்பை விட்டு நீங்கினேன். இதனால் என் தனித் தோற்றம் ஒழிந்தது. எல்லாம் அவனே என்பதை உணர்ந்து கொண்டேன்.

நானென்றும் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்று தானென்று இரண்டில்லை என்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினான்
நானென்று நானும் நினைப்பொழிந்தேனே

உண்மை ஞானத்தினால் உண்டாகும் ஆனந்தம் சத்திய ஞானானந்தம் எனப்படும். முத்துரியம் கடந்த நிலையில் பெறும் ஆனந்தமே மெய்ப்பொருள் ஆனந்தமாகும். சிவன் சீவனில் பொருந்தத் தோன்றும் ஞானானந்தம் நாவிலும் உணர்விலும் கலந்து தேனாய்த் தித்திக்கும். நினைத்து வணங்க முடிந்த அளவிற்கு இறைவனை உள்ளம் உருகி வணங்கிப் பணிதல் வேண்டும். நாவால் பாடல்களைப் புனைந்து அவனைப் போற்றி வணங்குதல் வேண்டும். இவ்வாறு வணங்கினால் இறைவன் நம் உள்ளத்தில் வந்து தங்குவான்.

சிவன் சீவனுள் புகுந்து விட்டால் ஏற்படும் இன்பம் பேரின்பம் ஆகும். பாலோடு தேன் கலந்திருப்பதைப் போல, பழத்தோடு அதன் இனிய சுவை கலந்திருப்பதைப்போல, இனிய சுவையுடைய அமுது போல் என்னுள் பரம் பொருள் உணர்வு புகுந்த போது மயிர்க்கால்கள் தோறும் பேரின்ப உணர்வு வியாபித்துக் காணப்பட்டது. இத்தகைய உயர்வான பேரின்ப நிலையைப் பின்வரும் திருமந்திரம் தெளிவாக விளக்குகிறது.

பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேரமுது ஆகும் மதுரமும்
போலும் துரியம் பொடிபட உள்புகச்
சீலம் மயிர்க்கால் தொறும் தேக்கிடுமே

இன்பம் நிறையச் செய்தல் தேக்கிடுதல் எனப்படும்.

"வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்"

என்று மாணிக்கவாசகரும் இந்த அனுபவத்தை தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

சிவசொரூபத்தை அவனது அருளாலன்றிக் கூட முடியாது. ஆன்மா இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்கு குருவின் துணை மிக அவசியம் என்பதைச் சைவ சித்தாந்த தத்துவம் மிகவும் வலியுறுத்திக் கூறுகிறது. "குருவருளின்றித் திருவருள் இல்லை" என்பதே சைவ மெய்யியல் காட்டும் முடிந்த முடிபாகும். ஆதித்தனின் ஒளி இல்லையானால் சூரிய காந்தக் கல்லில் அக்கினி தோன்றாது. இதே போலச் சிவனது திருவருள் வடிவாகிய குரு இல்லையானால் ஆன்மா திருவருளின் தன்மையை உணராது, சூரியனைக் குருவிற்கும் சூரிய ஒளியைத் திருவருளிற்கும். ஆன்மாவைச் சூரிய காந்தக் கல்லுக்கும் ஒப்பிட்டு குருவின் முக்கியத்துவத்தை திருவருட் பயன் பின்வருமாறு விளக்குகிறது.

ஞான மிவனொழிய நண்ணியிடும் நற்கலனல்
பானு வொழியப் படின்

இறைவன் ஆன்மாக்களிலே கலந்து அவர்களின் உணர்விலே சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றான். குருவின் உபதேசம் இன்றி மெய்யுணர்வு நிலையினை

ஆன்மா அடைய முடியாது. பரம்பொருளாகிய இறைவன் தனக்கென்று ஓர் உருவம் இல்லாமலே உயிர்களுக்குப் பல உடல்களைத் தருகின்றான். மூல காரணமாகிய தனக்கு ஒரு வித வித்தும் இன்றியே சுயம்புவாக நின்று உலகில் உள்ள உயிர்களின் தோற்றங்களுக்கெல்லாம் அவன் கருவாக அமைகின்றான். மாயனாகிய இறைவன் பல லீலைகளைக் காட்டி ஆன்மாக்களை மயக்குவான். இந்த மயக்க நிலையில் இருந்து தெளிவு அடைவதற்கு ஞான குருவின் துணை அவசியமாகும்.

உருவின்றியே நின்று உருவம் புணர்க்கும்
கருவன்றியே நின்று தான் கருவாகும்
அருவன்றியே நின்ற மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்கும் கூட வொண்ணாதே

தத்துவத்தை உணர்ந்த ஞானிகள் துன்பத்திற்காக வருத்தமும் இன்பத்திற்காக மகிழ்ச்சியும் கொள்வதில்லை. இருவினை ஒப்பு நிலையில் நிற்கும் சிவனடியார்கள் ஓட்டையும் செம்பொன்னையும் ஒன்றாகவே நோக்குவார்கள்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்

ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்". எனப் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது.

தவம் செய்து ஞானம் பெற்ற பெரியோர்கள் தங்களுடைய பண்புகளில் எவ்வித மாற்றமும் உண்டாகாமல் நிற்பார்கள். இதேபோலப் பிறருடைய மகிழ்ச்சி உபசாரங்களில் மயங்கி நிலை கெடவும் மாட்டார்கள். துன்புறுத்தினாலும் அல்லது உபசாரங்கள் செய்தாலும் தமக்குரிய நிலையிலிருந்து மாறமாட்டார்கள். இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும், துன்பத்தையும், உபசாரத்தையும் சமமாகப் பாவிப்பார்கள். ஒன்றினால் மயக்கமும் மற்றொன்றினால் மனத் தளர்ச்சியும் அடையமாட்டார்கள். மூர்க்கர்களால் தங்களுக்கு எத்தகைய துன்பம் நேர்ந்தாலும் கலங்கமாட்டார்கள்.

''ஈனர்கட்கெளியேனலேன்

திருவாலவாயரனிற்கவே என்ற ஞான சம்பந்தரின் உறுதிப்பாடு இவர்களிடம் இருக்கும். முடியாட்சி நிலவிய காலத்தில் "மன்னனின் ஆணை தெய்வத்தின் ஆணை" என்று மதிக்கப்பட்ட காலத்தில் அரசனின் ஆணைக்கு அடிபணிய மறுத்து "நாமார்க்கும் குடியல்லோம் என்று கூறக் கூடிய சான்றாண்மை வீரம் அப்பர் பெருமானிடம் இருந்தது போல இறையருளுக்குப் பாத்திரமான சிவனடியார்களிடமும் காணப்படும்.

வாள் கொண்டு உடலைச் சிதைத்தாலும், தலையைச் சீவி எறிந்தாலும், நறுமணம் நிறைந்த சந்தனத்தைப் பூசி மகிழ்வு ஊட்டினாலும் தலையில்

கூரிய உளியினால் தாக்கி கழுவிலேற்றிக் கொலை செய்தாலும் இவற்றினால் ஞானிகள் வருத்தம் அடைய மாட்டார்கள். இன்பமும் துன்பமும் ஞான பண்டிதனாகிய நந்தியெம்பெருமானின் திருவருளால் தான் நடைபெறுகிறது என்ற அமைதியாக இருப்பார்கள்.

சொற்றில் என் ? சீவில் என் ? செஞ்சாந்து அணியில் என்
மத்தகத்தே உளி நாட்டி மறிக்கில் என் ?
வித்தகன் நந்தி விதிவழி அல்லது
தத்துவ ஞானிகள் தன்மை குன்றாரே

உள்ளமாகிய வயலில் ஞானமாகிய உழவு நடக்கிறது. இந்த உழவைச் செய்யும் போது மதம் பிடித்த யானை துரத்திக் கொண்டு வந்தாலும் கூர்மையான அம்பை உடலில் செலுத்தி உடலை இரண்டாகப் பிளந்தாலும், காட்டில் வாழும் புலிகள் கூட்டமாக வந்து சுற்றி வளைத்தாலும் வைராக்கியத்தோடு எனது ஞான உழவினைச் செய்து முடிப்பேன். எத்தகைய சோதனைகள் ஆசாபாசங்கள் வந்தாலும் அவற்றில் சிக்கிக் கொள்ளாமல் ஆன்மீக சாதனையில் உறுதியாக நிற்பேன் என்கிறார் திருமூலர்.

ஆனை துரக்கிலென் அம்பூடறுக்கிலென்
கானத் துழுவை கலந்து வளைக்கிலென்
ஏனைப் பதியினிலெம்பெருமான் வைத்த
ஞானத் துழவினை நானுழுவேனே

சிவனைச் சிந்தையில் காண்பது சிவதரிசனம் எனப்படும். அரசனைத் தாங்கும் அரச கட்டில் அரசனெனவே மதிக்கப்படும். இதே போலச் சிவன் எழுந்தருளியுள்ள சிந்தை சிவனெனவே மதிக்கப்படும். சிவனை இடைவிடாது எண்ணியிருப்பவர்களுக்கு அவன் வெளிப்பட்டு அருள் செய்வான். சிவனையே எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு சிந்தை வேறு, சிவன் வேறு என்பதே இல்லை. சிந்திப்பவரது உள்ளத்தில் சிவன் வெளிப்படுவான். சிவஞானத்தால் தெளிவடைந்த ஞானியர்களுக்கு அவர்களது எண்ணத்திலே சிவன் பிரகாசிக்கும். தூய எண்ணமுடையவர்களின் நெஞ்சின் உள்ளே சிவன் வீற்றிருந்து அருள் புரிவான்.

சிந்தைய தென்னைச் சிவனென்ன வேறில்லை
சிந்தையினுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளிய வல்லார்கட்குச்
சிந்தையினுள்ளே சிவனிருந்தானே

சிவசொரூபம் என்பது சிவத்தின் இயல்பான நிலையாகிய சச்சிதானந்த சொரூபம் எனப்படும். சிவத்தின் இயல்பான நிலையை ஆன்மா உணர்தலே தரிசித்தல் எனப்படும். சிவ தரிசனத்தைக் கண்டவர்க்கு உண்டாகும் மெய்ப்பாடுகள் சிவ சொரூப தரிசனத்தில் கூறப்பட்டுள்ளது. பேதம் அபேதம்

பிறழாத ஆனந்தத்தை அகமும் புறமும் ஒத்த ஆனந்தத்தை அடைதலே பேரானந்த நிலை ஆகும்.

முத்தியாகிய வீடும், சித்தியாகிய பேறும் ஞானத்தினால் தான் கிடைக்கும். ஞானத் தீ அகத்திலே கொழுந்து விட்டுப் பிரகாசிக்க ஆரம்பித்ததும் எல்லா வினைகளும் பொசுங்கிவிடும். ஞானம் ஏற்பட்டதும் பேரின்பமாகிய பக்தி நிலை கைகூடும். பிர பக்தி நெறியில் நிற்பவர்களின் சித்தம் எல்லாம் சிவமாகிவிடும். ஒப்புயர்வற்ற திருவருள் சக்தி ஆன்மாவில் பதிந்த பின்பு கிரியை வழிபாட்டில் நிற்க வேண்டிய அவசியம் இல்லை. இவர்கள் பேரானந்தத்தில் திளைக்கும் ஞானிகள் ஆவார்கள்.

முத்தியுஞ் சித்தியும் முற்றிய ஞானத்தோன்
பத்தியுள் நின்று பரந்தன்னுள் நின்றுமா
சத்தியுள் நின்றோர்க்குத் தத்துவங் கூடலால்
சுத்தியகன்றோர் சுகானந்த போதரே

மனம், ஒரு நிலம் போன்றது. நிலத்தில் நாம் கரும்பையோ, நெல்லையோ வளர்க்கலாம். எதையும் வளர்க்காமல் போனால் அந்தப் பூமி தரிசாகிப் போய்விடும். அது போன்றே நாம் மனதில் எப்போதும் நல்ல எண்ணங்களையும், ஆக்கபூர்வமான சிந்தனைகளையும் கொண்டிருந்தால், நம் மனம் ஒரு சோலையாகவும், இனிய மலர்கள் பூத்துக் குலுங்கும் பூங்காவனமாகவும் இருக்கும். நாம் வாழ்கின்ற வாழ்க்கை நமக்கு மட்டுமன்றி இந்தச் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும் எண்ணத்தோடும் நாம் வாழ வேண்டும். எனென்றால் வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை என்ற பொருளோடு இயைந்து நம் வாழ்க்கை அமைந்தால் தான், இப்பிறவியின் பயனை நாம் அடைந்ததாக இருக்கும்.

**ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் – வைகாசி 2013**

# ஞான சாதனை

41

உலகியல் பந்த பாசங்களை விட்டொழித்தவர்கள் தங்கள் உயிர்த்துணையாக இறைவனையே பற்றி நிற்பார்கள். இறைவனைப் போற்றுதல் தான் கல்வியின் பயன் என்பதைக்,

கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அர் எனின்

எனத் தெய்வத் தமிழாகிய திருக்குறளும் கூறுகிறது. ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் இறைவனைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்ற சிந்தனை இறையருள் பெற்ற ஞானிகளிடம் இருப்பதில்லை. தனது அகப் புறக் கருவி கரணங்களையெல்லாம்இறைவன்மேல் லயிக்க விட்ட ஞானயோகிகள் எல்லாப் பொருட்களிலும் சிவத்தையே காண்பார்கள். இறைவனையே சுற்றுகிற மனத்தினரான ஞான யோகிகள் வாதப்பிரதி வாதங்களாகிய பிதற்றலை விட்டொழித்து ஞானத்தின் எல்லையாகிய மோன சமாதி நிலையினைப் பெற்று விடுவார்கள்.

மலங்கள் எதனாலும் பீடிக்கப்படாத நிர்மலனாக இருப்பவன் இறைவன் ஒருவனே. மனிதப் பிறவி எடுத்த நாம் அனைவரும் பலவித பற்றுக்களினால் பீடிக்கப்பட்டு இருக்கிறோம். ஜீவிய பரியந்தம் மனிதனைப் பற்றி நிற்கும் பற்றுக்கள் பரிணாம வளர்ச்சி அடைந்து கொண்டே செல்கின்றன. நரை, திரை, மூப்பு எல்லாம் ஏற்பட்டு மரணத்தை எதிர்பார்த்திருக்கும் மனிதனிடம் கூட உலகியல் பற்றுக்களும் ஆசைகளும் வியாபித்தே காணப்படுகின்றன. பற்றுக்கள் இருக்கும் வரை பிறவி தொடர்ந்து கொண்டே இருக்கும்.

உலகியற் பற்றுக்களை நீக்கி இறைவனைப் பற்றினால்தான் உயிர் நோயாகிய பிறவி நோய் நீங்கும். இறைவன் மேல் பற்று வைப்பதே உலகியல் பற்றுக்களை விட்டொழிப்பதற்கான ஒரே வழியாகும்.

உலகப் பற்றுக்களை விட்டவர் பற்றி நின்ற மேலான பொருளும், அறிவினால் மெய்ப்பொருளை உணர்ந்து சிவஞானம் பெற்றவர்கள் விரும்பும் பொருளும் சிவப் பரம்பொருள் ஒன்றேயாகும். பக்திப் பரவசத்தினால் தம் சொத்தாக இறைவனை நினைந்து "என்சோதி" எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு சுடர் விடும் ஒளிவடிவான சோதியைத் தமக்குத் துணையாகப் பெற்றவர்கள் பேசா அனுபூதி நிலையாகிய மௌன நிலையைப் பெற்று பேச்சற்று இருப்பார்கள். மௌனத் தவமாகிய மகாயோகத்தை அடைந்து விடுவார்கள்.

பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்
கற்றற்றவர் கற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர்சுற்றி நின்றஎன் சோதியைப்
பெற்றுற் றவர்கள் பிதற்றொழிந் தாரே

ஞானப் பொருளை மறைவாய்ப் பேசுவது சூனிய சம்பாஷனை எனப்படும். இம் மந்திரங்கள் மறைவாய்க் கூறினும் அவை பொருள் விளங்கக் கூடிய அமைப்பினை உடையனவாய்ப் படிப்போர்க்கு இன்பம் பயப்பனவாய் இருக்கும். ஞான சாதனையும், ஞானசாதனையின் பயனும் சூனிய சம்பாஷனை என்ற பகுதியில்கூறப்பட்டுள்ளது. சித்தர்கள் தமக்கே உரிய பாணியில் சித்தாந்த தத்துவக் கருத்துக்களைபிறர் இலகுவில் விளங்க முடியாத சங்கேத பதங்கள் மூலம் எடுத்துச் சிலவேளைகளில் உரைப்பதுண்டு. சித்தர்களுக்குத் தலைவராகிய திருமூலர் மறைஞானக் கருத்துக்களை விளக்குவதற்குப் பல்வேறு சங்கேத பதங்களைப் பயன்படுத்தி உள்ளார்.

வழுதலையாகிய கத்தரிக்காய் பெற நினைத்து கத்தரி விதையை ஊன்ற பாகற்செடி முளைத்துப் பாகற்காய் காய்த்தது. சிவயோகப் பயிற்சியில்ஈடுபட, விருப்பு வெறுப்பற்ற வைராக்கிய பக்தி உதயமாகும். யோகாசனப்பயிற்சியினால் உடல் உறுதி அடைகிறது. தியானப் பயிற்சியினால் மனம் ஒருநிலைப்படுகிறது. உடலும் மனமும் உறுதியானதும், இறைவனையே உறுதியாகப் பற்றி நிற்கின்ற பக்தி வைராக்கியம் அகத்திலே தோன்றும். வைராக்கியமான மனமே கசப்பான பாகற்காய் எனப்பட்டது. புழுதியைத் தோண்டுதல் என்பது தன்னை அறிதல் ஆகும். முப்பத்தாறுதத்துவங்களையும்கடந்து நிற்பதே சிவம் என்பதைத் தெளிதல்வேண்டும். புழுதியைத் தோண்ட பூசணி பூக்கும். ஒளிமயமான சிவ சொரூபம் ஞானக் கண்ணுக்கு மாசறு காட்சியாகப் புலப்படுதலையே பூசணி பூத்தல் எனத் திருமந்திரம் கூறுகிறது. இயற்கையாகவே முதிர்ந்த வாழைப்பழம் போன்று ஆன்மா சிவப்பேறாகிய பேரின்பத்தினை முத்தியைப் பெற்றுவிடும்.

வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே

ஐம்புலன்கள் மனிதனின் உடம்புளேநின்றுமனத்தைத் தீய வழிகளிலே இழுத்துச் செல்கின்றன.

"மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய"

என மணிவாசகரின் திருவாசகமும் இதனைக் குறிப்பிடுகிறது. ஐம்புலன்களை அடக்கி ஆண்டால் அவை தெய்வ இன்பத்தைப் பாலாகச் சொரியும். இந்திரியங்கள் உலக நோக்கின்றி அக நோக்காய் அமையுமாயின் பேரின்பம் உண்டாகும்.

உயிரைப் பார்ப்பான் என்றும், உடம்பை ஆருயிரின் வீடாகிய அகம் என்றும், உடம்பில் உள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆகிய ஐம்புலன்களைப் பாலைத் தரும் பசு என்றும் திருமூலர் குறிப்பிடுகின்றார். மேய்ப்பதற்கு இடையன் இல்லாத பசுக்களைப் போல ஐம்புலன்களைக் கட்டிக் காவாது போனால் அவை வெறி கொண்டு அலைந்து திரியும். ஞானத்தால் புலன்களை அடக்கிக் காத்தோமானால் இந்தப் பசுக்களுக்கு வெறி அடங்கிவிடும். வெறி அடங்கி விட்டால் இந்த ஐந்து பசுக்களும் ஞானப்பாலைச் சொரியும்.

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாருமின்றி வெறித்துத்திரிவன
மேய்ப்பாரு முண்டாய் வெறியு மடங்கினால்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாச் சொரியுமே."

உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு சத்துள்ள உணவுஉதவுவது போல உடலை அழிப்பதற்கும், நோய்வாய்ப்படுத்துவதற்கும் போதைவஸ்துக்கள் மதுபானம் என்பன காரணமாக உள்ளன. சத்துள்ள உணவுகளும் போதைவஸ்துக்களும் இந்தப் பூவுலகத்திலேயே காணப்படுகின்றன. "எதைத் தெரிந்து உட்கொள்வது" என்ற சுதந்திரம் நம்மிடம் தான் உள்ளது. புத்தி கெட்டு போதைப் பொருட்களுக்கு அடிமையாகிவிட்டால் நமக்கு நாமே கெடுதியைத் தேடிக் கொள்கின்றோம். புத்தி சரியாக இயங்கிச் சத்துள்ள உணவை உட்கொண்டால் ஆரோக்கியமான உடலுடன் நீண்ட நாட்கள் வாழும் பயனைப் பெறுவோம்.

உயிர், தீமை செய்வதாகிய உலகபோகத்தை விட்டு நன்மை செய்வதாகிய சிவபோகத்தைநாட வேண்டும். பாற்கடலிலே வாழும் மீனானது பாலைக் குடிக்காது அப் பாற்கடலிலே வாழும் பூச்சிபுழுக்களை உண்பது போலப் பேரின்பமான திருவருளில் வாழும் ஆன்மாக்கள் அதன் தன்மையை உணராது மயக்கத்தைத் தரும் உலக விடயங்களில் ஈடுபட்டு இருக்கின்றன என்பதை

"பாலாழி மீனாளும் பான்மைத்து அருளுயிர்கள்
மாலாழி ஆழும் மறித்து"

எனத் திருவருட்பயன் கூறுகிறது.

கொட்டி, ஆம்பல் ஆகிய இரண்டு கொடி வகைகள் குளத்தில் வாழ்பவை. கொட்டி அறிவுக்கும் ஆம்பல் துன்பத்திற்கும் உதாரணமாகக் கூறப்பட்டுள்ளது. உலக வாழ்கையாகிய இந்தக் குளத்திலே கொட்டி, ஆம்பல் ஆகியவற்றுடன் கூடவே உயிரைக் கொல்லும் எட்டிக் காயும், கசக்கும் வேம்பும், உயிருக்கு இன்சுவை தரும் சத்து, சித்து ஆனந்தமாகிய வாழையும், வெல்லக்கட்டியும், தேனும் கூட இருக்கின்றன. ஆனால் மக்களில் பலர் கட்டியும் தேனும் கனியும் உண்ணத் தெரியாமல் எட்டிக்காய்க்கு ஆசைப்பட்டு அவதிப்பட்டு வேதனைப்படுகின்றார்கள் என்பதைப் பின்வரும் திருமந்திரம் விளக்குகின்றது.

கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பு மினியதோர் வாழையுங்
கட்டியுந் தேனுங் கலந்துண்ண மாட்டாதார்
எட்டிப் பழத்துக் கிளைக்கின்ற வாறே

ஞான சாதனையின்றித் தர்க்க வாதம் செய்பவர்களால் இறைவனைக் காண முடியாது. மாறிக்கொண்டிருக்கும் உலகமாகிய கயல் மீனைக் கண்டவர்கள் உலகில்பிறந்து இறந்து கொண்டிருப்பர். "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என்பது அப்பர் பெருமானின் வாக்கும் ஆகும். சிவமாகிய முயலை அடையவேண்டும் என்று சரியை, கிரியை, யோக நெறி நிற்பவர் சிறிது சிறிதாய் ஞானத்தை அடைந்து உய்வர். வாய்ப்பறை கொட்டித் தர்க்க வாதம் புரியும்வீணர்கள் பிறவிப் பிணிக்கு ஆளாவார்கள். வாதப்பிரதி வாதங்கள் செய்வதால் மறைகள் எல்லாம் போற்றுகின்ற நித்தியப் பொருளான சிவம் ஆகமுடியாது. ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதித்து இறைவனைக் காணமுடியாது. ஞான சாதனையால் மட்டுமே சிவப் பரம்பொருளைத் தரிசிக்க முடியும்.

கயலொன்று கண்டவர் கண்டே இருப்பவர்
முயலொன்று கண்டவர் மூவரும் உய்வர்
பறையொன்று பூசல் பிடிப்பா னொருவன்
மறையொன்று கண்ட துருவம்பொன் னாமே.

ஞான சாதனைக்கு குரு உபதேசத்தோடு மன ஒருமைப்பாடும் மிக இன்றியமையாததாகும். உலக நெறியிலே உள்ளம் உருகுபவர்கள் பெத்தர்கள் என்றும் மனம் ஒடுங்கிய ஞான உணர்ச்சி உடையவர்கள் முத்தர்கள்என்றும் அழைக்கப்படுவார்கள். சித்தம் சிவமயமாகநிற்கும் ஞானிகள் இறைவன் பால் அன்பு வயப்பட்டு நிற்பர்.

இறைவனை அறிவாலறிந்து வழிபடும் நிலையே ஞானமாகும். இந்நிலையில் உயிரை இறைவனிடத்தில் அர்ப்பணித்தல்நிகழும். புறத்தொழில் அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத்தொழிலால் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய

மூன்று வகைத் திருமேனிகளையும் கடந்த முழுமுதற்பொருளாய் நின்ற இறைவனிடத்தில் செய்யும் வழிபாடே ஞானம் ஆகும். தானம், தவம், மந்திரம், சாத்திரம், யோகம், ஒழுக்கம் ஆகிய யாவும் தன்னைத் தான் அறிகின்ற ஞானத்துக்குஒப்பாகாது. ஆனால் இவை ஞானத்தைப் பெறுவதற்கான படிநிலைகளாக அமைந்துள்ளன.

ஞான நெறியில் நிற்பவர்கள் எங்கும் எதிலும் சிவத்தையே காண்பார்கள். அவர்களின் அகத்திலும் புறத்திலும் சிவம் பிரகாசிக்கும். அன்பு வயப்பட்டுநிற்கும். இவர்கள் அழுவர், கைதொழுவர், நிலத்தில் வீழ்வர், பின் எழுவர், பாலர்கள்பைத்தியம் பிடித்தவர்கள் போலத் திரிவர். இத்தகைய ஞானிகளின் நிலையைப் பின்வரும் திருவாதவூரடிகள் புராணப்பாடல் தெளிவாக விளக்குகிறது.

அன்புடன் நோக்கி நிற்பர் அழுவர் கைதொழுவர் வீழ்வர்
இன்புற வெழுவர்பின்பால் ஏகுவர் இறங்கி மீள்வர்
நண்பகல் கங்குல் காணார் ஞான நல்வடிவே கண்டு
கொன்புனை பித்தர் பாலர் பிசாசர் தங் கொள்கையானார்

ஞானம் ஒன்றே முத்திக்குக் காரணம் எனச் சிவஞானசித்தியாரும் குறிப்பிடுகிறது. வீடுபேற்றுக்கு தீட்சை, ஐவகை வேள்வி, பக்திநெறிமட்டும் போதும் என்று கூறுதல் பொருந்தாது. இவை ஞானத்தைப் பெறுவதற்குத்துணையாக, வழிகாட்டியாக அமையும். பக்தி வலையில் நின்று பதமுத்தியைப் பெற்றோரும் முடிவில் ஞானவழி நின்றே முத்தியைப் பெறுவர். இந்நிலையிலேயே இரண்டற்ற நிலையை இறைவனுடன் எய்த முடியும்.

தவம் சிறக்க வேண்டுமானால் தலைவனாகிய இறைவனை மறவாமல் நினைத்தல் வேண்டும். மனம்ஒருமைப்பட்டுஉறுதியுடன் முயன்றுமேற்கொள்வதே தவம் ஆகும். மாம்பழம் முற்றிப் பழுப்பதற்கு முன்பு பறவைகள், அணில் கடிக்க அறுந்து விழுவதைப் போன்று இறைவனை நினைந்து செய்கின்ற தியானம் இடையிலே தடைப்பட்டால் யாது பலன்? தியானம் தடைப்பட்டால் புறக்கிரியைகளால்அதனைச் சீர்செய்ய முடியாது. புறக்கிரியைகளைத் திருமூலர் நரி எனக்குறிப்பிடுகின்றார். சாதகர்க்கு மன ஒருமைப்பாடு அமையாத போது உபதேசம் செய்தஞான குருவால் என்ன செய்ய முடியும். திருவடி காட்டித் தவம் செய்ய உதவியவர் திருவடி நினைப்பு மறந்தவர்களைக் கைவிடவே செய்வார். கரை சேர்க்க மாட்டார். தவம் சிறப்பதற்குக் குருவின் வழிகாட்டலோடு மன ஒருமைப்பாடும் அவசியம் எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது.

தோட்டத்தில் மாம்பழந் தோண்டி விழுந்தக்கால்
நாட்டின் புறத்தில் நரியழைத் தென்செயும்
மூட்டிக் கொடுத்து முதல்வனை முன்னிட்டுக்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்டவாறே

# நமச்சிவாயப் பழம்

அலைபாயும் மனம் மௌனத்தில் ஒடுங்கும் நிலை மோன சமாதி எனப்படும். மனத்தை அடக்கி மௌனமாய் இருத்தல் என்பது இதன் பொருள். சித்தப் பெருவெளியில் சிவனைச் சேர்ந்திருப்பதே மோன சமாதிநிலை. மோனசமாதி குருவருளாலும் திருவருளாலும் கைகூடுவது ஆகும்.

ஏட்டறிவினால் மட்டும் இறைவனின் திருவருளைப்பெற்றுவிட முடியாது. இறைவனுடைய தன்மைகள் பற்றி ஏட்டிலே எழுதி வைத்திருப்பதைப் படிப்பதனால் மட்டும் பயன் எதுவும் கிடைக்காது. ஞானாசிரியனாகிய குரு நேரிலே வந்து கூட்டுவிக்க வேண்டிய அனுபவமே இதுவாகும். குணம் குறி எதுவுமில்லாத இறைவனைப் பற்றி ஏடுகளில் எழுதி வைத்திருப்பதைப் படிப்பதனால் எதுவித பிரயோசனமும் இல்லை. திருநந்தி தேவராகிய நந்தியெம்பெருமான் குருவாக வந்து ஆட்கொள்ள வேண்டும். வெள்ளாடுகளின் கீழ்த் தாடையில் தொங்கும் சிறு முடிச்சு அதர் எனப்படும். இந்தத்தாடி ஆட்டுக்கு எந்த வகையிலும் பயனற்ற வீண் சுமையாகவே உள்ளது. வெள்ளாட்டின் தாடி போன்றுதான் ஏட்டில் எழுதி வைத்த இறை தத்துவமும் பயனற்ற தாகவே உள்ளது.

காட்டும் குறியும் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதி வைத்து என் பயன்
கூட்டும் குரு நந்தி கூட்டிடின் அல்லது
ஆட்டின் கழுத்தில் அதர் கிடந்தற்றே

42

மோன சமாதி நிலை கூடியவர், எல்லாம் உணர்ந்ததோடு தம்மை நாடி வருபவர்களுக்கு ஞான

நெறியினை உணர்த்த வல்லவராக இருப்பார். மௌன யோகியர்களாகிய இவர்கள் தன்னை அறிந்த தத்துவ ஞானிகளாக இருப்பார்கள். சிவசக்தியோடு கூடித் தம்மை மறந்து நிற்பர். தேகத்தின் செயல், ஆன்மாவின் செயல் என்பவற்றில் இருந்து விடுபட்டுத் தம் செயல் எல்லாம் இறை செயலாக மாறி நிற்கும் அனுபூதி நிலையைப் பெற்றுவிடுவர்.

முகத்தில் அமையப்பெற்றுள்ள இரண்டு கண்களைக்கொண்டு இறைவனைக் கண்டறிய முடியாது. நமது உடம்பில் உள்ள ஊனக்கண்களுக்கு இறைவன் அகப்படமாட்டான். ஞானக்கண் கொண்டு அவனைக் கண்டறிய முயலவேண்டும். உள்முகமாகப் பார்வையைச் செலுத்தி உணர்வு நிலையில் தரிசனம் செய்வதுதான் ஞானானந்தம். அறிவுக்கண்கொண்டு இறைவனைக் காண்பதுவே உண்மையான சிவானந்தமாகும். ஒரு பெண்ணானவள் தான் தன்னுடைய கணவனோடு அனுபவித்த இன்பத்தை திருமணப் பருவத்தை அணுகி நிற்கும் தனது மகளுக்கு வார்த்தைகளால் விளக்க முடியாது. இதேபோல இறை இன்பத்தையும் அந்தப் பக்குவநிலையை அடைந்தவர்களால் மட்டுமே சுவானுபவமாக அனுபவிக்க முடியும். குருவின் சிவானுபவத்தைப் பற்றிச் சீடன் கேட்பது தாயின் இன்ப அனுபவத்தைப் பற்றி மகள் கேட்பது போலாகும். மகள் சிற்றின்பத்தை அனுபவித்து உணர்வது போலச் சீடன் சிவானந்தத்தை அனுபவத்திலேயே உணர்வான். சிவானந்த அனுபவம் அக உணர்வில் கண்டு அனுபவிப்பதே தவிர பிறருக்கு உணர்த்த முடியாது.

முகத்திற் கண் கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாள னோடாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமாறெங்ஙனே.

இறைவனுடைய பேரின்பத்தை நாடி அந்த முயற்சியில் ஈடுபட்டால் படிப்படியாக "நான்" என்னும் நிலை நீங்கி "எல்லாம் அவனே" என்ற தெளிவு உண்டாகிவிடும். இந்த உணர்வு வலுவடையும் போது உடம்பின் வேட்கை அழிந்துவிடும். தனிப்பட்ட உயிர் என்ற அகங்கார உணர்ச்சியும் நினைப்பு மறப்பு என்ற மன உணர்ச்சியும் அடங்கிவிடும். இவை எல்லாம் நீங்கிய பின் நான் என்கிற தனி நிலை தானாகவே அழிந்துவிடும். நானும் கரைந்து ஒழிந்துபோன பின்பு ஆனந்தம் மட்டுமே நிற்கிறது. பரம் பொருளோடு ஆன்மா கலந்துபோய் அந்த இரண்டற்ற ஆனந்தத்திலே திளைக்கும் நிலையை வார்த்தைகளால் கூறமுடியாது. இதுவே பேரானந்த நிலையாகும்.

தானும் அழிந்து தனமும் அழிந்த நீடு
ஊனும் அழிந்து உயிரும் அழிந்து உடன்
வானும் அழிந்து மனமும் அழிந்து பின்
நானும் அழிந்தமை நான் அறியேனே.

ஊன், உயிர், உணவு, உள்ளம் எல்லாம் கெட்டு, நான் என்ற முனைப்பும் கெட்டு அனைத்தும் சிவமயமாகி நிற்கும் பேரானந்த நிலையினை

"ஊன் கெட்டு உயிர் கெட்டு உணர்வு கெட்டு
என் உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ"

என்று மணிவாசகரின் திருவாசகமும் குறிப்பிடுகிறது.

வரைமுறையற்ற எல்லை அற்ற பெருமை உடையவன் இறைவன் என்பதை வரையுறை மாட்சி என்ற தலைப்பில் திருமூலர் குறிப்பிடுகின்றார். ஆன்மா பரம்பொருளோடு ஒன்றிய நிலையில் ஆருயிர் யாருடன் சேரும்?சீவன் சிவன் ஆகிவிட்ட பின் யாரை நினைக்கும்? காமம், வெகுளி ஆகிய தீய குணங்களை விட்டொழிந்தவர்களுக்கு வேறு எதில் ஆசை இருக்க முடியும்? ஐம்புலனும், மனமும் இறைவனோடு ஒன்றிவிட்ட பின்பு வரைதல், நினைத்தல், உகத்தல் என்றெல்லாம் சொல்வதில் பொருளில்லை எனத் திருமூலர் கூறுகின்றார். பேதமற்ற நிலையிலே இறைவனோடு ஒன்றிவிட்ட ஆனந்தலயத்தினைப் பின்வரும் திருமந்திரம் விளக்குகிறது.

தான் வரைவற்றபின் ஆரை வரைவது ?
தானவன் ஆனபின் ஆரை நினைவது,
காமனை வென்ற கண் ஆரை உகப்பது
தூமொழி வாசகம் சொல்லும் நீரே

"சாந்தியற்ற மனதில் சஞ்சலம் தோன்றும், சஞ்சலம் நோய்க்கு வித்தாகும் என்பது கீதா வாக்கியம். நீர் கலங்கியிருந்தால், நீரின் அடியிலிருக்கும் பொருள்கள் எதுவும் கண்ணுக்குத் தெரியாது. இதே போல உள்ளமானது ஆசா பாசங்களில் கலக்குண்டு இருந்தால் உண்மைப் பொருளான இறைவனைத் தரிசிக்க முடியாது.

இலக்கணம் அற்ற வரையறுக்க முடியாத பரம்பொருளுக்கு உரை செய்கிறவர்களைத் திருமந்திரம் ஊமையர் என்று குறிப்பிடுகிறது. பயனற்ற செயல்களில் ஈடுபடுவோரை அப்படிச் செய்யவேண்டாம் என்கிறார். பேசாமல் மௌனமாக இருப்பதே நலம் என்கிறார். கரையற்று இருக்கிற பெருவெள்ளத்துக்கு கரைபோட முடியாது. பர சிவ வெள்ளம் அப்படிப்பட்டது. ஆராய்ச்சிகளை விட்டொழிந்து தெய்வ சிந்தனையிலே மனம் ஒன்றியவாறு சலனமற்று இருந்தால் அந்தச் சித்தத்துள்ளே இறைவன் பூரணமாக வந்து அமர்ந்து கொள்வான். மனம் தெளிந்த அறிவுடையார்களுக்கு பரம்பொருள் தன்னை மறைக்காது வெளிப்படுத்தி அருள் செய்யும்.

உரை அற்றது ஒன்றை உரை செய்யும் ஊமர்காள்
கரை அற்றது ஒன்றைக் கரை காணல் ஆகுமோ
திரை அற்ற நீர்போல சிந்தை தெளிவார்க்குப்
புரை அற்று இருந்தான் புரி சடையோனே

மோனத் தவத்தில் பொருந்தியிருப்பவர்களின் இயல்பு அணைந்தோர் தன்மை எனப்படும். இந்நிலையினை அடைந்தவர்களுக்கு சீவர்களைப்பற்றி நிற்கும் மலம் இல்லை. அவற்றால் வரும் குற்றம் இல்லை. உயிர்ப்பற்று, பொருட்பற்று, இனப்பற்று என்பனவும் கிடையாது. தாமச, இராசத, சாத்வீக குணங்களும் இல்லை. அதனால் சுயநலமும் இல்லாமல் போய்விடும் என்கிறார் திருமூலர்.

தெய்வத்தோடு ஐம்புலன்களும் மருவி நின்று அனுபவிக்கும் பெரியோர்கள் அணைந்தோர் என்று போற்றப்படுவார்கள். அணைந்தோர் தன்மை என்ற பகுதியில் உள்ள பாடல்கள் ஜீவன் முத்திநிலையை விளக்கும் அற்புதப் பாடல்களாக உள்ளன. "இறைவனுடைய திருவருள் கிடைக்கப் பெற்றமையால் இந்த உலகில் பிறந்து இன்ப துன்பம் அனுபவிக்க வேண்டிய நிலை நீங்கிவிட்டது. உயிர் நோயாகிய பிறவி நோயிலிருந்து விடுதலை பெற்றுவிட்டேன். இதனால் உறவாகிய பாசங்கள் நீங்கி விட்டன. கடவுளும் நானும் ஒன்றாகிச் சிவத்துடன் சீவபோதமற்றுப் பொருந்தும் நிலையைப் பெற்று விட்டேன்.

ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானும் ஒன்றானேன்
அழிந்தாங்கு இனிவரும் ஆக்கமும் வேண்டேன்
செழுஞ் சார்புடைய சிவனைக் கண்டேனே

இறைவனே உலகிற்கு உறுதுணையாக நிற்கிறான். உலகில் இருக்கும் ஒவ்வொரு உயிர்க்கும் உலகம் முழுவதிற்கும் இறைவனே உயிராக இருந்து இயக்குகிறான். பல சமயங்கள் பல விதமாகக் கூறிய பொழுதும் அவை அனைத்தும் சிவப்பரம்பொருளாகிய ஒரே தெய்வத்தையே குறிக்கிறது. என்கிறார் திருமூலர்.

"வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்கு நம் பரம்பொருளே விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை"

என்ற தாயுமானவர் வாக்கும் இதனையே குறிக்கிறது. சிவமூல மந்திரமாகிய "நமச்சிவாய" என்ற மந்திரத்துக்குரிய மூர்த்தியாகிய சிவபெருமானைத் திருமூலர் நமச்சிவாயப் பழம் என்று குறிப்பிடுகின்றார். இந்தப் பழம் உயிருக்கு நன்மை தரக்கூடிய கனி என்கிறார். அந்தக் கனியைச் சுவைத்தவர்களுக்குத் தான் அதன் சுவை தெரியும். நமச்சிவாயப் பழத்தை தான் சுவைத்து அனுபவித்த ஆனந்தத்தை நீங்களும் அடைந்து அனுபவியுங்கள் என்று திருமூலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்.

ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வமும்
ஒன்று கண்டீர் உலகுக்கு உயிர் ஆவது
நன்று கண்டீர் இனி நமச்சிவாயப் பழந்
தின்று கண்டேற்கிது தித்தித்தவாறே

தன்னை ஆட்கொண்டு அருள் செய்த சிவனின் திருக்கோலத்தை திருமூலர்வர்ணிக்கின்றார். ஒளி விளங்கும் சந்திரனையும், பாயும் புலனிச்சையை உணர்த்தும் சீறும் பாம்பையும் சடாமுடியிலே தரித்த தயாபரனாகிய சிவன் தன்னை ஆட்கொண்டு மன இருள் போக்கிய மாணிக்க விளக்காக காட்சி தருகிறான் என்கிறார். ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாகிய சிவப்பரம் பொருள் தன்னை அணைந்தோரின் இருளைப் போக்கி அருள் செய்வார் என்பதைப் பின்வரும் திருமந்திரம் விளக்குகிறது.

சந்திரன் பாம்பொடுஞ் சூடும் சடாதரன்
வந்து என்னை ஆண்ட மணிவிளக்கானவன்
அந்தமும் ஆதியும் இல்லா அரும் பொருள்
சிந்தையின் மேவித் தியக்கு அறுத்தானே

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்பதே இறையருளுக்குப் பாத்திரமான மெய்ஞானிகளின் சிந்தனை ஆகும்.

உடலில் இருந்து உயிரைப் பிரிப்பதற்காக யமன் வரும் போது ஞான பண்டிதனாகிய கந்தவேட் பெருமான் யமனுக்கு முன்னால் வந்து என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று அருணகிரியார் வேண்டுவதைக்

" கார்மாமிசை காலன் வரிற்கலபத்
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்"

என முருக மந்திரமாகிய கந்தரநுபூதி குறிப்பிடுகிறது. மோனத் தவத்தில் மூழ்கியிருக்கும் தவசீலர்கள் சாவைப்பற்றிக் கவலைப்படுவது இல்லை. எனது உயிர் கொண்டுபோக யமன் வந்தால் அவனை நான் ஞான வைராக்கியம் என்னும் வாள்கொண்டு விரட்டியடிப்பேன். சிவப்பரம்பொருள் வந்தால், வந்து என் சிந்தையில் கலந்தால், நானும் அப் பரம்பொருள் நினைவில் கலந்து கரைந்து விடுவேன். பழைய வினைகளை முன்பே அறுத்து விட்டதால் தவத்தாற் பெறும் ஞானசித்தியைப் பெற்றுவிட்டேன். இதற்கு ஈடு இணையாக வேறு எதுவுமே கிடையாது.

நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன் வரின் நானுடன் போவது திண்ணம்
பலம் வரும் வல்வினை பண்டே யறுத்தேன்
தவம் வருஞ் சிந்தைக்குத் தானெதிராரே.

# ஞான சாதகனின் மெய்ப்பாடுகள்

43

பக்குவமான ஞானிகளுக்கு அவர்களின் அகத்திலே சிவன் காட்சி தருவார். உடலின் அங்க அவயங்கள் அனைத்தும் இறைவனை நோக்கித் திரும்பினால் இறைவனை அகத்திலே காணலாம் எனத் திருநாவுக்கரசர் திருவங்கமாலையிலே குறிப்பிடுகின்றார்.

தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தோடானாத் தேவனை என்னுள்ளே தேடிக்
கண்டு கொண்டேன்''

என்பது அப்பர் பெருமானின் வாக்கு ஆகும்.

எங்கும் நிறைந்த எல்லாமும் ஆகிநின்ற பரம்பொருள் தனது உள்ளத்தினுள்ளே நின்ற தெய்வீக அனுபவத்தை திருமூலர் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார். சிவன் தனது ஒளிமயமான தேவர் கூட்டத்துடன் தன் அகத்திலே வந்து அகப்பட்டுக் கொண்டார் என்பதை ஆனந்தப் பரவச நிலையில் நின்று பாடுகின்றார். பிறவிக்குக் காரணமான பாசமான இருளைப்போக்கி என் தந்தையாகிய அவன் என்னை ஆட்கொண்டு அருளினான் என்கிறார்.

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே"

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தின் அச்சோப் பதிகத்தில் ஆனந்தக் களிப்புடன் பாடுவதைப் போன்று திருமூலரும்,

"அவன் வந்தென் உள்ளே அகப்பட்டவாறே"

என்று ஆனந்தக்களிப்புடன் பாடுகின்றார்.

சிவன் வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம் வந்திட நின்ற பாசம் அறுத்திட்
டவ னெந்தை யாண்டருள் ஆதிப் பெருமான்
அவன் வந்தென்னுள்ளே யகப்பட்டவாறே"

அன்பு வயப்பட்டு இறைவனை வணங்கும் அடியார்கள் இறைவனை உரிமையுணர்வோடு அணுகுவார்கள். இறையருள் கிடைப்பதில் தடை ஏற்பட்டால் அல்லது தாமதம் ஏற்பட்டால் அன்பினால் ஏற்பட்ட உரிமைப்பாட்டுடன் இறைவனுடன் மோதுவார்கள்.

"ஆரொடு நோகேன் ஆர்க் கெடுத்துரைக்கேன்" என்றும்,
"நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே"

என்றும், மணிவாசகர் தனது திருவாசகத்தில் அன்புரிமையுடன் இறைவனிடம் வேண்டுகின்றார்.

"ஆளாங்கிருப்பின் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளங்கிருப்பின் திருவாரூரில் வாழ்ந்து போதீரே"

என்பது தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் உரிமைக்குரல். உள்ளம் உருகி அழுதால் இறையருளைப் பெறலாம் என்பதை,

"யானும் பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"

என்கிறார் அழுது அரனடியடைந்த அன்பராகிய மணிவாசகனார். பூரண சரணாகதியாக இறைவனை வணங்கும் அடியார்கள்.

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத் தேடுவதும்
நின் அடியார் செய்கை பராபரமே"

என்ற நிலையில் ஆடியும், பாடியும், அழுதும், தொழுதும் இறைவனை வணங்குவார்கள் எனத் தாயுமானவர் கூறுகின்றார்.

இறைவனோடு கூடி அனுபவித்த இன்பத்தினை அந்தப் பக்திப்பரவசத்திலே நின்று திருமூலர் பாடுகின்றார். அன்பினால் இறைவன் செய்த உதவியை நினைந்து உருகி அழுவேன். அவன் புகழ்மாலை யான தோத்திரத்தைப் பாடுவேன். என் எலும்பு நைந்துருக இரவு பகல் என்ற வேறுபாடின்றி எப்போதும் வழிபடுவேன். ஆர்வ மேலீட்டினால் தனக்குப் பொன்மேனி போன்று காட்சிதரும் இறைவனைத் தின்பன், கடிப்பன், திருத்துவன் என்றெல்லாம் பாடுகின்றார். இறைவனுக்காக இதயம் அன்பினால் உருகுவதும் கண்களில் ஆனந்த அருவி நீர் சொரிவதும், அரற்றிப் புலம்புவதும், ஞான சாதகனின் மெய்ப்பாடுகளாக அமைந்து விடுகின்றன. யோகியும், ஞானியும், சித்தருமாகிய திருமூலர் பக்திப்பரவசநிலையிலே நின்று சிவக் காதலோடு பாடுவதைப் பின்வரும் திருமந்திரம் விளக்குகின்றது.

" அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என் பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே"

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் இறைவனை இந்தப் பிண்டமாகிய உடம்பிலே கண்டு தரிசித்தவர்களே சித்தர்கள். இந்தச் சித்தருக்கெல்லாம் தலைமைச் சித்தராகத் திகழ்ந்தவர் திருமூலர்.

"மூலன் மரபில் வந்த வித்தகச் சித்தர் கணமே" என்றும்,
"சக்கரவர்த்தி தவராசயோகியெனும் மிக்க திருமூலன்
மேவுநாள் எந்நாளோ"

என்றும் திருமூலரைச் சித்தர்களில் மூலவராகவும், யோகிகளில் தவராச யோகியாகவும் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

இறைவன் இந்த மனித உடம்பிலேயே நம் உள்ளத்தில் மறைந்து நிற்கிறான். இந்த உண்மையை உணர்ந்து உள்ளத்தில் நிற்கும் இறைவனைத் தரிசிப்பதே சித்தி என்று நம்முடைய சித்தர்கள் கண்டார்கள். இந்தச் சித்தியை மகத்தான இலட்சியமாக மக்களுக்கு உபதேசித்தார்கள். பாலுக்குள் மறைந்திருக்கும் நெய்போல நமது அகத்துள் அமர்ந்துறையும் அப்பனாகிய இறைவனைக் காணாது பலர் தவிக்கிறார்கள்.

ஊனக் கண்ணுக்குப் புலப்படாத இறைவனாகிய கள்வனை அடைவதற்காக மனமாகிய உயர்ந்த தேரில் ஏறி அலைந்த நாட்டின் கணக்கினைச் சொல்ல முடியாது பலர் புலம்புகிறார்கள். இறைவனைக் கண்டுபிடிக்கத் திசை தெரியாமல் சிந்தனையைச் சிதறவிட்டு எங்கும் தேடுகிறார்கள். மக்களின் அறியாமையும், பயனற்ற முயற்சியும் இது என்கிறார் திருமூலர். தானும் எம்பெருமானாகிய சிவன் எங்கோ இருக்கிறான் என நினைத்து எண்ணங்களை அவனைத் தேடும்படி எங்கெங்கோ செலுத்தினேன். இறுதியில் இந்த உடம்புக்குள்ளேயே அவன் ஒளிந்திருப்பதைக் கண்டு கொண்டேன் என்கிறார்.

மாயனை நாடி மனநெடுந்தேரேறிப்
போயின நாடறியாதே புலம்புவர்
தேயமும் நாடும் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின்னாட்டிடைக் கண்டு கொண்டேனே

இறைவன் மீது தீவிர பக்திகொண்டு வழிபடும் அடியவர்களை உலகியலில் அழுந்திவாழும் மக்கள் பித்தன். பேயன் என்றெல்லாம் கூறுவார்கள். பிரபஞ்சத்தில் அழுந்திவாழும் நாம் ஆன்மீக நாட்டம் கொண்டவர்களை நம்முடைய அளவைகளால்தான் அளந்து மதிப்பிடுவோம். ஆனால் உண்மையான ஞானிகள் உலகத்தவர்களின் கூற்றினைக் கருத்தில் எடுப்பதில்லை. நல்லூர்த் தேரடியிலே இருந்து ஞான ஆட்சி புரிந்த மகான் செல்லப்பா சுவாமிகளை நம்மவர்கள் ' விசர்ச் செல்லப்பா' என்றுதான் அழைத்தார்கள். ஆனால் ஞானச் செல்வராகிய தவத்திரு யோகர் சுவாமிகளுக்குத்தான் செல்லப்பா சுவாமிகள் யார் என்பது விளங்கியது.

"என்னையெனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடியென் தலை வைத்தான் எங்கள் குருநாதன்"

என யோகர் சுவாமிகள் தான் அருளிய நற்சிந்தனைப் பாடலில் தனது குருநாதன் செல்லப்பா சுவாமிகளைப் போற்றித் துதிக்கின்றார்.

குறுநில மன்னராக இருந்த திருமங்கை ஆழ்வார் சிறந்த விஷ்ணு பக்தர். நாராயணனின் நாமத்தை 'ஹரி' என்று நாவால் நாளும் துதிப்பவர். இவருடைய பக்தி நிலையைப் புரியாதவர்கள் இவரைப் பித்தன் என்று தூற்றினார்கள். திருமங்கை ஆழ்வார் இதனைத் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

"அத்தா அரியே என்றுன்னை அழைக்க
பித்தா என்று பிறர் பேசுகிறார் என்னை
முத்தே மணி மாணிக்கமே முளைக்கின்ற வித்தே
உன்னை எங்ஙனம் நான் விடுகேனே"

இறைவன் முத்துவகையில் சிறந்த ஆணிமுத்தைப் போன்றவன்; காலையிலே உதயமாகின்ற உதயசூரியன் போன்றவன் என இறைவனைத் திருமூலர் போற்றித் துதிக்கின்றார். இத்தகைய சிறப்புமிக்க இறைவனை வானவரும் வணங்குகின்றார்கள். அத்தகைய இறைவனைக் காணாது புலம்புகின்ற என்னைப் பைத்தியக்காரன் என உலகத்தவர் கூறுகின்றார்களே என்று வேதனையுடன் திருமூலர் கூறுவதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

"முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணா தரற்றுகின்றறேனையோர்
பிக்தன் இவனென்று பேசுகின்றாரே"

இறைவன் பக்தர்களுடைய உள்ளத்துக்குள்ளே புகுந்து நிற்கிறான். புண்ணியத்தின் பயனும், புண்ணியத்தின் சொரூபமும் ஆகிய எம்பெருமான் அகத்திலே நிற்பதைக் காணத் தகுந்த பக்தி தோன்றியவுடன் அவன் அகத்திலே நிற்பதை அடியவர்கள் கண்டு கொள்வார்கள். பக்தி மேலிட்டவுடன் காண்பதால் "புகுந்து நின்றான்" என்கிறார். முற்றறிவாளனாகிய ஞானமூர்த்தி தன்னிடத்தில் பக்தி செலுத்துகின்ற அடியார்களின் அகத்திலே உறைவான். "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்றே திருவாசகமும் குறிப்பிடுகிறது. இவ்வாறு அகத்திலே புகுந்து நிற்கும் இறைவனை ஆனந்தப் பரவசத்துடன் துதிப்பதைப் பின்வரும் பாடல் தெளிவு படுத்துகிறது.

"புகுந்து நின்றான் எங்கள் புண்ணிய மூர்த்தி
புகுந்து நின்றான் எங்கள் போதறிவாளன்
புகுந்து நின்றான் அடியார் தங்கள் நெஞ்சம்
புகுந்து நின்றானையே போற்றுகின்றேனே"

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்ற ஞானக்குழந்தையாகிய சம்பந்தரின் வாக்கும் "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற

மணிவாசகரின் வாக்கும், இறைவன் அகத்திலே இருந்து அருள் வழி காட்டியதால் தோன்றிய வாக்குகள் ஆகும்.

சித்தவிகாரத்தை நீக்கி நிற்கும் ஞானிகள் சிவமாய் விளங்குவார்கள். வானத்திலிருந்து சொரியும் மழைநீர் மிகவும் தூய்மையானது என்றே விஞ்ஞானமும் கூறுகிறது. இந் நீருக்கு வெண்மையும் இன்சுவையும் இயல்பாகவே உள்ளன. ஆனால், அந்நீர் மண்ணில் வீழ்ந்த பின்பு மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு வண்ணமும் சுவையும் மாறுபடுகின்றது. இதே போலத்தான் பூவுலகில் வாழும் மனிதர்களில் பலரும் சார்ந்ததன் வண்ணமாய்த் திகழ்கிறார்கள்.

சேற்றில் கலங்கிநிற்கும் நீரின் உண்மைத் தன்மை தெரியாததுபோல மக்கள் உலகமயமான எண்ணத்தினால் கலக்கமுற்று இறைவனின் தன்மையை உணராமல் தவிக்கிறார்கள். குடிப்பதற்குரிய நீரைக் குளத்தினின்றும் முகந்து ஒரு குடத்தில் வைத்து தெளியச் செய்வது போல சிந்தையைச் சிவத்தில் வைத்து தெளிவுபடுத்தினால் சீவன் சிவன் ஆவான்.

மண்ணில் கலங்கிய நீர் போல் மனிதர்கள்
எண்ணில் கலங்கி இறைவன் இவனென்னார்
உண்ணில் குளத்தின் முகந்தொரு பால் வைத்துத்
தெண்ணில் படுத்த சிவனவனாமே

“முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயலும் ஆருயிர்களைப் பக்தி நெறியறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்குவன் இறைவன்” என்பதை மேற்கூறிய திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

உண்மைத் தவத்தை உடையவன் சிவன் என்பதால் அவனை மெய்த்தவத்தான் எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். மிகத் தெளிவானவற்றைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு “உள்ளங்கை நெல்லிக்கனி” என்ற பழமொழியைக் குறிப்பிடுவர். இறைவனை நாடிக்கண்டு கொண்ட பின்பு வேறு எவ்வித ஆசாபாசங்களும் இல்லாமல் மோன சமாதியிலே இருந்த தெய்வீக அனுபவத்தைத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. உண்மைத் தவத்தில் விளங்கும் சிவபெருமானை விரும்பும் சாதகர் ஒருவருக்கு உள்ளங்கையில் பொருந்திய நெல்லிக்கனி போல இறைவன் விளங்குவான். தூய்மையானவனும் தூய்மையான நெறியாயும் விளங்கும் தேவதேவனை விரும்பி அவனிடம் பொருந்தி உலகினைக் கடந்து நின்றேன் எனத் திருமூலர் கூறுகின்றார்.

“மெய்த்தவத்தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக்கனி யொக்குஞ்
சுத்தனைத் தூய் நெறியாய் நின்ற தேவர்கள்
அத்தனை நாடி அமைந்தொழிந்தேனே”

# திருவடி வணக்கம்

இறைவனுடைய அடியவர்கள் நாளுக்கும் கோளுக்கும் என்றுமே அஞ்சுவதில்லை. "நாளும் கோளும் நம்பனடியார்க்கு நலிவு செய்யாது" என்பது அடியவர்களுடைய நம்பிக்கையாகும். இறைவன் அகத்திலே இருந்து அருள் வழிகாட்டும்பொழுது எல்லாக் கிரகங்களும் நன்மையே செய்யும் என்பதை

"ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே"

என ஞானக்குழந்தையாகிய சம்பந்தரின் கோளறு பதிகப் பாடல் குறிப்பிடுகிறது. முருகப்பெருமானுடைய திருவருள் இருந்தால் வினையாலும் வினையின் விளைவாகத் தோன்றும் நாளினாலும், கோளினாலும் எதுவித அச்சமும் கொள்ளத்தேவையில்லை என்பதை

"நாளென் செயும் வினைதான் என் செயும்"

என்ற கந்தரலங்காரப் பாடல் விளக்குகிறது. உலகமெல்லாம் ஆண்டருளும் இறைவனின் திருவடித் தாமரைகளை என்னுள்ளம் பொருந்தியிருக்கத் தந்தருளிய இறைவனை அன்றாடம் போற்றி வணங்கி வழிபட்டால் அதன் பயனாகிய பேரின்பப் பெருவாழ்வைப் பெறலாம். சிவப்பரம் பொருளிடத்து நான் என் கண்ணையும் கருத்தையும் வைத்துப்போற்றி வணங்கினேன். கோள்களினால் வரும் தீமைகளையும், வினைப்பயனால் வரும் துன்பங்களையும் சிவனுடைய திருவருள் அடியோடு அழித்தது. இதனால் எனது துன்பப் பிறவி ஒழிந்தேன். இன்ப நிலையில் இருந்தேன் எனச் சிவனின் திருவடியைப் பற்றிப்பிடித்து வணங்குவதால் ஏற்படும் பயனைத் திருமூலர் பின்வரும் திருமந்திரப்பாடலில் குறிப்பிடுகின்றார்.

44

ஆளும் மலர்ப்பதந் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையுள் நின்றவர்
கோளும் வினையும் அறுக்குங் குரிசிலின்
வாளு மனத்தொடும் வைத்தொழிந்தேனே

உண்மையான பக்தி செலுத்தினால் மாட்சிமை பொருந்திய வீரர்களுக்குக் கிடைக்கும் பெரும் பதவியாகிய இறைவனின் திருவடியைக் காணும் வாய்ப்புக் கிட்டும். புண்ணியம் செய்த பெரியோர்களுக்கு கிட்டுகின்ற பேரின்ப உலகம் இதுவாகும். மனம் கள்ளமின்றி மெய்யான நிலையில் நின்று வணங்கும் அன்பர்களுக்குச் சொர்க்கலோகமாகிய இறைவனின் திருவடியை அடையும் வாய்ப்புக் கிடைக்கும். இதுவே பாவம் போக்கும் புனித தீர்த்தமும் ஆகும். தவம் செய்வோர் பெறுகின்ற புண்ணிய உலகமும், புனித நதிகளிலும் புண்ணிய தீர்த்தங்களிலும் குளித்துப் பெறும் பாவ விமோசனமும், வீரர்கள் தங்கள் உயிரைக் கொடுத்துப் பெறுகின்ற வீர சுவர்க்கமும் ஆகிய அனைத்தும் ஈசன் திருவடிகளில் மனதைச் செலுத்தினால் மட்டுமே பெறமுடியும். உண்மையான உருக்கத்தோடு சிவனின் திருவடிகளை எண்ணித் துதிக்கின்ற பக்தர்களுக்கு எல்லாப் பயனையும் அவனுடைய திருவடியே தரவல்லது என்கிறார் தவயோகி. இறைவனிடத்தில் மெய்யான விருப்பம் செலுத்துவது, திருவடியிலே மனம் நன்கு பொருந்தி நிற்பது, தீய எண்ணங்களில் இருந்து மனம் திருந்துவது ஆகியன இறைவனின் திருவடியை நாடுவோர்க்குரிய கடமைகள் எனத் திருமந்திரம் விளக்குகிறது.

விரும்பில அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய லோகந்
திருந்தில் அவனடி தீர்த்தமும் ஆகும்
வருந்தி அவனடி வாழ்த்த வல்லார்க்கே

"என் கடன்பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் பெருமானுடைய வாக்கிற்கு அமையத் திரிகரணங்களையும் இறைவன் மீது செலுத்தி வணங்கும் தொண்டர்களுக்கு முத்திக்கான வழியை அவன் காட்டுவான். அண்ட சராசரமெல்லாம் கடந்து வியாபித்து நிற்கும் பெருமையை உடையவன் இறைவன். இத்தகைய பெருமைக்குரிய பேராளன் அற்பமானது என்று கூறப்படும் மானுட உடம்பினுள்ளும் பொருந்தி நிற்பான். ஒலி செய்யும் வீரக்கழல் அணிந்த பெருமானுடைய திருவடிகளைத் தரிசிக்கும் வாய்ப்புத் தொண்டர்களுக்குக் கிடைக்கும். இத்தகைய தொண்டர்களைச் சன்மார்க்க நெறியில் அழைத்துச் செல்வதற்கு இறைவன் முன்வந்து நின்று உதவுவான். நாத சொருபமான இறைவன் தொண்டர்களை முத்திக்கு அழைத்துச் செல்லும் நெறியில் வழிகாட்டியாய் விளங்குவான்.

அண்டங் கடந்துயர்ந் தோங்கும் பெருமையன்
பிண்டங் கடந்த பிறவிச் சிறுமையன்

தொண்டர் நடந்த கனை கழல் காண்டொறுந்
தொண்டர்கள் தூய்நெறி தூங்கி நின்றானே

கடவுள் இல்லை என்று கூறுபவர்களை நாஸ்திகர்கள் என்றும் கடவுள் உண்டு என்று ஏற்பவர்களை ஆஸ்திகர்கள் என்றும் அழைக்கும் மரபு உண்டு. புறக்கண்ணுக்கு காண முடியாத பொருள்கள் எதனையும் உள்பொருள் என்று கூறமுடியாது. நமது புலன்களினாலோ அறிவினாலோ இறைவனைக்காண நினைப்பது ஒருவன் தன் தோளிலே தான் ஏறி நிற்பதைப்போலவும் வண்டி சக்கரத்தை உருட்டுவது போலவும் காணப்படும் என்று இந்துக்களின் ஞானக் களஞ்சியமாகிய உபநிடதங்கள் கூறுகின்றன. உள்ளம் உருகி வழிபடும் அடியவர்களின் அகத்திலே இறையருள் பிரகாசிக்கும். வெப்பம் அதிகம் கொடுத்தால் கல்லுக்கூட உருகும். ஆனால் சிலருடைய கல்நெஞ்சம் என்றும் உருகுவதில்லை.

"கல்லேனும் ஐய ஒரு காலத்தில் உருகும்
என் கல்நெஞ்சம் உருகவில்லையே"

என்ற தாயுமான சுவாமிகளின் பாடல் பக்தியால் உருகாத பாவிகளின் மனத்தினை வெளிப்படுத்துகிறது. பக்தி வலையில் இறைவன் அகப்பட்டே தீருவான். கண்ணப்பனின் அதிதீவிர பக்திக்கு காளத்தியப்பன் கட்டுண்ட வரலாற்றினைக் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றிலே காண்கிறோம். பஞ்ச பாண்டவர்களில் இளையவனாகிய சகாதேவன் பக்தியின் வலிமையினால் கிருஷ்ண பரமாத்மாவைத் தன்னுள் சிறைப்படுத்திய வரலாற்றினை மகாபாரதத்திலே காணலாம்.

இறைவனுடைய திருவருளைப் புரியாத காரணத்தினால் அவனை இல்லை என்று சொல்லிவிடவும் முடியாது. பரம்பொருளாகிய இறைவனே பல இடங்களில் பல உருவடிவில் காட்சிதருகிறான் என்பதால் அவன் உள்பொருள் என்று கூறிவிடவும் முடியாது. கல்போன்ற நெஞ்சத்தைக் கசிவித்து நிற்பவரிடமே இறைவன் விளங்கித் தோன்றுவான். முன்னைப் பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளாய் இருக்கும் பழமையானவன், தூய்மையானவன், நடுக்கமற்றவன், குற்றமில்லாத மாணிக்கம் போன்ற பிரகாசமுடையவன். சொல்லில் வடிக்க முடியாத சோதி வடிவானவன் ஆகிய இறைவன் சீவர்களது உள்ளத்தை உருக்கித் தூய்மை பெற வைப்பதற்காக தொடர்ந்து நின்றருளுகின்றான்.

இல்லனும் அல்லன் உளன் அல்லன் எம் இறை
கல்லது நெஞ்சம் பிளந்திடுங் காட்சியன்
தொல்லையன் தூயன் துளக்கிலன் தூய்மணி
சொல்லரும் சோதி தொடர்ந்து நின்றானே

எடுத்த பிறப்பைச் சரியாகப் பயன்படுத்தாத காரணத்தினால், தவநிலையில் நின்று இறையருளைப்பெற முயற்சிக்காமையால் பிறிவித் துன்பம் நமக்குத் தொடர்கதையாக ஏற்படுகிறது என்பதைப்

"பின்னே நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்"

எனத் திருமந்திரம் கூறுகிறது. அளவிலாத ஆற்றலும் குறைவில்லாத நிறைவும் கொண்ட எம்பெருமான் யாவர்க்கும் மேம்பட்ட பெருமையை உடையவன். இத்தகைய இறைவன் இந்த அற்பமான மனித சரீரத்துக்குள்ளும் கலந்து நிற்கிறான். தேவர்களாலும் காணமுடியாத இறைவன் அடியவர்க்கு எளியவனாகக் காட்சி தருவான். ஒவ்வொருவரும் செய்கின்ற தவத்தின் அளவுக்குத் தக்கவாறு அவனை அறிய முடியும். அவர்கள் மேற்கொள்ளும் உண்மையான உள்ளன்போடு கூடிய இறை முயற்சிக்கு ஏற்ப அவனுடைய அருளும் கிடைக்கும். பெருமை மிக்க சிவத்தை சிறுமை மிக்க உயிர் தன் தவத்தின் அளவால் அறிந்து கொள்ள முடியும்.

ஏனோர் பெருமையன் ஆகிலும் எம் இறை
ஊனே சிறுமையுள் உட்கலந்து அங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே

உலகியல் வாழ்க்கையில் நாம் பல பொருட்களைப் பற்றுகின்றோம். நாம் பற்றும் பொருட்கள் நம்மை விட்டு விலகும் போது பரிதவிக்கின்றோம். நிலையில்லாத பொருட்களை நிலையானது எனப்பற்றுவதால் ஏற்படும் துன்பங்கள் பலவாகும். அழிகின்ற பொருட்களாகவும் நிலைமாறுகின்ற பொருட்களாகவும் இருக்கின்ற உடல், செல்வம், அழகு ஆகியவற்றில் வைக்கும் பற்றினால் நமது வாழ்க்கையில் துன்பங்கள் தொடர் கதையாக ஏற்படுகின்றது.

பற்றப்படும் பொருள்களுள் மிக மேலானது சிவமேயாகும் எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. பரம்பொருளாகிய சிவன் எங்கும் நிறைந்திருக்கிறான். சூரியன், சந்திரன், அக்கினி, ஆகிய மூன்றின் ஒளியும் நெற்றிக் கண்ணாக முளைத்தெழுந்த மூலமுதல்வனாக அவன் காட்சி தருகிறான். யோக நிஷ்டையில் இருந்து புருவ மத்தியில் அவன் நினைவைப் பொருந்தி நினைப்பவர்களுக்கு அவன் அங்கு நிலைத்த பொருளாக நின்று அருளுவான். இறைவன் எப்படி நினைக்கினும் அப்படி நின்று அவர்களுக்கு அருளும் தவயோகியாகத் திகழ்வான்.

பற்றின் உள்ளே பரமாய பரஞ்சுடர்
முற்றினும் முற்றி முளைக்கின்ற மூன்றொளி
நெற்றியின் உள்ளே நினவைாய் நிலை தரும்
மற்று அவனாய் நின்ற மாதவன் தானே

சிவனடியார்களின் ஊன் உயிர் எல்லாம் இறைவன் வியாபித்து நிற்பான் என்பதை "ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்" எனத் திருவாசகம் குறிப்பிடுகின்றது. தவஞானியர்களின் உள்ளத்து உணர்வும்,

உடலின் உயிரும் சிவப்பரம்பொருளாகாவே காணப்படும். ஐம்புலன்களுடன் கூடி அறியும் அறிவும், அறியப்படும் பொருளும் தவஞானியர்களுக்கு இறைவனாகவே காட்சி தரும். இவ்வாறு ஆருயிர்களின் உணர்வில், தெரிவில், அறிவில் அவன் தொடர்ந்த கலந்திருந்தாலும் அவன் எண்ணிலடங்காத அளப்பரும் ஆற்றலை உடையவன். பூங்கொத்தில் மலர்ந்த பூக்கள் விரிக்கும் வாச மணம் போல எங்கும் நிறைந்து விளங்கும் வல்லமை உடையவன் என்பதைப் பின்வரும் திருமந்திரம் விளங்குகிறது.

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே புலனும் அவனே
இணருமவன் தன்னை எண்ணலும் ஆகான்
துணரும் மலர்கந்தந் துண்ணி நின்றானே

இறைவனைப் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என மூன்று வடிவங்களாகப் பகுத்து நம்முடைய சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. படைத்தலுக்கு பிரம்மாவையும், காத்தலுக்கு விஷ்ணுவையும் அழித்தலுக்கு உருத்திரனையும் உரிய தெய்வங்களாகக் கூறியுள்ளன. இந்த மூன்று நிலைகளிலும் நிற்கும் ஈசன் ஒருவனே என்கிறார் திருமூலர். சிவனே பிரம்மா ஆகவும், திருமாலாகவும் நிற்கிறான். நிலத்திலும் கீழும், மேலே வானத்திலும் ஆக மூன்றும் உலகத்திலும் வியாபித்து நிற்கிறான். எங்குமாய், எல்லாமாய் உலகம் முழுவது வியாபித்து நிற்கும் சர்வவியாபியான பரம்பொருள் பக்தர்களுக்கு அருட்கனியாக வந்து காட்சி தருகின்றான்.

நின்றனன் மாலொடு நான்முகன் தானாகி
நின்றனன் தான் நிலம் கீழொடு மேலென
நின்றனன் தான் நெடுமால்வரை ஏழ்கடல்
நின்றனன் தானே வளங்கனியாயே

இறைவனுடைய திருவடிகளில் பக்தி நிலையாவிட்டால் சித்திகளை நாடி மனது சிதறிப் போகும். பூர்வ புண்ணியத்தாலும் இறைவனுடைய கருணையாலும் அவருடைய திருமுன் செல்லும் பாக்கியம் கிடைத்தாலும் போகத்திற்கும் பதவிக்கும் போட்டி யிடுபவர்களின் கூட்டம் அவருடைய திருவடி தரிசனத்தை நமக்கு கிட்டாமல் செய்து விடக் கூடும். அவர்கள் குறுக்கிடாமலிருக்கும் படியும் இறைவன் அருள் புரியவேண்டும்.

**–சிவானந்த விஹாஞ் பாஷ்யம்**

# விதியையும், வினையையும் வெல்வதற்கான வழி

45

மனித உடல் அழிவுக்குரியது. ஆனால் உடம்பினுள்ளே நின்று இயங்கும் ஆன்மா அழிவற்றது என்றே இந்துசமயத் திருநூல்கள் அனைத்தும் கூறுகின்றன. ஆன்மா நீரில் நனைவதும் இல்லை, நெருப்பில் எரிவதும் இல்லை, வெயிலில் காய்வதும் இல்லை, குளிரில் நடுங்குவதும் இல்லை எனக் கீதையிலே கிருஷ்ண பரமாத்மா ஆன்மா பற்றி விளக்குகிறார்.

ஆன்மா அழியாதென்று அன்றெனக்குச்
சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி – கிளியே
நல்லூரான் தஞ்சமடி

என்றே தவத்திரு யோகர் சுவாமிகளும் பாடுகின்றார். காண்பது கண்ணல்ல கண்ணைக் கருவியாகக் கொண்டு காண்பது ஆன்மா, பேசுவது நாக்கல்ல நாக்கை கருவியாகக் கொண்டு பேசுவது ஆன்மா என ஆன்மா பற்றி இந்திரனுக்கு பிரஜாபதி விளக்குவதை உபநிடதங்களிலே காணலாம்.

இந்த மனித உடம்புக்குள் அழிவற்ற நித்தியப் பொருளாக நிற்கிற ஆன்மாவும், விண்ணிலே நின்று கதிர் வீசுகின்ற சூரியனும், மண்ணுலகம் முழுவதும் பரந்துவீசுகின்ற காற்றும் எல்லாம் இறைவனே என்கிறார் திருமூலர். புலன்களின் வழியே நாம் அடையும் உணர்வுமுழுவதும் இறைவனுடைய சக்தியே என்று பாடுகின்றார்.

உள்நின்று ஒளிரும் உலவாப் பிராணனும்
விண்நின்று இயங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்நின்று இயங்கும் வாயுவுமாய் நிற்கும்
கண் நின்று இலங்குங் கருத்தவன் தானே

சிவமூல மந்திரமாகிய ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரிப்பவர்கள் இகபர நலன்கள் அனைத்தையும் பெறுவர். தூய பஞ்சாட்சரமாகிய நமசிவாய மந்திரம் இம்மை வாழ்வின் சிறப்புக்கு உதவும். சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வுகிடைப்பதற்குத் துணை செய்யும் சூக்கும பஞ்சாட்சரமாகிய சிவாயநம மந்திரம் ஆன்ம விடுதலைக்கு வழிகாட்டும். முக்திகாமிகள் உச்சரிக்க வேண்டிய மந்திரம் இதுவாகும். இம் மந்திரத்தை ஓதுபவர்களுக்குத் தகமை சிவஞான முத்தியும் பரகதியும் கிடைக்கும்.

சைவர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் நாளாந்தம் எண்ணுகின்ற அல்லது தியானம் செய்கின்ற எழுத்தாக நமசிவாய மந்திரமே இருத்தல் வேண்டும். சிவவாழ்வு வாழ்கின்றவர்கள், சிவகதியை என்றும் விரும்புகிறவர்களின் நெற்றியிலே திருநீறு என்றும் ஒளிவிட்டுப் பிரகாசித்தவண்ணம் காணப்படல் வேண்டும். "வாயே வாழ்த்து கண்டாய்" என்ற வாக்கிற்கு அமைய நா என்றும் இறைவன் புகழையே பாடித் துதித்தல் வேண்டும். இவ்வாறு அகப்புறக் கரணங்களையெல்லாம் இறைவன் பால் செலுத்திப் பரம்பொருளை அகக்கண் கொண்டு வழிபடச் சிவன் சீவனின் உள்ளே பொருந்தி விடுவான். சீவன் தன் இயல்புநிலை கெட்டுச் சிவநிலையை அடையும்.

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட" என மணிவாசகரும் இதனையே குறிப்பிடுகின்றார். உயிர்க்குயிரான சிவப்பேறு பேரின்பமே ஆகும்.

எண்ணும் எழுத்தும் இனம் செயல் அவ்வழிப்
பண்ணும் திறனும் படைத்த பரமனைக்
கண்ணில் கவரும் கருத்தில் அது இது
உள் நின்று உருக்கி ஓர் ஆயமுமாமே

நம்முடைய கண்ணுக்குப் புலனாகின்ற ஒரு பொருளைப்போல இறைவனைப் பார்க்க முடியாது. உள்ளத்தினுள்ளே உணர்வு மயமான அனுபவத்தில் கண்டு இன்புற வேண்டிய பொருள் இறைவன் என்கிறார் திருமூலர்.

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்"

எனத் திருமூலர் இறைவன் அனுபவத்தில் உணரவேண்டிய பொருள் என்பதைத் தெளிவாக விளக்குகின்றார்.

தேனுக்குள் தித்திப்பு கறுப்பாக இருக்குமோ, சிவப்பாக இருக்குமோ என்று கண்ணினால் பார்க்கமுடியாது. தேனின் இனிப்புக்கு நிறம் ஏதும் இல்லை. வானத்தில் இறைவன் இருக்கிறான் என்று எண்ணுவது தேனின் தித்திப்புக்கு நிறத்தைத் தேடுவதை ஒக்கும் எனத் திருமூலர் கூறுகின்றார். தேனுக்குள் பரந்து நிற்கிற இனிப்பு என்ற சுவையைப்போல இந்த ஊனுக்குள் இறைவன் ஒளிந்து நிற்கிறான் எனத் திருமந்திரம் கூறுகிறது.

வானுக்குள் ஈசனைத் தேடும் மருளர்கள்
தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ
தேனுக்குள் இன்பம் சிறந்திருந்தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே.

இறைவனின் சர்வ வியாபகம் பஞ்சபூதங்களிலும் வியாபித்துக் காணப்படுகிறது. வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி எனத் திருவாசகமும் இதனைக் குறிப்பிடுகிறது. நீர், நிலம், ஆகாயம் (விசும்பு), நெருப்பு (அங்கி), காற்று (மாருதம்) என உள்ள ஐம்பூதங்களையும் தாங்கும் ஆதார நிலைக்களனாகவும் ஆன்மாக்களின் உள்ளத்துள்ளே ஒளிவிடும் சோதிச் சுடராகவும் இறைவன் விளங்குகின்றான். பரம்பொருள், பராபரன், பிஞ்ஞகன், இறைவன் எனப்பல பெயர்களால் அழைக்கப்படுகின்றான். எல்லாவற்றோடும் ஊறிக் கலந்து நிற்பவ்னாகிய இறைவன் எல்லையற்றவனாகவும் அழிவற்றவனாகவும் திகழ்கிறான். அணுசொரூபமாகிய இறைவன் எல்லாத் தத்துவங்களோடும் கூடி அழிவில்லாதவனாகத் திகழ்கிறான்.

நீரும் நிலனும் விசும்பங்கி மாருதந்
தூரும் உடம்புறு சோதியுமாயுளன்
பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்மிறை
ஊருஞ் சகலன் உலப்பிலிதானே

தவமுனிவர் திருமூலர் தமது நூலின் முடிவில் குருநாதனாகிய நந்தியெம்பெருமானை வழிபடுகின்றார். பாடலின் ஒவ்வொரு அடியிலும் குருவின் திருவடிகளை வாழ்த்துகின்றார். என் சிவகுருநாதனாகிய நந்தியின் திருவடி வாழ்க, மலக்கட்டினை நீக்கியருளிய அவனது திருவடி வாழ்க, மலங்களை நீக்கியதோடு உண்மை ஞானத்தையும் அருளிய அவனது திருவடி வாழ்க, நின்மலனாகிய அவனது திருவடி வாழ்க எனக் குருவின் திருவடியை வாழ்த்தி வணங்குகின்றார்.

வாழ்கவே வாழ்க என் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலம் அறுத்தான் பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே

திருமூலர் தனது தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தினை தனது குருநாதராகிய நந்தியெம்பெருமானை வாழ்த்தி வணங்குவதோடு பூர்த்தி செய்கின்றார். சைவத் தமிழர்களுக்கு கிடைத்த ஞானக் கருவூலமாகிய திருமந்திரத்தினைத் தந்த திருமூல தேவரைத் துதித்து வணங்கும் பாடல்கள் சிலவும் உண்டு. திருமூலரையும் திருமந்திரத்தையும் சிந்திப்பவர்களுக்கு பிறவிநோய் முற்றாக நீங்கிவிடும்.

திருமூலதேவனையே சிந்தை செய்வார்க்கு
கருமூலம் இல்லையே காண்

என்ற பாடல் இதனை விளக்குகிறது.

சந்தேகம் என்னும் பெருங்கடலுக்குள் மூழ்கித்துயர்ப்படும் மனிதருக்கெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல உண்மையை விளக்கிக்காட்டும் பாடல்களாகத் திருமூலரின் திருமந்திரம் காணப்படுகிறது. மனிதர்களின் சிற்றறிவில் ஏற்படும் மயக்கத்தினைத் தீர்த்துவைக்கின்ற ஞானக் களஞ்சியமாகிய திருமந்திரப் பாடல்களை நமக்குத் தந்த தவயோகி திருமூலதேவரை நாம் அனைவரும் தியானித்து வணங்குவோமாக.

ஐயமாக்கடல் ஆழ்ந்த உயிர்க்கெல்லாம்
கையில் அமலகம் எனக் காட்டுவான்
மையல் தீர்தரு மந்திரம் செப்பிய
செய்ய பொற்திரு மூலனைச் சிந்திப்பா

இன்றைய மனிதன் நாத்திகம், உலகாயதம் என்று பல எதிர் மறைச் சக்திகளால் அலைக்கழிக்கப்படுகிறான். இந்த உலக வாழ்க்கையே எல்லாம் என எண்ணி வாழ்பவனின் வாழ்க்கை இறுதியில் வெறுமையையே சந்திக்கிறது. இந்த வாழ்விற்கு மேல் இறைவன் என்ற மாபெரும் சக்தி உள்ளது என்ற நம்பிக்கை, வாழ்க்கையை ஆக்கபூர்வமாக, பொருள் பொதிந்ததாக நடாத்துவதற்குத் துணை செய்கிறது. காமம், பேராசை ஆகிய இரண்டையும் துறந்தால் மட்டுமே உயர் வாழ்க்கையில் அடியெடுத்து வைக்க முடியும்; இந்த அடிப்படை நியதிகளைப் பின்பற்றாமல் செய்கிற வெறும் கிரியைகளும் சடங்குகளும் எந்தப்பயனையும் அளிக்காது.

**–சுவாமி பஜனானந்தர்**

# நிறைவுரை

தமிழனுக்கென்று சொந்தமாகச் சமயமோ மெய்யியலோ இல்லை. இவன் எல்லாவற்றையும் மற்றவர்களிடம் கடன்வாங்கித்தான் காலத்தைத் தள்ளுகிறான் என்று கருதுகிறவர்களின் கருத்துக்கு ஆப்பு வைக்கும் நூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. தமிழர்களின் சிந்தனையில் முகிழ்த்த உயர் தத்துவமாகிய சைவ சித்தாந்தம் என்ற தமிழ்ச் சைவ மெய்யியற் கொள்கைக்கு மையம் வழங்கி வரம்பு கற்பித்த முதல் நூலாகத் திருமந்திரம் காணப்படுகிறது. அரச மரமாகிய போதிமரத்தின் கீழிருந்து புத்தர் மட்டும் ஞானம் பெறவில்லை. திருமூலராகிய சித்தரும் திருவாவடுதுறையில் போதிமரத்தின் கீழிருந்துதான் ஞானத்தினைப் பெற்றார். ஞானிகளின் வாயில் இருந்து வரும் வார்த்தைகளில் தெளிவு இருக்கும். சொற்சிக்கனம் காணப்படும். தேவையற்ற வார்த்தை அலங்காரங்கள் எதுவும் இருக்காது. வார்த்தைகள் அனைத்தும் மந்திர சொரூபமாகவே காணப்படும். இதனால்தான் திருமுறை வரிசையிலே திருமூலரின் பாடல்கள் மந்திரம் என அழைக்கப்படுகிறது.

திருமந்திரப் பாடல்களில் வாழ்வியற் கருத்துக்கள் நிறைய உண்டு. சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள் பலவற்றைத் திருமூலர் கூறியுள்ளார். மெய்யுணர்வாளர்கள் சட்டத்தையும் அதிகாரத்தையும் முன்வைத்துச் சமூகத்தைச் சீர்திருத்த முயலவில்லை. இறைவனை முன் வைத்துச் சீர்திருத்த முயன்றார்கள். இதனால் தங்களுடைய செயற்பாடுகளில் வெற்றியும் கண்டார்கள்.

சமயச் சடங்குகள் பக்திக்கும் ஆன்ம விடுதலைக்கும் வழிகாட்ட வேண்டும் என்பதைத் திருமந்திரம் வலியுறுத்துகிறது. கிரியைகள், சடங்குகள் பக்தி என்ற பெரு வழியின் வாயிலாக ஆன்மாவை முத்திக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்பதே திருமூலரின் சிந்தனையாகும்.

மானிடப் பிறவியை எடுத்த மனிதன் அற விழுமியங்களைப்பேணி வாழுதல் வேண்டும் என்பதையும் உடலின் கருவி கரணங்களை அறநெறி பிசகாது பயன்படுத்துதல் வேண்டும் என்பதையும் திருமந்திரம் வலியுறுத்துகிறது. உயிரின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கருவியாக உடலை ஆசைக்குரியதாகக் கருதாமல் பூசைக்குரியதாகக் கருதல் வேண்டும் என்பது திருமூலரின் சிந்தனையாகும். அறத்தைப் பேணுவது இன்றியமையாததாகும். அறம் பேணலும் உடல் பேணலும் ஒன்றையொன்று சார்ந்தவை ஆகும். அறத்துக்கு உடல் ஆதாரமாக அமைவதுபோல உடலுக்கு அறம் ஆதாரமாக அமைகிறது எனத் திருமந்திரம் கூறுகிறது.

அனுபவ ஞானத் திருநூலாக அமைந்துள்ள திருமந்திரம் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் அமைந்துள்ள பெரு நூலாகும். யோகம், வைத்தியம், வாழ்வியல், தத்துவம் அறிவியல் ஆகிய அனைத்தையும் விளக்கும் அறிவுக் களஞ்சியமாகவும் திருமந்திரம் திகழ்கிறது.

திருமந்திரம் சிவநெறித் தந்தையாகிய திருமூலர் வழங்கிய கலைப் பெரும் பொக்கிஷம். கற்பன கற்று நிற்குநெறி நிற்கப் பழக்கிப் பயிற்றுவிப்பது திருமந்திரம். ஆன்மிக நெறியில் நிற்கும் மக்களுக்கு திசை காட்டும் மெய்ஞ்ஞான இறைபோதமாகத் திருமந்திரம் திகழ்கிறது. சித்தத்தின் உள்ளே சிவனைக் காண வழிகாட்டியவர். பாவச்சுமை மானிடப் பிறவி என்ற கருத்தை நீக்கி "உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பு ஆலயம்" என நிறுவியவர், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற ஆன்ம நேயத்தினைப் பாடியவர், ஈசன் அருள் பெற்றுவிட்டால் விதியையும், வினையையும் வெல்லலாம் என்ற துணிவைத் தந்த வீரபுருஷர், புலனடக்கம் உடையவனே மேன்மையான முத்தியை அடையத் தகுதி உடையவன் எனக் கூறிய ஞானச்செல்வர், ஆகிய திருமூலர் அருளிய திருமந்திரம் சைவத் தமிழ் மக்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய ஒப்பற்ற நூலாகும். நாம் அனைவரும் பிறவிப் பயனை அடையத் தவயோகியாகிய திருமூலதேவரைச் சிந்தை செய்து தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தைப் படித்துப் பயனைப் பெறுவோமாக.



சிவ. மகாலிங்கம் ஒரு சிறந்த சிந்தனையாளர். நீண்ட காலம் திருமந்திரம் தொடர்பாகப் பேசியும் எழுதியும் வருபவர். சைவ சமயஞ் சார்ந்த பல்வேறு விடயங்களில் தமது கருத்துக்களை கட்டுரைகள் வாயிலாக வெளியிட்டு வருபவர். சிறந்த சொற்பொழிவாளர். சைவ நெறியில் நின்று தம் ஆன்மீகப் பணிகளை ஆலயந்தோறும் முன் னெடுத்து வருபவர். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றிய அனுபவ மிக்கவர். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர். சைவ சித்தாந்த முதுகலைமாணிப் பட்டத்திற்கான பயிற்சி நெறியைப் பயின்ற காலத்தில் எனது மாணவனாகக் கல்வி பயின்றவர். முதுகலைமாணிப் பட்டம் பெற்றதன் பின்னர் அப்பயிற்சி நெறியின் வருகை விரிவுரையாளராகவும் பணி புரிந்து வருபவர். யாவரையும் ஈர்க்கும் வகையில் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைபவர்.

பேராசிரியர் இலக்கிய கலாநிதி
**ப. கோபால கிருஷ்ண ஐயர்**
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ISBN No.: 978-955-44645-0-6

Harikanan (Pvt.) Ltd., Jaffna.